
எண்டமூரி வீரேந்திர
சுசீலா கனகதுர்கா
ஜென்ம
பந்தம்


எண்டமூரி வீரேந்திரநாத்
சுசீலா கனகதுர்கா
ஜென்ம
பந்தம்

# ஜென்ம பந்தம்

எண்டமூரி வீரேந்திரநாத்

சுசீலா கனகதுர்கா

வர்மா பதிப்பகம்

24, சரோஜினி தெரு
தி. நகர் சென்னை-600 017
போன் : 441559

* First Edition Dec 1991


* Copy Rights Author


* GENMA BHANDAM (Social Novel)
* Endamoorie VEERENDRANATH
* SUSHEELA KANAGADURGA
* Publisher Varma Pathippagam
  24, Sarojini Street
  T.Nagar, Madras-600 017. Ph. 441559
* Printer Sri Rajeswari Printing Works
  12, Gajapathy Street
  Ice House, Madras-5.

**விலை : ரூ. 32-00**


# பதிப்புரை

பயங்கரமும் திகிலும் நிறைந்து பரபரபூட்டும் தன்னுடைய நாவல்களின் மூலம் ஏற்கனவே தமிழ் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான திரு எண்டமூரி வீரேந்திரநாத்தின் வித்தியாசமான நாவல் இது. ஆழ்ந்த, அமைதியான நடையில் இந்தக் கதை சொல்லப் பட்டிருக்கிறது.

இந்தக் கதையில் வரும் விஜயராகவன், சுமித்ரா, அவர்களின் செல்ல மகள் ஆர்த்தி, பெரியப்பா கோபாலஸ்வாமி, பரமேஸ்வரி, ஹேமந்த் ஆகிய எல்லாப் பாத்திரங்களுமே மிக மிக இயல்பாகப் படைக்கப் பட்டிருப்பதால். கதையைப் படிக்கும்போது, அவர்களுடன் நேரில் பழகுவது போன்ற நிறைவான அனுபவத்தைப் பெற வைத்திருக்கிறார் ஆசிரியர். கதையில் வரும் ஜூலி என்ற நாய் கூட, வாலை ஆட்டிக் கொண்டு நம் முன்னால் நடை போடுகிற ஒரு முக்கியமான பாத்திரமாகக் காட்சியளிக்கிறது. அந்த நாய் இறந்து போய் விட்ட நிகழ்ச்சி ஆர்த்தியின் மனத்தை மட்டுமல்ல கதையைப் படிப்பவர்களின் மனத்தையும் நெகிழச் செய்து விடுகிறது.

அன்றாடம் நாம் சந்திக்கின்ற, குறை நிறைகளுடன் கூடிய மனிதர்களாக இவர்கள் கதையில் வளைய வருகிறார்கள்.

உள்ளம் நிறைந்த காதலுடன் கணவனிடம் நடந்து கொண்டிருந்த சுமித்ராவின் மனத்தில் விழுந்த ஒரு சிறிய சந்தேகப்பொறி காட்டுத் தீயாய் வளர்ந்து, இரண்டு குடும்பங்களின் அமைதியையுமே எரித்துப் பொசுக்கிவிடும் அவலம்தான் 'ஜென்ம பந்தம்' என்ற நாவலாக உருவாகி இருக்கிறது.

வழக்கத்திற்கு மாறான முடிவு இக்கதையின் சிகரமாக அமைந்திருக்கிறது எனச் சொல்லலாம்.

திரைப்படக் காட்சிகள் போல, ஒவ்வொரு நிகழ்ச்சியும் நம் முன் விரிகிறது.

புத்தகத்தை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்திருக்கும் ராஜேஸ்வரி அச்சகத்தாருக்கும், அட்டைப் படத்தை அழகுற வரைந்தளித்திருக்கும் திரு உ பால்டு அவர்களுக்கும் நன்றி.

இந்த அருமையான நாவலைத் தமிழ் வாசகர்களுக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

அ. இராமநாதன்

# ஜென்ம பந்தம்

## 1

காலை வேளை. லாயர் விஜயராகவனின் வீட்டில் அவன் குரல் இரைந்து கேட்டுக் கொண்டிருந்தது.

''சுமித்ரா! சுமித்ரா! இன்னும் எவ்வளவு நேரந்தான் காத்துக் கொண்டிருப்பேன் உனக்காக?''

மனைவியைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தான் அவன். மூடியிருந்த படுக்கையறைக்குள்ளிருந்து கோமளக் குரல் அலுத்துக் கொண்டே பதில் தந்தது.

''அப்பப்பா! இதோ வந்துட்டேன்!ஒரே ஒரு நிமிஷம்! ஆயிடுத்து.''

''அரைமணியாய் நீ இதையே சொல்கிறாய். நானும் நம்பி உட்கார்ந்திருக்கேன். எவ்வளவு நேரந்தான் ஆகுமோ நீ ரெடியாகிப் புறப்படுவதற்கு? அங்கே ரயில் வந்திருக்கும் இந்நேரம்! அவளே கூட வந்து விடுவாள்.''

''ஒன்றும் வரமாட்டாள். அதான் ஸ்டேஷனுக்குக் கார் எடுத்துக் கொண்டு வரோம்னு எழுதியிருக்கோமே! எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பாள்.''

''நீ இன்னும் ஒரு நிமிஷத்தில் வரப்போகிறாயா? அல்லது...''

''என்ன பண்ணி விடுவீர்கள்? கதவை உடைத்துத் தள்ளி விடுவீர்களோ?''

''காரை எடுத்துக் கொண்டு நான் மட்டும் போயிடுவேன்.''

''போங்கள். எங்கண்ணாவிடம் சொல்லி உங்களை 'டைவர்ஸ்' பண்ணி விடுகிறேன்.''

''அப்பப்பா! என்ன பொம்பிள்ளைகளோ!'' அவன் அங்கே கிடந்த பேப்பரைக் கையிலெடுத்துப் புரட்டிக் கொண்டே அறையில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்தான்.

''டாடீ! நான் ரெடி!'' ஆர்த்தி அங்கே வந்தாள்.

''நீயும் நானும் ரெண்டே நிமிஷத்தில் ரெடியாயிடுவோம்மா! உங்கம்மாதான் 'பங்ச்சுவாலிடி' விஷயத்தில் நம்ப மானத்தை வாங்குகிறாள். ஆனாலும் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் விருந்தாளியைக் கூட்டி வரத்துக்கு இத்தனை சிங்காரிப்பு எதுக்கு?''

அதற்குள் படுக்கையறைக் கதவுகள் திறந்து கொண்டன.

''அப்ப என் புடைவைகளையெல்லாம் என்னதான் பண்ணச் சொல்றீங்க?''

''இதற்கே போய் நீ இவ்வளவு சிங்காரித்துக் கொண்டாயானால் நாளைக்கு எனக்கு ஏதாவது 'பத்மபூஷன்' போன்ற பட்டம் கிடைத்துப் போகவேண்டியிருந்தாலோ...''

''அம்மாவுக்கு ரெண்டு நாள் வேண்டியிருக்கும்.'' கலகலவென்று சிரித்தாள் ஆர்த்தி.



''அது சரி, எதுக்கு அவ்வளவு நேரமாச்சுன்னு சொல்லட்டுமா?''

''சொல்லு!'' என்றான் விஜயராகவன்.

''தலை வாரிக் கொண்டிருந்தபோது காதோரத்தில் இரண்டு நரை இழைகள் தென்பட்டன! அதைப் பார்த்ததுமே, 'ஐயோ! வயசாயிடுத்தே'ன்னு பயமாயிருந்தது. பின்னிக் கொண்டிருந்தபோது, இனிமேல் அதெல்லாம் நன்றாயிருக்காது, கொண்டை போட்டுப்போம்னு பார்த்தேன். முடியவில்லை. நன்றாய் வரவில்லை. அதனால் திரும்பவும் பின்னிக் கொண்டேன்.''

''சரி, புறப்படு...புறப்படு.''

''அம்மாவுக்கு இப்பல்லாம் தன் மீதே தனக்கு இவ்வளவு சிரத்தை ஏன் ஏற்பட்டதுன்னு சொல்லட்டுமா டாடீ?''

''சொல்லு!''

''அன்றைக்கு ஒருநாள் அம்மாவின் கிளப்பில் ஒரு மெம்பர் அம்மாவை விட நீ தான் 'யங்'காகத் தென்படுகிறாய்னு சொன்னார்.''

''மைகாட்! ரியலீ?'' அவன் முறுவலை உதட்டிற்கு வெளியே வராமல் அடக்கிக் கொண்டான்.

''ஆமாம். சொல்லுவாள்.. சொல்லுவாள். அவள் கண்களில் ஏதோ கோளாறு இருக்கிறதுன்னு அப்புறமாய் தெரிந்தது எனக்கு.'' சுமித்ரா முகத்தை முறுக்கிக் கொண்டாள்.

தந்தையும் மகளும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

''மொதல்ல இந்த ஆர்த்தி வயதில் உங்களுக்கு ஒரு மகள் இருக்கிறாள்னு சொன்னாலே யாருமே நம்பற

தில்லை. இவளோ உயரமாய் வளர்ந்துட்டாள். பெண் வளர்த்தியோ புடலங்காய் வளர்த்தியோம்பாங்க. எல்லோரும் நான் பொய் வயதைச் சொல்லுகிறதாய்ப் பேசிக் கொள்கிறார்கள்.''

''நீங்க பொம்பிள்ளைகளே அப்படித்தான்! எதிராளிக்கு அதிக வயசு இருக்கும்னு கூட்டிச் சொல்லிப் பீர்கள். சரி, சரி, கிளம்பு.'' சொல்லிக் கொண்டே வெளியே வந்தான்.

விஜயராகவன் காரை நோக்கி வந்து கொண்டிருந்த போது வீட்டு வாசலில் டாக்ஸி வந்து நின்றது. மூவரும் திரும்பிப் பார்த்தார்கள். டாக்ஸியிலிருந்து ஒல்லியாய் உயரமாய் இருந்த ஒரு பெண்மணியும், கூடவே சுமார் இருபத்திரெண்டு வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞனும் இறங்கினார்கள்.

அவள் பர்ஸைத் திறந்து டாக்ஸி டிரைவருக்குப் பணத்தைத் தந்தாள்.

'மைகாட்! அவர்கள் வந்தே வந்தாச்சு!'' விஜயராகவன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டே மனைவியைக் கோபமாய்ப் பார்த்தான். சுமித்ரா கணவரின் கோபத்தைப் பொருட்படுத்தவில்லை. முகம் மலர அப்பெண்மணிக்கெதிரே போனாள்.

''ஐயோ! நீங்களே வந்துட்டீங்களா? நாங்க பயந்து கொண்டேயிருந்தோம். நாங்க சீக்கிரமாய் ரெடியாகி எப்போதோ புறப்படத் தயாராயிட்டோம். ஆனால் எங்களவரிடம் ஒரு க்ளையிண்ட் அதிகாலையிலேயே வந்து சேர்ந்துட்டார். அவர் போக இவ்வளவு நேரமாயிடுத்து. வீடு சரியாய் கண்டு பிடிக்க முடிந்ததா? அவஸ்தைப் படாமல் வரமுடிந்ததா?''



''சௌகரியமாய்த்தான் இருந்தது'' என்றாள் பரமேஸ்வரி. விஜயராகவனுக்கு மனைவி மேல் கோபம் வந்தாலும் சாமர்த்தியமாய்ச் சொன்ன அந்த சால்ஜாப்பைக் கேட்டு மனத்திற்குள் பாராட்டிக் கொண்டான்.

சுமித்ரா அவர்களை உள்ளே அழைத்துச் சென்றாள்.

''சங்கராந்திப் பொங்கல் பண்டிகை எல்லாம் நன்றாய் நடந்ததா? நேற்று மாட்டுப் பொங்கல் பண்ணினீர்களா?'' கேட்டாள் சுமித்ரா.

அந்த இளைஞன் குறுக்கிட்டு— ''எருமைப் பொங்கல் பண்ணினோம். மாட்டுப் பொங்கல் இல்லை'' என்றான்.

சுமித்ராவும் அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்த ஆர்த்தியும் வியப்படைந்தார்கள். ''அதென்னது? எருமைப்பொங்கலா?'' கேட்டாள் சுமித்ரா.

''இல்லை. எங்க ஐதராபாத்தில் மாடுகள் ஏது? எருமைகள்தானே அதிகம்! அதைத்தான் இப்படிச் சொல்கிறான்'' என்றாள் பரமேஸ்வரி சிரித்துக் கொண்டே. எல்லோரும் சிரித்தார்கள்.

''இவள் தான் எங்க ஆர்த்தி?'' சுமித்ரா மகளை அறிமுகம் பண்ணினாள்.

''ஆர்த்தியா? அம்மோவ்! எவ்வளவு பெரியவளாயிட்டாள்!'' என்ற பரமேஸ்வரி திரும்பி மகனைப் பார்த்து—'' ''ஹேமந்த்! 'ஆர்த்தி' என்று உங்கப்பா அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பாரே அவள்தான் இது'' என்றாள்.

வெள்ளைநிற சடைநாயைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்த ஆர்த்தி கைகளைக் கூப்பினாள்.

அவன் பதிலுக்குக் கைகளைக் கூப்பவில்லை.

ஆர்த்தியின் கையிலிருந்த நாய்க்குட்டியை அருவருப்போடு பார்த்துக் கொண்டே— ''நாய்களைக் கண்டாலே எனக்கு எரிச்சல். அவற்றால் தோல் நோய்கள் வரும்'' என்றான்.

ஆர்த்தியின் கண்கள் படபடத்தன. நாய்க்குட்டியை மேலும் இறுக்கமாய் மார்போடு அழுத்திக் கொண்டாள்.

''நாய்கள் என்றால் எனக்கு உயிர்! நாய்களை விரும்பாத மனிதர்களிடம் மனிதத் தன்மையே இருக்காது என்பது என் உத்தேசம்!'' என்றாள்.

''ஓ! ஆர்த்தி ரொம்ப வாயாடியாச்சே! ஹேமந்த்! மாமாவை நீ இன்னும் விஷ் பண்ணவேயில்லை'' என்றாள் பரமேஸ்வரி முறுவலுடன்.

ஹேமந்த் விஜயராகவனின் கையைப் பிடித்துக் கொண்டான். ''மாமா! நீங்க எவ்வளவு சீக்கிரத்தில் எங்களைத் திருப்பி அனுப்பி வைக்கிறீர்களோ அவ்வளவு நல்லது'' என்றான்.

விஜயராகவன் அவனையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னால் தான் பார்த்த ஹேமந்த்திற்கும் இவனுக்கும் நிறைய வித்தியாசம் தெரிந்தது. ஒருக்கால் மீசை தாடி வளர்ந்திருந்ததாலோ என்னவோ? அல்லது குரல் மாறிக் கொஞ்சம் முதிர்ச்சியடைந்திருந்ததாலோ? எது எப்படியிருந்தாலும் மாறுதல் மட்டும் நன்றாய்த் தெரிந்தது.

''உள்ளே வாங்க'' சுமித்ரா வழி காட்டினாள். ஆர்த்தி நாய்க்குட்டியை எடுத்துக் கொண்டு ஹேமந்த்தை ஒருதடவை முறைத்துப் பார்த்து விட்டுத் தன் அறைக்குள் போய் விட்டாள்

உள்ளே வந்த ஹேமந்த் தாயுடன் அங்கிருந்த சோபாவில் உட்காரவில்லை. பேன்ட் ஜேபியில் கையை விட்டுக் கொண்டே அங்கு சுவரிலிருந்த கேலண்டர்களைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே நின்றான்.



''அவருக்கு உடம்பு சரியில்லாததால் உங்கள் வீட்டு கிரகப்பிரவேசத்திற்கு வரமுடியவில்லை. அவர் ரொம்பவும் வருத்தப்பட்டார் வீடு ரொம்ப நன்றாய் இருக்கு.'' வீட்டைப் பரிசீலித்துக் கொண்டே சொன்னாள் பரமேஸ்வரி.

''ஆமாம்! அவனுக்கு அந்தத் தீராத நோய் அப்பத்தானே ஆரம்பமாயிற்று?'' என்றான் விஜயராகவன்.

பரமேஸ்வரியின் கண்கள் கசிந்தன. ஆம் என்று தலையாட்டினாள்.

''அதற்குள் ரெண்டு வருஷம் ஓடிவிட்டதே.'' பெருமூச்சு விட்டான் அவன்.

''எனக்கு இன்னும் ரெண்டு நாள் ஆனாற்போல கூட இல்லை... இன்னிக்குத்தான் ஆனாற்போலிருக்கு''கைப்பையிலிருந்து கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டாள் பரமேஸ்வரி.

சுமித்ரா ட்ரேயில் காப்பி கொண்டு வந்தாள்.

''எடுத்துக்குங்க. குளித்துட்டு டிபன் சாப்பிடலாம்'' என்றாள்.

''ஹேமந்த்! வா, காப்பி குடி.'' பரமேஸ்வரி கூப்பிட்டாள்.

''நோ மம்மீ! எனக்குக் காப்பி குடிக்கணும்னு இல்லை.''ஹேமந்த் திரும்பிப் பார்க்காமலேயே பதிலளித்தான்.

''காப்பி வேண்டாம்னால் விடு! பால் கொண்டு வரட்டுமா?'' சுமித்ரா கேட்டாள்.

''ஒன்றுமே வேண்டாம்.''

''ஒன்றுமே குடிக்காமல் எப்படிப்பா இருப்பாய்? ஏதாவது குடி.''

அவன் திரும்பினான்—''நீங்க திரும்பித் திரும்பி அவ்வளவு தடவை சொல்றத்துக்கு நான் என்ன சின்னப் பையனா ஆன்ட்டீ? எனக்குக் குடிக்கணும்னு தோணும்போது உங்களைக் கேட்கிறேன்.'' அவன் பேன்ட் ஜேபியில் கைகளைப் போட்டுக் கொண்டு தாய்க்கு எதிரேயிருந்த சோபாவில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

''மாமா! நாங்க திரும்பிப் போவதற்கு சுமார் எவ்வளவு நாளாகும்?''

''ரொம்ப அழகுதான்! நீ வந்து இன்னும் செருப்பைக் கூட கழற்றியபாடில்லை. அதற்குள்ளே திரும்பிப் போகிறேன் என்கிறாயே! இது சொத்து விவகாரம்! அவ்வளவு சீக்கிரத்தில் தகையுமா? அங்கே மாத்திரம் உனக்கு என்ன தலை போகிற காரியம் இருக்கு? நீ தான் பி ஏ, பரீட்சையில் பெயிலாயிட்டதாய் எழுதியிருந்தாயே! காலேஜ் கூட இல்லையே!''

''காலேஜ் இல்லாவிட்டால் வேறு வாழ்க்கையே கிடையாதா எங்களுக்கு? இருபத்தி நாலாந்தேதி கிரிக்கெட் மேட்ச் இருக்கு. நான் டிக்கெட் வாங்கியிருக்கேன். கண்டிப்பாய் பார்த்துத் தீரணும்.''

''எல்லாம் பார்த்துக்கலாம்பா! கோபாலசுவாமிக்கு சேதி சொல்லியனுப்பியிருக்கேன். அவர் வந்த பிறகு நீங்கள் எப்பொழுது போகலாம்னு நான் சொல்றேன்.''

அதற்குள் ஹேமந்தின் பார்வை ஜன்னலுக்கப்பால் வெளியே பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த ரோஜாச் செடியின் மேல் பட்டது.



''புது வகை ரோஜாப் பூக்கள் போலிருக்கே?'' என்று எழுந்து அந்தப் பக்கமாய் போகத் தொடங்கினான்-

பரமேஸ்வரி காப்பியைக் குடித்து முடித்துவிட்டு, தம்ளரைக் கீழே வைத்தவள் ''இவன் எனக்குப் பெரிய பிரச்னையாய் மாறிப் போயிட்டான். அவர் இருந்தாலாவது பார்த்துப்பார். இப்ப நான் தன்னந்தனியனாய் ஆயிட்டேன்'' என்றாள். அவள் குரல் துக்கத்தால் தழுதழுத்தது,

''இதென்ன பரமேஸ்வரி! நாங்கள்ளாம் இல்லையா உங்களுக்கு?'' என்றாள் சுமித்ரா.

''அதான் கொஞ்சமாவது உயிரோடு வாழ தைரியம் தந்துக்கொண்டிருக்கு. அந்தச் சொத்து கைக்கு வந்தாலேயொழிய எனக்கும் அவனுக்கும் ஒண்டக்கூட நிழல் இருக்காது.''

''நீ ஒன்றும் திகிலடைய வேண்டாம். அந்த விவகாரத்தையெல்லாம் அவர் பார்த்துப்பார். இந்த நான்கு நாளும் கவலையில்லாமல் இங்கே இருங்கள்'' என்றாள்.

## 2

''என்ன மம்மீ இது? அந்த ஹேமந்த் இப்படிப் பேசறானே! சுத்த கிராக்காய் இருக்கான்.'' தாய் உள்ளே வந்து உடைமாற்றிக் கொண்டிருந்தபோது கேட்டாள் ஆர்த்தி.

''தப்பு! அப்படிச் சொல்லக்கூடாது. அவள் காதில் விழுந்தால் வருந்துவாள்.'' சுமித்ரா மகளைக் கண்டித்தாள்.

''விழுந்தால் என்ன? அவன் அப்படி நடந்துப்பது மட்டும் இல்லையா? இந்த கிராக் நம்ப வீட்டில் இன்னும் எவ்வளவு நாள் இருப்பான்?''

''இதப்பாரு ஆர்த்தி! அப்படிச் சொல்லக்கூடாது துங் கலை?'' சிவந்த கண்களை உருட்டி விழித்தாள் சுமித்ரா.

''பின்னே! நாய்க் குட்டியைத் தூக்கி வைத்துக்கொண் டால் தோல் வியாதி வருமாம்! பெரிதாய் எல்லாம் தெரிந் தவனைப் போல சொல்ல வந்துட்டான். மம்மீ! நான் இப்பவே சொல்லிட்டேன், அந்த ஹேமந்த்தோடு நான் செத்தாலும் பேசமாட்டேன்!''

அதற்குள் அங்கே சமையல்காரக் கிழவி செல்லம்மாள் வந்தாள்.

''ஆமாம்! நிஜமாய் அந்தப் பையனுக்குக் கொஞ்சம் பைத்தியந்தான் போலிருக்கும்மா! கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி என்னைப் பார்த்துட்டு— 'திருப்பதிக்குப் போயிட்டு வந்தீங்களா'ன்னு கேட்டான். 'இல்லேப்பா, என் புருசன் செத்து இருபது வருஷமாகிறது. என் தலை அப்போதிலிருந்தே இப்படித்தான்'னு சொன்னேன்.'' செல்லம்மாள் தலையைத் தடவிக்கொண்டே சொன்ன தைக் கேட்டு கலகலவென்று சிரித்தாள் ஆர்த்தி. சுமித்ரா வுக்கும் சிரிப்பு வந்தது.

அதற்குள் விஜயராகவன் அவ்விடத்திற்கு வந்தான்.

''என்ன சிரிக்கறீங்க?''

''ஒன்றுமில்லை.''

''ஒன்றுமில்லாமல் அப்படிச்சிரிப்பார்களா யாராவது? வீட்டில் புது மனுஷர்கள் இருக்கும்போது காரணம் இல்லாமல் போகாதுன்னு நினைச்சுக்க மாட்டார்களா?''



விஜயராகவனைப் பார்த்ததுமே செல்லம்மாள் அங் கிருந்து போய்விட்டாள். ஆர்த்திகூட நாய்க் குட்டியைத் தூங்கிக்கொண்டு ''மம்மீ! ஜூலியை நான் குளிப்பாட்டப் போறேன்'' என்று போய் விட்டாள்.

''இன்னிக்கு என்ன சமையல் பண்ணப் போகிறாய்?'' மடித்துப் புடவையை பீரோவிற்குள் எடுத்து வைத்துக் கொண்டிருந்த சுமித்ரா வியப்போடு கை வைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்தாள் கணவரை

''ஏன் ஆச்சரியப்படுகிறாய்?'' அவன்கிட்டே வந்தான்.

''நான் குடித்தனம் வந்து இவ்வளவு வருஷத்திற்கப் புறம் இப்பத்தான் முதல் முதலாய் நீங்க'என்ன சமைக்கப் போகிறாய்'னு கேட்கிறீர்களே, அதான்''

''அதில்லை. அவர்களுக்கு ஐதராபாத் சமையல்தான் பழக்கம். காரம் அதிகமாய் சாப்பிடுவார்கள். உங்க செல்லம்மா தஞ்சாவூர்க்காரியாச்சே! அதான் கொஞ்சம் ஞாபகப்படுத்தலாம்னு...''

''சரி, கோர்ட்டுக்குப் போறதை விட்டுட்டு சமையலில் எனக்கு ஒத்தாசை பண்றீங்களா?''

''நீ உத்யோகம் பண்ற மனைவியாய் இருந்தால் நிச் சிந்தையாய் அந்த காரியத்தைப் பண்ணியிருப்பேன்னு உனக்கு எவ்வளவோ தடவை சொல்லியிருக்கேன்.'' அவன் பீரோவிலிருந்து எதையோ எடுப்பதுபோல கையை நீட்டி மனைவியின் தோளைச் சுற்றிப் போட்டுக் கொண்டே தாழ்ந்த குரலில்—

''கொஞ்சம் முன்னாடி கரும்பச்சை நிறத்தில் புடவை கட்டிக் கொண்டிருந்தாயே, அம்மம்மா! அப்ப உன்னைப் பார்த்தால்...''

''விடுங்கள், ஆர்த்தி வந்து விடுவாள். இந்த

பரமேஸ்வரி இருக்கிற நான்கு நாளும் நாம்ப தூர தூரத்தில்! வெறுமே சிநேகிதர்கள் மட்டுமே. அவன் மார்பில் கைவைத்துப் பின்னுக்குத் தள்ளினாள்.

''ஐயோ! என்னால் பட்டினி கிடக்க முடியாதே!''

''அவ்வப்பொழுது அந்த மாதிரி பட்டினி கிடப்பது ஆரோக்கியத்திற்கு நல்லதுதான்!''

''ரொம்பவுந்தான் என்னைத் தலைப்பில் முடிந்து கொண்டிருக்கிறாய் நீ!''

''நீங்க அவிழ்த்துக்கொண்டு ஓடிப்போயிடுங்களேன், நானா வேண்டாம் என்றேன்?''

''உன்னைப் பார்த்தால் இப்பப் புதுசாய் பரிச்சயமாகி காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கணும் போலிருக்கு.''

''அப்படியே பண்ணுங்க! நான் ஒரு வருஷம் எங்கண்ணா வீட்டில் இருக்கேன். ஏதாவது பஸ்ஸ்டாண்டிலோ, சினிமா தியேட்டரிலோ உங்களுக்குத் தென்பட்டுக் கொண்டிருக்கேன். நீங்கள் என் வீட்டிற்குப் போன் பண்ணுங்கள். எனக்குக் கடிதம் எழுதுங்கள்''

சுமித்ரா திடீரென்று கணவரிடம் வந்து அவன் மார்பில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

''நான் எவ்வளவு அதிர்ஷ்டசாலின்னு பரமேஸ்வரியைப் பார்த்தப்புறந்தான் புரிந்தது!''

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'

''பாவம், பரமேஸ்வரியைப் பாருங்க! என் வயதுதான்! கணவன் போயிட்டான்! பணம் இல்லை! தலைக்கு மேல் வளர்ந்து விட்ட பிள்ளை! ஆதரவாய் இருப்பதற்கு பதில், பிரச்னையாய் மாறிவிட்டான். அவள் வாழ்க்கையில் எல்லாமே பிரச்னைதானே தவிர, சந்தோஷம் ஏது, சொல்லுங்க? அப்படிப்பட்ட காரிருளில் வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்க்கையைத் தனியாய் தாங்கிப்பது கஷ்டந்தானே!'



''நீ இப்படிப் பேசிக் கொண்டிருந்தால் என்னால் கோர்ட்டுக்குப் போக முடியாது.''

''போங்க!'' சுமித்ரா தொலைவில் நகர்ந்து கொண்டாள்.

''அந்த டீச்சர் வேலை பண்ணிக் கொண்டிருக்கும் ராதா விஷயம் என்னவாச்சு? விவாகரத்து கொடுத்துட்டீங்களா?''

''ஊஹும்! ரெண்டு பேருக்கும் நியாயமாய் எடுத்துச் சொல்லி ராஜி பண்ணிவைத்து விட்டேன்.''

''நல்ல காரியம் பண்ணினீங்க. நீங்க என்றுமே விவாகரத்து கேசுகளை எடுத்துக்காதீங்க.'' வேண்டுகோள் விடுத்தாள்.

விஜயராகவன் சிரித்தான்.

''உன் பேச்சைக் கேட்டால் நான் பிராக்டீசு பண்ணிக் கிழிச்சாற்போலத்தான்! விவாகரத்து கேசா, வேண்டாம் என்கிறாய்! கொலை கேசுகளோ கூடவே கூடாது என்கிறாய். சொத்து விவரங்களைப் பார்த்தாலோ அவர்கள் உசிரு சும்மா விடாதுங்கிறாய். சண்டை சச்சரவுக் கேசுகள் நமக்கு வேண்டவே வேண்டாம் என்கிறாய். அப்புறமாய் நான் பார்க்கக்கூடிய கேசு வேறென்னதான் உண்டு?''

''எனக்கு அதெல்லாம் தெரியாது. உங்க மூலமாய் யாருக்கும் எந்த அநியாயமும் ஏற்பட்டு விடக்கூடாதுங்கிறதுதான் என் ஆசை! அவர்கள் யாராவது நம்மைத் திட்டினால் அது நம்ப குடும்பத்துக்குச் சாபமாயிடுமோன்னு தான் பயம் எனக்கு.''

அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான்

''எனக்கு டயமாயிடுத்து.''

''போயிட்டு வாங்க. க்ஷேமமாய்ப்போய் லாபத்தோடு திரும்பி வாங்க. இன்றைக்குச் சீக்கிரமாய் வரேன்னு சொன்னீர்கள், நினைவிருக்கா?''

''ஆங்! எனக்காகக் காத்துக் கொண்டிருக்க வேண்டாம். நீங்கள் சாப்பிட்டு விடுங்கள்.''

''சரி.''

'சாப்பாட்டில் குழம்பில் கொஞ்சம் காரம்!'' விஜயராகவன் போகத் திரும்பியவன் நின்று சொன்னான்.

''உங்க ஆத்மசிநேகிதரின் மனைவிக்கு எந்தக் குறையும் ஏற்படாமல் பார்த்துப்பது என் கடமை! போதுமா? நீங்கள் கவலையில்லாமல் போயிட்டு வாங்க.''

விஜயராகவன் மனைவியிடம் நெருங்கி வந்தான்.

''இதப்பாருங்க? திரும்பவும் மறந்து போயிட்டீங்க!''

''சாரி!ஞாபகப்படுத்திக் கொண்டு விட்டேன்.''

சிரித்துக் கொண்டே அங்கிருந்து நகர்ந்தான்.

## 3

கோபாலசுவாமி சாப்பிட்டு விட்டு, பாக்குப் பொடியை மென்று கொண்டே சாவதானமாய் வந்து கொண்டிருந்தார். அவர் பழுத்த கிழவர். அகன்ற அம்



முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே, அவர் நல்ல குணம் தெரிந்துவிடும். எவ்வளவு சிரமமாயிருந்தாலும் சரி, பிறர்க்கு உபகாரம் பண்ணுவதென்றால் எங்குமில்லாத பொறுமை வந்து சேர்ந்துவிடும் அவருக்கு. அவர் மகன்களும் மருமகள்களும் 'உங்களுக்கென்ன வந்தது? நீங்கள் 'கிருஷ்ணா ராமான்னு ஒரு மூலையில் உட்கார்ந்திருக்காமல் தலையில் அட்சதையைப் போட்டுக் கொண்டு கிளம்பி விடுகிறீர்களே'—என்று எவ்வளவு அலுத்துக் கொண்டாலும் அவர் அதைப் பொருட்படுத்தாமல் யாருக்கு என்ன உதவி தன் மூலமாய் வேண்டியிருந்தாலும் பண்ணிக் கொண்டிருப்பார். அவர் விஜயராகவனுக்குப் பெரியப்பா முறை ஆகவேண்டும்.

கோபாலசுவாமியின் பேரில் சுமித்ராவுக்கு பக்தியும் மதிப்பும் உண்டு. வீட்டில் ஏதாவது பணியாரங்கள் செய்தாலும் அவருக்குக் கொடுத்தனுப்பாமல் இருக்க மாட்டாள்.

''நீ அவருக்கு இதுபோல லஞ்சம் கொடுத்துத் தாஜா பண்ணிக் கொள்கிறாய். அதனால் தான் யார் மீதும் இல்லாத அளவுக்கு உன் மேல் அதிகப்பிரியம் அவருக்கு'' என்று விஜயராகவன் மனைவியை அழ வைத்துக் கொண்டிருப்பான்.

கோபாலசுவாமி உள்ளே வந்து—''அம்மா சுமித்ரா''! என்று இரைந்து கூப்பிட்டதுமே சுமித்ரா வெளியே வந்தாள்.

''வாங்க பெரியப்பா! என்ன இவ்வளவு தாமதம் பண்ணிட்டீங்க? அவர் உங்களுக்காக இத்தனை நேரம் காத்துக் காத்துப் பார்த்துட்டு, இப்பத்தான் கோர்ட்டுக்குப் புறப்பட்டார். வாங்க, உட்காருங்க.''

''எனக்கு இது ஒரு வேலைதானாம்மா? யார் யாரோ கூப்பிட்டுக் கொண்டே இருப்பார்கள்! அது சரி, யாரோ

விருந்தாளிகள் வந்திருக்கிறதாய் கேள்விப் பட்டேனே!''

''பிரசாத் என்று உங்க பிள்ளையின் நண்பர் இருந்தாரே, அவரோட மனைவியும் மகனும் வந்திருக்கிறார்கள்.''

''எந்தப் பிரசாத்?''

''உங்க ரகுராமின் மகன்தான் பெரியப்பா!''

' ஓஹோ! அவனா? அவன் மனைவியும் மகனுமா வந்திருக்கிறார்கள்? அவர்கள் சொத்து விவகாரமெல்லாம் இன்னுமா முடியலை?''

''முடியலை. அந்த வேலையாய்த்தான் வந்திருக்கிறாள் அவள்.''

''பாவம், பிரசாத் போய் ரெண்டு வருஷங்கூட ஆயிடுத்து போலிருக்கே!''

''ஆமாம் பெரியப்பா? அவர் போனபிறகு மனைவியும் மகனும் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள்.''

''ஆமாமாம்! ராகவன் எப்போதோ ஒரு தடவை சொன்ன ஞாபகம்! அதுசரி, ரகுராம் என்ன சொல்கிறாராம்?''

' என்ன வேண்டுமானாலும் பண்ணிக்கொள், சொத்தில் சல்லிக்காசு தரமுடியாதுன்னுட்டாராம். மகன் சண்டை போட்டுக் கொண்டு போன கோபம் அவருக்கு.''

''என்ன மனிதர்களோ! செத்த பிறகும் இதென்ன சாதிப்போ?''

''உங்க மகன் கூட அப்படித்தான் சொல்றார். இவர்களோ ரொம்ப கஷ்ட தசையில் இருக்கிறார்கள். பேரன் முகத்தைப் பார்த்தாவது இரங்கச் சொல்கிறார். ஆனால் அவரோ அதொன்றையும் காதில் போட்டுக்கவேயில்லை. உங்க மகன் உங்களைத் தூதாய் அனுப்பி கோர்ட்—விவகாரங்கள் வரைக்கும் போகாமல் பார்த்துக்கச் சொல்லலாம்னு எண்ணிக் கொண்டிருக்கிறார்.''



''அந்த ரகுமான் ரொம்பவும் முன் கோபியம்மா! நம்ப பேச்சைக் காதிலேயே போட்டுக்க மாட்டான்.''

''நீங்க அப்படிச் சொல்லிடாதீங்க பெரியப்பா! நீங்க மனசு வைத்தால் நிவர்த்தி பண்ணிக்க முடியாத சிக்கல் உண்டா? பாவம், மகனுக்கு இன்னும் சிறகு முளைக்கவில்லை. அவன் படிப்புக்கும் வீட்டுச் செலவுக்கும் எவ்வளவு பணம் வேணும்னு யோசித்துப் பாருங்கள்! குறைந்த பட்சம் அந்தப் பையனின் படிப்புக்காகவாவது கொஞ்சம் பணம் தந்தால்...''

''அவளுக்குப் பிறந்த வீட்டுப்பக்கம் யாருமில்லையாம்மா?''

''பேருக்கு இருந்துட்டால் மட்டும் என்ன பிரயோஜனம்? ஒருத்தர் கூட விரலை அசைத்து எந்த உதவியும் பண்ணமாட்டார்கள்.''

''ஐயோ, பாவம்!''

''உண்மையாகவே இரக்கமாய்த்தான் இருக்கு.''

''சரி, நம்ப முயற்சியை நாம்ப பண்ணுவோம். அதற்கப்புறமாய் அவர்கள் அதிர்ஷ்டம் எப்படியோ அப்படியே நடந்துக்கட்டும்.''

''ஆமாம் பெரியப்பா! நம்மால் முடிந்த உதவியைப் பண்ணிட்ட பிறகு அப்படித்தான் நினைக்கணும். இருங்க, அவளை அழைத்து வரேன்.'' என்று உள்ளே போனாள்.

''பரமேஸ்வரி! கோபாலசுவாமி வந்திருக்கார். வா'' என்று கூப்பிட்டாள். ஹேமந்த் அவ்விடத்தில் கட்டிலில் படுத்தவாறு புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான். பரமேஸ்வரி சுமித்ராவுடன் போவதைப் பார்த்து விட்டுத் தானும் மளமளவென்று அவர்களைப் பின் தொடர்ந்து வந்தான்.

''இவள் தான் பரமேஸ்வரி.'' சுமித்ரா அறிமுகம் பண்ணினாள். பரமேஸ்வரி அவரைப் பார்த்துக் கைகூப்பினாள். பரமேஸ்வரிக்கு ஏறக்குறைய சுமித்ராவின் வயது தான் இருக்கும். பாவம்! இன்னும் வாழவேண்டிய வயதும், வாழ்க்கையும் நிறைய இருக்கும் பொழுது கடவுள் நெற்றிப்பொட்டை அழித்து விட்டார்! கோபாலசுவாமி இரக்கம் ததும்பப் பார்த்தார் அவளை.

''தாத்தா! கோபாலசுவாமிங்கறது நீங்கதானா?'' ஹேமந்த் எல்லாம் தெரிந்தவனைப் போல விசாரித்து விட்டு, பக்கத்திலிருந்த நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

''ஆமாம், உன் பேரென்ன?'' கேட்டார் அவர்.

' ஹேமந்த் குமார்! உங்க பேர் பலே ஜோராயிருக்கு! கோபாலசுவாமின்னால் உங்களுக்குப் பெரிய குடுமியும், நெற்றியில் நாமமும், கழுத்தில் துளசிமாலையும் இருக்கும்னு நினைச்சேன்?''.

''ஹேமந்த்!'' தாய் கடுமையாய்ப் பார்த்தாள்.

கோபாலசுவாமி அதைக்கேட்டு சங்கடத்தில் ஆழ்ந்து விடவில்லை. பெரிதாய்ச் சிரித்தார்.

ஹேமந்த் அவர் பற்களையே கூர்ந்து பார்த்தான்.

''அட! நீங்க இவ்வளவு கிழவர்! உங்களுக்குப் பல்லெல்லாம் இருக்கே! பல் செட்டா அது?''



அவர் இன்னும் பெரிதாய்ச் சிரித்தார்.

''இழுத்துப் பார்க்கிறாயா? பலே கெட்டிக்காரப் பையன் தான் நீ'' சிரித்துக் கொண்டே அவன் முதுகில் ஒரு தட்டுத் தட்டினார். ஹேமந்த் முதுகு அதிர்ந்து விட்டது. முகம் வெலவெலத்துப் போய் விட்டது

''தாத்தாவை யாருன்னு புரிஞ்சுதா இப்போ?'' சுமித்ரா சிரிப்பை அடக்கிக் கொண்டே கேட்டாள்.

தாத்தாவின் பேச்சுக் குரலைக் கேட்டுவிட்டு, நாய்க் குட்டியைத் தூக்கிக் கொண்டு அதற்குள் அவ்விடத்திற்கு வந்து சேர்ந்திருந்த ஆர்த்தி, அதைப் பார்த்து விட்டு தாத்தாவுடன் சேர்ந்து விழுந்து விழுந்து சிரித்தாள்.

ஹேமந்த் கோபமாய்ப் பார்த்தான்.

''தாத்தா, எப்ப வந்தாய்?'' சிரித்துக் கொண்டே வந்து அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள். ஆர்த்தியின் கையிலிருந்து நழுவிய ஜூலி தாத்தாவின் மேல் பாய்ந்தது.

''ஐயோ! பேச்சில் ஆழ்ந்து போய் உனக்கு லஞ்சம் கொடுக்கவே மறந்துட்டேனே.'' தாத்தா ஜேபியிலிருந்து சாக்லெட்டை எடுத்து அதன் வாயில் வைத்தார்.

அதைத்தின்ற ஜூலி, பின்னங்கால்களால் நின்று கொண்டு, முன்னங்கால்களில் ஒன்றைத் தூக்கி அவர் கை மேல் வைத்தது.

''தாங்க்ஸ் சொல்கிறாயா? நோ மென்ஷன் ப்ளீஸ்!'' என்றார் அவர்.

ஜூலி தரையில் காலை ஊன்றிக் கொண்டதுமே ஹேமந்திடம் போயிற்று.

''சீ! போ!'' கிட்டே வந்து மோப்பம் பிடிக்கப்போன

அதன் முகத்தில் ஒரு குத்துக் குத்தித் தள்ளிவிட்டான் ஹேமந்த்.

அது வீலென்று கத்திக் கொண்டே பின்னுக்குப் போயிற்று. அதற்குள் ஆர்த்தி ஓடிவந்து அதைத் தூக்கி மார்போடு அழுத்திக் கொண்டாள்.

அத்துடன் நின்று விடவில்லை. ''யூ இடியட்!'' ஹேமந்த்தை நோக்கிப் பாய்ந்தபடி கையை ஓங்கினாள்.

''ஆர்த்தி!'' சுமித்ரா சட்டென்று ஓடிவந்து ஆர்த்தியின் கையைப் பிடித்துத் தடுத்திருக்காவிட்டால் ஹேமந்த் கன்னத்தில் அவள் கை சுளீரென்று தாக்கியிருக்கும்

''பாரு மம்மீ! இந்த ராஸ்கல் என் நாயை எப்படிப் பிடித்துத் தள்ளிட்டான்னு பார்.''

ஆர்த்தியின் கண்களில் கிர்ரென்று நீர் சுழன்றது.

''ஆர்த்தி! மொதல்ல உள்ளே போ நீ'' மகளைப் பார்த்து உறுமினாள் சுமித்ரா.

''நான் போக முடியாது. அவனை ஜூலியிடம் மன்னிப்புக் கேட்டுக்கச் சொல்லு.''

''நான்சென்ஸ்! தரித்திரம் பிடித்த நாய்க்கு மன்னிப்பா? என்னைத் திட்டினதற்கு மொதல்ல நீ என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கணும்' ஆவேசத்தோடு நாற்காலியை விட்டு எழுந்திருந்தான்.

''ஹேமந்த்!'' பரமேஸ்வரி முறைத்துப் பார்த்ததை அவன் பொருட்படுத்தவில்லை,

''ஹேமந்த்! இது நம்ப வீடில்லைங்கிற விஷயத்தை மறந்துப் போயிட்டாய்.'' பரமேஸ்வரி அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''பின்னே என்னம்மா? நம்ப வீடில்லைங்கிறதால கண்ட பேச்சையெல்லாம் கேட்டுக்கணுமா?''.



''நீ கொஞ்ச நேரம் வெளியே போ, ப்ளீஸ்.''

''ஆர்த்தி, நீ உள்ளே போ! இன்னொரு தடவை வாயைத் திறந்தால் சும்மாயிருக்கமாட்டேன், உம்'' அதட்டினாள் மகளை சுமித்ரா.

ஆர்த்தி ஹேமந்த்தை விழுங்கி விடுவது போலப் பார்த்து விட்டுத் தாயின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டுத் தன் அறைக்குப் போய் விட்டாள்.

ஹேமந்த் ஆர்த்தியின் கையிலிருந்த நாய்க்குட்டியை அருவருப்புடன் முகம் சுளித்தபடி பார்த்துக் கொண்டே வெளியே போனான்.

ஆர்த்தி அறைக்குள்ளும், ஹேமந்த் அறைக்கு வெளியேயும் போய் விட்ட பிறகு, சுமித்ராவும் பரமேஸ்வரியும் என்ன பேசுவதென்று புரியாமல் சங்கடத்துடன் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்கள்.

''அப்பப்பா! இந்தக் காலத்துப்பசங்க வெறும் கோழிக் குஞ்சுகள்! காரணமில்லாமலேயே குழி பறிச்சுக் கொண்டிருப்பார்கள்'' என்றார் தாத்தா.

''நீ...நீ ஒன்றும் நினைச்சுக்காதே பரமேஸ்வரி! தன் நாய்க்குட்டியை ஏதாவது சொல்லிவிட்டால் போதும். ஆர்த்தி சும்மாயிருக்க மாட்டாள்'' என்றாள் சுமித்ரா.

''இதில் ஆர்த்தியின் தப்பு எதுவுமில்லை. தப்பெல்லாம் அவனோடதுதான். நான்தான் சொன்னேனே! ஹேமந்த் சுத்தமாய் விளையாட்டுப் பையனாய் ஆகிக் கொண்டிருக்கிறான். இதெல்லாம் என் துரதிர்ஷ்டம்.'' பரமேஸ்வரி அதற்கு மேல் அழுகையை அடக்க முடியாதவளாய் அங்கிருந்த நாற்காலியில் சரிந்து முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டாள்.

அதற்குள் விஜயராகவன் உள்ளே வந்தான்.

''என்னது? என்னவாச்சு?'' அழுது கொண்டிருந்த பரமேஸ்வரியைப் பார்த்துக் கலக்கத்துடன் கேட்டான்.

பரமேஸ்வரி அவன் குரலைக்கேட்டதுமே, சட்டென்று கண்களைத் துடைத்துக் கொண்டு, அங்கிருந்து எழுந்து உள்ளே போய் விட்டாள்.

விஜயராகவன் மனைவியைத் திரும்பிப் பார்த்தான்.

அவனுக்கு எப்பொழுதும் போல அம்முகத்தில் கண்கள் மூலமாகவே எடுத்துச் சொல்லும் பதில் கிடைக்கவில்லை. சுமித்ரா கணவரை ஏறிட்டுப் பாராமல் உள்ளே போய் விட்டாள்.

''வந்துட்டாயா ராகவா! நீ சீக்கிரமாய் வந்துடுவாய்னு தான் இன்னும் உட்கார்ந்திருந்தேன்'' என்றார் கோபாலசுவாமி.

''என்னவாச்சு பெரியப்பா?''.

''ஒன்றுமில்லைடா! ஏதோ பசங்கள் கலாட்டா! அந்த பரமேஸ்வரியின் மகன் ரொம்பக் கோபக்காரனாய் இருக்கான்.''

''என்னதான் ஆச்சு?''.

''அதான் ஒண்ணுமில்லைன்னேனே, விடு! சரி, இதைச் சொல்லு, என்னை எதுக்கு வரச்சொல்லி சேதி அனுப்பினாய்?''

''அந்த ரகுராமனோடு பேசணும்.''

''அதான் எல்லாம் பேசித் தீர்த்துட்டாரேடா! இன்னும் என்ன புதுசாய் பேசறத்துக்கு இருக்கு?''

''புதுசாய் பேசறத்துக்கு நிறையவே இருக்கு பெரியப்பா! மரியாதையாய் பிரசாதுக்கு வரவேண்டிய பங்கை சொத்திலிருந்து தரப்போறாரா இல்லையான்னு தெரிஞ்சுக்கோ!''



''அதான் கொடுக்கமாட்டேன்னு சொல்லியிருக்காரே!''

''இன்னொரு தடவை திரும்பவும் கேளு. கொடுக்க மாட்டேன்னால் ஹேமந்த சார்பில் நான் வழக்குப் போடப் போவதாய்ச் சொல்லு''.

''இதென்னடா பேச்சு?''

''ஆமாம், பிரசாத் என் நண்பன்! அவன் இறந்து விட்டான். அவன் மனைவியும் மகனும் எந்த ஆதாரமும் இல்லாமல், படாதபாடு பட்டுக் கொண்டு பட்டினி கிடக்கிறதைப் பார்த்துக் கொண்டு என்னால் சும்மாயிருக்க முடியாது!இப்பவாவது அவரிடம் நல்லதனமாய்ப் பேசி, அவர் நம்ப பேச்சைக் கேட்கிறாப்போல பண்ணிடணும்னு தவிக்கிறேன். அவர் கேட்காவிட்டால் நாம்ப என்ன பண்ண உத்தேசித்திருக்கோம்னு கூடச் சொல்லிடணுமில்லையா?''

கோபாலசுவாமி தலை குனிந்தார்.

''நிஜந்தான்னு வை! ஆனால் ரகுராமனோடு மோதுவதற்கு முன்னால் இன்னொரு தடவை நன்றாய் யோசித்துப் பார்த்துக் கொள்வது நல்லதுன்னு தோணுகிறது.''

''நன்றாய் யோசித்துப் பார்த்தாச்சு பெரியப்பா!''

''சரி, சாயந்திரமாய்ப்போய் பேசிப் பார்க்கிறேன்''

''நீ நம்ப உத்தேசத்தை அழுத்திச் சொல்லி விடு.''

''சரி.''

விஜயராகவன் கோபாலசுவாமியை அனுப்பி வைத்துவிட்டு உள்ளே வந்தான்.

''என்ன? என்னதான் நடந்தது?''

அவள் நான் வரும்போது ஏன் அழுது கொண்டிருந்

தாள்.? ஆர்த்தி ஹேமந்த்தை என்ன சொன்னாள்?'' கேட்டான் கலக்கத்தோடு.

சுமித்ராவுக்குக் கணவரிடம் எதையும் மறைத்து வைத்துப் பழக்கமில்லை. நடந்ததையெல்லாம் சொல்லி விட்டாள்.

''அவனுக்குத்தான் நாய் என்றாலே அருவருப்புன்னு சொல்லிட்டானே, பின்னே ஜூலியை அவனிடம் ஏன் போகவிட்டாள் ஆர்த்தி?''

''ஆர்த்தி வேண்டுமென்றே விடலை. அதேதான் அவனிடம் போயிற்று.''

''சரி, சரி. இனிமேல் இந்த மாதிரி எதுவும் நடக்காமல் பார்த்துக்கோ, நீ''.

''தங்கள் சித்தம்! அப்படியே பண்றேன்!''.

''அதில்லை சுமி! ஏதோ வராதவர்கள் வந்திருக்கிறார்கள். நாலு நாள் இருந்துட்டுப் போகப் போகிறார்கள். அவன் கொஞ்சம் கிராக் என்றே வைத்துக்கோ! நாம்ப அதைப் புரிஞ்சு கொண்டு கொஞ்சம் பொறுமையாய் இருந்துட்டால் போறது?''

''அதான் அப்படியே பண்றேன்னேனே?''

''நீ கொஞ்சம் ஆர்த்திக்கு எடுத்துச் சொல்லு?''

''நீங்களே கூப்பிட்டுச் சொல்லிவிடுங்கள்.''

''சே! இப்படிப்பட்டதெல்லாம் தாயார் சொன்னால் தான் சரியாய்ப் புரியும்.''

''உங்க உபாயம் நான் அறிவேன்! மகளிடம் தந்தைக்கு உள்ள நல்ல பெயர் போயிடக்கூடாது! அதை நான்தான் தாங்கிக்கணும்?''



'உன் கோப தாபங்கள், உன் ஊடல், இதையெல்லாம் நான் தாங்கிக்கவில்லையோ?''

''அந்தப் பேச்செல்லாம் எதுக்கு? மொதல்ல நான் உங்கமேல் எப்பொழுதாவது ஊடல் கொண்டிருக்கிறேனா? நீங்கதான் எடுத்ததற்கெல்லாம் முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டு என் மன அமைதியைக் கெடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். எதுக்கு அப்படிப் பண்றீங்க?''

விஜயராகவன் மனைவியை அணைத்துக் கொண்டான்.

''அது என் ரகசியம்! உனக்குச் சொல்ல மாட்டேன். அது உனக்குத் தெரிந்துட்டால் நம் தாம்பத்திய வாழ்க்கையிலுள்ள ருசியே போய்விடும்!''

''என்ன தலையெழுத்தோ! சில சமயம் உங்களை ரொம்பவும் புரிந்து கொண்டாற் போலவே இருக்கு. வேறு சில சமயமோ கொஞ்சமும் புரிஞ்சுக்கவே முடியலை.'' சுமித்ரா அங்கலாய்த்துக் கொண்டாள்.

''அப்படிப் புரிஞ்சுண்டும், புரிஞ்சுக்காமலும் இருந்தால்தான் அது குறுக்கே ஜலதாரையைப் போல இருந்து கொண்டு மேன்மேலும் ஒருத்தர் மேல் இன்னொருத்தருக்கு இஷ்டம் ஏற்படும்படி பண்ணிக் கொண்டிருக்கும்!''

அவன் சொல்லிக் கொண்டிருந்த போதே போன் மணி கணகணவென்று ஒலித்தது.

''ஹலோ... ஆங்... நமஸ்காரம். வீட்டில்தான் இருக்கேன்.'' அவன் கைக்கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான். ''இப்பத்தான் கோர்ட்டிலிருந்து வந்தேன். சரி, வாங்க'—ஒரு நிமிஷத்திற்கு முன்னால் மனைவியோடு

சரஸமாடியபடி மலர்ச்சியுடன் இருந்த அம்முகம் இப்பொழுது சீரியஸாய் மாறிவிட்டது.

''மூர்த்தி இருக்கானா வெளியே? ராமச்சந்திரன் அவர்கள் எல்லோரும் இன்னும் பத்து நிமிஷத்தில் வரப் போகிறார்களாம்...செல்லம்மாவிடம் சொல்லி ஸ்ட்ராங் காப்பி போடச் சொல்லு.'' மளமளவென்று சொல்லிக் கொண்டே உடைமாற்றிக் கொள்ளப் போனான் விஜய ராகவன்.

## 4

ஹேமந்த் சோபாவில் சாய்ந்தபடி, டீபாயின் மேல் கால்களைத் தூக்கிப் போட்டுக் கொண்டு, மிடுக்காய் உட்கார்ந்து கொண்டிருந்தான்! அவனுக்குப் பக்கத்தி லிருந்த டிரான்ஸிஸ்டரிலிருந்து சங்கீதம் காதைப்பிளக்கும் படியாய் கேட்டுக் கொண்டிருந்தது. அதற்கேற்றாற் போல அவன் கால்கள் ஆடிக் கொண்டிருந்தன. அந்த சங்கீதம் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தாற்போல கண் களை மூடிக்கொண்டு பரவசமாய் உட்கார்ந்திருந்தான். அதற்குள் திடீரென்று டிரான்ஸிஸ்டர் நின்றுவிட்டது. அவன் என்னவாயிற்றோ என்று திரும்பிப் பார்த்த பொழுது ஆர்த்தி எப்பொழுது வந்தாளோ தெரியாது, டிரான்ஸிஸ்டரைக் கையில் பிடித்துக் கொண்டு அவள் பாட்டிற்குப் போய்க் கொண்டிருந்தாள்.

''ஏய்!'' அவன் இரைந்து கூப்பிட்டான். ஆர்த்தி அதைக் கேட்டுத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

அவன் எழுந்து வந்தான். ஆர்த்தி டிரான்ஸிஸ்டரை எடுத்து வந்து டிராயரில் தள்ளிப் பூட்டினாள்.



''அந்த டிரான்ஸிஸ்டரை இப்படிக் கொடு.''

ஆர்த்தி பதில் பேசவில்லை. மௌனமாய்ப் போய் தான் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

''உன்னைத்தான் சொல்றேன்.'' அவன் திரும்பவும் கத்தினான். ஆர்த்தி பதில் பேசவில்லை.

ஹேமந்த் கிட்டே வந்து ஆர்த்தியின் கையிலிருந்த புத்தகத்தைப் பிடுங்கித் தரையில் வீசியெறிந்தான்.

''மம்மீ!'' ஆர்த்தி வீடே அதிரும்படியாய் கத்தினாள்.

''என்னவாச்சு?'' சுமித்ரா ஓடிவந்தாள். சுமித்ராவைத் தொடர்ந்து பரமேஸ்வரியும் வந்தாள்.

ஆர்த்தி கீழே விழுந்து கிடந்த புத்தகத்தைச் சுட்டிக் காட்டினாள்.

''அதைப் பாரு! நான் படித்துக்கொண்டிருந்தபோது புத்தகத்தைப் பிடுங்கி வீசியெறிந்தான். மரியாதையாய் உடனே எடுத்துக் கொடுக்கச் சொல்லு!''

''என்னடா ஹேமந்த்? உனக்கு மூளை பிசகிடுத்தா?''

பரமேஸ்வரி சட்டென்று அப்புத்தகத்தை எடுத்து, சரியாய் அடுக்கி ஆர்த்தியிடம் தந்தாள்.

''நான் அந்தக் காரியத்தை ஏன் பண்ணினேன்னு கேள்.''

''எதுக்காக இருந்தாலும் சரி, அப்படிக் கீழே விட்டெறிவது நன்றாயில்லை.'' பரமேஸ்வரி கோபத்தை அடக்கிக்கொண்டே பதிலளித்தாள்.

''இந்தப் பொண்ணு திமிர் பிடித்து என்ன பண்ணினாள் தெரியுமா? நான் பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்த

போது டிரான்ஸிஸ்டரை எடுத்துக்கொண்டுபோய் டிராயரில் வைத்துப் பூட்டிட்டாள்.''

''என்ன ஆர்த்தி? நிஜந்தானா?'' சுமித்ரா மகளை உலுக்கியெடுத்தாள்.

''நிஜந்தான் மம்மீ! சின்னதாய் வைத்துக்கோன்னு ரெண்டு மூணு தடவை சொல்லியும் கேட்கலை. இங்கே அவ்வளவு பெரிதாய் அது கத்திக் கொண்டிருந்தால் என் படிப்பு மூளையில் ஏறவேயில்லை.''

''ஹேமந்த்! அவ்வளவு பெரிதாய் டிரான்ஸிஸ்டரை அலறவிடாதேன்னு நான்கூடச் சொன்னேன். இது நம்ப வீடு இல்லைங்கிற விஷயத்தையே மறந்து போயிட்டாய்.'' மகனைக் கண்டித்தாள் பரமேஸ்வரி.

''போகட்டும் விடுங்க! ஹேமந்த்! நீ டிரான்ஸிஸ்டரை அந்தப் பக்கத்து அறையில் வெச்சுக்கோப்பா! ஆர்த்திக்குப் பரீட்சை கிட்டே வரதில்லையா?'' சுமித்ரா நயமாய்ச் சொன்னாள்.

''படிப்பின் மதிப்பைப் பற்றித் தெரிந்திருந்தால் தானே!''

ஹேமந்த் திரும்பவும் ஆவேசமடைந்தான். ''இதப் பாரு, கேட்டாயா ஆன்ட்டி உன் மகள் பேச்சை? எனக்குப் படிப்பின் மதிப்பே தெரியாதாம்? அதாவது நான் பெயிலாயிட்டேன்னுதானே!''

''அப்பப்பா! உனக்கு எவ்வளவு தடவை சொல்லியிருப்பேன்? போகிற எல்லா இடத்திலும் ஒரே மாதிரி நடந்து கொள்ளலாமா?'' பரமேஸ்வரி மகனை எப்படிக் கண்டிப்பது என்று தெரியாமல் திணறினாள்.

''ஒருத்தர் வீட்டுக்கு வந்திருக்கிறோமேங்கிற மரியாதை இருந்தால்தானே?'' ஆர்த்தி முணுமுணுத்தாள்.



''வீட்டுக்கு வந்தவங்களை எப்படி மரியாதை பண்ணணும்னு உனக்குத் தெரிந்து கிழிச்சுதா?''

''அப்பப்பா! ஹேமந்த்! வாயை மூடு!'' பரமேஸ்வரி அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

ஆர்த்தி! நீ என் அறைக்குப் போய்ப் படி.'' சுமித்ராவும் கெஞ்சினாள் மகளை.

''என் அறையை விட்டு என்னைப் போகச் சொல்றாயா மம்மீ? இந்த அறைக்கு யார் வேற்று ஆளோ அவங்களையே போகச் சொல்லு.''

''ஆங்! ஆங்! போயிடறேன். நீ ஒண்ணும் சொல்லத் தேவையில்லை.' ஹேமந்த் வேகமாய் வெளியே போய் விட்டான்.

''ஆர்த்தி! உனக்குக் கொஞ்சமாவது புத்திங்கிறது இருக்கா? அப்பா கேட்டால் எவ்வளவு திட்டுவார் தெரியுமா?'' சுமித்ரா மகளை இடித்துரைத்தாள்.

''எதுக்குத் திட்டுவார்? நான் என்ன தப்புப் பண்ணிட்டேனாம்?''

''நாலுநாள் இருந்துட்டுப் போயிடப்போறவர்களோடு இதென்ன ரகளை?''

''மற்றவர்கள் வீட்டுக்கு வந்திருக்கும்போது எப்படி நடந்துக்கணும்னு தெரியாத முட்டாள்களை அப்படித்தான் பண்ணணும்!''

''அப்பப்பா! நீங்க பசங்களே இல்லை, பிசாசுகள்!'' சுமித்ரா அலுத்துக் கொண்டே அங்கிருந்து நகர்ந்தாள்.

ஹேமந்த் அறைக்குள் வந்து மளமளவென்று பெட்டியில் துணிகளை அடுக்கி வைத்துக் கொண்டான்.

''இதென்ன அவசரம் உனக்கு?''

''அந்தப் பொண்ணு அவ்வளவு கர்வமாய் பேசிய பிறகு, என்னால் ஒரு நிமிஷங் கூட இந்த வீட்டில் இருக்க முடியாது. பெரிதாய்ப் படித்துக் கிழித்தாள்!பொதிமாட்டைப் போல மூளையில் சுமந்து கொண்டு சனியன் பிடித்த படிப்பு! என்ன திமிர் பார்!''

''ஹேமந்த்! நம்ப வேலையாய் நாம்ப இங்கே வந்திருக்கோம்''.

''நாம்ப வரலை. இந்த மாமா நம்ப உயிரை எடுத்து இங்கே அழைத்து வந்தார். நான் வரமாட்டேன்னு மொதல்லயே சொன்னேன். நீதான் என்னை இழுத்துக் கொண்டு வந்தாய்.''

''ஹேமந்த்! சின்னப் பையனைப் போல பேசாதே! உனக்கோ உத்யோகமும் இல்லை! படிப்பும் முடியலை. அங்கே ஊரெல்லாம் கடன்! நம்மால் எப்படி வாழ முடியும்?''

'அதற்காக வேற்று மனுஷர்கள் வீட்டுக்கு வந்து உட்கார்ந்து பேச்சுக் கேட்கணுமா? உனக்கு அந்தப் பணமும் கிணமும் வேணும்னால் நீ அந்தக் காரியத்தைப் பார்த்துக் கொண்டு எப்பப் பிடிக்குமோ அப்ப வா! நான் போயிடறேன்!''

''மாமாவிடம் சொல்லாமலேயா?''.

''அதோ மாமாவே வந்துட்டார்! மாமா, நான் ஊருக்குப் போறேன் ''

விஜயராகவன் வியப்படைந்து விட்டான். ''இதென்னது? திடீர்னு இதென்னது?''

''நான் இங்கே இருக்கிறவரைக்கும் உங்க பெண்ணின் படிப்புக் கெட்டுப் போயிடும்.''

''அப்படி யார் சொன்னது?''



''அவன் வார்த்தைகளை நீங்கள் பொருட்படுத்தாதீர்கள்'' என்றாள் பரமேஸ்வரி.

''என்னதான் ஆச்சு? ஆர்த்தி ஏதாவது சொன்னாளா?''.

''ஒன்றும் சொல்லவில்லை.''

''இரு ஹேமந்த்! நான் தெரிஞ்சுண்டு வரேன்.'' விஜயராகவன் நேராய் மனைவியின் அறைக்கு வந்தான்.

அங்கே ஆர்த்தியும் சுமித்ராவும் நின்று கொண்டிருந்தார்கள். அவ்விருவரையும் பார்த்த மாத்திரத்தில் ஏதோ ரகளை வந்திருக்கும் என்று புரிந்து விட்டது அவனுக்கு.

''டாடீ!'' ஆர்த்தி தந்தை கேட்பதற்கு முன்னாலேயே நடந்ததையெல்லாம் சொல்லி விட்டாள்.

விஜயராகவன் எல்லாவற்றையும் கேட்டான்.

''ஆர்த்தி! வந்து ஹேமந்த்திடம் இனி ஒருபோதும் இதுபோல பண்ணமாட்டேன்னு மன்னிப்புக் கேளு.''

''இப்ப நான் என்ன தப்புப் பண்ணிட்டேன் டாடி?''

''நீ தப்பு ஒண்ணும் பண்ணலை. நான் சொல்லச் சொன்னதைச் சொல்லு.''

''நீங்க சொல்லச் சொல்லிட்டீங்களேன்னு பண்ணாத தப்புக்கு நான் தலை வணங்கணுமா டாடீ?''

''இதற்கு பதிலை அப்புறமாய்ச் சொல்றேன் உனக்கு. மொதல்ல நான் சொன்னபடி செய். இந்த டிரான்ஸிஸ்டரை எடுத்துக் கொண்டு போய் அவனிடம் கொடு.''

ஆர்த்தி தந்தையைப் பார்த்தாள். பிறகு அதை எடுத்துக் கொண்டு போய் ஹேமந்த்திற்குப் பக்கத்தில்

வைத்து விட்டு—''எக்ஸ்யூஸ் மீ.'' மெல்லிய குரலில் சொல்லி விட்டு விருட்டென்று திரும்பி தாயிடம் ஓடி வந்தாள்.

''சீ! சீ! இதற்குப் போய் வருந்தலாமா? உங்கப்பா என்ன சொன்னாலும் உன் நன்மைக்காகத்தான் சொல்லுவார்.''

''இல்லை! அப்பாவுக்கு அந்த ஹேமந்த்தைக் கண்டால் தான் பிடிக்கும்.'' ஆர்த்தி விசும்பிக் கொண்டேயிருந்தாள்.

''சின்னப் பெண்ணைப் போல பேசாதே.'' மகளைக் கண்டித்தாள் சுமித்ரா.

''இந்தப் பிசாசு நம்ப வீட்டை விட்டு எப்போது போகப் போறது மம்மீ?''

''சீ, சீ! அப்படியெல்லாம் பேசக்கூடாது.'' மேலுக்கு அவ்வாறு சொன்னாளே தவிர சுமித்ராவுக்குக் கூட ஹேமந்த்தின் நடவடிக்கை எரிச்சலை உண்டாக்கிற்று.

## 5

இரவு பத்துமணியாயிற்று!

விஜயராகவன் பார்த்துக் கொண்டிருந்த ஃபைல்களையெல்லாம் அடுக்கி மேஜை மேல் ஒரு பக்கமாய் வைத்து விட்டு, கடிகாரத்திற்கு சரியாய் அதிகாலை நான்கு மணிக்கு அலாரம் அடிக்கும்படியாய் 'கீ' கொடுத்துவிட்டு வந்து கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.



அதற்கு முன்கூட்டியே சுமித்ரா வந்து படுத்துக் கொண்டிருந்தாள். கண்களை மூடிக் கொண்டு அசையாமல் படுத்துக் கொண்டிருந்த போதிலும் அம்முகத்தில் உறக்கத்தின் சாயல் தென்படவில்லை. கொஞ்ச நேரம் மனைவியையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த அவன், காலடியில் விழுந்து கிடந்த கம்பளியை எடுத்து சுமித்ராவிற்கு இடுப்பு வரையிலும் போர்த்தினான்.

சுமித்ரா அதை விரும்பாதவளைப் போல கையால் கம்பளியைத் தள்ளிவிட்டுத் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

''உனக்குக் குளிருமோன்னு நினைச்சேன்.'' மன்னிப்பு வேண்டினாற் போலிருந்தது அக்குரல்.

''உடம்பு பற்றி எரிந்து கொண்டிருக்கிறது!'' தீவிரமாய் பதிலளித்தாள்.

அவன் சலிப்படைந்தவனாய்ப் பார்த்தான்.

''எதுக்காக?''

''என்னு உங்களுக்குத் தெரியாதது போலத்தான்! ஆமாம் பின்னே, நீங்கள் எந்தக் கவலையுமில்லாமல் ஃபைல்களைப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்ட போதே தெரிஞ்சுடுத்து எனக்கு.''

விஜயராகவன் தான் செய்த தப்பு என்னவோ என்று நினைவு படுத்திக் கொள்ள முயன்றான். அவன் மூளையில் ஏதேனும் கேசைப் பற்றிய யோசனைகள் புகுந்து விட்டால் போதும், அதற்குப் பிறகு வேறெதுவுமே நினைவில் இருக்காது. மாலையில் வந்தவர்கள் கொலைக் கேசில் அகப்பட்டுக் கொண்டிருந்தவர்கள். அவர்கள் தம்மை மிக நேர்மையானவர்களாகவும் குற்றமற்றவர்

களாகவும் சொல்லிக் கொண்டபோதிலும் அவர்கள் பேச்சில் பாலில் நீர்போல உண்மை எவ்வளவு பொய் எவ்வளவு கலந்திருக்கும் என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான் தொழில் ரீதியாய் அவன் தன்னை நாடிவந்த கேசுகளைப் பார்த்துத் தீரவேண்டும். ஆனால் அவ்வாறு பார்க்கத் தொடங்குவதற்கு முன்னால், அந்த விஷயத்தில் தன்னால் எவ்வளவு தூரம் வெற்றி பெறமுடியும் என்பதைப்பற்றி யோசித்து முன் ஜாக்கிரதையாய் இருப்பது அவன் வழக்கம்.

இந்த விழிப்புணர்ச்சியால் அவன் எடுத்துக்கொண்ட நிறைய கேசுகள் வெற்றியடைந்து, அவன் கை தேர்ந்த லாயர் என்று பெயர் பெற்றிருந்தான். ஏதாவது புதிய கேசு அவன் மனதில் படிந்துவிட்டால் அதற்குப் பிறகு வீட்டு விஷயங்கள் எதுவுமே நினைவில் இருக்காது. அவனுக்கு மனைவியோடு ஏகாந்தமாய்க் கழிப்பதற்குக்கூட நேரம் கிடைக்காது. ஆர்த்தி வளர்ந்து பெரியவளான பிறகு காலேஜ் விஷயங்களைப் பற்றியும், வாழ்க்கையைப் பற்றிய தர்ம சந்தேகங்களையும் தந்தையோடு கலந்து நிறைய பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஆர்வங் காட்டுவாள். விஜயராகவன்கூட மகள் மனதில் சிறகு விரித்தாடும் யோசனைகளை ஆர்வத்தோடு கவனித்து, ஒரு நண்பனைப் போல அவள் சந்தேகங்களைத் தீர்த்து வைக்க முயன்று கொண்டிருப்பான். அந்த விதமாய் அவனுக்குத் தனிமை கிடைப்பதே அரிதாகி, கணவன் மனைவியரிடையே எப்பொழுதாவதுதான் ஏகாந்தம் கிட்டும். மிக அரிதாய் கிடைக்கும் அந்தக் கொஞ்ச நஞ்சம் நேரத்தில்கூட அவன் சிறு பையனைப்போல குறும்புத்தனமாய் நடந்துகொண்டு மனப்பாரம், தொழில் ரீதியாய் ஏற்பட்ட குழப்பம் போன்றவைகளைத் தீர்த்துக்கொள்ள முயலுவான்.

சாதாரணமாய் சுமித்ராகூட இந்தத் தனிமையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். குடும்பத்தில் எவ்



வளவோ சிறுசிறு தொல்லைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். அவற்றில் அதிக பாரத்தை அவள் சுமந்து வந்தாலும், சிற்சில சமயம் தன்னால் சுமக்க முடியாதவைகளைக் கணவரின் தோள்களின் மேல் ஏற்றிவைக்க வேண்டியிருக்கும். ஏதாவது பிரச்னை ஏற்பட்டால் இருவரும் சங்கோஜமில்லாமல் அதைப் பற்றிப் பேசித் தீர்த்துப் பரிகாரங்களைத் தேடிக் கொள்வார்கள். சுமித்ரா எப்பொழுதாவது மறைமுகமாய் எதைப்பற்றியாவது குத்திப் பேசினால் அவன் பானையைப் போட்டு உடைப்பதுபோல அதைப்பற்றி வெட்ட வெளிச்சமாய்த் தெரிந்து கொண்டாலே யொழிய விடமாட்டான். இப்பொழுதும் அதே தான் நடந்தது

''நான் பண்ணியதப்பு என்னன்னு கொஞ்சம் நினைவு படுத்து. தகுந்த பதில் சொல்றேன்.' அவன் தலையணையில் சாய்ந்தாற் போல உட்கார்ந்துக் கொண்டு கேட்டான்.

''சாயந்திரம் ஆர்த்தி மேல் ஏன் எரிந்து விழுந்தீர்கள்?''

''நானா?'' அவன் ஆச்சரியமடைந்தான்.

''அதான் சொன்னேனே! உங்களுக்கு எதுவும் ஞாபகத்தில் இருந்தால்தானே? அவள் மேல் தப்பில்லாத போதும் பலவந்தமாய் மன்னிப்புக் கேட்டுக்கச் சொன்னீர்கள். அந்த டிரான்ஸிஸ்டரைக் கொடுக்கச் சொன்னீர்கள். அவளைத் தேற்றுவதற்குள் என் பிராணன் போய் விட்டது. அவள் இன்று சாப்பிடக்கூடவில்லை. நீங்கள் அவள் ஏன் சாப்பிட வரவில்லைன்னு கேட்கக்கூட கேட்காமல் அவர்களோடு சேர்ந்து சாப்பிட்டு விட்டீர்கள்.''

''மைகாட்!'' அவன் தலையில் கை வைத்துக் கொண்டான். அவன் அந்தக் கொலைக் கேசில் சிக்கிக் கொண்டி

ருந்த பார்ட்டியுடன் பேசி முடித்து அனுப்பிவைப்பதற்குள் மிகத்தாமதமாகி விட்டது.

அதற்குப்பிறகு சாப்பாடு ரெடியாகி விட்டதென்றும் தனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும் செல்லம்மாள் சொல்லவே, உடனே வந்து சாப்பிட்டான். சாப்பிட்டுக் கொண்டிருந்தபோதும் அவன் நினைவெல்லாம் அந்தக் கேசைப் பற்றியேதான் இருந்தது. தான் என்ன சாப்பிட்டோம் என்பது கூட நினைவில்லை.

சுமித்ரா சொல்லத் தொடங்கினாள்— "நீங்கள் குறைந்த பட்சம் தன்னைக் கூப்பிடக்கூடவில்லைன்னு முறுக்கிக் கொண்டிருக்கிறாள். நான் எவ்வளவு கெஞ்சியும் வரவில்லை."

"கோபித்துக் கொண்டு சாப்பிடாமல் இருந்து விடுவதா? நான்சென்ஸ்! இந்தப் பழக்கம் எப்போது தொடங்கிற்று? கூப்பிடு, நான் கேட்கிறேன்."

"நீங்களே கூப்பிடுங்கள், விழித்துக் கொண்டுதான் இருக்கிறாள் இன்னும்.'

"ஆர்த்தி! ஆர்த்தி!" அவன் கூப்பிட்டான். ஆனால் பக்கத்து அறையிலிருந்து பதில் வரவில்லை.

விஜயராகவன் எழுந்து போனான்.

சுமித்ரா படுத்தபடியே அவர்கள் சம்பாஷணையைச் செவிமடுத்துக் கொண்டிருந்தாள்.

சிறுவயதிலிருந்தே அதுபோலதான். மகள் ஏதாவது கோபித்துக் கொண்டு விட்டால் தந்தைதான் தீர்த்து வைப்பதுவழக்கம். அவள் ஏதோ வேலை என்ற சாக்கில் தொலைவிலேயே இருந்துவிடுவாள்.

பக்கத்து அறையிலிருந்து சம்பாஷணைகள் கேட்கத் தொடங்கின.



"இன்னுமா படித்துக் கொண்டிருக்கிறாய்? தூங்கலையா?"

"பரீட்சை கிட்டே வரது டாடீ!" ஆர்த்தியின் குரல் மெல்லியதாய்—தீனமாய்க் கேட்டது.

"இன்னும் எவ்வளவு நாளிருக்கு?"

"ரெண்டு மாசம் "

"நன்றாய்ப் படிக்கிறாயா?"

"ஆங்!"

"உனக்கு கிளாஸ்வராட்டால் அது எனக்கு எவ்வளவு அவமானம் தெரியுமா?'

"தெரியும் டாடீ"

'ஏன் சாப்பிடலை?"

ஆர்த்தி பதில் சொல்லவில்லை.

' இப்படி வா!" விஜயராகவன் மேஜைக்கு முன்னால் வந்து நின்றான்.

ஆர்த்தி கிட்டே வந்தாள்.

அவன் மகள் தோளின் மேல் கை வைத்தான்.

'நான் உனக்கு எவ்வளவோ தடவை சொல்லியிருப்பேன், வாழ்க்கையில் ரொம்பவும் தைரியமாய் இருக்கக் கத்துக்கணும்னு! சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் மனதைப் பாழடித்துக் கொள்வதும், ஏதோ பெரிய அவமானம் ஏற்பட்டு விட்டது போல மனந் தளர்ந்து போவதும் நல்லதில்லை. அது மனத்தளவில் மிகவும் பலவீனத்தை உண்டாக்கி விடும். சாயந்திரம் நடந்த அந்தச் சின்ன விஷயத்துக்கே போய் நீ ஏன் இவ்வளவு மனந் தளர்ந்து போகணும்? ஹேமந்த் நம்ப வீட்டுக்கு வந்த விருந்தாளி. அதனால் நாம்ப மரியாதை காட்டுவதில் தப்பொன்றுமில்லை."

ஹேமந்த்தின் பெயரைக் கேட்டதுமே ஆர்த்தி சரேலென்று நிமிர்ந்தாள்.

''பண்ணாத தப்புக்கு மன்னிப்புக் கேட்பஅ மரியாதையா டாடீ?''

''அப்பப்பா! இதப்பாரு, இதைத்தான் வேண்டாங்கிறேன். நீ அவ்வளவு சீரியஸாய் எதுக்கு எடுத்துக்கணும்? அவன் தான் என்னவோ ரகளை பண்றவன், நாம்ப கொஞ்சம் ஈடு கட்டிக்கொண்டு போயிடலாமே! என் உத்தேசம் அதான்!''

''அது அவனுக்கு ரொம்ப இளப்பமாயிடும். நாளைக்கு டிரான்ஸிஸ்டரைப் பெரிதாய் வைத்துக் கொண்டால் வேண்டாம்னு நான் சொல்ல முடியுமா? அவன் தான் கேட்பானா?'

''நான் சொல்றேன் அவனுக்கு! ஆனாலும் ஆர்த்தி! இவ்வளவு சின்ன விஷயத்தை எத்தனை பெரிதாய்ப் பண்ணிட்டாயே பார்! நீ சாப்பிடவில்லை! தூங்கவில்லை! என்னையும் தூங்கவிடவில்லை!''

''சாரீ டாடீ!''

அவன் மகள் தோளைச் சுற்றிலும் கையைப் போட்டான்! ஆத்ம சிநேகிதனைப் போல நயந்து சொல்லத் தொடங்கினான். ''ஆர்த்தி! வாழ்க்கையில் பிடிவாதத்தையும் ஆவேசத்தையும் எவ்வளவு குறைத்துக் கொள்கிறோமோ அவ்வளவு சுகப்படுவோம்! அவற்றைக் கொஞ்சம் பெருக்கிக் கொண்டோமோ அவையே இரும்புக் கம்பிகளாய் மாறி நம் வாழ்க்கையைக் கூண்டாக்கி விடும்! சக மனிதர்களை மன்னிப்பதில் உள்ள சுகம் துவேஷிப்பதில் இல்லை. ஹேமந்த் நடவடிக்கை அளவுக்குமீறி இருப்பது உண்மையே! ஆனால் நீ ஒருநிமிஷம் என் சார்பில் இருந்து யோசித்துப் பார்! அவன் என் சிநேகிதனின் மகன்! அவனைப் பார்த்தால் எனக்கு ஹேமந்த்தாகவே



தோணாது. என் சிநேகிதனாய்த் தான் தோன்றும். அரவணைக்க யாருமில்லாமல் சாய்ந்து போயிருக்கும் அந்தக் குடும்பத்தை நிமிர்த்தி ஒரு வழிக்குக் கொண்டு வந்துட்டால் நிம்மதியாய் இருக்கும் எனக்கு. அவர்களுக்கு இவ்வளவு கஷ்டமான தசையில் உதவி பண்ணுகிற நம்ப மேல் அவங்களுக்கு மதிப்புப் போயிடக்கூடாது! அவன் தான் அதில்லாத அறிவீனன் என்று நினைத்துக்கொள்! நாம்ப அந்த அறியாமைக்கும், விவேகமில்லாத தன்மைக்கும் சிரித்து விட்டுப் பேசாமல் விட்டுத் தள்ளுவோம். என்ன சொல்கிறாய்?''

ஆர்த்தியின் முகம் மலர்ந்தது. உதட்டில் குறுநகை படர்ந்தது. நிமிர்ந்து தந்தையைப் பார்த்தாள்! சிநேக பூர்வமாய் தோன்றிய தந்தையைப் பார்த்ததும் ஆர்த்திக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது. அதுவரை இருந்து வந்த துக்கம் மாயமாயிற்று.

''சரி டாடீ.'' என்றாள்.

''பிராமிஸ்?'' அவன் கையை நீட்டினான்.

''பிராமிஸ்!'' தந்தையின் கையில் கை வைத்தாள்.

''தாங்க்யூ! இன்னொரு விஷயங்கூடச் சொல்றேன். எப்பவாவது உனக்குக் கோபம் வந்தால் வயிறு முட்டச் சாப்பிட்டு விட்டு கோபித்துக்கணுமே தவிர—சாப்பாட்டைத் தவிர்க்கக் கூடாது! சாப்பிடாவிட்டால் உனக்குத் தூக்கம் வராது! தூங்காவிட்டால் பலவீனம் வந்துடும்! பலவீனம் வந்தால் படிக்க முடியாது. படிக்கமுடியாவிட்டால் அப்புறமாய் உனக்கே உன் மீது கோபம் வந்துவிடும். பார்த்தாயா? நம் ஒரு செயலுக்கும் நம் நடைமுறை வாழ்க்கைக்கும் எவ்வளவு லிங்க் இருக்குன்னு பாரு! உங்கம்மாவைப் பாரு! எப்பவாவது சாப்பாட்டை விடுகிறாளா? கோபம் வந்தால் தினத்தை விட அதிகமாய் சாப்பிட்டுட்டு என்னோடு சண்டை போடுவாள்!''

"நான் உன்னோடு சண்டை போடலையே டாடீ!"

"கரெக்ட்! இதுவும் ஒரு பாயிண்ட்! இனிமேல் உனக்குக் கோபம் வந்தால், 'டாடீ, எனக்குக் கோபமாய் இருக்கு' என்று ஒரு சீட்டில் எழுதி என் மேஜைமேல் வைத்து விடு."

"நீ பார்க்கா விட்டால்?"

அவன் தலையைச் சிலிர்த்துக் கொண்டான். "இதுவும் ஒரு பாயிண்ட்தான்! சரி! என் கண்கள் எந்த இடத்தில் கண்டிப்பாய்ப் படுமோ அந்த இடம் பார்த்து வை. அந்த இடம் எதுன்னு நான் சொல்லட்டுமா?"

ஆர்த்தி, சொல் என்பதுபோலப் பார்த்தாள்.

"தினமும் எழுந்தவுடனும், தூங்கப் போவதற்கு முன்னாலும், கோர்ட்டுக்குப் போகும்போதும் உங்கம்மாவின் முகம் எனக்கு எதிரே தெரியும்! அந்தச் சீட்டை உங்கம்மா மூஞ்சியில் ஒட்டிவிடு! அதைவிடச் சிறந்த இடம் வேறொன்றில்லை."

"போ டாடீ!" ஆர்த்தி பக்கென்று சிரித்து விட்டாள்.

விஜயராகவனும் சிரித்தான்.

அதற்குள் அவ்வறைக் கதவிற்கருகில் வந்து நின்று கொண்டிருந்த சுமித்ராவின் இதழ்களிலும் முறுவல் தவழ்ந்தது.

மகளோடு சேர்ந்து அவ்வாறு சிரித்துக் கொண்டிருந்த கணவனைப் பார்த்ததும் சுமித்ராவுக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது! அவளுக்குத் தலைகால் புரியாத பிரச்னைகளை அவன் அனாயாசமாய், பேச்சு சாதுரியத்தாலேயே தீர்த்து வைத்து விடுவான்! ஆர்த்தி தந்தையின் ஜாடையையே கொண்டிருந்தாள்! சிரித்துக் கொண்டிருந்த விஜயராகவனைப் பார்த்தபோது—சுமித்ராவுக்கு



சந்தோஷம் என்ற நிலவை வருத்தம் என்ற மேகத்துணுக்கு மறைத்தாற்போலத் தோன்றிற்று ஒரு வினாடி நேரம்.

கடவுள் ஒரு ஆண் குழந்தையைக் கூட தனக்கு அருளியிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

அந்தச் சமயத்தில் அத்தந்தையும் மகளும் அண்ணன் தங்கையைப் போலத் தோன்றினார்கள்!

விஜயராகவன் திரும்பி மனைவியைப் பார்த்தான்!

"என்ன சுமி, அப்படிப் பார்க்கிறாய்? போய் சாதத்தைப் பிசைந்து கொண்டு வா" என்றான்.

சுமித்ரா சமையலறைக்குப் போனாள்.

ஐந்தே நிமிஷத்தில்தயிரையும் சாதத்தையும் பிசைந்து கொண்டு வந்து தட்டை அவனிடம் தந்தாள்.

விஜயராகவன் அதை வாங்கிக் கொண்டு— "உனக்குக் கோபத்தை வரவழைத்தேனோன்னோ, அதற்கு இது தண்டனை" என்று தானே ஆர்த்தியின் வாயில் ஊட்டினான்.

"டாடீ! மம்மி கூட சரியாய்ச் சாப்பிடவில்லை" என்று ஆர்த்தி தந்தையின் கையைப் பிடித்துத் தாய்க்கு ஊட்டச் செய்தாள்.

சுமித்ரா கொசுவலையைக் கீழே தாழ்த்திக் கொண்டிருந்தபோது, ஆர்த்தி தாயின் கழுத்தைச் சுற்றிலும் கைகளைப் போட்டுக் கொண்டே— "அம்மா? அப்பா மேல் இனி ஒரு போதும் நான் கோபித்துக்கவே மாட்டேன்! பிராமிஸ்!" என்றாள்.

"அப்படீன்னால் என் மேல் கோபம் வரும்னு அர்த்தமா?"

"இல்லை மம்மீ! உன் மேல் எனக்கு ஒரு நாளும் வராது எங்க காலேஜில்கூட எல்லோரும் என்னை அதிர்ஷ்டசாலின்னு புகழுவார்கள்—ஏன் தெரியுமா?"

''ஏனாம்?'' தெரியாதது போலக் கேட்டாள்.

''எங்கம்மாவைப் போன்ற ஒரு அம்மா கிடைப்பது வரப்பிரசாதமாம்!''

''நிஜமாகவா?'' மகளின் கன்னத்தை நிமிண்டினாள்.

சுமித்ரா மகளின் அறையில் விளக்கை அணைத்து விட்டுத் திரும்பி வந்தபோது, விஜயராகவன் தலையணையில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்து கொண்டே மனைவியின் வரவிற்காகக் காத்திருந்தான்.

''ஆர்த்தி தூங்கிட்டாளா?'

''ஆங்!'' கீழே விழுந்திருந்த கம்பளியை எடுத்துக் கட்டிலில் வைத்தாள்.

''உன் உடம்பு எரிச்சல் தணிந்துடுத்தல்லவா?''

''உங்களால் பற்றவைக்கவும் முடியும். பிறகு அதை அணைக்கவும் முடியுமே!''

''பசங்களுக்கு நாம்ப தன்நம்பிக்கையைக் கற்றுக் கொடுப்பதாய் நினைத்துக் கொள்கிறோம். ஆனால் அவர்கள் கெட்ட நம்பிக்கையைத்தான் கற்றுக் கொள்கிறார்கள். நாம்ப கொஞ்சம் ஜாக்கிரதையாய் கவனித்துக் கொள்ளணும்.''

''யார் விஷயத்தைப்பற்றிச் சொல்கிறீர்கள்!''

''வேறு யார் விஷயமோ நமக்கெதற்கு? நம்ப ஆர்த்தி விஷயந்தான்! இப்படிப் பட்ட சின்னச் சின்ன விஷயங்களுக்கே இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்றாப் போல பழக்கக் கூடாது.''

''ரொம்ப அழகாய்த்தான் இருக்கு, நான் என்ன பண்ணிட்டேன்?''

''பசங்களுக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் நல்ல பயிற்சி கொடுப்பது தாய்மார்களின் பொறுப்பு! நல்லது கெட்டது பற்றிப் புரிஞ்சு கொள்கிற பகுத்தறிவையும் ஈடுகட்டிக் கொண்டு போகிற மனப்பக்குவத்தையும் நன்றாய்க் கற்றுத்தரணும்.''



''அப்ப தந்தைகள் என்ன பண்ணணுமாம்?''

''கை நிறையப் பணம் சம்பாதித்து மனைவியை ஆசையாய்ப் பார்த்துப்பார்கள். பசங்களின் படிப்புகளுக்கும் கல்யாணங்களுக்கும் வேண்டியவைகளை ஏற்பாடு பண்ணுவார்கள். பார், இப்படிக் கணவன் மனைவி இருவருமே பொறுப்புக்களைப் பகிர்ந்து கொண்டால் வாழ்க்கை என்ற கேசில் எளிதாய் வெற்றி பெற்றுவிடலாம். என்ன சொல்கிறாய்?'' விஜயராகவன் விளக்கை அணைத்தான். அடுத்த நிமிஷம் அவன் கரங்கள் மனைவியைச் சுற்றிக் கொண்டன.

''இவர்கள் ரெண்டு பேரும் நம்ப வீட்டில் இன்னும் எவ்வளவு நாள் இருக்கப் போகிறார்கள்.''

கணவன் மார்பில் தலையைப் புதைத்துக் கொண்டவள் கேட்டாள்.

''எவ்வளவு நாள் இருந்தால் தான் என்ன? உனக்கென்ன நஷ்டம் சொல்லு?''

''நஷ்டம் ஒன்றுமில்லை! ஆனால் கொஞ்சம் தொல்லை இருக்கு.''

''அதென்ன தொல்லை?''

''அந்தப் பையனோ ஒரு வாலாய் இருக்கான். ஆர்த்திக்கும் அவனுக்கும் ஆரம்பத்திலிருந்தே சரிப்பட்டு வரலை.''

''நான் அதை சரி பண்ணிடறேன்! பார் சுமித்ரா! நான் எவ்வளவோ பேருக்கு எத்தனையோ விதமாய் உதவி பண்ணுகிறேன்! என் சிநேகிதனின் மனைவியும் மகனும் அவர்கள்-அவர்களை அரவணைப்பதில் வியப்

பொன்றுமில்லையே! இதில் உனக்கு ஏதாவது தொல்லை ஏற்பட்டால் எனக்காகப் பொறுத்துக் கொள்ளணும்! வேறு வழியில்லை.''

''சரி, சரி! இனி ஒருபோதும் அவர்களைப் பற்றிப் புகார் சொல்ல மாட்டேன், போதுமா?''-சுமித்ரா வாக்களித்தாள்.

# 6

விஜயராகவனுக்கு மூச்சுவிடவும் முடியாதபடி நிறைய வேலைகள் இருந்தபோதிலும் கூட கொஞ்சம் நேரத்தை ஒதுக்கிக்கொண்டான்.

மனைவியையும், மகளையும், பரமேஸ்வரியையும், ஹேமந்த்தையும் ஒரு நாள் மஹாபலிபுரம், இன்னொரு நாள் லைட் ஹவுஸ், பீச், மிருகக்காட்சி சாலை என்று அழைத்துச் சென்றான். தானும் கலகலப்பாய் இருந்து கொண்டு எல்லோரையும் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான்.

மிருகக்காட்சி சாலையில் சுற்றிக் கொண்டிருந்த போது குரங்குக் கூண்டிற்கருகில் வந்ததும்- ''டியர் ஃப்ரெண்ட்ஸ்! உங்கள் சேஷ்டைகள் ஒன்றும் எங்களுக்கு வேடிக்கையாய் இல்லை! எங்க வீட்டிலும் இருக்கின்றன இரண்டு குரங்குகள்!'' என்று ஒரு கையால் ஆர்த்தியையும் இன்னொரு கையால் ஹேமந்த்தையும் தோள்களைச் சுற்றிக் கை போட்டுக்கிட்டே இழுத்துக் கொண்டு குரங்குகளைப் பார்த்துப் பழித்தான். குரங்குகளோடு ஒப்பிட்டதற்கு ஆர்த்திக்குச் சிரிப்பு வந்தது. பக்கென்று சிரித்து விட்டாள்.



''நிஜந்தான் சொன்னீர்கள் மாமா! நம்ப பூர்வீகக் குடிகள் இவர்கள் தானே?'' என்றான் ஹேமந்த் கூட சிரித்துக் கொண்டே.

அந்த விதமாய்,சிரித்துக் கொண்டும் துள்ளிக் கொண்டும் பொழுதுப் போக்காய் சுற்றிக் கொண்டிருந்த கணவனைப் பார்த்தபோது, சுமித்ராவுக்குத் திருமணமான புதிதில் மாமியார் வீட்டிற்கு வந்தபோது அவன் தன்னை உல்லாசமாய் வெளியே அழைத்துக் கொண்டு போய் சுற்றியது நினைவிற்கு வந்தது. நாட்கள் எவ்வளவு துரிதமாய்ப்பறந்து விட்டன!

சுமித்ராவுக்கு மிக வருத்தமாயிருந்தது. அதிகமாய் குழந்தைகள் இல்லாததாலோ,பொருளாதாரத் தொல்லைகளுக்கு பலியாகாமல, குறையின்றி வாழ்க்கைப் படிகளை தாண்டி வரமுடிந்ததாலோ, இருவருள் யாருக்குமே வாழ்க்கை மீது வெறுப்போ, அலுப்போ ஏற்படவில்லை.

சுமித்ரா கணவனைக் கண்கள் பனிக்க, அன்போடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஜயராகவனைப்போன்ற ஒருவனைக் கணவனாய்ப் பெற்ற எந்தப் பெண்ணுக்குமே அதிருப்தி என்பதே ஏற்படாது போலும்! அவன் குண நலன்களே அஷ்ட ஐசுவரியங்கள்!

பரமேஸ்வரி கூட விஜயராகவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்; அவனைப் பார்க்கப்பார்க்க பரமேஸ்வரியின் மனமெல்லாம் வேதனையால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

அவள் சித்தி வீட்டில் இருந்தபோது, இவன் எதிர் வீட்டில் அறை எடுத்துக் கொண்டு காலேஜ் படித்துக் கொண்டிருந்தான். அக்கம்பக்கத்தாருக்கெல்லாம் நிறைய ஒத்தாசைகள் பண்ணுவான்! இதே போலவேதான் எப்பொழுதும் உற்சாகத்துடன் சிரித்துக் கொண்டும்,

சிரிக்க வைந்துக் கொண்டும் இருப்பான். சித்திக்கும் சித்தப்பாவுக்கும் இவனைக் கண்டால் மிகப் பிரியம்! சிற்றப்பா அவனோடு சரஸமாடுவதுபோல பேசி, தமாஷ் பண்ணிக் கொண்டிருப்பார்.

''எங்க பரமேஸ்வரியைக் கல்யாணம் பண்ணிக்கோ! ஓய்! இந்த வீட்டை எழுதி வைத்துடறேன்'' என்பார்.

''உங்க பரமேஸ்வரியைக் கல்யாணம் பண்ணிக்கணும்னால் அதுக்கு நீங்க உங்க வீட்டை லஞ்சமாய்த் தரவேண்டிய அவசியம் இல்லை சார்'' என்பான்.

ஓரிரண்டு முறை சிற்றப்பாவின் வாயால் இந்த வார்த்தையைக் கேட்ட அக்கம்பக்கத்தார் அவளை விஜயராகவனின் மனைவி என்றே சொல்வார்கள் இருவருக்குமிடையே பேச்சுவார்த்தைகள் இல்லாவிட்டாலும் ஒருத்தரைப் பார்த்தால் இன்னொருத்தருக்கு வெட்கமாயிருக்கும்! எதிர்த்த வீட்டுக்காரரின் பெண்ணிறகுத் திருமணமாயிற்று.

அந்தத் திருமண சந்தடியில் அவனோடு கூட அவளும் வளைய வந்து கொண்டிருந்தாள் சாப்பாட்டுப் பந்தியில் பக்கத்துசகுப் பக்கத்தில் வந்து விடுவார்கள் எல்லோருக்கும் டிபன் தரச் சொன்னால் முதலில் அவனுக்குத் தான் தருவாள்.

''இதப் பார்த்தீர்களா, அதற்குள்ளாகவே வரப் போற புருஷனுக்குப் பணிவிடைகள் பண்ணத் தொடங்கிட்டாள்'' என்று சித்தி அழவைத்தாள் அவளை. பிறகு என்னவாயிற்று? நினைத்தது எதுவும் நடக்கவில்லை! அவள் அண்ணன் வேறு சம்பந்தம் பார்த்தான். வரதட்சணை,சீர் எல்லாம் நிறையத்தந்து, திருமணத்தை விமரிசையாய்ப் பண்ணிவைத்தான். விஜயராகவனின் மனைவி என்று எல்லோராலும் பரிகசிக்கப்பட்ட அவள் பிரசாத் மனைவியானாள்?



நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த ஒவ்வொரு பெண்ணையும் போலவேதான் திருமணமானதுமே பிரசாதின் மனைவியாய் வாழ்க்கையோடு ஒன்றிணைந்து விட்டாள். சுமார் பத்து வருடங்களுக்குப் பிறகு—

அவன் எதிர் பாராமல் சந்தித்தான்! பிரசாதின் நண்பனாய்—தூரச் சொந்தமாய் அவள் வீட்டிற்கு வந்தான்.

அவனைத் தெரியாதது போலவே அவள் நடந்து கொண்டாள்!

அவனிடம் கூட பழைய நினைவுகளின் சுவடுகள் எதுவுமே தென்படவில்லை. ஒருக்கால் பிரசாத் நோயாளியாய் மாறாமலிருந்திருந்தால் அது அத்துடன் விடுபட்டும் போயிருக்கலாமோ என்னவோ?

அவன் நோய், தந்தையோடு தகறாறு, உத்யோகம் போய் பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்பட்டது, இதெல்லாம் சேர்ந்து விஜயராகவனின் அரவணைப்பிற்காகக் கையை நீட்டும்படி செய்து விட்டன! அவனுடைய நேசக்கரங்கள் பல விதமாய் அவர்களை அரவணைத்தன. பிரசாத் போய் விட்டான்!

பத்தாவது நாள்,முதல் முதலாக அவன் பேசினான்.

''என்ன பண்ண உத்தேசித்திருக்கிறீர்கள்?''

அவன் வேற்று மனுஷனைப் போல 'நீங்கள்' என்று பேசியது அவளுக்கு இன்னும் துக்கத்தைத் தந்தது.

''எனக்கு என்ன பண்றதுன்னே புரியலை! எல்லாம் காரிருளாய்த் தோணுகிறது! இருக்கற இவனாவது சரியாய் இருந்திருந்தால் எனக்கு இவ்வளவு வருத்தமாய் இருந்திருக்காதோ என்னவோ?'' அழுதுவிட்டாள்.

அவன் பேசவில்லை. மௌனமாய் இருந்து விட்டான்

மௌனமாகவே அங்கிருந்து போய்விட்டான்.

தன் வாயால் எந்த வாக்குறுதியும் தரவில்லை.

இரக்கம் காட்டி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. ஆனால் கையால் செய்து காட்டினான். கொஞ்சம் தொகையை அவள் பேரில் பேங்கில் போட்டுப் புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்தான். அடிக்கடி ஏதாவது வேலையைச் சாக்காய் வைத்துக் கொண்டு ஐதராபாத்திற்கு வந்தான். அவள் சார்பில் பிரசாத் தந்தையோடு போராடத் துணிந்து விட்டான்.

அந்தச் சாக்கில் இவ்வூருக்கு வரவழைத்தான்.

ஹேமந்த்தை முடிந்த வரையிலும் நல்ல வழிக்குக் கொண்டு வர முயற்சிப் பண்ணிக் கொண்டிருக்கிறான்.

பரமேஸ்வரிக்கு அவன் பால் மிக மதிப்பு ஏற்பட்டது!

ஹேமந்த் கொஞ்சம் சரியான ஆளாய் மாறி, இந்தப் பொருளாதாரத் தொல்லைகளிலிருந்து மீண்டு, தம் காலில் தாம் நிற்க முடிந்தால் அதை விட வேறென்ன வேண்டும் அவளுக்கு?

இங்கிருக்கும் நான்கு நாட்களும் அவன் மனைவியோடும் பெண்ணோடும் இங்கிதமாய் இருந்து கொள்ள வேண்டும் என்று பரமேஸ்வரி பண்ணிய முயற்சிகள் எல்லாவற்றையும் தன் பிடிவாதத்தால் காற்றில் பறக்கச் செய்து விட்டான் ஹேமந்த்!

விஜயராகவன் தன் வேலைகளுக்கிடையே ஓய்வை ஏற்படுத்திக் கொண்டு இவ்வாறு சுற்றியதைப் பார்த்தால், அவன் ஆர்த்திக்கும் ஹேமந்த்திற்கு மிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகப் பண்ணிக் கொண்டிருந்த முயற்சியாய்த் தோன்றிற்று. இதை சுமித்ராவும் உணர்ந்துக் கொண்டாள். ஆனால் கணவன் காரணமில்லாமல் எதையும் பண்ண மாட்டான் என்ற அனுபவம் அதைப் பற்றி யோசிக்க இடம் தரவில்லை.

# 7

லேடி டாக்டருடன் போனில் பேசிமுடித்த விஜயராகவன், ''தாங்க்யூ டாக்டர்!'' என்று போனை வைத்தான். எப்பொழுதும் மலர்ச்சியுடன் இருக்கும் அம்முகம் ஒருவினாடி களையிழந்தது. சந்தோஷத்தைத் தவிர வேறெந்த உணர்ச்சியுமே தென்படாத அக்கண்களில் விளையாட்டா வேதனைக் கோடுகள் எட்டிப்பார்த்தன.

அவன் படுக்கையறைக்கு வந்தான்,

சுமித்ரா அப்பொழுதுதான் வண்ணான் கொண்டு வந்த இஸ்திரி போட்ட உடைகளைத் தனித்தனியாய் அலமாரியில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

ஒரு வினாடி அவன் மனைவியைப் பார்த்தபடி அப்படியே நின்றான். ஏதோ யோசனையுடன் இருந்த சுமித்ரா அவன் வரவை கவனிக்கவில்லை.

'சுமி!'' குரல் கம்ம கூப்பிட்டான்.

தலை குனிந்தவாறு வேலையில் ஆழ்ந்து போயிருந்த சுமித்ரா திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''லேடி டாக்டரிடம் போயிட்டு வந்தேன்னு என்னிடம் ஏன் சொல்லவில்லை?''

கணவன் கேட்ட இக்கேள்வி காதில் விழுந்ததுமே சுமித்ராவின் கண்கள் படபடத்தன பதில் சொல்ல முடியாதவளாய் திரும்பத் தன் வேலையில் ஈடுபடத் தொடங்கினாள்.

அவன், கிட்டே வந்து சுமித்ரா உடைகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்த கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.

''எனக்கு ரொம்ப வெட்கமாய் இருக்கு'' என்றான்.

''ஏன்?''

''உனக்குப் பிடித்த ஆசையைத் தீர்த்து வைக்க முடியாமல் போவதற்கு.''

''அது உங்க கையிலா இருக்கு?'

''இல்லைதான். ஆனாலும் பொம்பிள்ளைகளுக்கே விநோதமான மனத்தத்துவம். இருப்பது தேவையில்லை. இல்லாததற்காக வருத்தப்படுவீர்கள்.''

''நான் வருத்தப்படுவதாய் உங்களுக்கு யார் சொன்னது?''

''ஒருத்தர் சொல்லணுமா என்ன? சொன்னால்தான் புரிந்து கொள்ள முடியுங்கிற கணவனும் ஒரு கணவனா? என் சகதர்மிணி நீ! உன்னுள் என்ன ஆசைகள் இருக்கு, என்னென்ன வருத்தங்கள் இருக்கும்னு எனக்குத் தெரியாதா சுமி? உனக்கு நான் எவ்வளவோ தடவை சொல்லியிருக்கேன். நமக்குச் சிறு வயதிலேயே திருமணமாயிடுத்து. ஆர்த்தி உடனே பிறந்து விட்டாள். ஆர்த்தி பெரியவளாயிட்டதால் நமக்கு வயசாயிடுத்துன்னு அர்த்தமில்லை. நமக்கொண்ணும் வயசாயிடலை. நமக்கு இனி குழந்தைகள் பிறக்காதுன்னு நீ ஒண்ணும் ஏமாற்றமடையத் தேவையில்லை.''

அவன் எவ்வளவு சாந்தமாய் எடுத்துச் சொன்ன போதிலும், அக்குரலில் அடக்கி வைத்துக் கொண்டிருந்த வருத்தமும், ஆவேசமும் எதிரொலித்துக் கொண்டிருந்தன.



கட்டிலிலிருந்து உடைகளை எடுக்கப்போன சுமித்ரா, அந்தக் காரியத்தையே மறந்து போய் விட்டாற்போல அவற்றை அனாவசியமாய், அங்குமிங்குமாய் வைத்துக் கொண்டிருந்தாள்.

விஜயராகவன் மனைவியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீ இப்படி ஆறு மாதத்திற்கொருமுறை டாக்டர் வீட்டுக்குப் போவதும் உன்னை நீ பரிசோதித்துக் கொள்வதும் எனக்கு ரொம்ப வருத்தமாய் இருக்கு''

''இதுதான் கடைசித் தடவை போனது. இனி ஒரு நாளும் உங்களை வருத்தப்படுத்த மாட்டேன்.''

''உனக்கு அவ்வளவு தூரம் ஆண் குழந்தை வேண்டும்னு இருந்தால் நாம்ப யாரையாவது எடுத்து வளர்க்கலாம்னு எவ்வளவோ தடவை சொல்லிட்டேன்.''

''வளர்த்த குழந்தைகள் பெற்ற குழந்தைகள் ஆயிடுமா, சொல்லுங்கள்.''

''வளர்த்த பாசம் பெற்ற பாசத்தை விட மேலானது.''

''என்னால் அப்படி நினைச்சுக்க முடியலையே.''

''முயற்சி பண்ணிப் பார்க்கக்கூடாதா?''

''ஊஹூம், என்னால் முடியாது.''

''நான் சொன்ன எதையுமே ஒப்புக்க மாட்டாய். நீ வருந்துவதையும் விடமாட்டாய்.''

சுமித்ரா தலை {குனிந்தாள். 'நான் வருத்தப்பட மாட்டேன்' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் அது பொய்யாய்த் தான் இருக்கும்.அந்தப் பொய் அவனுக்கும் தெரிந்துவிடும்.

விஜயராகவன் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டான்.

''இனி ஒரே ஒரு வழி இருக்கு, சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள்.'' ஆசையாய்ப் பார்த்தாள்.

''ஆர்த்திக்குச் சீக்கிரமாய் கல்யாணம் பண்ணி வைத்து விடுவது! அவளுக்குக் குழந்தைகள் பிறந்தால் நீ வளர்ப்பது! ஆர்த்தியின் குழந்தை உனக்கு வேற்று மனிதர்களின் குழந்தையில்லையே!''

சுமித்ராவின் கண்களில் வருத்தம் போய் குறுநகை எட்டிப் பார்த்தது.

''இது இன்னும் அழகாய்த்தானிருக்கு. என் ஆசையைத் தீர்ப்பதற்காகச் சின்னப் பெண்ணான அவளுக்கு அதற்குள்ளேயே கல்யாணமா?''

''அதில்லை...இருந்த ஒரு வழியைச் சொன்னேன்.''

''கல்யாணம்னால் சாமானியமா? மருமகனைத் தேடுவதென்பது விளையாட்டுன்னு நினைச்சீங்களா?''

''அது கூட பாயிண்ட்தான்னு வை! போகட்டும். ஒரு காரியம் பண்ணினால் என்ன?''

சுமித்ரா என்ன என்பதுபோலப் பார்த்தாள்.

''நம்ப வீட்டோடு ஒரு பையனைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டு அவன் படிப்பு வழக்குகளையெல்லாம் பார்த்துக் கொண்டே அவனை நம்மோடு சேர்த்துக் கொண்டு விட்டால்? ஒரு பக்கத்தில் ஆம்பிள்ளைப் பையன் வேணுங்கிற உன் ஆசையும் தீரும். இன்னொரு பக்கத்தில் மருமகனாய் எப்படி இருக்கணும்னு ட்ரெயினிங் கொடுத்தாற்போலவும் இருக்கும். என்ன சொல்கிறாய்?''



''நன்றாய்த்தானிருக்கு! ஆனால் எந்தத் தாய் தந்தையர் தம் பையனை நமக்காக விட்டுக் கொடுக்கச் சம்மதிப்பார்கள் சொல்லுங்கள்.''

''தாய் தந்தையரின் சம்மதம் கிடைக்காதுன்னு நினைச்சால் அவர்கள் இல்லாத பையனாய்ப் பார்ப்போம்.''

சுமித்ரா சரேலென்று கணவன் முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்படவில்லை.

''மொதல்ல இந்த ஒளிவு மறைவு எல்லாம் எதுக்காக, உங்க உத்தேசந்தான் என்ன, வெளிப்படையாய்ச் சொல்லி விடுங்கள் அதை.''

''ஒளிவு மறைவு, உத்தேசம் என்று எதுவும் இல்லை சுமி! ஆனால் டாக்டர் போன் பேசினாள். அதன் விளைவுதான் இதெல்லாம்!''

''அதோடு சேர்த்து இன்னொன்று. எதையோ கூட ஜோடித்துச் சொல்வதற்கு நீங்கள் வழி தேடுகிறீர்கள்.''

விஜயராகவன் சிரித்தான்.

''நான் எவ்வளவு பெரிய லாயராய் இருந்தாலும் உனக்கு முன்னால் தோற்றோடிவிடுவேன்னு என்றோ ஒப்புக் கொண்டாகி விட்டது. ஆல்ரைட்! நிஜந்தான். சமயம், சந்தர்ப்பம் வந்து விட்டதால் சொல்லி விடுகிறேன். என் மனதில் இந்த யோசனை பல நாட்களாய் இருந்து வருகிறது. யாராவது நல்ல பையனை அழைத்து வந்து ஏதாவது சாக்கில் நம்ப வீட்டில் வைத்துக் கொண்டு, நம்ப ஆர்த்தியைத் தந்து மணம் செய்து வைக்கணும்னு! ஹேமந்த்தை அதனால்தான் நம் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்தேன். அவர்களை அரவ

ணைப்பதில் சிநேகம் ஒன்று மட்டுமேயில்லை, என் சுய நலம் கூட நிறைய இருக்கு. ஹேமந்த்தை ஆர்த்திக்குப் பண்ணி வைத்தால் எப்படி இருக்கும், சொல்லு?''

''ஹேமந்த்தையா?'' சுமித்ரா திகைப்படைந்து விட்டாள்.

''ஆமாம், ஹேமந்த்துக்கு என்ன குறைச்சல்? தோற்றத்தில் ஆர்ததிக்குச் சற்றும் குறைந்து போய் விடவில்லை.''

''ஆனால் அவ்விருவருக்குமிடையே பச்சைப் புல்லைப் போட்டால் கூட அது பற்றி எரியத் தொடங்கிவிடும்.''

''அதையெல்லாம் நான் பார்த்துக்கறேன் என்றேனே.''

''ஆனால்—''

''நான் உறுதியாய் இந்தத் தீர்மானத்திற்கு இன்னும் வரவில்லை. ஹேமந்த்திற்குத் தந்தை இல்லை. நம் அரவணைப்புத் தேவை. நம்மிடம் வைத்துக் கொண்டு மெதுவாய் நம் பழக்கவழக்கங்களையெல்லாம் கற்றுக் கொடுப்போம''

''அந்தப் பிடிவாதக்காரன் யார் சொன்னாலும் கேட்பானா என்ன?''

''அப்பப்பா! அதையெல்லாந்தான் நான் பார்த்துக்கறேங்கிறேனே!''

''ஆர்த்தி என்ன சொல்வாளோ?''

''அதையும் என்னிடமே விடு. இப்போதே அவர்கள் இருவருக்கும் நாம் கல்யாணம் பண்ணிடப் போறதில்லையே! ஓரிரண்டு வருஷம் பார்ப்போம். அதற்குள் ஹேமந்த்தின் நடத்தை பிடிக்காமல் போனால் விட்டு



விடுவோம். நமக்குப் பிடிக்காத பையனை ஆர்த்திக்குப் பண்ணி வைக்கப் போவதில்லையே நாம்!''

சுமித்ரா கணவனையே பார்த்தாள்!

கணவன், பரமேஸ்வரியின் குடும்பத்தை ஏன் அரவணைக்கிறான் என்றும், ஹேமந்த்தை ஏன் வரவழைத்துக் கொண்டிருக்கிறான் என்றும் இப்பொழுது புரியத் தொடங்கிற்று. அவன் யோசனை அவளுக்கும் மகிழ்ச்சியைததான் தந்தது.

''அதற்குள் நீ கூட ஹேமந்த்தை நன்றாய் கவனித்து வா. உனக்கு ஏதாவது அதிருப்தி ஏற்பட்டால் உடனே இந்த உத்தேசத்தை விட்டு விடுவோம். இது நமக்குள் ஏற்பட்டிருக்கும் பேச்சுதானே யொழிய, யாருக்கும் வாக்குறுதி தந்துடலையே.''

சுமித்ரா தலையாட்டினாள்.

''உனக்கு மகன் இல்லாத குறையைத் தீர்க்கக் கூடிய மருமகனாய்ப் பார்த்துக் கொண்டு வரவேண்டும் என்பது என் துடிப்பு அதை நீ புரிந்து கொண்டால் போதும்;''

''நீங்கள் எனக்குச் சில சமயம் நன்றாய் புரிந்தவரைப் போலவே தோன்றுவீர்கள். வேறு சில சமயமோ புரிந்துக்கவே முடியாதவரைப் போலத் தோன்றுவீர்கள்'' என்றாள்.

''இது காம்ப்ளிமென்ட்டா? அல்லது குத்தல் மொழியா?''

''சமயம் வரும் போது சொல்றேன்''

''ஒரு சின்ன ரிக்வெஸ்ட்.''

''என்ன?''

அவன் வேதனையோடு பார்த்தான். தாழ்ந்த குரலில் சொன்னான்- ''சுமீ! இனி ஒரு போதும் குழந்

தைகள் விஷயமாய் டாக்டர்களிடம் போகாதே. இவ்வளவு நாளாய் நாம்ப எவ்வளவு முயற்சிகள் பண்ணியிருப்போம்! நமக்குப் பிராப்தம் இல்லை. அவ்வளவுதான்! ஒப்புக்கிறாயா?''

சுமித்ரா தலையாட்டினாள்.

மனைவியின் மலர்ந்த முகத்தைப் பார்த்ததுமே அவன் மனம்கூட லேசாயிற்று

அங்கிருந்து எழுந்து போனான்.

பக்கத்து அறையில் கட்டிலில் உட்கார்ந்து தலையணைக்கு எம்பிராய்டரி வேலை பண்ணிக் கொண்டிருந்த பரமேஸ்வரி இத்தனையையும் கேட்டுக் கொண்டிருந்தாள் என்று அவர்களுக்குத் தெரியாது.

கணவன் மனைவி இருவரும் தமக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாய் நினைத்துக் கொண்டிருந்த யோசனை மூன்றாவது நபருக்குத் தெரிந்து விடும் என்றும், அதன் விளைவு வேறு விதமாய் இருக்கும் என்றும் அவர்கள் ஊகித்திருக்கவில்லை.

இந்தச் சம்பாஷணையை கேட்டுக் கொண்டிருந்த பரமேஸ்வரிக்கு ஆர்வம் பெருகவே, தையல் வேலையை நிறுத்தி விட்டுக் காதுகளைத் தீட்டிக் கொண்டு கூர்ந்து கேட்கத் தொடங்கினாள்.

விஜயராகவன் அறையை விட்டு அந்தப் பக்கமாய் இருந்த அறையை நோக்கிப் போய் விட்ட ஓசை கேட்டது. அச்சம்பாஷணைகளின் பொருளைத் திரும்பத் திரும்ப அசை போட்டுக் கொண்டிருந்த பரமேஸ்வரியின் முகம் பிரகாசமடைந்தது.

கடவுள் தனக்கு எந்த பாக்கியமும் இல்லாமல் பண்ணி விட்டால் மாத்திரம் என்ன? தங்கமான மகனைத் தந்து அதை இட்டு நிரப்பி விட்டார். மெல்ல மெல்ல பரமேஸ்வரியின் மனதிலிருந்து தாம் வேற்று மனிதர்கள் வீட்டில் இருக்கிறோம் என்ற பாரமான உணர்ச்சி



மறைந்து போகத் தொடங்கிற்று! ஆர்த்தி தனக்கு வரப் போகும் மருமகள் என்ற யோசனை அவளுக்குப் புது விதமான தைரியத்தைத் தரத்தொடங்கிற்று.

# 8

கணவன் மனதிலிருந்த எண்ணத்தைத் தெரிந்து கொண்ட பிறகு சுமித்ராவுக்குக்கூட ஹேமந்த்பால் தனிப்பட்ட அக்கறை ஏற்பட்டது கூடியவரையிலும் ஆர்த்திக்கு நயமாய் எடுத்துச் சொல்லுவதற்கும், ஹேமந்த்திடம் உள்ள நல்ல குணங்களை ஆர்த்தி புரிந்து கொள்ளும்படி செய்வதற்கும் முயன்று கொண்டிருந்தாள். ஹேமந்த் முதன் முதலில் பிடிவாதக்காரனாய் இருந்தாலும் மெல்ல மெல்ல சுமித்ரா காட்டிய ஆதரவுக்கும் அன்பிற்கும் கட்டுப்படத் தொடங்கினான்.

விஜயராகவனையோ, ஆர்த்தியையோ, இன்னும் சொல்லப் போனால் தன் சொந்த தாயையோகூட அவன் லட்சியம் பண்ணவில்லை.

சுமித்ராவின் நடவடிக்கைகளும், குண நலன்களும் கவர்ந்து விட்டதாலோ என்னவோ ஹேமந்த் முன்னை விட இப்பொழுது கொஞ்சம் மாறியிருந்தான்.

ஹேமந்த்தின் மனத்தத்துவத்தை நன்றாய் உணர்ந்து கொண்ட விஜயராகவன் அவனுக்குப் படிப்பு வராதென்று தெரிந்து கொண்டான்.

இளமை பொங்கித் ததும்பிக் கொண்டிருந்த அந்த வயது கொட்டும் அருவியைப் போன்றது. அதற்கு வேகம், சப்தம் இவ்விரண்டையும் தவிர வேறெதுவும் தெரியாது. குறுக்கே எது வந்தாலும் மூழ்கடித்து விட்டு,

அதைத் தாண்டிக் கொண்டு அலட்சியமாய்ப் போய் விடுமே தவிர வேறெந்த யோசனையுமே இராது

படிப்பு, புத்திசாதுரியம், தாய் தந்தையர் தரும் பயிற்சி, போன்றவை இந்த வெள்ளத்திற்கு அணை போடவல்லவை!

ஹேமந்த் புத்திசாலிதான். ஆனால் அது அவனிடமுள்ள ஆவேச உணர்ச்சியால் காலடியில் போட்டு நசுக்கப்பட்டு விட்டது.

அவன் யோசனைகளையும், ஆவேசங்களையும் ஒரு சிரமமான வழியில் திருப்பி விட்டால் அவன் நல்லவனாகவும் மாறி விடுவான் என்பது விஜயராகவனின் நம்பிக்கை.

ஆனால் இந்தப் பொறுப்பைத் தலையில் போட்டுக் கொள்ள வேண்டுமானால் நிறைய பொறுமையும் நிதானமும் வேண்டும்.

ஹேமந்திற்கு ஒரு ப்ரைவேட் கம்பெனியில் உத்யோகம் பார்த்துத் தந்தான். அவன் வேலை சின்னதாயிருந்தாலும் பொறுப்பு அதிகம். சம்பளம் நன்றாகவே தந்தார்கள்.

ஹேமந்த் தாய் சொல்லியும், விஜயராகவன் சொல்லியும் கேட்டுக் கொள்ளவேயில்லை ஐதராபாத்திற்குத் திரும்பிப் போய் விடுவதாய் பிடிவாதம் பிடித்தான். தாய் வராமல் போனால் தானே போய் விடுவதாய் பயமுறுத்தினான்.

சுமித்ரா அவனை சாந்தப்படுத்தினாள்.

''நீ போகிறேன் என்றால் உன்னை யாரும் தடுக்க மாட்டோம்... உன்னிஷ்டப்படி நடந்துக்க உனக்கு உரிமை இருக்கு. ஆனால் நீயே யோசித்துப் பார்! ஐதராபாத்துக்குப் போய் நீ என்ன பண்ணுவாய்? இந்தக் காலத்தில்



உத்யோகம் கிடைப்பது எவ்வளவு கஷ்டமாயிருக்குன்னு உனக்குத் தெரியததல்ல. உங்கம்மா பேச்சையோ உங்க மாமா பேச்சையோ கேட்பதாய் நீ நினைச்சுக்க வேண்டாம். உன் எதிர்காலத்தை நீ பார்த்துக் கொள்! உனக்கு இந்த உத்யோகம் பிடிக்கா விட்டால்-உன்னால் பண்ண முடியாதுன்னு தோன்றினால் அந்த நிமிஷமே நீ போய் விடலாம்! ஒரு ரெண்டு மாதம் பண்ணிப்பாரு! நீ எப்ப போக விரும்புகிறாயோ அப்போதே உன்னை ரயிலேற்றி வைக்கிற பொறுப்பு என்னைச் சேர்ந்தது. ஒப்புக்கிறாயா?'' சுமித்ராவின் வார்த்தைகள் ஹேமந்த்திடம் மாறுதலை உண்டாக்கின.

அவன் பிரயாணத்தை நிறுத்திக் கொண்டான். உத்யோகம் பண்ண ஒப்புக் கொண்டான்.

அதைக் கேட்டதும் ஆர்த்தி எரிச்சலடைந்தாள்,

''மம்மீ! அப்பாவுக்கு நாம்ப எடுத்துச் சொல்ல வேண்டியது போக இதென்னது! உனக்குக்கூட புத்தி கலங்கிப் போயிடுத்து போலிருக்கே! அவனுக்கு நாம்ப எதுக்காக உத்யோகம் வாங்கித் தரணும்? இங்கயே இருக்கச் சொல்லி எதுக்காக வற்புறுத்தணும்? அவ்வளவு தலையெழுத்து நமக்கேன் மம்மீ?''

''ஆர்த்தி! அப்படிச் சொல்லாதேம்மா! ஹேமந்த் இந்த ஒரு மாத காலமாய் நம்ப வீட்டில் வளைய வந்து கொண்டிருப்பதைப் பார்த்தால் என் மனமெல்லாம் சந்தோஷமாயிருக்கு. எனக்கும் ஒரு மகன் இருந்தால்...'' அதற்கு மேல் ஆர்த்தி எதுவும் பேசவில்லை. பிறகு அந்தப் பேச்சையே எடுக்கவில்லை.

ஆர்த்தி ஹேமந்த் இருவரும் வழக்கம் போலவே இரு வேறு துருவங்களாய்த்தான் இருந்து வந்தார்கள். அதில் எந்த மாறுதலும் இல்லை.

ஹேமந்த் உத்யோகத்தில் சேர்ந்தான்.

முதல் மாதச் சம்பளம் வந்தது.

கொண்டு வந்து நேராய் சுமித்ராவின் கையில் தந்தான்.

' இதென்ன? உங்கம்மாவிடம் கொடு!'' என்றாள்.

''எங்க வீட்டில் இருந்திருந்தால் அது போலவே கொடுத்திருப்பேன் ஆன்ட்டி! இது உங்க வீடில்லையா?'' என்றான்.

''இந்த மாதிரி உங்க வீடு—எங்க வீடுங்கிற வேறு பாட்டைவிட மாட்டாய் போலிருக்கு!''பழித்தாற்போலப் பதிலளித்தாள்.

''உங்களைப் பார்த்தால் அப்படி எதுவுமே தோன் றலை ஆன்ட்டி! ஆனால் அந்த உணர்ச்சியை எங்கே நான் மறந்து போயிடுவேனோன்னு நினைப்பூட்டு பவர்கள் இந்த வீட்டில் உள்ளனர்.''

''ஆர்த்தியைப் பற்றித்தானே நீ சொல்கிறாய்?''

''பேரைச் சொல்லும்படி கேட்காதீங்க.''

''ஹேமந்த்! என் மேல் உனக்கு நிஜமாகவே மதிப்பு இருக்கா?''

''இருக்கா இல்லையான்னு நீங்களேதான் தெரிஞ்சுக் கணும்.''

''இருக்குன்னு நான் நினைக்கிறேன்.''

''தாங்க்யூ ஆன்ட்டி.''

''அந்த மதிப்பை வைத்துக் கொண்டு நான் ஒரு வார்த்தை சொல்றேன். நீ இன்றைக்கு ஆர்த்தியை சினிமாவுக்கு அழைத்துக் கொண்டு போ!''

''நானா?''



''இந்த ஆள் அழைத்துக் கொண்டு போனாலும் இங்கே யாரும் போகத் தயாராயில்லை-வேணும்னால் நீ சினிமாவுக்குப் போ மம்மீ! நடுவில் என் பெயரை இழுக் காதே!'' அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்த ஆர்த்தி சுடச்சுட பதிலளித்தாள்.

''அப்பப்பா! ஆர்த்தி!''

''இப்பத்தானே இந்த ஆள் வேற்று மனுஷர்கள் வீடுன்னு நான் நினைப்பூட்டுவேன்னு பதிலளித்தார்... ஆங்! நினைப்பூட்டுவேன்! தினமும் ஒவ்வொரு வேளையும் நினைப்பூட்டிக் கொண்டேதான் இருப்பேன்!''

ஹேமந்த் முகத்தில் ஆவேசம் பொங்கிற்று.

''ஹேமந்த், நீ அவசரப்படாதே.'' சுமித்ரா எச்ச ரிப்பது போலச் சொன்னாள்.

ஹேமந்த் ஆர்த்தியைக் கோபமாய்ப் பார்த்து விட்டுப் போய் விட்டான்.

''ஆர்த்தி! ஏன் இப்படி வம்பிற்கிழுத்தாய்?'' தாய் கண்டித்தாள்.

''அவனை வாயை மூடிக் கொண்டு இருக்கச் சொல்லு மம்மீ!'' ஆர்த்தி எச்சரித்து விட்டுப் போய் விட்டாள்.

சுமித்ரா பெருமூச்செறிந்து விட்டு, ஹேமந்த் அவ்வி டத்தில் வைத்த பணத்தை எடுத்து ஒரு உறையில் போட்டு வைத்து பத்திரப்படுத்தினாள்.

## 9

ஆர்த்தியின் பரீட்சைகள் நெருங்கி விட்டன.

வகுப்புத் தோழி ஜெயந்தி படிப்பதற்காக வந்து கொண்டிருந்தாள். ஜெயந்தி வந்ததுமே இருவரும்

அறையில் கதவைத் தாழிட்டுக் கொண்டு உட்கார்ந்து விடுவார்கள். இரவும் பகலுமாய், படிப்பதிலேயே மூழ்கிப் போய் விட்டிருந்தாள் ஆர்த்தி.

விஜயராகவன் கோர்ட்டுக்குப் போய் விட்டால் போதும், அதற்குப் பிறகு வீட்டில் ஒரு சின்ன சப்தம்கூட கேட்கக் கூடாது அவளுக்கு. சின்னம்மாவின் பரீட்சை என்று வீட்டில் வேலைக்காரர்கள்கூட சப்தம் போட்டுப் பேசிவிடக் கூடாது. பெரிதாய்ப் பேசி விட்டால் குடி முழுகி விடும் போல பயந்தவாறு குசுகுசுவென்று ரகசியம் பேசிக் கொள்வதைப் போலத்தான் சம்பாஷணையைத் தொடர்ந்து கொண்டிருப்பார்கள்.

அன்று ஹேமந்த் கம்பெனிக்குப் புறப்பட்டான், அவன் செருப்பைக் காணோம். வேலையாளை இரைந்து கூப்பிட்ட போது அவன் ஓடி வந்து—''உஷ்! சப்தம் போட்டுப் பேசாதீங்க. சின்னம்மா படிக்கிறாங்க'' என்று ரகசியமாய்ச் சொல்லி விட்டு ''உங்க செருப்பை ஜீலி எடுத்துக்கிட்டுப் போச்சுங்க, நான் அதைப் பிடுங்கி வராந்தாவில் எடுத்து வெச்சிருக்கேனுங்க'' என்று ஓடினான்.

அவன் கொண்டு வந்து தந்த செருப்பை மாட்டிக் கொண்டே ''அந்த அறையில் என் பை இருக்கு. போய் கதவைத் தட்டு. எனக்கு டயமாகிறது'' என்றான்.

''ஐயோ! சின்னம்மாவைக் கூப்பிடுவதா? இன்னிக்கு ஒரு நாள் நீங்க பையில்லாமல் ஆபீசுக்குப் போறது நல்லதுங்க'' என்று ஆலோசனை தந்தான்.

''நீயும் உன் புத்தியும்! அந்த அறையில் என் பை மட்டுமில்லை, என் ஃபைல்கள் எல்லாம் கூட இருக்கு, பேனா இருக்கு, நீ போய்க் கூப்பிடுகிறாயா அல்லது நான் கூப்பிடட்டுமா?''



''ஐயய்யோ! நீங்க என்னங்க, திரும்பவும் உரக்கப் பேசறீங்களே?''

வேலைக்காரன் ஞாபகப்படுத்தினான்.

''நீ கூப்பிடுகிறாயா? நான் கூப்பிடட்டுமா?'' ஹேமந்த் குரலைத் தாழ்த்திக் கொள்ளாமலேயே கேட்டான்.

அதற்குள் அவர்கள் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்காகவே வந்தாற்போல சுமித்ரா போய் மகளைச் சாப்பிடக் கூப்பிட்டாள்.

தாய் ஒன்றிற்கு இரண்டு முறையாய் சாப்பிட வரச் சொல்லிக் கூப்பிட்டால் கூட ஆர்த்திக்கு எரிச்சல்தான்! கதவைத் தடாலென்று திறந்து கொண்டு வெளியே வந்து-''அப்பப்பா! என் பசியைப் பற்றி எனக்குத் தெரியாதா மம்மீ? நீ என்னை ரொம்பத்தான் சின்னப் பெண்ணைப் போல நடத்துகிறாய்'' என்று அலுத்துக் கொண்டாள்.

''பக்கத்தில் கொண்டு வந்து காப்பியை வைத்துவிட்டு ரெண்டு தடவை ஞாபகப்படுத்தினாலும் புத்தகத்திலிருந்து தலையை எடுக்காமலேயே 'உம் உம்'னு அதைப் பற்றியே மறந்து போகிறவள் நீ. உனக்குச் சாப்பிடலைன்னு மட்டும் எப்படி நினைவிருக்கும்? ஆனாலும் இப்படிப் படிக்கிறதைக் கொஞ்சம் ஆரம்பத்திலிருந்தே பார்த்துக் கொண்டிருந்தால் எந்தத் தொல்லையும் இருக்காதில்லே? பரீட்சை நெருங்கிட்டால் போதும் ஊண் உறக்கத்தை மறந்து விடுகிறாய். கூப்பிட்டாலும் குரல் கொடுக்கவும் மாட்டாய், வரவும் மாட்டாய். உன்னோடுகூடப் படிக்கிற இந்த ஜெயந்தி கூட இப்படித் தான் பண்றாளா?''

''ஆன்ட்டீ! ஆர்த்தி கோல்ட் மெடலுக்கு ட்ரை பண்ணுகிறாள்.'' ஜெயந்தி சிரித்துக் கொண்டே சொன்

னதைக் கேட்டு, ஆர்த்தி ஜெயந்தியை முழங்கையால் இடித்துவிட்டு முறைத்துப் பார்த்தாள்.

''என்னவோம்மா! கோல்ட் மெடல் சங்கதி கிடக்கட்டும். மொதல்ல கண்ணுக்கு மூக்குக்கண்ணாடி போட்டுக்கற நிலைமை மட்டும் வந்துடாமல் பார்த்துக்கோ!'' என்றாள் சுமித்ரா.

தாயின் பலவந்தத்தின் பேரில் ஆர்த்தி அரக்கப் பரக்க இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு விட்டுத் திரும்பவும் படிக்க அறைக்கு வந்தாள்.

ஆர்த்தி திரும்பி வந்தபோது ஹேமந்த் அங்கிருந்த அலமாரியில் தனக்கு வேண்டிய ஃபைலை எடுத்துக் கொண்டு, எஞ்சியவைகளைத் துப்புறவாய் அடுக்கி வைத்து விட்டு, பேனாவை ஜேபியில் போட்டுக் கொண்டு வெளியே போய்க் கொண்டிருந்தான்.

அதுவரை படித்துக் கொண்டிருப்பதுபோல புத்தகத்திற்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டு, ஓரக்கண்ணால் அவனை உச்சி முதல் உள்ளங்கால் வரையிலும் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ஜெயந்தி, ஆர்த்தி வந்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டதுமே—''உங்க வீட்டில் இந்தப் புது ஆள் யாரு?'' என்று துருவிக் கேட்டாள்.

''எங்கம்மா அப்பாவின் வளர்ப்புப்பிராணி! சமீபத்தில் தான் ஐதராபாத்திலிருந்து வரவழைத்துக் கொண்டார்கள்'' என்றாள் ஆர்த்தி.

வாசலைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்த ஹேமந்த்தின் செவிகளில் ஏளனம் நிரம்பிய இவ்வார்த்தைகள் விழுந்ததுதான் தாமதம். அவன் உடம்பிலிருந்த ரத்தமெல்லாம் கொதிக்கத் தொடங்கிற்று. அவன் தன்னையறியாமல் வினாடி நேரம் நின்றான்.



அடுத்த நிமிஷமே விருட்டென்று திரும்பிப்போய் ஆர்த்தியின் ஜடையைப்பிடித்து இழுத்து, கைகளைக் கூப்பி மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்வரை இரண்டு கன்னங்களிலும் மாறி மாறி விளாசி விட்டிருப்பான்! ஆனால் அவனுக்கெதிராய் சுமித்ரா வந்து கொண்டிருந்தாள். அவள் கையில் சின்ன டிபன் பாக்ஸ் இருந்தது.

''ஹேமந்த்! இந்தா! உங்க ஆபீஸில் கேன்டீன் இல்லைன்னு சொன்னாயே, இன்றையிலிருந்து டிபன் பண்ணித் தரேன். எடுத்துக் கொண்டு போ'' என்று தந்தாள்.

ஹேமந்த் பற்களைக் கடித்துக் கோபத்தை அடக்கிக் கொண்டான்.

சிரித்த முகத்துடன் பரிவோடு பார்த்துக் கொண்டிருந்த சுமித்ராவைக் கண்டதும் அவன் ஆவேசம் தணிந்தது!

''எதுக்கு ஆன்ட்டி உங்களுக்கு சிரமம்?'' என்றான்.

''பலே ஆள்தான்! பசங்களுக்கு வேண்டியதை பார்த்துப்பது கூட ஒரு சிரமமா? ஆனாலும் இதில் நான் என்ன சிரமப்பட்டுட்டேன்? சமையல்காரிக்குச் சொல்லிப் பண்ண வைக்கிறேன், அவ்வளவுதானே!''

ஹேமந்த்திற்கு அந்த டிபன் பாக்ஸை எடுத்துச் செல்லக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

அவன் அறைக்குள் பார்த்தான். ஆர்த்தி ஜூலிக்குத் தின்பதற்கு பிஸ்கெட்டைத் தந்து கொண்டிருந்தாள்.

சுமித்ராவின் கையிலிருந்த டிபன்பாக்ஸ் கூட அவனுக்கு ஒரு பெரிய பிஸ்கெட் துண்டைப் போலவே தென்பட்டது.

''சே! நீயும் உன் சங்கோஜமும்!'' சுமித்ரா அவன் கையிலிருந்த பையை வாங்கி, ஜிப்பை இழுத்து, டிபன் பாக்ஸை அதில் வைத்து மூடிவிட்டுத் திருப்பி அவனிடம் தந்துக் கொண்டே- ''பாரு! சாயந்திரம் வரும் போது ஒரு முழம் மல்லிகைப்பூ வாங்கிக் கொண்டு வா, சுவாமிக்கு வேணும்'' என்றாள்.

''சரி.''

''நீ அன்றைக்கு எங்க ஊருக்கு மணியார்டர் பண்ணிட்டு வந்தாயே, அதன் ரசீது வந்திருக்கு.''

சுமித்ரா இப்பொழுதெல்லாம் சின்னச் சின்ன காரியங்களை ஹேமந்திடம் ஒப்படைப்பது வழக்கமாகி விட்டது.

''சரி ஆன்ட்டீ'' அவன் புறப்படப் போனான்.

''இதப்பாரு—சாயந்திரமாய் ஆபீசிலிருந்து நேராய் வீட்டிற்கு வந்துவிடு. வேணும்னால் குளித்து டிபன் சாப்பிட்டு விட்டு அப்புறமாய் உன் ஃபிரெண்ட்ஸிடம் போகலாம்.''

''எனக்கு ஃபிரெண்ட் யாருமே இல்லை.''

''யாருமே இல்லையா? உங்கம்மா உனக்கு ஐதராபாத்தில் நிறைய ஃபிரெண்ட்ஸுகள் உண்டுன்னு சொன்னாளே!''

''அது அந்தக் காலம் ஆன்ட்டி! என் பர்ஸில் நிறைய பணம் இருக்கும் அப்போது!''

சுமித்ரா சிரித்தாள். ''அப்படீன்னால் ... இப்பப் பணம் இல்லாததால் ஃபிரெண்ட்ஸ் இல்லைன்னு அர்த்தமா?...பணத்தால் ஏற்படுகிற சிநேகிதர்கள் சிநேகிதர்களே இல்லை.''



''எனக்குத் தெரியும் ஆன்ட்டீ! அதனால்தான் நான் யாரோடுமே சிநேகமே பண்ணிக்கறதில்லை. இந்தக் காலத்தில் பணத்தால்தான் சிநேகிதர்கள் ஏற்படுவார்களே தவிர உண்மையான சிநேகிதர்களே கிடைக்க மாட்டார்கள்.''

''தவறாய்ப் புரிஞ்சுக் கொண்டிருக்கிறாய் ஹேமந்த்! நீ முயன்றால் உண்மையான சிநேகிதர்கள் கண்டிப்பாய் கிடைப்பார்கள்.''

ஹேமந்த் பதில் பேசவில்லை.

''பின்னே எந்த நண்பனுமே இல்லைன்னால், ராத்திரி வேளையில் ஏன் அவ்வளவு நேரங்கழித்து வருகிறாய்?''

ஹேமந்த் குனிந்த தலையை நிமிர்த்தவில்லை.

''சொல்லு, எங்கெங்கே சுற்றுகிறாய்?''

சுமித்ரா திருப்பிக் கேட்டாள்.

''பார்க்கில் உட்கார்ந்திருப்பேன்.''

''பார்க்கிலா? தனியாகவா? தினமும் அவ்வளவு நேரமா பார்க்கில் உட்கார்ந்திருக்காய்? ஏன்? என்னவாச்சு? எதுக்காக?''

''ஒன்றுமாகலை. வீட்டுக்கு வந்து மாத்திரம் என்ன பண்ணுவேன்? வரேன் ஆன்ட்டீ, டயமாகிறது'' அவன் மளமளவென்று போய்விட்டான்.

சுமித்ரா அவன் போன திசையையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். ஹேமந்த் நடவடிக்கை விநோதமாய் இருந்தது. பணம் இருந்தால் தான் சிநேகிதர்கள் இருப்பார்கள் என்ற அவன் சுபாவம் விசித்திரமாய் தோன்றிற்று. இந்த வயதில் ஒருவரோ இருவரோ சிநேகிதர்கள் கண்டிப்பாய் இருக்கவேண்டும்! மனதில் உள்ளதை தைரியமாய், சங்கோஜமில்லாமல் சொல்லிக் கொள்ளக்

கூடிய சிநேகம் மிக அவசியம்! சுமித்ராவின் புருவம் நெளிந்தது. ஆபீசிற்காவது சரியாய்ப் போகிறானா?

ஏதோ தீர்மானத்திற்கு வந்தவளாய் அங்கிருந்த போனுக்கருகில் போனாள். டைரியைப் பார்த்து நம்பரை டயல் பண்ணினாள். மறுமுனையிலிருந்து பரிச்சயமான குரல் கேட்டதும்— "ஹலோ! விஷ்ணுமூர்த்திதானே? நான்தான் சுமித்ரா பேசுகிறேன்! நீங்கள் இன்னும் ஆபீசுக்குப் போகலையா?...சே, சே அதெல்லாம் ஒன்றுமில்லை! விசேஷம் ஒன்றுமில்லை! உங்க கம்பெனியில் வேலைக்குச் சேர்த்து கொண்ட அந்தப் பையன் 'ஹேமந்த்' எப்படி வேலை பண்றான்? எங்களவர் உங்களுக்குப் போன் பண்ணி என்னை இதைப்பற்றி விசாரிக்கச் சொல்லி நாலு நாள் ஆயிடுத்து. நான் அந்த விஷயத்தையே மறந்து போயிட்டேன். இன்றைக்குக் கோர்ட்டுக்குப் போகும்போது சொன்னார். நான் இன்றைக்குக்கூட மறந்து விட்டால் வந்ததுமே கோபித்துக் கொள்வார் பாருங்க!"

மறுமுனையிலிருந்து விஷ்ணுமூர்த்தியின் குரல் தடுமாற்றத்துடன் கேட்டது "என்னம்மா! உங்க கணவன் மனைவியரின் தோரணையே எனக்குப் புரியலை. இதப் பாருங்க! உங்களவர் இங்கேதான் எனக்கெதிரிலேயே உட்கார்ந்திருக்கிறார். இப்பத்தான் நீங்க சொன்ன வார்த்தைகளையே அவரும் சொல்லிக் கொண்டிருக்கிறார் நாலு நாளாய் நீங்க ஹேமந்த் விஷயத்தைத் தெரிந்து வரும்படி தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கீங்களாம். இன்னறக்குக் கோர்ட்டுக்குப் போகிற வழியில் உங்க தொல்லை தாங்க முடியாமல் வந்தாராம்!"

சுமித்ரா விக்கித்துப் போய் விட்டாள். உடனே உதட்டில் குறுநகை படர்ந்தது.

"என்னம்மா விசேஷம்? நீங்களிருவரும் ஒருத்தருக்குத்



தெரியாமல் இன்னொருத்தர் அந்தப் பையன் விஷயத்தைத் தெரிஞ்சுக்க விரும்புகிறீர்கள்?"

"சே சே, அதெல்லாம் இல்லை!"

"இல்லைன்னால் நான் சும்மாயிருந்துடுவேனா? ஏதோ விசேஷம் இருந்துதான் தீரும். சரி, நீங்க சொன்னாலும் சொல்லாவிட்டாலும் பையனைப்பற்றி நீங்க கேட்டதால் சொல்றேன். பையன் புத்திசாலிதான்! ஆனால் கொஞ்சம் தன்னம்பிக்கை குறைவு! அதுமட்டும் இல்லாமலிருந்தால் அவ்வளவு நல்ல பையன் எங்கேயுமே இருக்க மாட்டான். வேலை மட்டும் நன்றாய்த்தான் பண்ணுகிறான். அவன் மேல் எந்தப் புகாரும் இல்லை."

"சரி, அங்கே அவர் இருக்கார் இல்லையா, சொல்லிடுங்க!"

"ஆர்த்தி பரீட்சைக்கு நன்றாய்ப் படிக்கிறாளா?"

"ஆங்!"

இந்த வருஷத்தோட எங்க ரமேஷ் படிப்பு முடிஞ்சு போயிடும். ஆர்த்தி படிப்பும் முடிஞ்சுடும். அப்ப கல்யாண விஷயந்தான் பாக்கி! எவ்வளவோ நாளாய் சொல்லிக் கொண்டேயிருக்கேன், ஆர்த்திதான் என் மருமகள்னு! திரும்பவும் ஞாபகப்படுத்துகிறேன்."

"அங்கேதான் அவர் இருக்காரே, சொல்லுங்கள்." என்று போனை வைத்துவிட்டாள் சுமித்ரா.

'ஹேமந்த்' எப்படி வேலை பண்ணுகிறான் என்று தெரிந்தவளாய்க் கேட்டிருந்தால் எந்தத் தொந்தரவும் இல்லாமல் போயிருக்கும். கணவனை இதில் இழுத்ததால் சிக்கல் வந்துவிட்டது கர்மம், கர்மம்! இவர் இந்தச் சமயம் பார்த்துத்தானா அங்கே போகவேண்டும்? என் றெண்ணிக் கொண்டாள். விஷ்ணுமூர்த்தி பல நாட்களா

கவே ஆர்த்தியைத் தன் மருமகள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். தோற்றத்திலும், அந்தஸ்திலும், படிப்பிலும் ஆர்த்திக்கு ரமேஷ் ஒன்றும் சளைத்தவனில்லை என்பது எல்லோரும் அறிந்ததே. சுமித்ரா அப்பால் வந்தபோது ஆர்த்தி கதவிற்கருகில் நின்றபடி கேட்டாள். ''எதுக்கும்மா? உன் வளர்ப்பு நாயைப் பற்றி விஷ்ணுமூர்த்தியிடம் விசாரிக்கிறாயா?''

சுமித்ரா சரேலென்று நிமிர்ந்தாள்.

''ஆர்த்தி! அப்படிச் சொல்லக்கூடாதுன்னு உனக்கு எவ்வளவு தடவை சொல்லியிருப்பேன்?''

''சொன்னல் என்ன தப்பு? ஜீலியைப் பராமரிப்பது போலவே அவனையும் பண்ணுகிறாய்! ஆனால் மம்மீ, நாய்களுக்கு உள்ள நன்றி மனிதர்களுக்கு இருக்காது. ஞாபகம் வெச்சுக்கொள்!''

''நீ அதிகப்பிரசங்கித் தனமாய்ப் பேசாதே, வாயை மூடிக்கொள்.'' சுமித்ரா ஆவேசமாய்ச் சொன்னதைக் கேட்டு ஆர்த்திதணிந்து, தன் அறைக்குப் போய்விட்டாள்.

## 10

''ஜுலி! ஜுலி! ஜுலி!'' ஹேமந்த்தின் கத்தல் இடிமுழக்கமாய் கேட்டது. டை கட்டிக்கொண்டிருந்த அவன் இடையில் நிறுத்திவிட்டு நாய்க்குட்டியைத் தொடர்ந்து ஓடினான்.

அவன் கண்ணாடிக்கு முன்னால் நின்று டை கட்டிக் கொண்டிருந்தான். அதற்குள் எங்கே எப்பொழுது வந்ததோ தெரியாது. ஜுலி அவன் கட்டில்மேல் போட்டிருந்த ஸ்டாகின்ஸ்ஸை வாயில் கவ்விக்கொண்டு ஓடிற்று.



அவன் கண்ணாடி வழியாய் அதைப் பார்த்து விட்டு, திரும்பி ''ஜுலி'' என்று கத்தியதுமே அது மேலும் வேகமாய் பாய்ந்து ஓடிற்று. சாக்ஸுகள் புதியவை. நேற்றுதான் வாங்கியிருந்தான்! பழையதைக்கூட அதுதான் கிழித்துக் குதறி புண்ணியம் கட்டிக்கொண்டிருந்தது அதன் வாயில் புதிய சாக்ஸையும் பார்த்ததுமே ஹேமந்த் மனம் சிவுக்கென்றது!

அதைப் பின் தொடர்ந்து ஓடி வந்து மளமளவென்று படியிறங்கப் போன அதன் வாலைப் பிடித்து இழுத்தி நிறுத்தினான்.

அதற்குள் ஆர்த்தி பூந்தொட்டியில் வைப்பதற்காக ரோஜாப்பூவைப் பறித்து எடுத்துக்கொண்டு மேலே ஏறி வந்து கொண்டிருந்தாள்!

ஹேமந்த் ஜுலியின் கழுத்தைப் பிடித்து இழுத்து, அதன் முகத்தில் மாற்றி மாற்றி இரண்டு அறை கொடுத்து விட்டு, வாயிலிருந்து ஜாக்கிரதையாய் சாக்ஸுகளை விடுவித்துக் கொண்டான்.

''நாயை ஏன் அடிக்கிறாய்?'' ஆர்த்தி கத்தினாற் போலக் கேட்டாள்.

''நாயை வளர்க்க விரும்பினால் நல்ல பயிற்சிகளைக் கற்றுத் தரணும். அதைக் கற்றுக்கொண்டும் முரடாய் இருந்தால் சங்கிலியால் கட்டியாவது போடணும். அதில்லாமல் இப்படிக் கண்ட இடங்களில் அவிழ்ந்து விட்டுட்டு எல்லோர் சாமான்களையும் பாழடிக்கும்படி பண்ணினால் பார்த்துக்கொண்டு சும்மாயிருந்துட முடியவில்லை.'' ஹேமந்த் ஆத்திரத்தோடு அதை ஒரு தள்ளுத் தள்ளி விட்டான்.

தன் காலடியில் உருண்டு ஓடிவந்த ஜுலையைச் சட்டென்று பிடித்துக்கொண்டு, கைகளால் எடுத்து மார்போடு அழுத்திக்கொண்டாள் ஆர்த்தி. அந்த நிமிஷத்

தில் அந்த நாய்க்குட்டிக்குப் பட்ட அடி தனக்கே பட்டது போல முகம் சிவந்துவிட்டது

ஜுலி வீல் வீலென்று கத்திக்கொண்டே ஆர்த்தியின் கைகளுக்கிடையே பூனைக் குட்டியைப்போல சுருண்டு போய் ஹேமந்த்தை பயந்தவாறு பார்க்கத்தொடங்கிற்று.

ஆர்த்தி படியேறி மாடிக்கு வந்தாள்.

நெருப்புப் பொறி பறந்து கொண்டிருந்த ஆர்த்தியின் பார்வையைக் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை ஹேமந்த். அலட்சியமாய் கையிலிருந்த சாக்ஸுகளை உருவி சரி பண்ணிக் கொண்டான்.

''டர்ட்டி டாக்! அதற்குள் என் சாக்ஸுகளில் ஒன்றைப் பாழடித்து விட்டது. ஒரு தடவை செம்மையாய் அடித்தால் திரும்பிப் பண்ணாது.''

ஆர்த்தி அவனிடம் வந்தாள்.

அவன் வார்த்தைகள் முடியக்கூடவில்லை. அவன் கன்னம் சுள்ளென்று அதிர்ந்தது!

அதற்குள் ஹேமந்த்தின் கத்தலைக் கேட்டு விட்டு அங்கு ஓடிவந்த சுமித்ராவும், சமையல்காரி செல்லம்மாவும் ஆர்த்தியின் இச்செயலைப் பார்த்து விட்டு அதிர்ந்து போய் விட்டார்கள்.

''அந்தப் பாடத்தை ஜுலிக்கும் முன்னால் நீயே கற்றுக்கோ!'' என்று சொல்லிக் கொண்டே திரும்பவும் கையை ஓங்கினாள் ஆர்த்தி.

சுமித்ரா ஓடிவந்து மகள் கையைப் பிடித்து அப்பால் இழுத்தாள். ''ஆர்த்தி! இதென்ன காரியம்? உனக்கு சூடு சொரணை கொஞ்சமாவது இருக்கா?'' என்று எரிந்து விழுந்தாள் மகள் மீது.



ஆர்த்தி தாயின் அதட்டலைப் பொருட்படுத்தவில்லை. ''இன்னொரு தடவை என் நாயின் மேல் கையைப் போட்டாயோ பார்!'' என்று ஆள்காட்டி விரலைக் காட்டி மிரட்டினாள்.

''போதும்! வாயை மூடிக்கொண்டு அப்பால் போ! நாளுக்கு நாள் சிறு பெண்ணைப் போல நடந்து கொள்வது அதிகமாயிடுத்து. மட்டு மரியாதை இல்லாமல் நடந்துக்கிறாய்''

''மட்டு மரியாதை அவனுக்கு இருக்காங்கிறேன்? இன்னிக்கு என் நாயை அடித்தான். நாளைக்கு என்னையே அடிப்பான் இதெல்லாம் நீ கொடுத்த இடந்தான்! இன்னும் நன்றாய் தலைமேல் தூக்கி வைத்துக் கொள்! மரியாதையாம் மரியாதை! எப்பொழுதாவது ஒரு தடவை சொந்தக்காரர்களாய் வந்துட்டுப் போகிறவர்களுக்குத் தான் மரியாதை! வீட்டிற்கு வந்து முகாம் போட்டு உட்கார்ந்துட்டவர்களுக்கு என்ன மரியாதை வேண்டிக்கிடக்கு? போகட்டும் தன் வரம்பாவது தெரிந்ததா? என் நாய்க்குட்டியின் ஜோலிக்கு ஏன் வரணும்? மொதல்ல நீ அவனுக்கு உபதேசம் பண்ணிட்டு வந்து அப்புறமாய் என்னோடு பேசு!'' ஆர்த்தி நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு ஹேமந்தை வெறுப்போடு பார்த்து விட்டு அங்கிருந்து அகன்றாள்.

ஹேமந்த் கன்னத்தைப் பிடித்துக் கொண்டு, திக்பிரமை அடைந்தவனாய் இன்னும் அப்படியே நின்று கொண்டிருந்தான்.

''ஹேமந்த்! ஆர்த்தி அவசரக்காரி! நீ ஒன்றும் எண்ணிக்காதே.'' என்றாள் சுமித்ரா.

''இல்லை ஆன்ட்டீ. நான்தான் மிகவும் அவசரக்காரன்! இந்த வீட்டில் புகலிடம் வேண்டி வந்தவன் என்ற விஷயத்தை மறந்துபோய் வரம்பு மீறி நடந்து கொண்டு

விட்டேன். சாக்ஸுசள் கிழிந்து போனால் புதிதாய் வாங்கிக் கொள்ளணுமே தவிர, அந்த நாயை அடிக்கக் கூடாது! அது என் தப்புதான்! அவசரப்பட்டு விட்டேன். மன்னித்து விடு ஆன்ட்டீ!'' அவன் விருட்டென்று திரும்பிப் போய் விட்டான்.

அன்று அவன் சாப்பிடாமலேயே ஆபீசிற்குப் போய் விட்டான் ஆர்த்திக்குப் பரீட்சைகள் முடிந்து விட்டதற்கு சந்தோஷப்பட்டாலும் வீட்டுச் சூழ்நிலை இந்த விஷயத்தால் திரும்பவும் நிசப்தமாய் மாறி விட்டது.

ஹேமந்த் அன்றிரவு வெகு நேரங்கழித்துத்தான் வீட்டிற்குத் திரும்பி வந்தான். அவன் மனம் அவமானத்தால் துடிதுடித்துக் கொண்டிருந்தது அந்த நிமிஷமே அந்த வீட்டை விட்டும், அந்த ஊரை விட்டுமே ஓடிப் போய் விடவேண்டும் போலிருந்தது.

இரவு வெகு நேரமாகி விட்டது.

அவனுக்கு ஆர்த்தியைப் பழி வாங்கினாலேயொழிய மனம் நிம்மதியடையாது போலிருந்தது. பேசாமல் ஊருக்குப் போய் விட்டால் ஆர்த்தி பண்ணிய அவமானத்தை ஏற்றுக் கொண்டு விட்டாற் போலவே ஆகி விடும். எப்படியாவது அதைத் திருப்பியடித்து விட வேண்டும்! திருப்பியடித்து விட்டு அதற்கப்புறம் இந்த ஊரில் ஒரு நிமிஷம் கூட இருக்கக்கூடாது!

பார்க்கில் பெஞ்சியின் மேல் படுத்துக் கொண்டிருந்த அவனுக்கு தொலைவில் இருட்டிலிருந்து இரண்டு விளக்குகள் இந்தப் பக்கமாகவே வந்து கொண்டிருந்தது தென்பட்டது!

அந்த இரண்டு விளக்குகளும் மெல்ல மெல்ல கிட்டே நெருங்கி வந்தன. விஜயராகவன் ஓட்டிக் கொண்டிருந்த கார் ஹேமந்த் படுத்துக் கொண்டிருந்த பெஞ்சிற்கருகில்



வந்து நின்றது. அதிலிருந்து அவன் இறங்கி வந்தான்.

''ஹேமந்த்! இங்கேதான் இருக்கிறாயா? உன்னைக் காணாமல் உங்க ஆன்ட்டி படும் பாட்டைச் சொல்லி முடியாது. உனக்கும் ஆர்த்திக்கும் பேச்சு வார்த்தை முற்றிப் போய், நீ கோபித்துக் கொண்டு வீட்டுக்கு வரலைன்னு ரொம்பவும் வருத்தப்படுகிறாள்.''

ஹேமந்த் படுத்துக் கொண்டிருந்தவன் எழுந்து உட்கார்ந்து கொண்டான். ஆர்த்தியின் பேச்சு அடிபட்டதுமே தன்னையறியாமல் கன்னத்தைத் தடவிக் கொண்டான்.

''ஹேமந்த்! வீட்டிற்குப் போகலாம் வா.'' விஜயராகவன் பரிவாய்க் கூப்பிட்டான். ஹேமந்த் வரமாட்டேன் என்பது போல வேகமாய்த் தலையை ஆட்டினான்.

ஹேமந்த் முகத்தில் பிடிவாதத்தைத் தவிர இன்னும் ஏதோ வருத்தம் தென்பட்டது! அதனால் அவன் மனம் கலங்கிப் போயிருந்தாற்போல முகம் வாடிப் போயிருந்தது.

விஜயராகவன் அவனுக்குப் பக்கத்தில் பெஞ்சியில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

''பாரு! நீ பெரியவனாயிட்டாய். உனக்குத் தந்தை இல்லாத துரதிர்ஷ்டம் ஏற்பட்டுவிட்டது! சிறுவயதிலேயே தலையில் பெரிய பொறுப்பு விழுந்து விட்டது! நீ கொஞ்சம் பெரிய மனுஷனைப் போல நடந்துக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். உங்க ஆன்ட்டி நடந்ததையெல்லாம் என்னிடம் சொல்லிவிட்டாள்! நீ ஆர்த்தி பக்கத்தில் இருந்து கொஞ்சம் யோசித்துப் பார்! ஆர்த்தி எங்களுக்கு ஒரே பெண்! அவளைச் செல்லமாய் வளர்த்து வந்திருப்பதால், அவளுக்கு விவரம் தெரிந்ததிலிருந்து அவளைத்தவிர நாங்கள் வேறு யாருக்குமே முக்கியத்துவம் தந்து பார்த்திருக்க மாட்டாள். இதற்கிடையில்

நீ வந்துச் சேர்ந்துவிட்டாய். உன்னை நாங்கள் அன்பாய் பார்த்துக் கொள்கிறோம். உன்னை அன்பாய் பார்த்துப்பதால் அவள் மேல் எங்களுக்குள்ள பாசம் போய் விடாது என்பதை அவள் அறிந்து கொள்ள வில்லை. அது மெல்ல மெல்லப் புரியும்! நீ அவளோடு சிநேகமாய் இருந்தால் இன்னும் சீக்கிரத்தில் தெரிந்து கொண்டு விடுவாள்! இதை நீ புரிந்து கொண்டால் உங்களிருவருக்குமிடையே எந்தத் தகறாறும் இல்லாமல் போகும்.''

ஹேமந்த் கேட்டுக் கொண்டிருந்தான். விஜயராகவன் சொன்னது அவனுக்கு நன்றாய் புரிந்தாலும், ஆர்த்தியின் மேலிருந்த கோபம் மட்டும் தணியவில்லை. விஜயராகவன் கால்களை நீட்டிக்கொண்டு பெஞ்சியில் நன்றாய் சாய்ந்து உட்கார்ந்து கொண்டே ''உன்னிஷ்டம்! நீ வராவிட்டால் நானும் வீட்டுக்குப் போகப் போறதில்லை. கொஞ்ச நேரமானால் உங்க ஆன்ட்டிகூட நம்மைத் தேடிக் கொண்டு இந்த இருட்டில் வந்து விடுவாள்.'' என்றான்.

சுமித்ரா அந்தக் காரியம் பண்ணி விடுவாள் என்று ஹேமந்த்திற்குத் தெரிந்துதான். இப்பொழுதே அவன் வீட்டிற்கு வரவில்லை என்று எவ்வளவு கலங்கிப் போயிருப்பாளோ?

ஆர்த்தி மேல் உள்ள கோபத்தால் ஆன்ட்டியை வருத்தப்படுத்தக்கூடாது.

''வாங்க மாமா, போகலாம்'' என்று எழுந்தான்.

''வெரிகுட்! அப்படித்தான் இருக்கணும்!'' விஜயராகவன் அவன் முதுகில் தட்டிக் கெடுத்தான்.

இருவரும் காரை நோக்கி நடந்தார்கள்.

# 11

ஜூலி பாலைக் குடித்துவிட்டு நாக்கை நக்கிக் கொண்டே தன் சின்ன சிம்மாசனமான நாற்காலியில் ஏறி உட்கார்ந்து கொண்டது. அது உண்மையிலேயே சிம்மாசனந்தான். ஆர்த்தி அந்த நாற்காலியை நன்றாய் அலங்கரித்து வைத்திருந்தாள்.

ஹேமந்த் சுற்றுமுற்றும் பார்த்தான். அவ்வெல்லையில் யாருமே இல்லை. என்று உறுதியாக தெரிந்துக் கொண்டதும், ஜேபியிலிருந்த பிஸ்கெட்டை எடுத்து அதற்கு முன்னால் நீட்டினான்.

ஜூலி மோப்பம் பிடித்துப் பார்த்தது. பிறகு அந்த பிஸ்கெட்டைச் சாப்பிடத் தனக்கு இஷ்டந்தான் என்று வாலை ஆட்டத் தொடங்கிற்று. ஹேமந்த் பிஸ்கட்டை அதன் வாய்க்கருகில் வைத்தான். அதைக் கடுக்கு முடுக்கென்று கடித்து விழுங்கிய ஜூலி ''இன்னொன்று கிடைக்குமா?'' என்பதுபோல வாலை மேலும் வேகமாய் ஆட்டத் தொடங்கிற்று. ஹேமந்த் ஜேபியிலிருந்த பாக்கெட்டை வெளியே எடுத்து அதன் வாய்க்கு எட்டாமல் உயரே தூக்கிப் பிடித்துக்கொண்டான்! ஜூலி நாக்கை நக்கிக் கொண்டே அவன் மேல் எம்பத் தொடங்கிற்று. அவன் சங்கிலியை அவிழ்த்துக் கையில் பிடித்துக்கொண்டான். தலை குனிந்தபடி நடக்கத் தொடங்கினான். ஜூலி அவனைத் தொடர்ந்து தானும் பின்னாடியே நடக்கத் தொடங்கிற்று. விஜயராகவனும் ஆர்த்தியும் சுமித்ராவும் யாரோ கிரகப்பிரவேசத்திற்கு அழைந்திருந்ததால் போய் விட்டிருந்தார்கள். பரமேஸ்வரி உள்ளே படுத்துக் கொண்டிருந்தாள். சமையல்காரி சமையலறையில் இருந்தாள்.

வேலைக்காரர்கள் யாருமே வீட்டில் இல்லை. ஹேமந்த் சாமர்த்தியமாய் ஜூலிக்கு பிஸ்கெட் ஆசையைக் காட்டி கேட்டிற்கு வெளியே அழைத்து வந்தான்.

அதை அடுத்த தெருவிலிருந்த ஒரு பாழடைந்த கட்டுடத்தின் எல்லையில் இருந்த மரத்தில் நன்றாய் கட்டி விட்டு பிஸ்கெட் பாக்கெட்டை அதற்குத் தந்து விட்டு வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டான்.

ஒன்றுமே தெரியாதவனைப் போல தன் அறையில் உட்கார்ந்து புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தான். ஒரு வாரமாவது நாய்க்குட்டிக்காக ஆர்த்தி தவித்தால் பார்த்து சந்தோஷப்பட வேண்டும் என்றெண்ணிக் கொண்டான்.

மாலை நான்கு மணிக்கு விஜயராகவன், சுமித்ரா, ஆர்த்தி மூவரும் திரும்பி வந்தார்கள். அவர்கள் வீடு திரும்பியதுமே ஜூலியின் கத்தல் கேட்கவில்லை.

''ஜூலி! ஜூலி!'' ஆர்த்தி கூப்பிட்டுக் கொண்டே மாடிக்கு வந்தாள். ''இங்கே காணோமே! எங்கே போயிடுத்து, ஜூலி?'' ஆர்த்தி நாய்க்குட்டியைத் தேடிக் கொண்டிருந்ததை ஹேமந்த் கவனித்துக் கொண்டேதான் இருந்தான்.

''எங்கேயாவது சுருண்டு படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும்'' என்றாள் சுமித்ரா.

''எங்கே இருந்தாலும் நான் கூப்பிட்டால் ஓடி வந்துடும்மா, ஆச்சரியமாய் இருக்கே! ஜூலி! கமான்! க்விக்! சங்கிலியை அவிழ்த்துக் கொண்டு எங்கேயாவது போயிருக்குமோ?'' ஆர்த்தி பயந்ததைக் கேட்டு எல்லோரும் நாயைத் தேடத் தொடங்கினார்கள்.

ஹேமந்த்திற்கு ஆர்த்தியின் பீதி நிறைந்த பயந்த



முகத்தைப் பார்த்ததுமே அடக்கமாட்டாத சந்தோஷம் ஏற்பட்டது.

''சின்னம்மா! ஐயய்யோ! இது சங்கிலியை அவிழ்த்துக் கிட்டு ஓடிப் போயிருக்குங்க! ரோடில் போய ஜிப் மோதிட்டதுங்க!'' டிரைவர் ஜூலியை இரண்டு கைகளாலும் தூக்கிக்கொண்டு வந்தான்.

''நன்றாய் அடிப்பட்டு விட்டதா?'' ஆர்த்தி ஓடி வந்தாள்.

''நீங்களே பாருங்க.'' என்றான் பயந்து, அவன் கண்களில் நீர் கசிந்தது.

ஆர்த்தி அதைத் தொட்டுப் பார்த்தாள். அசையாமல் கிடந்த அதைப் பார்த்ததுமே ஆர்த்தியின் கண்கள் பயத்தால் விரிந்தன.

''எங்கே, பார்ப்போம்?'' விஜயராகவனும் சுமித்ராவும்கூட கிட்டே வந்தார்கள்.

''நான் பார்த்துட்டே இருந்தேங்க. அந்த பக்கமாய் எங்கேயிருந்தோ ஓடி வந்து கொண்டிருந்தது. நான் ஜூலின்னு கத்திட்டே இருந்தேன். அதற்குள் ஜீப் வந்துடுத்து. நான் பார்த்துட்டே இருந்த போதே அதில் மோதிக் கிட்டு போய் அப்பால விழுந்துடுச்சுங்க.''

''ஐயோ! செத்துடுத்து போலிருக்கே'' என்றாள் சமையல்காரி.

விஜயராகவன் அதைத்தொட்டுப் பார்த்துவிட்டு 'ஆம்' என்று தலையாட்டினான்.

சுமித்ரா மகள் தோளில் கை வைத்தாள்...

''மம்மீ!'' ஆர்த்தி தாயின் தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு ஓவென்று கதறினாள் அந்த

நேரத்தில் அங்கிருந்த எல்லோர் கண்களுமே கலங்கி விட்டன.

ஹேமந்த் ஒருத்தன் மட்டுமே சலனமில்லாமல் அப்படியே சிலையாய் நின்றுவிட்டான். அவன் கண்களில் நீர் இல்லை! அதைவிட அதிகமான வருத்தம் ஏதோ தெரிந்தது. எல்லோரையும் போல ஆர்த்திக்கு தேறுதல் சொல்ல அவன் வாய் புரளவில்லை. ஊமையாய் பார்த்துக் கொண்டே நின்றுவிட்டான்.

## 12

சுமார் ஒரு மாத காலம் கழிந்துவிட்ட து. ஆர்த்தி மட்டும் இன்னும் ஜூலியைப் பற்றி மறக்கவே இல்லை, ஒவ்வொரு நிமிஷமும் தன் ஆட்டத்தாலும் கொட்டத்தாலும் எல்லோரையும் கவர்ந்திருந்த ஒரு சிறு குழந்தை இறந்து விட்டாற்போலவே அந்த வீட்டில் நிசப்தமும் வருத்தமும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. மகளின் மன வருத்தத்தைக் காணச் சகிக்காத விஜயராகவன் இன்னொரு நாய்க்குட்டியை வாங்கி வருவதற்கு முயற்சி பண்ணினான். ஆனால் ஜூலியைப் போலவே இருந்த மற்றொரு நாய்க்குட்டி கிடைக்கவில்லை.

ஆர்த்திக்கு லீவு நாட்கள் வந்து விட்டால் போதும். ஜூலியுடன் சேர்ந்து விளையாடிக் கொட்டமடிப்பாள். இப்பொழுது ஏதாவது புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்திருக்கத் தொடங்கினாள். ஜூலி இல்லாததால் இனி அதன் நாற்காலி தேவையில்லை என்றெண்ணி சுமித்ரா அதைத் தூக்கி ஸ்டோர் ரூமில் போட்டு விட்டாள்.



ஏதோ வேலையாய் அவ்விடத்திற்கு வந்த ஆர்த்தி அங்கே ஜூலியின் சிம்மாசனம் இல்லாததைப் பார்த்து விட்டு—''மம்மீ! மம்மீ!'' என்று கத்தினாள்.

''இங்கேயிருந்த நாற்காலி என்னவாச்சு மம்மீ?''

''நான்தான் அப்புறப்படுத்திட்டேம்மா!''

''எதுக்கு?''

''அது எதிரே இருந்தால் நீ இன்னும் வருத்தப்படுகிறாய்னு.''

''அது இல்லாவிட்டால் இன்னும் அதிகமாய் வருத்தப் படுவேன், அதைக் கொண்டு வரச் சொல்லு.''

வேலைக்காரன் ஓடிப்போய் ஸ்டோர் ரூமில் போட்டிருந்த நாற்காலியை எடுத்து வந்து அவ்விடத்தில் போட்டான்.

அதற்குப் பிறகு அதை யாருக்கும் தொடத் துணிச்சல் இல்லை. அதன் சிறிய நாற்காலியும், பால்குடிக்கும் கிண்ணமும், விளையாடும் பந்தும் அவ்விடத்திலேயே இருந்தன.

தினமும் காலை வேளையில் எல்லோரும் சேர்ந்து காப்பி குடித்துக் கொண்டிருக்கும் போது, ஆர்த்தி நேற்றிரவு கனவில் ஜூலி வந்து தன்னோடு எப்படி விளையாடிற்று என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது விஜயராகவனும் சுமித்ராவும் 'உம்' கொட்டிக் கொண்டே கவனமாய் கேட்டுக் கொண்டிருப்பார்கள். ஜூலியைப் பற்றிய சங்கதிகளைக் கேட்கப் பிடிக்காமல் ஹேமந்த் மளமளவென்று இரண்டே விழுங்கில் காப்பியைக் குடித்து விட்டு அங்கிருந்து எழுந்து போய் விடுவான்.

ஆர்த்தியை சிநேகிதிகள் வீட்டிற்குப் போய்விட்டு வரச் சொல்லி சுமித்ரா வற்புறுத்துவாள். கொஞ்ச

நேரம் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தாலாவது மெதுவாய் நாய்க்குட்டியைப் பற்றி மறந்து போவாள் என்றுதான்.

ஒரு முறை சுமித்ராவின் பலவந்தத்தின் பேரில் போனாள்.

விஜயராகவன் வேலையாய் எங்கேயோ போயிருந்தான். மாலையில் டிரைவர் வரவில்லை. அன்று லீவு நாளாதலால் ஹேமந்த் வீட்டில் தான் இருந்தான்.

சுமித்ரா ஹேமந்த்திடம் ஆர்த்தியை சிநேகிதியின் வீட்டிலிருந்து அழைத்து வரும்படி உத்தரவிட்டாள்.

ஹேமந்த் காரை எடுத்துக் கொண்டு போனான். வெளியே 'பாம்' 'பாம்' என்ற ஹாரன் சப்தத்தைக் கேட்டதுமே ஜெயந்தியும் ஆர்த்தியும் ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தார்கள்.

பத்து நிமிஷங்கழித்து ஆர்த்தியும் ஜெயந்தியும் வெளியே வந்தார்கள். "வரேன் ஜெயந்தி" என்று சொல்லிக் கொண்டே ஆர்த்தி அங்கே அரை மணி நேரம் பேசினாள். ஆர்த்தி காருக்கு அருகில் வந்து கொண்டிருந்தபோது, ஹேமந்த் கதவைத் திறந்து பிடித்துக் கொண்டான்.

ஜெயந்தி அவனைப் பார்த்தவள் நொந்து கொண்டே— "ஐயோ நீங்களா! நான் டிரைவர்னு நினைச்சேன். சாரீ! பார்க்கவில்லை! இவ்வளவு நேரமாய் நிற்க வைத்துட்டோம். நீங்க உள்ளே ஏன் வரவேயில்லை?" என்றாள்.

"நான் இப்போது டிரைவர் டியூட்டியில் தானே இருக்கேன்?" முறுவலுடன் சொன்னான் அவன்.

"பலே ஆள்தான் நீங்க! ஒரு நிமிஷம் உள்ளே வாங்க." மரியாதையாய்க் கூப்பிட்டாள் ஜெயந்தி.



"இன்னொரு தடவை கண்டிப்பாய் வரேன்." அவன் சொல்லிக் கொண்டிருந்த போதே அவ்விடத்திற்குக் கண்ணாடி அணிந்த ஒரு கிழவர் வந்தார்.

"யாரு ஜெயந்தி வந்திருக்கிறது?" என்று கேட்டார்.

அவருடைய சோடாபுட்டிக் கண்ணாடியைப் பார்த்தாலே தெரிந்தது அவருக்குப் பார்வை சரியாய் தெரியாது என்று.

"ஆர்த்தி தாத்தா" என்றாள்.

"ஆர்த்தியா? ஏம்மா சௌக்கியமா?" அவர் கிட்டே வந்தார்.

ஆர்த்தி சௌக்கியந்தான் என்று தலையாட்டினாள்.

"உன் நாய்க்குட்டி செத்துடுத்தாமே! பாவம்! எப்பொழுதும் இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு வருவாயே! எனக்குத் தெரியாது, நேற்றுதான் ஊரிலிருந்து வந்தேன். ஜெயந்தி சொன்னாள். ரொம்ப அழகாயிருக்கும். நினைத்துக் கொண்டால் எனக்கே வருத்தமாயிருக்கே."

ஆர்த்தியின் கண்கள் தாழ்ந்தன.

"வரேன் ஜெயந்தி" என்று காரில் ஏறிக்கொண்டாள். ஹேமந்த் காரைக் கிளப்பினான்.

"அந்தப் பையன் யார்?" கேட்டுக் கொண்டிருந்தார் தாத்தா.

"விஜயராகவன் சாரின் சிநேகிதர் மகன்" என்று சொல்லிக் கொண்டிருந்தாள் ஜெயந்தி கார் புறப்பட்டு மறைந்தது.

ஹேமந்த் மௌனமாய் ஓட்டிக் கொண்டிருந்தான். ஆர்த்தி மௌனமாய் உட்கார்ந்தபடி தெருவைப்பார்த்துக்

கொண்டிருந்தாள். மூக்கை உறிஞ்சிய சப்தம் கேட்கவே ஹேமந்த் வ்யூ மிர்ரரை சரி பண்ணினான்.

ஆர்த்தி அழுது கொண்டிருந்தாள். சப்தம் வெளிவரக்கூடாது என்றெண்ணி, கைப்பையிலிருந்து கர்சீஃபை வெளியே எடுத்துக் கண்களைத் துடைத்துக் கொண்டு மூக்கை உறிஞ்சினாள்.

ஹேமந்திற்கு மிக வருத்தமாயிருந்தது. இரக்கமாகவும் இருந்தது. சிநேக மனப்பான்மையோடு ஏதாவது சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் என்ன சொல்வதென்றோ எப்படிச் சொல்வதென்றோ தெரியவில்லை! ஆர்த்தியின் வருத்தத்திற்கும் துக்கத்திற்கும் தான் தான் காரணம் என்ற வேதனை அவனைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது.

ஆர்த்திக்கு ஜூலியின் பால் மிக அன்பு இருந்தது என்று தெரியும். அதை ஒளித்து வைத்து அழவைக்க வேண்டும் என்றெண்ணிக் கொண்டிருந்தானேயன்றி இப்படி வேதனையாய் மாற்றவேண்டும் என்ற எண்ணமே இல்லை.

ஜூலி செத்ததற்குக் காரணம் தான் தான் என்று ஆர்த்திக்குத் தெரிந்தாலும் நன்றாயிருக்கும் என்று தோன்றிற்று! ஜூலி இறந்து போன வருத்தத்தில் ஆர்த்தி அவன் பால் இருந்த விரோதத்தைக் கூட மறந்து போய் விட்டதை கவனித்துக் கொண்டுதான் வருகிறான் அவன்.

## 13

ஆர்த்தி தலைவாரிக் கொண்டிருந்தாள்.

பின்னாலிருந்து ஏதோ லேசான மணியோசை கேட்டது!



பரிச்சயமான அந்த சப்தத்தைக் கேட்டதுமே ஆர்த்தி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அடுத்த நிமிஷம் வியப்பால் அவள் கண்கள் அகன்றன. ஜூலி அங்கே நின்றபடி அவ்வறையை யெல்லாம் விநோதமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தது.

ஆர்த்திக்குத் தான் கனவு காண்கிறோமோ என்று தோன்றிற்று. ஜூலி பிழைத்துத் திரும்பி வந்து விட்டதா? இது எப்படி சாத்தியமாகும்? அந்த நாய்க்குட்டி ஆர்த்தியைப் பார்த்ததுமே 'பௌ பௌ' என்று குரைத்தது.

ஆர்த்தி 'ஜூலி'யென்று கத்திக் கொண்டே ஓடி வந்து அப்படியே அதை அலாக்காய்த் தூக்கிக் கொண்டாள்!

அதன் முகத்தை முத்தங்களால் நிரப்பினாள்!

அலமாரியைத் திறந்து பிஸ்கெட் பாக்கெட்டை எடுத்து ஒரே சமயத்தில் இரண்டை அதன் வாயில் திணித்தாள். அதுவரை 'காச்சு மூச்' சென்று கத்திக் கொண்டிருந்த அது பிஸ்கெட்டைத் தின்று கொண்டே ஆர்த்தியின் முத்தங்களைக் கூட ஏற்றுக் கொள்ளத் தொடங்கிற்று.

"மம்மீ! மம்மீ!" தாயின் அறைக்குள் ஓடிவந்தாள்.

"என்ன ஆர்த்தி?"

ஆர்த்தி பயந்தவாறு கையிலிருந்த நாய்க்குட்டியைக் காட்டினாள்.

"மம்மீ! எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு! நான் தூக்கத்தில் எழுந்து நடக்கவில்லையே? ஜூலி எப்படி வந்தது இங்கே? அதுதான் செத்துடுத்தே! இது குரைத்தது, நான் தூக்கிக் கொண்டு பிஸ்கெட் தந்த போது சாப்பிட்டது.'

கலவரத்தோடும், அபரிமிதமான சந்தோஷத்தோடும் குழப்பத்துடன் வந்தன அவள் வார்த்தைகள்.

சுமித்ரா மகள் கையிலிருந்த நாய்க்குட்டியைத் தடவிக் கொடுத்தாள். ''ஆர்த்தி! இது உன் கனவு ஒன்றுமில்லை. அந்த ஜூலி இறந்து போன விஷயம் நிஜந்தான். இது ஜூலி இல்லை! அசல் அதே போல இருக்கும் இன்னொரு நாய்க்குட்டி!''

''நிஜமாகவா மம்மீ? அசல் அதே போலவே இருக்கும் நாய்க்குட்டியை எப்படிக் கொண்டு வந்தாய்?''

''எப்படிக் கொண்டு வந்தால் உனக்கென்ன? யார் கொண்டு வந்தால் உனக்கென்ன? உனக்குப் பிடித்திருக்கா இல்லையா, அதைச் சொல்லு.''

''பிடிக்கறதாவது! என் ஜூலியே திரும்பி என்னிடம் வந்துட்டாற்போலவேயிருக்கு! ஓ மம்மீ! நீ எவ்வளவு நல்ல அம்மா! ஐ லவ் யூ!'' ஆர்த்தி தாயின் கன்னத்தில் அழுத்தமாய் முத்தமிட்டு விட்டு அந்த நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு பால் கொடுப்பதற்காக சமையலறைக்குள் ஓடினாள்!

ஹேமந்த் சுமித்ராவுக்குப் பக்கத்திலேயே தான் இருந்தான்.

சுமித்ரா அவனைப் பாராட்டுவதுபோல மகிழ்ச்சியோடு பார்த்தாள்.

''ஆர்த்தி இப்பொழுது சந்தோஷத்தோடு சொன்ன புகழ்ச்சியெல்லாம் உன்னைத்தான் சேரும்'' என்றாள்.

சிவந்த முகத்துடன் அங்கிருந்து அகன்றான் ஹேமந்த்.

# 14

ஹேமந்த் இப்பொழுதெல்லாம் தாமதமாய் வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தான். ஆபீசில் வேலை இருப்பதால் தாமதமாகிறது என்று சொன்னான் காரணம் கேட்டபொழுது.

''சுமி! ஹேமந்த் ஆபீசில் இருப்பதில்லை. ஐந்து மணி ஆன பிறகு வேறெங்கேயோ போய்க் கொண்டிருக்கிறான்.'' துப்புத் துலக்கி விட்டு விஜயராகவன் மனைவியிடம் சொன்னான்.

''வேறெங்கே போறான்?'' சுமித்ரா கலக்கத்தோடு கேட்டாள்.

''என்னவோ! இந்த காலத்தில் பசங்களைக் கண்ணில் விளக்கெண்ணையை விட்டுக் கொண்டு கவனித்து வரணும்! கொஞ்சம் அஜாக்கிரதையாய் இருந்துட்டோமோ பாதரசம் நழுவினாற்போல எந்த கோணல் வழியிலாவது போய் விடுவார்கள். நீ வாயைக் கிளறிப் பார், ஏதாவது சொல்கிறானோன்னு பார்ப்போம்'' என்றான் விஜயராகவன்.

மறுநாள் சுமித்ரா தானே காப்பியை எடுத்துக் கொண்டு அவன் அறைக்கு வந்தாள். ஹேமந்த் இன்னும் எழுந்திருக்கவில்லை. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். அவன் முகம் குழி விழுந்து சோர்ந்து போய் தென்பட்டது. சுமித்ரா அவன் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள். உடம்பு சுடவில்லை. ஜுரம் போன்றது எதுவுமில்லை. சுமித்ரா கையை எடுக்காமலேயே ''ஹேமந்த்'' என்று கூப்பிட்டாள்.

அவன் சோம்பலுடன் புரண்டு படுத்தான். பிறகு கண்களைத் திறந்தவன் சுமித்ராவைப் பார்த்துவிட்டுச் சட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

ஜன்னல் வழியாய்த் தெரிந்த வெயிலைப் பார்த்து விட்டு—''ஐயோ ரொம்ப நேரமாயிடுத்து போலிருக்கே ஆன்ட்டீ! எவ்வளவு நேரமாய்க் கூப்பிட்டுக் கொண்டிருக் கிறீர்கள்? சாரீ!'' என்று கட்டிலை விட்டிறங்கி மளமள வென்று பாத்ரூமிற்குள் போனான்.

''நீங்களே கொண்டு வந்துட்டீங்களா காப்பியை?'' அதற்குள் ஜில்லிட்டுப் போயிருந்த காப்பியை இரண்டே விழுங்கில் குடித்து முடித்தான்.

''நேரமாயிடுத்து! நீங்க மட்டும் எழுப்பாமலிருந்தால் இன்னும் எவ்வளவு நேரம் தூங்கியிருப்பேனோ?''

''ஹேமந்த்!'' சுமித்ரா கூப்பிட்டாள்.

ஃபைல்களை அடுக்கி எடுத்துக் கொண்டிருந்த அவன் என்ன என்பதுபோலத் திரும்பிப் பார்த்தான்.

''ராத்திரி அவ்வளவு நேரம் வரைக்கும் எங்கே இருக்கி றாய்? உங்க மாமா ரொம்பக் கவலைப்படுகிறார். எங்கே போகிறாய் சொல்லு!''

''நீங்க கவலைப்படும்படியான இடத்துக்கு நான் போகலை. மாமாவிடம் பயப்பட வேண்டாம்னு சொல்லிடு ஆன்ட்டீ!''

சுமித்ராவுக்கு அவன் வார்த்தைகளில் உண்மைதான் தெரிந்ததே தவிர நடிப்புத் தெரியவில்லை. அவன் ஆபீ சிற்குப் புறப்பட அவசரப்பட்டுக் கொண்டிருந்தான். அவனோடு இன்னும் நிறையப் பேசவேண்டுமென்றிருந்த போதிலும் அது சமயமில்லை என்றெண்ணிக் கொண்டு அங்கிருந்து திரும்பிவிட்டாள் சுமித்ரா.

ஹேமந்த் மளமளவென்று புறப்படத் தயாரானான். டிபன் சாப்பிட்டு விட்டு, பையை எடுத்துக் கொண்டு அவன் வீட்டை விட்டு வெளியே வந்ததுமே, அங்கே புல்



தரையில் ஜுலியுடன் பந்தை வீசியெறிந்தபடி விளை யாடிக் கொண்டிருந்த ஆர்த்தி தென்பட்டாள்.

ஆர்த்தி வீசியெறிந்த பந்திற்காக நாய்க்குட்டி விர் விர்ரென்று ஓடிக் கொண்டிருந்தது

''காட்ச் ஜுலி!'' ஆர்த்தி கத்திக் கொண்டே பந்தை வீசியெறிந்தாள். அது நேராய் ஹேமந்த் காலடியில் வந்து விழுந்தது.

நாய்க்குட்டி ஓடி வந்து கொண்டேயிருந்தது.

ஹேமந்த் பந்தைக் கையில் எடுத்துக் கொண்டான்.

நாய்க்குட்டி அதைக் கவ்விக் கொள்வதற்காகப் பின் னங்கால்களால் எம்பி நின்று முன்னங்கால்களை அவன் தொடை மேல் ஊன்றிக் கொண்டு பந்தைப் பிடிக்கப் போயிற்று.

ஹேமந்த் பந்தைக் கீழே போட்டு விட்டான்.

அவன் பேன்ட்டில் நாய்க்குட்டியின் கால்களிலிருந்த மண்ணெல்லாம் ஒட்டிக் கொண்டு விட்டது.

''சீ! சீ'' என்று துடைத்துக் கொண்டான்.

அவன் நாயைத் தள்ளவோ திட்டவோ செய்வான் என்று எதிர்பார்த்தாள் ஆர்த்தி! ஆனால் ஹேமந்த் எது வும் பண்ணவில்லை. திரும்பி உள்ளே போனான்.

அடுத்த பத்து நிமிஷத்தில் வேறு பேன்ட் மாற்றிக் கொண்டு வந்தான்.

ஆர்த்தி அவன் பொறுமைக்கு ஆச்சரியமடைந்த வளாய் அப்படியே பார்த்துக் கொண்டே நின்று விட் டாள்,

# 15

ஆர்த்தியின் பிறந்த நாள் நெருங்கி வந்தது. அன்றைக்கு ஆர்த்தியின் சிநேகிதிகள் நிறையப் பேர் வருவார்கள். சுமித்ரா செல்லம்மாவைக் கொண்டு லட்டுகள் பண்ணச் செய்தாள்.

அதற்குள் வாசலிலிருந்து—"ஹேமந்த்! ஹேமந்த்! ஓ ஹேமந்த் ஐயா!" என்று யாரோ கட்டைத் தொண்டையில் கூப்பிட்டது கேட்டது.

செல்லம்மாவுடன் சேர்ந்து லட்டுகளைப் பிடித்துக் கொண்டிருந்த சுமித்ரா கைக்காரியத்தைப் போட்டு விட்டு வெளியே வந்தாள்.

வாசலில் கருப்பாய், குள்ளமாய் இருந்த ஒரு ஆள் நின்று கொண்டிருந்தான்.

"யார் வேணும்?" என்று கேட்டாள்.

"ஹேமந்த் ஐயா இல்லீங்களா?"

"இல்லை, ஆபீசுக்குப் போயிட்டான்."

"ஆபீசுக்குப் போனால் வீட்டில் இருக்காங்கிறாங்க, வீட்டுக்கு வந்தால் ஆபீசுக்குப் போயிட்டாங்கிறாங்க? ரொம்ப நல்லாய்த் தான் நாடகம் போடுகிறான்."

சுமித்ராவுக்குக் கோபம் வந்தது.

"அவனோடு என்ன வேலை?"

"பணம் தரணும்மா. அது என் பணங்கூட இல்லைம்மா. வேண்டியவன் ஒருத்தன் கிட்டேயிருந்து வாங்கித் தந்தேனுங்க."

"பணமா? எவ்வளவு?"



"ஆயிரம் ரூபாய்ங்க! இதோ இப்பவே தரேன்னு வாங்கிட்டுப் போனதுதான். அப்புறமாய் கண்ணிலேயே படலைங்க..."

"நீ நாளைக்கு வா. பையனை விசாரித்துத் தெரிஞ்சுக்கறேன்."

"நான் இன்னிக்கு ஊருக்குப் போகணும்மா."

"அப்படின்னால் உட்காரு அவன் வரவரைக்கும்."

சுமித்ரா சொல்லிக் கொண்டிருந்தபோதே ஹேமந்த் வந்து விட்டான்.

கேட்டைத் தாண்டிக் கொண்டிருந்தவன் சுமித்ராவுடன் பேசிக் கொண்டிருந்த ஆளைப்பார்த்ததுமே வெலவெலத்துப் போய் விட்டான்.

"நீ இங்கே எதுக்கு வந்தாய்? நான்தான் நாளைக்கு சாயந்திரம் கொடுத்துடறேன்னு சொன்னேனே."

"போதுமய்யா? இத்துடன் ஆயிரம் சாயந்திரம் ஆயிடுத்து! என் பணத்தை விட்டெறிகிறாயா இல்லையா?"

"ஹேமந்த், இவனுக்குப் பணம் தரணுமா?" சுமித்ரா கேட்டாள்.

"ஆமாம் ஆன்ட்டீ." தாழ்ந்த குரலில் நாணத்துடன் வந்தது பதில்.

சுமித்ரா ஒரு வினாடி ஹேமந்த்தையே பார்த்தாள்.

பிறகு வீட்டிற்குள் போனாள்.

"இந்தா உன் பணம்." என்று அவனிடம் ஆயிரம் ரூபாய்களைக் கொண்டு வந்து தந்தாள். பணத்தை வாங்கிக் கொண்டு அவன் போய் விட்டான்.

"இதென்னடா புத்தி! மாமாதான் எல்லாவற்றையும் பார்த்துக்கறாரே! சம்பளம் கூட வாங்குகிறாய்! திரும்பவும் இந்தக் கடன் ஒண்ணு எதுக்கு? மாமா கேட்டால் என்ன நினைச்சுப்பார்? நள்ளிரவு வரைக்கும் சுற்றிக் கொண்டிருந்து நீ பண்ற காரியம் இதான்னு சொல்லு! நீ கொஞ்சம் மாறிட்டாய்னு சந்தோஷப் பட்டேன். திரும்பவும் என் மனதில் துன்பத்தை நிரப்புகிறாய்." என்று பரமேஸ்வரி மகனைத் திட்டியது சுமித்ராவுக்குக் கேட்டுக் கொண்டேதான் இருந்தது.

"உனக்கொண்ணும் தெரியாது, நீ சும்மாயிரும்மா." என்கிறான் அவன் பதிலுக்கு.

"மூடு வாயை! உனக்கு எல்லாமே உங்கப்பாவின் புத்திதான் வந்து சேர்ந்திருக்கு."

"வந்துக்கட்டும்."

"வெட்கமில்லை அதைச் சொல்ல? அவ்வளவு கடன் இருக்கிறவன் சம்பளத்தைக் கொண்டு வந்து அவள்கையில் ஏன் கொடுத்தாய்? அதைத் தீர்த்திருக்கலாமில்லையா?"

"உனக்கு ஒண்ணும் தெரியாது, நீ சும்மாயிரும்மா." அவன் குரலில் எரிச்சல் அதிகரித்தது.

"ஏற்கனவே ஆர்த்திக்கு உன்னைக் கண்டால் எரிச்சல் இந்த மாதிரி பைத்தியக்கார வேஷங்களைப் போட்டாயானால் இன்னும் இளப்பமாயிடுவாய்."

"ஆனால் ஆகிக் கொள்கிறேன்."

"இந்தத் திமிர்தான் வேண்டாங்கிறேன்."

"அப்பப்பா...எப்பப் பார்த்தாலும் இதே ரோதனைதான் நீ—"



ஹேமந்த் போய் விட்டான்.

சுமித்ராவுக்குப் பரமேஸ்வரியின் தோரணை விநோதமாய்த் தோன்றிற்று, ஹேமந்த் எதற்காகக் கடன் வாங்கினான் என்று தெரிந்து கொள்ளாமல், யாருக்கோ இளப்பமாகி விடுவாய் என்று திட்டுகிறாளே, இதென்னது என்று தோன்றிற்று.

மாலையில் ஹேமந்த் திரும்பி வந்தான். அவன் முகம் வாடியிருந்தது. நேராய் சுமித்ராவிடம் வந்தான். ஜேபியிலிருந்து பணத்தை எடுத்து, சுமித்ரா உட்கார்ந்திருந்த கட்டிலில் வைதது விட்டு "ஆன்ட்டி, இந்தா" என்றான்.

"எங்கிருந்து வாங்கி வந்தாய்?" என்றாள் சுமித்ரா. அவன் பதில் பேசவில்லை.

"திரும்பவும் எங்கேயாவது கடன் வாங்கினாயா?"

"ஊஹூம்."

"பின்னே பணம் ஏது?"

"மோதிரத்தை விற்றுவிட்டேன்! இந்தக் காரியத்தை எப்போதோ பண்ணியிருக்க வேண்டியது நான்."

"ஹேமந்த்! மோதிரத்தை விற்று விட்டாயா? உங்கப்பாவுடையது; உங்கம்மாவுக்குத் தெரிந்தால் எவ்வளவு வருத்தப்படுவாள் தெரியுமா? போய் உடனே இந்தப் பணத்தைத் தந்து அதை வாங்கி கொண்டு வா திருப்பி."

"வேண்டாம் ஆன்ட்டீ! அம்மாவுக்கு நான் சொல்லிக்கறேன். அவன்...அவன் இதுபோல வீட்டுக்கு வந்து குழப்பத்தை உண்டாக்கி விடுவான்னு நினைத்திருக்கவில்லை." மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும் தோரணையில் இருந்தது அவன் பதில்.

''அதுக்கொண்ணும் நான் வருத்தப்படலைப்பா. ஆனால், எங்களுக்குத் தெரியாமல், எங்களிடம் சொல்லக் கூட முடியாத அளவுக்கு உனக்கு ஏற்பட்ட அவ்வளவு பணத்தொல்லை என்னன்னு தான் தெரியலை. எனக்கு மிக வருத்தமாயிருக்கு. நான் உன்னைக் கண்ணில் விளக் கெண்ணை விட்டுக்கொண்டு கவனித்து வந்து கொண் டிருப்பதாய் நினைத்துக் கொண்டிருந்தேன்.''

''ஆன்ட்டீ.''

''ஏதோ பெரிய அவசியந்தான் ஏற்பட்டிருக்கும். இல்லா விட்டால் ஏன் அப்படிப் பண்ணப் போகிறாய்?''

அவன் பதில் பேசவில்லை.

''உன்னைச் சொல்லச் சொல்லி பலவந்தப்படுத்த வில்லை. ஆனால் அது என்னவென்று தெரிந்துக்கா விட் டால் எனக்கு வருத்தமாய் இருக்கும்.''

''உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தியிருந்தால் மன் னித்துக் கொள்ளுங்கள் ஆன்ட்டீ.''—ஹேமந்த் போய் விட்டான்.

அவன் அந்தத் தேவை என்னவென்று சொல்லவே இல்லை.

சுமித்ரா சும்மாயிருந்து விடவில்லை.

ஹேமந்த்தின் ஆபீசில் வேலை பண்ணிக் கொண்டி ருந்த ராமுவைக் கூப்பிட்டு அவன் மூலமாய் எல்லா வற்றையும் தெரிந்து கொண்டாள். ஹேமந்த் ஒருவனி டம் அசல் ஜூலியைப் போலவே இருந்த ஒரு நாய்க் குட்டியைப் பார்த்தான். அதை வாங்கிக் கொள்வதற்கு ராமு தரகனாய் பேரம் பேசினான். ஐநூறு ரூபாய்க்கு பேரம் குதிர்ந்தது. ராமு மூலமாகவே வேறொரு இடத் திலிருந்து வாரத்திற்கு ஐம்பது ரூபாய் வட்டி வீதம் கடன் வாங்கிக் கொண்டு அந்த நாய்க் குட்டியை வாங்கி னான்.



ஹேமந்த் கடனைத் தீர்ப்பதற்காக ஆபீசு விட்ட பிறகு ஒரு கடையில் கணக்கு எழுதும் வேலையில் அமர்ந் தான். கொஞ்சங் கொஞ்சமாய் வட்டியை மட்டும் தீர்க்க முடிந்தது அசலைத் தீர்ப்பதற்குப் பணம் போத வில்லை. வேறெங்கும் கூட கடன் கிடைக்கவில்லை.

சுமித்ரா இந்த விஷயத்தையெல்லாம் கேட்டு வியப் படைந்து விட்டாள்! ஹேமந்த் மேலிருந்த அன்பு இரு மடங்காகி விட்டது!

ஆர்த்தியின் நாய்க்குட்டிக்காக ஹேமந்த் இவ்வளவு சிரமப்பட்டது சந்தோஷத்தைத் தந்தது.

இவ்வளவு பணம் போட்டு வாங்கியதாய் தெரிந்தால் தான் வேண்டாம் என்று சொல்லி விடுவோம் என்று தான் போலும் வெறுமனே கிடைத்தது என்று சொல்லி யிருக்கிறான்! அவள் திகைத்துப் போனாள்.

# 16

ரிஸல்டுகள் வெளிவந்தன!

எல்லோரும் எதிர்பார்த்தாற்போலவே தான் ஆர்த்தி முதல் வகுப்பில் பாஸாகியிருந்தாள்.

அன்று முழுவதும் போன் கணகணத்துக் கொண்டே யிருந்தது. நேரிலும் வந்தார்கள் பலர்.

வீடு முழுவதும் சந்தடியாய் இருந்தது.

ஆர்த்தியின் பிறந்த நாளும் சேர்ந்து வந்ததால் அதை தடபுடலாய் கொண்டாடத் தொடங்கினார்கள்.

கோபாலசுவாமி கூட வந்தார்.

ஹேமந்த் கண்ணில் படாததைப் பார்த்துவிட்டு "அந்தக் கோழிக் குஞ்சுப் பயல் எங்கே?" என்று கேட்டார்.

புதுப்புடைவை கட்டிக் கொண்டு, நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு, சிரித்துக் கும்மாளமடித்துக் கொண்டு வளைய வந்து கொண்டிருந்த மகளைப் பார்த்த சுமித்ராவுக்குச் சந்தோஷமாகவும் பெருமையாகவும் இருந்தது.

வினாடி நேரம் ஆர்த்தியின் கையிலிருந்த நாய்க்குட்டி அழகான ஒரு குழந்தையாய்த் தோன்றிற்று.

பரமேஸ்வரி ஒரு பக்கத்தில் தனியாய் நின்று கொண்டிருந்தாள். வந்த விருந்தினரை கவனிக்கும் வேலையில் ஆழ்ந்து போயிருந்த சுமித்ரா தொலைவில் இருந்தாள்.

விஜயராகவன் தனியாய் வருத்தத்துடன் நின்று கொண்டிருந்த பரமேஸ்வரியிடம் வந்தான்.

"அப்படி நாலு பேருக்கு முன்னால் போய் இருக்காமல் இங்கே தனியே ஏன் நிற்கிறாய்?" என்றான் தாழ்ந்த குரலில்.

"தனிமையைத் தவிர வேறென்ன எஞ்சியிருக்கு என் வாழ்க்கையில்!...உண்மையில் எனக்கு ரொம்ப வருத்தமாய் இருக்கு."

"வருத்தமா?எதற்கு?" அவன் வியப்படைந்தவனாய்க் கேட்டான்.

"நீங்கள்...நீங்கள் என்னைப் பைத்தியக்காரி என்று சொன்னாலும் சொல்லிக் கொள்ளுங்கள்! நீங்களும் ஆர்த்தியும் அப்படி நின்று கொண்டிருந்தால்—இந்த வீடு என் வீடே ஆகிவிட்டாற்போலவும், ஆர்த்தி என் மகள் ஆனாற்போலவும்..." பரமேஸ்வரியின் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் வழிந்தது.

BC



அவனுக்குப் புரிந்தது—இரக்கத்தோடு பார்த்தான். "பரமேஸ்வரி! இப்ப மட்டும் என்னவாயிடுத்து? இந்த வீடு உன் வீடில்லையா? ஆர்த்தி உன் மகளாவதற்குப் பதிலாய் உன் மருமகள் ஆவாள். அவ்வளவு தானே வித்தியாசம்."

"ரொம்ப வித்தியாசம் இருக்கு! நீங்கள் என்னவர் ஆகிவிட முடியாதே!"

அவன் பதில் பேச முடியாதனாய், பார்த்தான்.

தொலைவில் சுமித்ரா கோபால சுவாமி ஏதோ சொன்னதைக் கேட்டு 'பக்'கென்று சிரித்துக் கொண்டிருந்தாள்!

அவன் தவறு இழைத்து விட்டவனைப் போல சட்டென்று பரமேஸ்வரியிடமிருந்து அப்பால் வந்து விட்டான்!

கோபாலசுவாமி சொல்லிக் கொண்டிருந்தார்—"என்னம்மா சுமித்ரா! நம்ம கோழிக் குஞ்சை இன்னும் காணோமே!"—

அவர் ஹேமந்த்தை அந்தப் பெயரில் அழைப்பார்.

"ஆபீசிலிருந்து சீக்கிரமாய் வரச்சொல்லியிருந்தேன். ஆனால் வரவில்லையே" என்றாள்.

"ஏதாவது கொஞ்சம் முன்னேற்றம் தெரிகிறதா?"

"ரொம்ப! ஹேமந்த் பழைய ஹேமந்த் இல்லை இப்போது"

"அப்படீன்னால் கொம்பு ஏதாவது முளைச்சிருக்கா?"

'இல்லை தாத்தா! அம்மா அந்தக் கொம்புகளை முறிச்சுட்டாள்."

வந்த விருந்தினர்கள் எல்லோரும் போய்ச் சேர்ந்து விட்டார்கள். வீடு காலியாகி விட்டது. அப்பொழுது தான் வந்தான் ஹேமந்த்.

''என்ன ஹேமந்த்! இப்பத்தானா வருவது? சீக்கிரமாய் உடை மாற்றிக் கொண்டு வா'' என்று உத்தர விட்டாள் சுமித்ரா.

ஹேமந்த் மாடிக்குப் போனான். குளித்து விட்டு உடை மாற்றிக் கொண்டு கீழே இறங்கி வந்தான்.

ஆர்த்தி இடுப்பில் நாய்க் குட்டியைத் தூக்கிக் கொண்டு பிளேட்டில் ஸ்வீட்டுகளை எடுத்துக் கொண்டு மாடிக்கு வந்து கொண்டிருந்தாள்.

அவன் ஆர்த்திக்கு எதிராய் மளமளவென்று இறங்கி வந்து கொண்டிருந்தான்.

ஆர்த்தி நின்றாள்!

அவனும் ஒரு வினாடி தன்னையறியாமல் நின்றான்.

''அம்மா ஸ்வீட் கொடுத்து விட்டு வரச்சொல்லி அனுப்பினாள்.''

''நான்தான் கீழே வந்து கொண்டிருக்கேனே.''

''சரி.''

அவன் போக முயன்றவன் நின்றான்.

''கங்கிராஜுலேஷன்ஸ்'' என்றான்.

''எதுக்கு?''

''பஸ்ட் கிளாஸ் வந்ததற்கு.''

''தாங்க்யூ.'' ஆர்த்தி பிளேட்டிலிருந்த ஸ்வீட்டை எடுத்து அவனிடம் நீட்டினாள்.

''எடுத்துக் கொள்ளுங்கள்.''



அவன் ஆர்த்தி கட்டிக் கொண்டிருந்த புதுப்புடைவையைப் பார்த்தான்.

''இன்றைக்கு உன் பிறந்தநாள் போலிருக்கு. சாரீ! எந்த பிரசென்டேஷனும் பண்ண முடியாமல் போயிடுத்து என்னால்.''

''பிரசென்டேஷன் தந்தால்தான் ஸ்வீட் எடுத்துக் கணுமா என்ன? ஆனாலும், அதான் எல்லோருக்கும் முன்பாகவே நீங்கள் எனக்குப் பிரசென்டேஷன் தந்துட்டீங்களே.''

''நானா?''

''இந்த ஜூலி நீங்க தந்ததுதானே? இதை வாங்கறத்துக்காக நீங்க எவ்வளவு கஷ்டப்பட்டீங்கன்னு ராமு அம்மாவிடம் சொல்லிக் கொண்டிருந்த போது கேட்டேன்! தாங்க்யூ ஹேமந்த்! எனக்காக இவ்வளவு கஷ்டப்படுவீங்கன்னு நினைக்கவே இல்லை.''

அவன் பார்வை தாழ்ந்தது.

''ஸ்வீட் எடுத்துக் கொள்ளுங்கள்.''

அவன் கையை நீட்டினான்.

''வாயைத் திறங்கள்.''

அவன் வாயைத் திறந்தான். ஆர்த்தி அவன் வாயில் ஸ்வீட்டை வைத்தாள்.

''ஜூலி! ஹேமந்த்துக்கு குட்நைட் சொல்லு.''

ஜூலி காலைத் தூக்கி ஆட்டிற்று.

''குட்!'' ஆர்த்தி நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு மேலே போய் விட்டாள்.

ஸ்வீட்டைத் தின்று கொண்டிருந்த ஹேமந்த் யாரோ துரத்திக் கொண்டு வந்தாற் போன்ற வேகத்துடன் கீழே இறங்கி வந்தான். அவனுக்கு திடீரென்று சந்தோஷத்தால் திணறினாற் போலிருந்தது.

# 17

''இந்தக் கல்யாணத்துக்குப் போகணும்னே இல்லை எனக்கு. ஆனால் போகாமல் போனால் சித்தி வருத்தப் படுவாளோ என்றுதான் கவலையாய் இருக்கு'' என்றாள் சுமித்ரா.

''நான்தான் போயிட்டுவான்னு சொல்றேனே! ஆர்த்தியை அழைத்துக் கொண்டு நீ போயிட்டு வா'' என்றான் விஜயராகவன்.

''எங்கே போறது மம்மீ?'' வந்து கொண்டே கேட்டாள் ஆர்த்தி.

''மதுரைக்கு. ஜமுனா கல்யாணத்துக்கு.''

''நான் வரேன் மம்மீ. மதுரையை நான் பார்த்ததேயில்லை. எனக்கும் லீவுதானே! காலேஜ் திறந்துட்டால் அப்புறம் என்னால் முடியவே முடியாது''

விஜயராகவன் மனைவியைப் பார்த்தான்.

''ஆர்த்தி கூட ஆசைப்படுகிறாள். என் பேச்சைக் கேளு. போயிட்டு வா.''

''நீங்க இல்லாமல் எப்படி...?''

''என்னைப் பற்றி உனக்குத் தெரியாதா என்ன? கோர்ட்டு லீவாய் இருந்தாலும் சரி, ஒரு நிமிஷம் கூட ஓய்விருக்காது. நான் வராவிட்டாலும் குறைந்த பட்சம் நீயாவது போனால் உங்க சித்திக்கு திருப்தி.''

ஆர்த்தி தாயின் கழுத்தைச் சுற்றிக் கரங்களைப் போட்டாள். ''ஓ கே. டாடி. கல்யாணத்துக்கு நாங்க போயிட்டு வரோம்! எங்க பிரயாணம் ஷ்யூர்!'' என்றாள் உற்சாகமாய்.

சுமித்ரா பிரயாணத்திற்கு சித்தமானாள்.



அன்றிரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஹேமந்த் சுமித்ரா ஊருக்குப் போகப் போவதைக் கேட்டுவிட்டு ''அம்மோவ்! ஒரு வாரமா ஆன்ட்டீ? நீங்க இல்லாமல் வீட்டில் போரடிக்கும்'' என்றான்.

''ஹேமந்த்! நீயும் எங்களோடு வரக்கூடாதா?''

''நானா?''

''ஆமாம். ஆர்த்தி கூட வருகிறாள் இருவருக்கும் பொழுது போக்காய் இருக்கும். எல்லா இடங்களையும் பார்த்துட்டு வரலாம்.''

''ஆனால்...ஒரு வாரம் லீவுன்னால்...''

''அதெல்லாம் உங்க மாமா பேசிப்பார். உனக்கு வரப் பிடித்திருக்கா இல்லையா, சொல்லு.''

''பிடித்துத்தான் இருக்கு ஆன்ட்டீ! அந்தப் பக்கமெல்லாம் நான் பார்த்ததேயில்லை. அங்கே என் சிநேகிதன் கூட ஒருத்தன் இருக்கான்.'

''சரி, நீ ஒன்றும் பேசாதே. உங்க மாமாவிடம் நான் சொல்றேன்'' என்றாள்.

விஜயராகவன் அதைக் கேட்டு விட்டுச் சிரித்துக் கொண்டே.

''சரி. பரமேஸ்வரியையும் சமையல்காரியையும் கூட உன்னோடு அழைத்துக் கொண்டு போயிடு. நான் ஏதாவது ஓட்டலில் சாப்பிட்டுக் கொள்கிறேன்'' என்றான்.

''பலே ஆள்தான்! உங்க சாப்பாட்டுக்குக் கஷ்டத்தை வரவழைப்பேனா? நீங்க எந்த வேளையில் வீட்டில் சாப்பிடலைன்னு சமையல்காரி ஞாபகம் வைத்துக் கொண்டிருந்து என்னிடம் சொல்லி விடுவாள், ஜாக்கிரதை! நான் ஊரில் இல்லைங்கிற காரணத்தால் வீட்டை மறந்து போனால் சும்மாயிருந்துட மாட்டேன்!''

''அப்பப்பா! என்வாழ்க்கைக்கு நீ ட்ராஃபிக் போலீஸ் ஆகிவிட்டாய்! பிரெண்டுகள், கிளப்புகள் என்றதுமே

ஸ்டாப் போர்டைக் காட்டி விடுவாய் அல்லவா! மொதல்ல என்னைப் போன்ற நல்ல கணவன் ஒருத்தன் எங்கே இருப்பான் சொல்லு?''

சுமித்ராவின் கண்கள் கசிந்தன. கிட்டே வந்து அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு அவன் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

''நிஜந்தான்! உங்களை அடைந்த நான் மிக அதிர்ஷ்டசாலி! உங்களைப் போன்ற கணவர் யாருக்குமே கிடைக்கமாட்டார்.''

''மம்மீ.'' ஆர்த்தி பரபரப்புடன் வந்தாள். சுமித்ரா மகளைக் கண்டதுமே கணவரிடமிருந்து விலகி உட்கார்ந்துக் கொண்டாள்.

''என் புடைவைகளில் எதை எதை எடுத்துப் போகலாம் மம்மீ?''

''அப்பப்பா? நாம்ப இருக்கப் போறது ஒரு வாரம்; ஒரு மாதத்துக்கு வேண்டிய புடைவைகளையா எடுத்துக் கொண்டு போவார்கள்?''

''போ மம்மீ! நீயே சொல்லு டாடீ! எப்பொழுது எந்தப் புடைவையைக் கட்டிக்கணும்னு தோணுமோ எனக்கு இப்பத்திலிருந்தே என்ன தெரியுமாம்? மனம் குழப்பமாய், கவலையாய் இருந்தால் வெள்ளை நிறத்தில் புடைவைகளையும், ஆர்வமாய் இருந்தால் அடர்ந்த நிறத்தில் ஃபாரின் நைலக்ஸ் புடைவைகளையும், கம்பீரமாய் இருந்தால் காஞ்சிப் பட்டுப் புடைவைகளையும், உற்சாகமாய் இருந்தால் ஜரிகைப் புடைவைகளையும் கட்டிப்பேன்.''

''நிஜந்தான் ஆர்த்தி! உங்கம்மா சுத்த ஜடம்! அந்த மாதிரி மனசுக்கு ஏற்றாற்போல, புடைவைகளை ஒரு நாளும் கட்டிககவே மாட்டாள்.''



''உம்! அப்பாவும் பெண்ணும் எப்போதுமே ஒரு பக்கந்தானே? இது ஒன்றும் புதுசில்லையே?''

சுமித்ரா முகத்தை முறுக்கிக் கொண்டாள்.

ஆர்த்தி பக்கென்று சிரித்து விட்டாள்

''ஹேமந்த் பாஸோடு பேசினேன். அவர் ஒரு வாரமென்ன, பத்துநாள் வேணுமானாலும் லீவு எடுத்துக்கச் சொல்லிட்டார்.''

''ஹேமந்த் கூட வரானா?'' ஆர்த்தி ஆச்சரியமடைந்தாள்.

''உன் ஜூலியை உன்னோடு அழைத்துக் கொண்டு போகவில்லையா உனக்குப் பொழுது போவதற்கு?''

''போ டாடீ!'' என்று ஆர்த்தி அங்கிருந்து போய் விட்டாள்.

''ஆர்த்தியின் கல்யாணத்தை,சீக்கிரமாய்ப் பண்ணிடலாம்.'' என்றாள் சுமித்ரா.

''அவ்வளவு அவசரப்பட்டால் எப்படி? கொஞ்சம் பொறு. இன்னும் ஒரு வருஷமாவது ஆகட்டும்.''

''எதுக்கு ஒரு வருஷம்? இந்த ஆவணியிலேயே பண்ணிடலாம். நான் ஊரிலிருந்து திரும்பி வந்ததுமே பரமேஸ்வரியோடு பேசலாம்.''

''சரி, உன்னிஷ்டம். தேவியின் உத்தரவை எப்பொழுதுதான் மறுத்திருக்கிறேன்?''

''என்னை தேவி தேவின்னு சொல்லாதீர்கள். தேவிக்குப் பூஜையை முடித்துக் கொண்டதுமே கோவில் கதவைச் சாத்திட்ட பிறகு பூஜாரி தன்னிஷ்டப்படி நடந்துப்பார். நீங்கள் அப்படிப் பண்ணினால் நான் சும்மாயிருக்க மாட்டேன்.''

''ஓ. கே. ஓ. கே.''

''பாருங்கள்! ராத்திரி கதவுகளை சரியாய் தாழ்போட்டிருக்கான்னு நீங்களே சுயமாய்ப் பார்த்து விட்டுப் படுத்துக் கொள்ளுங்கள்.''

''சரி.''

''நாங்க மூவர் இல்லாததால் பாலைக் கொஞ்சம் குறைச்சுட்டேன் ''

''சரி.''

''நீங்க ராத்திரி நேரங்கழித்து வந்தாலும் சரி, சாப்பிட்டு விட்டே படுத்துக் கொள்ளுங்கள்.''

''சரி.''

''என்னை ஊருக்கு அனுப்பி வைக்கும்போது ஸ்டேஷனுக்கு வந்தால் மட்டும் போதாது. நான் திரும்பி வரும் போது கூட எவ்வளவு வேலை இருந்தாலும் நீங்களே வரணும்.''

''வராமல் இருப்பேனா சுமீ?'' அவன் அவளையே பார்த்தான்.

''என்ன பார்க்கிறீர்கள்?''

''உன்னைப் போகச் சொல்லிட்டேனே தவிர, என்னால் மட்டும் உன்னை விட்டுட்டு ஒரு வாரம் இருந்துட முடியுமா? இருக்க முடியாதுன்னு தோன்றினால் பிளேனில் ஏறி, பறந்து வந்து சேர்ந்து விடுவேன்.''

''அப்படியே பண்ணுங்க'' என்றாள் சுமித்ரா சந்தோஷமாய்.

## 18

மதுரையில்—

சுமித்ரா சொந்தக்காரர்களின் கும்பலுக்கு நடுவே உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.



எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு சந்தித்துக் கொண்ட பெண்கள் எல்லோரும் ஓரிடத்தில் கூடி, குடும்பச் சங்கதிகளைப் பேசித் தீர்த்துக் கொண்டார்கள்.

ஆர்த்தி அவ்விடத்திற்கு வந்து தாய்க்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டாள்.

''உங்களவருக்கு மாதம் எவ்வளவு வரும்படி வரும் சுமித்ரா?''

''கச்சிதமாய் இவ்வளவுன்னு சொல்ல முடியாது அத்தை! ஒரு மாதம் வந்தால் இன்னொரு மாதம் வராது.''

''கழுத்தில் இருக்கிற நெக்லெஸ் மட்டுந்தானா? இன்னும் ஏதாவது நகைகள் பண்ணிக் கொண்டிருக்காயா?''

இந்த கேள்விகளையும் பதில்களையும் கேட்டு கேட்டு ஆர்த்திக்கு சலிப்பாயிருந்தது. இவர்களுக்கு இதே நினைப்புதான் போலிருக்கிறது.

ஆர்த்தி தாயின் முழங்கையில் கிள்ளினாள். சுமித்ரா பேச்சு சுவாரஸ்யத்தில் அதை அவ்வளவாய்ப் பொருட்படுத்தவில்லை. ஆர்த்திக்குக் கோபம் வந்தது. இரண்டாம் முறை இன்னும் கொஞ்சம் அழுத்திக் கிள்ளினாள்.

சுமித்ரா எறும்பு கடித்தாற்போல அவ்விடத்தைக் கையால் தேய்த்து விட்டுத் திரும்பவும் வம்பில் ஆழ்ந்து விட்டாள்.

''அம்மா.'' தோளைப் பிடித்து அழுத்தமாய் உலுக்கினாள்.

''என்ன?''

''எனக்குப் பொழுதே போகமாட்டேங்கிறது. போரடிக்கிறது. கல்யாணந்தான் ஆயிடுத்தே! ராத்திரியே போய் விடலாம்.''

அதைக் கேட்டதும் அத்தை குறுக்கிட்டாள். ''இதப் பாரு பொண்ணு! அதெல்லாம் நடக்காது. எவ்வளவோ வருஷங்களுக்கப் புறமாய் நாங்கள் சந்தித்துக் கொண்டிருக்கோம். நாங்க நாலு நாள் சேர்ந்து இருக்கணும். உனக்கு அவ்வளவு போரடித்தால் நீ ஊருக்குப் போய்க் கொள். எங்க சுமித்ராவை நாங்க அனுப்ப முடியாது.''

ஆர்த்தி அதைப் பொருட்படுத்தாமல் தாயின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டேயிருந்தாள்.

''இதை யாரோடாவது ஊரைச் சுற்றிக் காட்ட அனுப்பி வைக்கக்கூடாதா சுமித்ரா!'' என்றாள் இன்னொருத்தி.

சுமித்ரா ஹேமந்த்தைக் கெஞ்சினாள். ''ஆர்த்திக்குப் பொழுதே போகலைன்னு என் உயிரை எடுக்கிறாள். கொஞ்சம் நாலு இடங்களுக்கு அழைத்துக் கொண்டு போ, உனக்குக் கோடிப் புண்ணியம்.''

''சரி ஆன்ட்டீ.''

''ஆர்த்தி! போ! ஹேமந்த் சிநேகிதன் தான் மோட்டார் சைக்கிள் கொண்டு வந்திருக்கானே!

''கொஞ்சநேரம் ஊரைச் சுற்றிப் பார்த்துட்டு வாருங்கள்'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள் சுமித்ரா.

ஆர்த்தி யோசித்தாள். அந்த வீட்டில் உட்கார்ந்து கொண்டிருப்பதை விட, கொஞ்சம் வெளியே போய் விட்டு வந்தால் நன்றாய்த்தான் இருக்கும் என்றெண்ணினாள்.

செருப்பை மாட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டாள்.



''மோட்டார் சைக்கிளில் உட்காரத் தெரியுமா?'' கேட்டான் ஹேமந்த்.

''உட்கார்ந்ததே இல்லை, இதுதான் முதல் 'தடவை'' என்றாள் ஆர்த்தி.

அவன் எப்படி உட்கார வேண்டும் என்றும், புடைவைக் கொசுவங்களை எப்படிப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னான்.

அவன் ஏறி உட்கார்ந்ததும் அவள் பின்னால் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

அவன் ஸ்டார்ட் பண்ணினான். அந்தக் குலுங்கலுக்கு ஆர்த்தி சுபால் என்று அவன் தோளை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டாள். ஹேமந்த்திற்கு மோட்டார் சைக்கிள் ஓட்ட நன்றாய் வரும் போலிருந்தது. மோட்டார் சைக்கிளை ஓட்டிக் கொண்டே அவன் கடைத் தெருவைப் பற்றிச் சொல்லத் தொடங்கினான்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றாள்.

''இந்த மூன்று நாளும் என் நண்பனோடு சேர்ந்து நான் பண்ணிய காரியம் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்தது தானே!'' என்றான்.

தெருவில் ஒரு பள்ளம் குறுக்கிட்டது.

அதில் தவழ்ந்து குலுங்கிக் கொண்டே பறந்தது மோட்டார் சைக்கிள்.

ஆர்த்தி கீழே விழுந்து விட்டோம் என்றே நினைத்துக் கொண்டு அவன் தோளை இன்னும் அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டாள்.

ஹேமந்த் ஆர்த்தியின் கையைத் தன் கன்னத்தால் ஒற்றி தைரியமளித்தான்.

ஆர்த்தி ஒரு கையை அவன் தோளைச் சுற்றியும், இன்னொரு கையை அவன் இடுப்பைச் சுற்றியும் போட்டுக் கொண்டு ஜாக்கிரதையாய் உட்கார்ந்து கொண்டாள்.

மோட்டார் சைக்கிளின் வேகம் இன்னும் அதிகரித்தது—

ஆர்த்திக்கு மேகங்களுக்கிடையே மிதந்து போய்க் கொண்டிருந்தாற் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

பிற்பகல் சாப்பாட்டிற்கு இருவரும் வீட்டிற்கு வரவில்லை. ஓட்டலில் சாப்பிட்டார்கள். லைப்ரரியைப் பார்த்தார்கள். திருமலை நாயக்கன் மகாலைப் பார்த்தார்கள். மாலையில் மீனாட்சி கோவிலுக்குப் போனார்கள்.

''இனி வீட்டிற்குப் போவோமா?'' இருள் கவ்விக் கொண்டு வந்ததைப் பார்த்துக் கேட்டான் ஹேமந்த்.

''ஊஹூம். வீட்டிற்குப் போனாலே போரடிக்கும். சினிமாவுக்குப் போவோம்''

ஹேமந்த் மோட்டார் சைக்கிளை சினிமா தியேட்டருக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்தினான்.

அன்றிரவு வீடு திரும்பியதுமே ஆர்த்திக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றத் தொடங்கி விட்டது.

அன்றிரவு ஆர்த்திக்குக் கனவு வந்தது. அவளும் ஹேமந்தும் குதிரையின் மேல் ஏறி மேகங்களுக்கிடையே பறந்து கொண்டிருக்கிறார்கள். மிகச் சந்தோஷமாய் இருந்தது! ஹேமந்த் அவளைச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தான். அதற்குள் ஒரு மேகம் அவர்களுக்கிடையே வரவே, திடீரென்று குதிரையின் கால் முறிந்து விடுகிறது. அவளும் ஹேமந்த்தும் மேகங்களுக்கிடையேயிருந்து கீழே விழுந்து விட்டார்கள். ஹேமந்த் ஆர்த்தியின் கையைப் பிடித்துத் தூக்கி நிறுத்துகிறான். ''அடிபட்டு விட்டதா ஆர்த்தி?''—மிகக் குழைவாய் கேட்கிறான் அவள் அழுகிறாள். விழிப்பு வந்ததும் ஆர்த்தி படுக்கையில் வெகு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.



ஆர்த்தியை ஹேமந்த்திடம் ஒப்படைத்த பிறகு சுமித்ராவுக்குத் தொணதொணப்பு இல்லாமல் நிம்மதியாய் இருந்தது.

ஆர்த்தியும் ஹேமந்த்தும் ஒரு நாள் அழகர்மலைக்கும் இன்னொரு நாள் பல்கலைக்கழகத்திற்கும் பஸ்ஸில் சுற்றினார்கள்.

திருப்பரங்குன்றத்திற்குப் போய் விட்டு வந்த பிறகு ஆர்த்தி சுமித்ரா வராததற்கு வருத்தப்பட்டாள்.

''எவ்வளவு நன்றாய் இருந்தது தெரியுமா?'' என்று வருணித்துச் சொல்லத் தொடங்கினாள்.

ஒரு வாரம் பத்து நாட்கள் கண்மூடித் திறப்பதற்குள் ஓடி மறைந்து விட்டது.

சுமித்ரா சென்னைக்குத் திரும்ப ஆயத்தமானாள்.

''ஹேமந்த்! மாமாவுக்கு டெலிகிராம் கொடு. ஸ்டேஷனுக்கு வருவார்'' என்றாள்.

ஹேமந்த் டெலிகிராம் கொடுத்தான்.

போகும்போது இரு வேறு துருவங்களைப் போல பாராமுகமாய் சுமித்ராவுக்கு இரண்டு பக்கங்களிலுமாய் உட்கார்ந்து பயணம் பண்ணிய ஆர்த்தியும் ஹேமந்த்தும் திரும்பி வரும்போது சிரித்துக் கொண்டும் துள்ளிக் கொண்டும் பக்கத்துப் பக்கத்தில் உட்கார்ந்து வம்பு பேசிக் கொண்டே வந்தார்கள்.

சுமித்ரா அவ்விருவரையும் பார்த்து மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தாள், இந்தப் பிரயாணத்திற்கு வந்ததால் ஒரு நன்மை ஏற்பட்டது. ஆர்த்திக்கும் ஹேமந்த்திற்குமிடையே இருந்து வந்த பாராமுகமும், தப்பர்த்தமும்

போய் நெருக்கமாகி விட்டார்கள். இந்த விஷயத்தைக் கணவர் கேட்டால் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார் என்பதை அவளால் நன்றாகவே ஊகிக்க முடிந்தது.

## 19

ரயில் ஸ்டேஷனில் வந்து நின்றது.

சுமித்ரா பரபரப்போடு கணவனைத் தேடினாள்.

ஆனால் டிரைவர் தான் தென்பட்டான்

அவளைப் பார்த்ததுமே கிட்டே வந்து வணங்கினான்.

''ஐயா எங்கே?''

''வரலைம்மா. ரொம்ப வேலை இருக்காம்.''

''உம்.''

சுமித்ராவுக்கு ஏமாற்றமாய் இருந்தபோதிலும் கோபம் மட்டும் வரவில்லை.

இந்தப் பத்து நாள் பிரிவில், உறவினர்களுக்கிடையே உட்கார்ந்து கொண்டு, எல்லோரும் விஜயராகவனின் பெயரைப் புகழ்ந்து பாராட்டிய போதும், 'அப்படிப்பட்ட கணவன் கிடைத்ததற்கு நீ எவ்வளவு அதிர்ஷ்டசாலிம்மா!' என்று புகழ்ந்த போதும், சுமித்ராவின் மனம் சந்தோஷத்தால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. கணவர் அன்பின் வடிவமாய்த் தோன்றினார்.

அல்லும் பகலும் அவரைப் பற்றிய பேச்சிலேயே கழித்து வந்த சுமித்ராவின் மனமெல்லாம் கணவர்பால் பக்தியாலும் இருமடங்கு அன்பாலும் பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

பல நாட்களுக்குப் பிறகு கணவர் பால் சுமித்ராவுக்குத் திரும்பவும் தாம்பத்தியக் கவர்ச்சி ஏற்படத் தொடங்கிற்று.



புது மணப் பெண்ணைப் போல கணவரின் நெருக்கத்திற்காக மனம் தவித்துக் கொண்டிருந்தது.

சுமித்ரா வீட்டிற்கு வந்தாள்.

ஆர்த்தி குளித்து விட்டு உறங்கி விட்டாள்!

ஹேமந்த் அவசரம் அவசரமாய் ஆபீசுக்குப் போய் விட்டான்.

சுமித்ரா வந்தபோது விஜயராகவன் கிளையிண்ட்டுடன் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

பத்து மணிக்கு அரக்கப் பரக்க கோர்ட்டுக்குப் புறப்படும்போது மனைவியிடம் வந்தான்.

''நன்றாய் நடந்ததா கல்யாணம்?''

''ஆங்! நீங்க ஏன் வரலைன்னு எல்லோரும் கேட்டார்கள்.''

''பார்த்தாயா? வந்தால் ஒன்றும் இருந்திருக்காதே. வராததால்தான் கேட்டிருக்கிறார்கள்.''

சுமித்ரா கணவரிடம் வந்தாள்.

''இதப்பாரு! அந்த சமையல்காரியின் மகளுக்கு ஜுரம் வந்துடுத்தாம். தஞ்சாவூருக்குப் போய் ஒரு வாரம் ஆகிறது. இன்னும் வரலை. லெட்டர் போடு.''

''ஐயோ! இந்த ஒரு வாரமும் உங்களுக்குக் கஷ்டமாய் இருந்திருக்குமே! ''சுமித்ரா நொந்து கொண்டாள். தான் அங்கே சிறு வயதுத் தோழிகளுடன் க்ஷேமமாய் இருந்தபோது இங்கே கணவர் சாப்பாட்டிற்குத் திண்டாடிக் கொண்டிருந்திருப்பார் போலிருக்கிறது!

விஜயராகவன் கோட்டை மாட்டிக் கொண்டே சொன்னான்.

''எனக்கொண்ணும் கஷ்டமாயில்லை. பரமேஸ்வரிக்கு தான் ரொம்பவும் தொல்லையாயிருந்திருக்கும்.

பாவம், சமையல் வேலையெல்லாம் அவள் மீதே விழுந்து விட்டது.''

''ஐயோ.'' சுமித்ரா இன்னும் நொந்து கொண்டாள்.

விஜயராகவன் கோர்ட்டுக்குப் போய்விட்டான்.

சுமித்ராவுக்கு ஏதோ அதிருப்தியாய் இருந்தது. கணவரிடம் நெருங்க வேண்டும் என்ற ஆவல் தீரவில்லை.

''சீ! இதென்னது! ரொம்பவும் சின்னப் பெண்ணைப் போல நடந்துக் கொள்கிறேனே? அவர் வேலை மும்முரத்தில் இருக்கிறார். நான் வேலை வெட்டி இல்லாமல் வெறுமே உட்கார்ந்திருப்பதால் இப்படிப்பட்ட வெட்கங் கெட்ட யோசனைகள் எல்லாம் வந்து கொண்டிருக்கின்றன.''—என்றெண்ணிக் கொண்டாள்.

பரமேஸ்வரியே அந்த வேளைக்கு சமையல் செய்தாள்.

''உனக்கு ரொம்ப சிரமமாகி விட்டிருக்கும்'' என்றாள் சுமித்ரா.

''பரவாயில்லை. நான் ஒன்றும் வேற்று மனிதர்களுக்குப் பண்ணவில்லையே.'' என்றாள்.

சுமித்ராவின் கண்கள் பரமேஸ்வரி கட்டிக் கொண்டிருந்த புடைவை மேல் நிலைத்தது. அது சுமித்ராவின் புடைவை.

ஒரு வினாடி சுமித்ராவின் மனம் துடித்துடித்து விட்டது.

சட்டென்று சமாளித்துக் கொண்டாள்.

''பாவம்! வண்ணான் துணிகளைக் கொண்டு வரவில்லையோ என்னவோ? என் புடைவையைக் கட்டிக்



கொண்டால் தப்பென்ன இருக்கிறது?''—என்று சமாதானப் படுத்திக் கொண்டாள்.

அன்றிரவு வேலை இருந்ததால் விஜயராகவன் வெகு தாமதமாக வந்தான்.

சுமித்ரா அதற்குள் தூங்கி விட்டாள்.

## 20

''அம்மா சுமித்ரா!'' கோபாலசுவாமி உள்ளே வந்தார்.

''வாங்க பெரியப்பா,'' சுமித்ரா கை வேலையை விட்டு விட்டு வந்து நாற்காலியை இழுத்துப் போட்டாள்.

''நீ ஊரிலேருந்து எப்போ வந்தாய்?'' கேட்டார் வந்து உட்கார்ந்து கொண்டே.

''ஒரு வாரம் ஆச்சு பெரியப்பா.''

''அப்படியா! எனக்குத் தெரியவே தெரியாதும்மா! நான் நீ ஊரில் இல்லாதபோது ரெண்டு தடவை ராகவனுக்காக வந்தேன். ஆனால் பார்க்க முடியலை, ரொம்ப வேலை மும்முரத்தில் இருந்தான் போலிருக்கு.''

சுமித்ரா சிரித்தாள்.

''அவருக்கு என்னோடு பேசக்கூட ஒய்வு இருப்பதில்லை. அவ்வளவு பிஸி ஆயிட்டார். அதோடு கூட அந்த கிளப் ஒன்று.''

''அவ்வளவு சம்பாதித்து என்ன பண்ணப்போறான் அம்மா, இருப்பது ஒரே ஒரு பெண்!''

''நானும் அதையேதான் சொன்னேன் அடுத்த தடவை நீங்க பார்த்தால் கூட இதையே சொல்லுங்க பெரியப்பா! கொஞ்சம் இருங்கள்; உங்களுக்குக் காப்பி கொண்டு வரேன்'' என்று உள்ளே போனாள்.

''எதற்கு அர்ஜென்டாய் வரச்சொல்லி ஆளை அனுப்பினாய்?'' சுமித்ரா கொண்டு வந்து தந்த காப்பியைக் குடித்துக் கொண்டே கேட்டார் அவர்.

''உங்களோடு நிறைய வேலை இருக்கு.''

''என்னம்மா வேலை?''

''நம்ப ஆர்த்திக்கு சம்பந்தம் நிச்சயமாயிடுத்து. லக்னப் பத்திரிக்கை எழுதணும். நீங்க கிட்டேயிருந்து அந்தக்காரியத்தைப் பண்ணித்தரணும்.''

அவர் காப்பி குடிப்பதை மறந்து போய் நிமிர்ந்து பார்த்தார்.

''ஆர்த்திக்கா? கல்யாணமா? இவ்வளவு அர்ஜென்ட்டாய் மணமகன் எங்கேயிருந்து வந்து குதித்தான்?''

''எங்கேயிருந்தும் வந்து குதிக்கலை! நம்ம வீட்டில் இருக்கிற ஆள்தான்! ஹேமந்த்!''

அவர் இன்னும் வியப்படைந்தவராய், பார்த்தார். ''ஹேமந்தா? ஆர்த்திக்கு அவனோடு ஒத்தே வராதே!''

''அது பழைய சங்கதி! இப்ப அந்த சுபாவம் மாறிப் போயிடுத்து. ரெண்டு பேருக்கும் ஒருத்தர் மேல் ஒருத்தருக்கு எங்குமில்லாத அன்பு ஏற்பட்டு விட்டது! நீங்க ஆர்த்தியிடம் ஹேமந்த்தைப் பற்றி ஏதாவது சொல்லிப் பாருங்கள்! அவன் சார்பில் வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசுவாள். உங்கள் வாயைக் கூட அடைத்து விடுவாள்.''

''வேடிக்கையாய் இருக்கே?''



அதற்குள் விஜயராகவனே வந்து விட்டான்

''அதோ, அவரே வந்துட்டார்'' என்றாள் சுமித்ரா.

கோபாலசுவாமி தலை குனிந்தார். ''உம்! இதான் போலிருக்கு விஷயம்! ஹேமந்த் சார்பில் சொத்துக்காக உன் கணவன் ஏன் கேசு போட்டான்னும், அவனை வீட்டோடு ஏன் கொண்டு வந்து வைத்துக் கொண்டான்னும் எனக்கு இப்பத்தான் புரிகிறது! அதெல்லாம் மருமகனாக்கிக்கணும்னு போட்ட பிளான்னு சொல்லு!''

''மருமகனாக்கணும்னு செய்யக்கூடாத எதையும் செய்து விடவில்லை. அந்த நிந்தனையை வேறு என் மேல் போடாதீங்க.'' என்றான் விஜயராகவன் சிரித்துக் கொண்டே.

சுமித்ரா அவனுக்குக் காப்பி கொண்டு வந்து தந்தாள்.

''சுமீ! பரமேஸ்வரி எங்கே?''

''உள்ளே இருக்கிறாள்.''

''என் ஆபீசு அறைக்கு வரச்சொல்லு. நாளைக்குக் கோர்ட்டில் அவள் சாட்சி இருக்கு. அதைப் பற்றிப் பேசணும்.''

''சரி! அவர் வந்திருக்கிறார். அந்த லக்னப் பத்திரிக்கை எழுதுவதைப் பற்றி அவரிடம் பேசுங்கள்.''

''அப்பப்பா! சுமீ! எனக்கு டயம் இல்லை. அதையெல்லாம் நீயே பார்த்துக்கோ. இது யாரோ புது மனுஷர்கள் சம்பந்தமில்லையே. தெரிந்தவர்கள் தானே?''

''இருந்தால் மட்டும்? அதற்கும் ஒரு சம்பிரதாயம், முறை என்று இல்லையா?''

''எனக்கு வேலை இருக்கு! ப்ளீஸ்! நீ அந்த ஏற்பாடுகளையெல்லாம் கவனித்துக் கொள்! என் மூளையில் அந்தக் கேசுகளைப் பற்றிய யோசனைகளே 'பளிச்' 'பளிச்' சென்று மின்னிக் கொண்டிருக்கின்றன. அதோடு போராடவே என் மூளைக்கு சரியாயிருக்கு! இந்த வீட்டுப் பொறுப்பையெல்லாம் கூட என் தலை மீது போடாதே! ஆர்த்தி ஹேமந்தின் கல்யாணத்தை உனக்கு எப்படிப் பிடிக்குமோ அப்படி நடத்திக்கொள்! எல்லாவற்றுக்கும் நான் பச்சைக் கொடி காட்டிவிட்டேன்! உனக்கு லைன் க்ளியர் ஆயிடுத்துன்னு நினைத்துக் கொள்!''

பெரியப்பா இருக்கார், அவர் ஆலோசனையைக் கேட்டுக் கொண்டு நட.

எனக்குக் குடிக்க ஒரு தம்ளர் தண்ணீர் கொடுத்தனுப்பு!

''பரமேஸ்வரியை இங்கே வரச்சொல்லு'' என்று சொல்லிக் கொண்டே போய் விட்டான்.

சுமித்ரா பெருமூச்சு விட்டாள்.

''பார்த்தீங்களா பெரியப்பா! இப்படித்தான் நடந்துப்பார்'' என்று சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

உள்ளே சுமித்ரா— ''பரமேஸ்வரி, அவர் உன்னைக் கூப்பிடுகிறார்'' —என்று சொல்லிக் கொண்டிருந்தது கேட்டது.

ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அவரைத் தாண்டிக் கொண்டு விஜயராகவனின் அறைக்குள் போனாள் பரமேஸ்வரி. சுமித்ரா தண்ணீரைக் கொடுத்து விட்டு வந்தாள்.

''இப்ப இந்தப் பக்கமாய்ப் போனது யார் சுமித்ரா?'' என்று கேட்டார் கோபாலசுவாமி.

''யாராவது? பரமேஸ்வரிதான்.''



''பரமேஸ்வரியா? உங்க வீட்டுக்கு யாரோ சொந்தக்காரர்கள் தான் வந்திருக்கிறார்களோன்னு நினைத்தேன்.''

''ஏன் அப்படி நினைத்தீங்க?''

''பரமேஸ்வரியிடம் ஏதோ மாறுதல் வந்திருக்கு! உங்க வீட்டுக்கு வந்தபோது இருந்ததைவிட இப்போது பூரிப்பாய் இருக்கிறாள்.''

''மனிதர்கள் கவலையில்லாமல் இருந்தால் அந்தக்களை வந்துடும்! ஆர்த்திக்கும் ஹேமந்த்துக்கும் கல்யாணம் பண்ணப்போறோம்னு அவள் ரொம்ப சந்தோஷமாய் இருக்காள்'' என்றாள் சுமித்ரா.

''உன் விஷயத்தைச் சொல்லு சுமித்ரா! ஹேமந்த் உனக்குத் திருப்தியாய் தோன்றுகிறானா?'' என்று கேட்டார் அவர்.

ஹேமந்த்தைப் பற்றிப் பேசத் தொடங்கியதுமே சுமித்ராவின் முகத்தில் திருப்தியும் சந்தோஷமும் தென்பட்டன.

''ஹேமந்த்துக்கு என்ன குறைச்சல்? தங்கமான பையன்! அந்தப் பிடிவாதமும் அலட்சியமும் போய் விட்டன! எவ்வளவு கெட்டிக்காரனாகி விட்டான் தெரியுமா?'' என்றான்.

''உம்! ஆர்த்திக்கும் பிடித்து விட்டது. இனி தடை என்ன? அது சரி, லக்னப் பத்திரிக்கையை எப்பொழுது வைத்துக் கொள்ளலாம்னு உத்தேசம்?''

''அதைக் கேட்கத்தான் உங்களைக் கூப்பிட்டேன். இருங்க பெரியப்பா, பஞ்சாங்கம் கொண்டு வரேன்.''

சுமித்ரா போய், பஞ்சாங்கத்தைக் கொண்டு வந்தாள்.

அவர் அதைப் பார்த்துக் கொண்டே ஒரு வெள்ளைத்

தாளையும் பேனாவையும் கேட்டு வாங்கிக் கொண்டு அதில் ஏதோ கணக்குப் போட்டு லக்னபலத்தைப் பார்க்கத் தொடங்கினார்.

அடுத்த அறையில் விஜயராகவனும் பரமேஸ்வரியும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

இருட்டி விட்டது.

''வியாழக்கிழமை இருபத்திநாலாம் தேதி நன்றாயிருக்கும்மா'' என்று சொல்லிக் கொண்டிருந்தார் கோபாலசுவாமி.

''அப்படீன்னால் அதையே நிச்சயம் பண்ணிடலாம். இருங்கள், லைட்டைப் போடுகிறேன், இருட்டி விட்டது.'' சுமித்ரா போய் விளக்கைப் போட்டாள்.

அடுத்த அறையில் பரமேஸ்வரியும் விஜயராகவனும் இன்னும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் இருட்டிவிட்டதென்றோ, விளக்கைப்போட வேண்டும் என்றோ நினைப்பே இல்லாமல் உட்கார்ந்திருந்தார்கள்.

## 21

ஹேமந்த் அறையில் ஜன்னலுக்கருகே நின்று கொண்டிருந்தான். அவன் கையிலிருந்த கைக்குட்டையைத் திரும்பத் திரும்ப முறுக்கிக் கொண்டும் நீவிவிட்டுக் கொண்டும் இருந்தான்.

அவன் முகத்தில் பற்பல உணர்ச்சிகள் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. அக்கண்களில் கலக்கமும், பயமும்கூட நன்றாய்த் தெரிந்தன.



அறைக்குள் ஜூலி தன் சின்னச் சின்னக் கால்களால் ஓடிவந்து கொண்டிருந்தது.

அது வருகிறதென்றால் பின்னாடியே ஆர்த்தி வருகிறாள் என்று அர்த்தம்! அவன் கலவரம் இன்னும் அதிகமாயிற்று! சட்டென்று ஜூலியை இரு கைகளாலும் அள்ளித் தூக்கிக் கொண்டான்! அதன் தலையைத் தடவிக் கொடுக்கத் தொடங்கினான்.

காலடி சப்தம் கேட்டது அவனால் வெட்கத்தால் நிமிர்ந்து நேராய்ப் பார்க்க முடியவில்லை!

அறைக்குள் ஆர்த்தி வந்து நின்றாள். ரோஜா வண்ணத்தில் ஜரிகை போட்ட புடைவை ஆர்த்தியின் பாதங்களுக்கு மேல் தெரிந்தது.

அவன் பார்வை அங்கிருந்து மேலே எழும்ப மறுத்தது.

''ஏன் கூப்பிட்டீர்கள்?'' ஆர்த்தி கேட்டாள்.

''உட்காரு''. தடுமாற்றமடைந்தான் அவன்.

ஆர்த்தி உட்காரவில்லை.

''ப்ளீஸ், ஒரு நிமிஷம் உட்காரு உன்னை ஒரு சின்னக் கேள்வி கேட்கணும்.''

''கேளுங்கள், என்ன?''

ஜூலி ஆர்த்தியைப் பார்த்துவிட்டு ஹேமந்த்தின் கையிலிருந்து கீழே இறங்கத் திமிறிக் கொண்டிருந்தது.

ஆனால் ஹேமந்த் அதை விடவில்லை. அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டான்.

அவன் தோரணையைப் பார்த்த ஆர்த்தி அவன் ஏதோ சொல்ல விரும்புகிறான் என்றும் ஆனால் அதைச் சொல்ல முடியாமல் தயங்குகிறான் என்றும் புரிந்து கொண்டாள்.

ஜூலி அதற்குள் ஹேமந்த்தைக் கீழே விடாவிட்டால் கடித்து விடுவேன் என்று பயமுறுத்தி, அவன் கையிலிருந்து நழுவி, வந்து ஆர்த்தியின் மேல் தாவிற்று. ஆர்த்தி அதை எடுத்து மார்போடு அழுத்திக் கொண்டாள்.

ஹேமந்த் மேஜைக்குப் பக்கத்தில் வந்து நின்றான்.

''சொல்லுங்கள். அதென்ன? அங்கே அவர்கள் எல்லோரும் இருக்கிறார்கள். ஏதோ அர்ஜென்ட்டாய் பேச வேண்டும் என்றீர்களே, ஏன் தயங்குகிறீர்கள்?'' என்றாள்.

''ஆர்த்தி. அவர்கள் லக்னப் பத்திரிகை எழுது கிறார்கள். உன்னைக் கேட்டார்களா?''

''இல்லையே!'' என்றாள் ஆச்சரியமடைந்தவளாய்...

''கேட்கவில்லை பார்த்தாயா! நான் அப்பொழுதே நினைத்தேன்! உனக்கும் எனக்கும் நடக்கிற இந்தக் கல்யாணம் உனக்கு இஷ்டந்தானா?'' கேட்டபோது அவன் முகம் சிவந்து விட்டது

ஆர்த்தி வியப்போடு பார்த்தாள்.

''உங்களுக்கு? என் விஷயத்தை விடுங்க, உங்களுக்கு இஷ்டந்தானா, அதைச் சொல்லுங்க.'' உலுக்கி எடுத்தாள்,

''என்னை யாருமே கேட்கவேயில்லை. அது எனக்கு ரொம்ப வருந்தமாயிருக்கு, கோபமாகவும் இருக்கு. நாம்ப என்ன சின்னப் பசங்களா? அல்லது பொம்மைக் கல்யாணமா இது?'' என்றான் அவன் ஆவேசமாய்.

''ஒருக்கால் யாராவது கேட்டிருந்தால் நீங்கள் என்ன வென்று பதில் சொல்லியிருப்பீர்கள்?''

''மொதல்ல ஆர்த்தியின் இஷ்டத்தைத் தெரிந்து கொள்ளும்படி சொல்லியிருப்பேன்.''

ஆர்த்தி பக்கென்று சிரித்து விட்டாள்.



''அம்மாவுக்கும் அப்பாவுக்கும் நம்ப மனசு தெரியாதா? அவர்கள் என்னை ஒன்றும் கேட்கவில்லை. அதனால் எனக்கு ஒன்றும் கோபம் வரலையே! உங்களுக்கு ஏன் கோபம் வந்துடுத்தோ, அப்பப்பா!'' கன்னத்தில் விரலை வைத்துக் கொண்டாள் வியப்போடு.

''உன் மனதைத் தெரிந்துக்காமல் இந்தக் காரியத்தைப் பண்ணியிருப்பார்களோன்னுதான் பயந்தேன்! ஆர்த்தி, நீ மனப்பூர்வமாய் ஒப்புக்கிறாயா?''

''என்னைப்பற்றி உங்களுக்குத் தெரியாதா ஹேமந்த்? எனக்குப் பிடிக்காவிட்டால் மனதில் வைத்துக் கொள்ளவே மாட்டேன்! பட்டென்று சொல்லி விடுவேன். எங்கம்மாவிடமும் அப்பாவிடமும் எனக்கு அந்த உரிமை இருக்கு. என் விஷயம் வேறு! நான் என்றால் அவர்களின் பெண். ஆனால் உங்களைக் கேட்காமல் போனது அவர்கள் தப்புத்தான்! நான் இப்போதே போய் அம்மாவிடம் சொல்கிறேன்.'' ஆர்த்தி போகத் திரும்பினாள்.

''நில், நில்!'' அவன் கலக்கத்தோடு ஓடி வந்தான் அவளைப் பின்தொடர்ந்து.

''உன் விஷயத்தைத் தெரிஞ்சுக்கத்தான் நான் கேட்டேன்.''

''என்னைப் பற்றி உங்களுக்கு அந்த சந்தேகம் ஏன் வந்தது?''

''மொதல் மொதல்ல நாள் ரொம்ப மொரடாய் நடந்து வந்தேன். அதை நினைத்துப் பார்த்துக் கொண்டால் இப்பவும் எனக்கு வெட்கமாயிருக்கு! எனக்கு அப்ப ஒன்றுமே தெரியாது ஆர்த்தி! என் பாலிய பருவமெல்லாம் உன்னுடையது போலில்லாமல் முற்றிலும் வித்தியாசமாய் கழிந்தது. காரணம் தெரியாது. ஆனால் எங்கம்மாவும் அப்பாவும் எப்பப் பார்த்தாலும் சண்டை போட்டுக்

கொண்டேயிருப்பார்கள்! சிநேகிதர்களுக்கிடையே நேரத்தை அதிகமாய் செலவழிக்க விரும்புவேன். அவர்கள் முன்னால் ஒன்றும் பின்னால் ஒன்றுமாய்ப் பேசிக் கொள்வதும் பணத்திற்காக அன்பு பாராட்டினாற்போல நடித்து வந்ததும் ஏமாற்றத்தை அளித்தது. எனக்கு மனிதர்கள் மீதே வெறுப்பு ஏற்பட்டுப் போய் விட்டது. யாரைப் பார்த்தாலும் ஏதாவது கோணல் மொழி பேசிப் பழிக்கும் குணம் வந்து விட்டது! இங்கே வந்த பிறகு உங்கம்மா என்னை முற்றிலும் மாற்றி விட்டாள். உண்மையைச் சொல்லணும் என்றால் எனக்கு இப்படிப் பட்ட தாய் தந்தையர் இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்னு தோன்றும்! எனக்கு அவர்கள் மேல் நல்ல மதிப்பும் அன்பும் ஏற்பட்டது. அவர்களுக்கு என் மேல் அன்பு உள்ளதென்றும், அதனால்தான் இந்த திருமணத்தை நிச்சயம் பண்ணியிருக்கிறார்கள் என்றும்கூடத் தெரியும். ஆனால் நீதான்...''

''ஹேமந்த்! என் விஷயத்தில் உங்களுக்குச் சந்தேகம் வேண்டாம். இஷ்டமில்லாத கல்யாணத்தை நான் ஏன் பண்ணிக்கிறேன்? நீங்கள் சொன்னது போல நான் ஒன்றும் சின்னப் பெண் இல்லை! பொம்மைக் கல்யாணமும் இல்லை.''

அதற்குள் கீழேயிருந்து ''ஆர்த்தி'' என்று சுமித்ரா கூப்பிட்டது கேட்டது.

''அதோ அம்மா கூப்பிடுகிறாள். நான் போகிறேன்.''

ஆர்த்தி நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு போகத் திரும்பியவள் நின்று திரும்பவும் கேட்டாள்—'' இன்னும் வேறு ஏதாவது சந்தேகமிருக்கா?''

அவன் இல்லை என்று தலையாட்டினான்.

அவன் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது! ஆர்த்திக்கு அந்த நிமிஷத்தில் அவன் மிகக் கவர்ச்சிகரமாய்த் தோன்றினான்.



அவள் விடுவிடென்று கீழே இறங்கி வந்தாள். அவன் அவ்வாறு துணிச்சலுடன், தயங்காமல் தன் எண்ணத்தை தெரிந்து கொண்டது அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது.

## 22

ஹேமந்த்தின் பங்கு விஷயமாய் சொத்து விஷயத்தில் வழக்குப் போட்ட விஜயராகவன் வெற்றியடைந்தான்! ஹேமந்த்தின் பெயரில் ஊரில் கொஞ்சம் நிலமும், நகரத்தில் ஒரு மெடிக்கல் ஷாப்பும் வந்தன! இச்செய்தி வீட்டார் அனைவருக்கும் சந்தோஷ சமாச்சாரமாய் ஆகி விட்டது. தெரிந்தவர்கள் எல்லோரும் இது ஆர்த்தியின் அதிர்ஷ்டம் என்றார்கள்.

''பார்த்தாயா? அவர்கள் சொத்து அவர்கள் கைக்கு வந்து விட்டது. இனி நீ செலவழித்ததற்கு வட்டியும் முதலுமாய் வசூலித்துக் கொண்டு விடு'' என்றான் விஜயராகவன்.

''என்ன பேச்சு இது! அவர்களுக்குக் கடனுக்காகவா நாம்ப செலவழித்தோம்? ஏதோ சிநேகிதர்களாய் நம்மால் முடிந்ததைப் பண்ணினோமே தவிர'' என்றாள் சுமித்ரா.

''சும்மா சொன்னேன்'' என்றான் அவன்.

''ஆன்ட்டீ! நாளைக்கு எனக்கு லீவு! எல்லோருமாய்ச் சேர்ந்து எங்கேயாவது போகலாம்'' என்றான் ஹேமந்த்.

''மஹாபலிபுரத்துக்குப் போகலாம் மம்மீ'' என்றாள் ஆர்த்தி.

''எனக்கு வேலையிருக்கு ஹேமந்த்! எங்க அண்ணா வீட்டுக்கு டில்லியிலிருந்து என் அத்தைப் பெண் வந்திருக்கிறாள். அண்ணா நாளைக்குச் சாப்பிட வரச்சொல்லி போன் பண்ணினான். உங்க மாமாவும் நானும் அங்கே சாப்பிடப் போகிறோம்.'' என்றாள் சுமித்ரா.

''ஹேமந்த்! நீயும் ஆர்த்தியும் போயிட்டு வாருங்கள்'' என்றான் விஜயராகவன்.

ஆர்த்தியின் முகம் அதைக் கேட்டு பிரகாசமடைந்தது.

மறுநாள்—

சுமித்ரா தானே சுயமாய் பலகாரங்கள் பண்ணி, டிபன் கேரியரில் போட்டு ஆர்த்தி—ஹேமந்த்திற்குத் தந்தாள்.

''அத்தை பெண் வரா மலிருந்திருந்தால் நாங்களும் உங்களோடு வந்திருப்போம் அவள் ராட்சஸி! போகாவிட்டால் சும்மாயிருக்க மாட்டாள். நேற்றிரவே ஏன் வரலைன்னு போனில் சண்டை போட்டாள்'' என்றாள் சுமித்ரா சிரித்துக் கொண்டே.

பரமேஸ்வரிக்குத் தலைவலி என்றதால் சுமித்ரா பலவந்தம் பண்ணவில்லை.

ஆர்த்தியும் ஹேமந்த்தும் காரை எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்

அதற்குள் சுமித்ராவின் அத்தை பெண் 'இன்னும் வராமல் என்ன பண்ணுகிறாய்? உங்களவரை விட்டு விட்டு வரமுடியாமல் இருக்கோ?'' என்று போன் பண்ணி விட்டாள்.

''நீ சீக்கிரமாய்ப் போ, இல்லாவிட்டால் அவளே இங்கே வந்துவிடுவாள் போலிருக்கு'' என்றான் விஜயராகவன்.



''நீங்கள் சாப்பிட வரமாட்டேன் என்கிறீர்கள். அண்ணாவுக்குக் கோபம் வருமோ என்னவோ?''

''இந்த தடவை மன்னித்து விடச் சொல்லு! உண்மையைச் சொல்லணுமானால்—உங்க அத்தை பெண் இருக்கிறாளே அவளைக் கண்டால் எனக்கு ரொம்பவும் பயம்! அடுத்தவர்களைப் பார்வையாலும் வார்த்தையாலும் கொன்று விடுவாள்.''

''அவள் உங்களைப் பற்றி உங்களுக்குப் பின்னால் மெச்சிக் கொள்கிறாள்.''

''தாங்க்யூ! எனக்கு அர்ஜென்ட் வேலை இருக்கிறதாய்ச் சொல்லு.''

''சாப்பிட வராவிட்டால் சாயந்திரம் ஸ்டேஷனுக்குப் போகவாவது வருவீர்களா?''

''எனக்கு கிரிமினல் கேஸ் ஒன்று இருக்கு. அந்த க்ளையிண்ட் வருவார். பேசணும். பார்க்கலாம்.''

''பார்க்கிறது இல்லை, கண்டிப்பாய் வரேன்னு சொன்னால்தான் போவேன்.''

''சரி சரி, வரேன்.''

விஜயராகவன் வேலையாய் வெளியே போய் விட்டான். சுமித்ரா அண்ணன் வீட்டிற்குப் போனாள்.

ஃ ஃ ஃ

பேச்சிலும் சிரிப்பிலும் ஆழ்ந்து போன ஆர்த்திக்கும் ஹேமந்திற்கும் பொழுது போனதே தெரியவில்லை.

''அப்போவ்! அதற்குள் சாயந்திரம் ஆயிடுத்தா?'' சூர்யாஸ்தமனத்தைப் பார்த்து விட்டுச் சொன்னாள் ஆர்த்தி.

இருவரும் சமுத்திரக் கரையோரமாய் நடந்து கொண்டிருந்தார்கள்.

"இன்றைக்கு இவ்வளவு சீக்கிரம் கழிந்துடுத்தே!" ஹேமந்த்கூட வியப்படைந்தான்.

"நீங்கதான் ஏதாவது மந்திரம் போட்டீர்களோ என்னவோ?"

ஆர்த்தி குழைவாய்க் கேட்டாள்.

'நீதான் போட்டிருப்பாய்'' என்றான் ஹேமந்த்.

இருவரும் பக்கென்று சிரித்து விட்டார்கள். இருவர் மனதிலும் ஏதோ இனம்புரியாத ஆனந்தம்நாட்டியமாடிக் கொண்டிருந்தது. ஒருவர் பால் இன்னொருவருக்கு இருந்த அன்பு காந்தத்தைப் போல, கவர்ந்து இழுத்துக் கொண்டிருந்தது. கணவன் மனைவியாகப் போகிறவர்கள் தானே என்ற உரிமையையும் சுவாதீனத்தையும் எடுத்துக் கொள்ளச் சொல்லி மனம் அவசரப் பட்டாலும், உடனேயே ஏதோ தயக்கம் குறுக்கிட்டுக் கொண்டிருந்தது.

இருவரும் பக்கத்துப் பக்கத்தில் நடந்து கொண்டிருந்தார்கள். ஒருவர் கை இன்னொருவர்மீது பட்டாலோ, ஒருவர் தோள் இன்னொருத்தர் மீது உராய்ந்தாலோ இருவரும் ஒருவர் முகத்தை இன்னொருவர் தம்மையறியாமலேயே பார்த்துக் கொண்டார்கள். இருவர் கண்களிலும் ஏதோ ஊமை வெட்கம் ஒளிந்து விளையாடிக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் இருவரும் பேச்சு மூச்சில்லாமல் மௌனமாய் நடக்கத் தொடங்கினார்கள்.

"ஆர்த்தி! உனக்கு நிஜமாகவே மந்திரம் போடத் தெரியும்னு நினைக்கிறேன்'' என்றான் அவன் நடந்து கொண்டே.



,'ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?''

"இல்லாத போனால் என்னிடம் இவ்வளவு மாறுதல் எப்படி வந்திருக்கும் சொல்லு? சில சமயம் நினைத்துப் பார்த்தால் எனக்கே ஆச்சரியமாயிருக்கு.''

"நானும் அதையே சொல்லலாமில்லையா?''

திரும்பவும் இருவரும் பக்கென்று சிரித்துக் கொண்டார்கள்.

"இருட்டி விட்டது, வீட்டிற்குத் திரும்பலாமா?'' என்றான் அவன்.

"சே, அதற்குள்ளேயா?''

"தாமதமானால் ஆன்ட்டி கலங்கிப் போயிடுவார்''

"அதுவும் நிஜந்தான்.''

இருவரும் காரை நெருங்கினார்கள். ஆர்த்தி காருக்குள் ஏறி உட்கார்ந்தாள். ஹேமந்த்கூட ஏறி உட்கார்ந்து ஸ்டார்ட் பண்ணினான்.

கார் இரண்டடிகள் போய் விட்டு சர்ரென்று நின்று விட்டது. அவன் திரும்பவும் ஸ்டார்ட் பண்ணினான். திரும்பவும் ஓரடி போய் விட்டு நின்று விட்டது

"மைகாட்! பெட்ரோல் ஆயிடுத்து'' என்றான் அவன் கலக்கத்தோடு.

"இப்ப என்ன பண்றது?'' ஆர்த்திகூட பதறி விட்டாள்.

"காரில் உட்கார்ந்து கொண்டே ஏதாவது வாகனம் வருகிறதான்னு பார்க்கணும்.''

"நாம்ப இம்மாதிரி மகாபலிபுரத்துக்கு—இவ்வளவு தூரத்திற்கு வராமலிருந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்'' நொந்து கொண்டான் அவன்.

இருவரும் காரில் உட்கார்ந்திருந்தார்கள்.

ஹேமந்த் முகம் மிகக் கலங்கிப் போய் விட்டதைப் பார்த்துவிட்டு பக்கென்று சிரித்தாள் ஆர்த்தி.

அவன் புரியாமல் பார்த்தான்.

''எனக்கு இதற்குள்ளேயே வீட்டிற்குப் போகணும்னு இல்லை. அதனால்தான் இப்படி ஆகிவிட்டதோ என்னவோ?''

அவனும் சிரித்து விட்டான் அவன் கை மெதுவாய் நகர்ந்து ஆர்ததியின் வகையைப் பிடித்துக் கொண்டது. இருட்டு அவனுக்கு அந்த தைரியத்தைத் தந்தது.

## 23

ஆர்த்தியும் ஹேமந்த்தும் ஒரு லாரிக்காரனைக் கெஞ்சிக் கூத்தாடி பெட்ரோல் வாங்கிக் காருக்குப் போட்டுக் கொண்டு வீட்டிற்குத் திரும்பி வருவதற்குள் இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆகி விட்டது! கார் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றபோது வீடெல்லாம் சந்தடியாய் இருந்தது! டாக்டர் ராமமூர்த்தியின் கார் வெளியே தென்பட்டது! அதைப் பார்த்து ஹேமந்த்தும் ஆர்த்தியும் திகைப்படைந்தவர்களாய் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். யாருக்காவது ஏதாவது உடம்பு மோசமாய் இருந்தாலேயொழிய அவர் சாதாரணமாய் வீட்டிற்கு வர மாட்டார் இருவரும் உள்ளே வந்தார்கள்.

விஜயராகவனும், ராமமூர்த்தியும் அப்பொழுது தான் சுமித்ராவின் அறையிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தார்கள்.



''அவளுக்கு ரொம்ப அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது! அது என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள்! நான் காலையில் திரும்பவும் வந்து பார்க்கிறேன். அந்த மருந்துகளை வாங்கி மணிக்கு ஒன்றாய்க் கொடுங்கள்'' என்று சொன்னார் டாக்டர்.

''என்னவாச்சு டாடீ?'' ஆர்த்தி கவலையோடு கேட்டாள்.

''உங்கம்மாவுக்கு உடம்பு சரியாயில்லை'' என்றான் அவன்.

ஆர்த்தி தாயின் அறைக்கு ஓடினாள். ஹேமந்த்தும் கூடவே போனான்.

சுமித்ரா கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள்!

''மம்மீ.'' ஆர்த்தி போய் சட்டென்று பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தாயின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

சுமித்ரா ஒரு வினாடி மகளையே பார்த்தாள்.

உடனே ஹிஸ்டீரியா வந்தவளைப் போல தேம்பித் தேம்பி அழத்தொடங்கினாள்! அந்த அழுகை இதயத்தைக் கசக்கிப் பிழியும்படியாய், எப்படிப்பட்டவர்களுக்கும் கண்கள் கசியும்படியாய் இருந்தது!

''மம்மீ! என்னவாச்சு மம்மீ''? ஆர்த்திக்கு அழுகை வந்து விட்டது.

சுமித்ராவின் அழுகை நிற்கவில்லை.

ஹேமந்த் கட்டிலுக்குப் பக்கத்தில் வந்து நின்றான்.

''ஆன்ட்டீ!'' மிகப் பரிவாய் நாத்தழுதழுக்கக் கூப்பிட்டான்.

சுமித்ராவின் அழுகை இன்னும் அதிகமாயிற்றே தவிர நிற்கவில்லை.

டாக்டரை அனுப்பிவிட்டு உள்ளே வந்தான் விஜய ராகவன். அழுது கொண்டிருந்த சுமித்ராவையும், ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டிருந்த ஆர்த்தி ஹேமந்த்தையும் பார்த்தான்.

''சுமீ! சுமீ!'' கூப்பிட்டான். கிட்டே வந்து கட்டிலில் உட்கார்ந்து கொண்டு தலைமேல் கையை வைத்தான். சுமித்ரா அவன் கையை அப்பால் தள்ளி விட்டாள். ''நீங்கள் என் கட்டிலை விட்டு எழுந்திருங்கள். என்னைத் தொடாதீர்கள். போயிடுங்கள்.'' கத்தினாள். அந்தச் சமயத்தில் வெறி பிடித்தாற் போல இருந்த சுமித்ராவைப் பார்த்த ஆர்த்திக்கு பயம் ஏங்பட்டது. விஜய ராகவன் எதுவும் பேசவில்லை. கட்டிலை விட்டு இறங்கினான்.

''ஆர்த்தி! போய் உடை மாற்றிக் கொள்! ஹேமந்த் போ! டாக்டர் உங்க ஆன்ட்டியை ஓய்வாய் இருக்கச் சொல்லியிருக்கார்'' என்றான்.

ஆர்த்தி, ஹேமந்த் இருவரும் அறையை விட்டு வெளியே வந்தார்கள்.

இருவரும் ஒன்றும்புரியாதவர்களாய் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

''அம்மாவுக்கு என்னவாச்சு டாடீ?'' கொஞ்ச நேரங் கழித்து விஜயராகவனைக் கேட்டாள் ஆர்த்தி.

''புத்தி கலங்கி விட்டது.'' பற்களைக் கடித்துக் கொண்டே சொன்னான் அவன்.

''ஆமாம், எனக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. நான் பைத்தியக்காரி ஆயிட்டேன்! என்னைப் பைத்தியக் கார ஆஸ்பத்திரியில் சேர்த்து விடுங்கள்! உங்கள்



பீடையை விட்டு விலகிக் கொள்ளுங்கள்! தடை ஒழிந்து போகும்!'' சுமித்ரா எப்பொழுது கட்டிலிலிருந்து எழுந்து வந்தாளோ தெரியாது, பத்ரகாளியைப் போல நின்று கொண்டிருந்தாள்.

''சுமீ!'' விஜயராகவன் சட்டென்று ஓடிவந்து பிடித்துக் கொண்டான்.

''சீ! என்னை விடுங்கள்! நீங்கள்...நீங்கள் இப்படிப் பட்டவர்னு எனக்குத் தெரியவே தெரியாது.இதைவிட... நான் சாவதே நல்லது. சீ, சீ!' சுமித்ரா தலையைக் கதவில் மோதிக் கொள்ளத் தொடங்கினாள்.

''மம்மீ'' ஆர்த்தி ஓடிவந்து பிடித்துக் கொண்டாள்.

''சுமீ! ப்ளீஸ்! ஆர்த்தி எப்படி பயப்படுகிறாள்னு பார்! அவள் மனதைப் பாழடித்து விடாதே! உனக்கு எப்படிப் பிடிக்குமோ அப்படியே நடக்கும்.''

''மொதல்ல அந்தத் தாயையும் மகனையும் வீட்டை விட்டுப் போகச் சொல்லிடுங்கள்.''

''நீ எப்படிச் சொல்கிறாயோ அப்படியே நடக்கும்னு தான் சொல்றேனே! வா, ரெஸ்ட் எடுத்துக்கோ'' விஜய ராகவன் மனைவியின் தோளைப் பிடித்து பலவந்தமாய் அறைக்குள் நடத்தி அழைத்துச் சென்று கட்டிலில் படுக்க வைத்தான் வார்த்தைகள் குமுறலோடு கேட்கவே, ஹேமந்த்கூட அவ்விடத்திற்கு வந்தான்!

ஆர்த்தி மருந்து குடிக்கச் செய்ததால் சுமித்ரா கொஞ்ச நேரத்தில் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டாள்.

''காலையில் நாங்க போன பொழுது நன்றாகதானே இருந்தது அம்மா உடம்பு? என்னதான் ஆச்சு டாடீ?'' ஆர்த்தி தந்தையைக் கேட்டாள்.

விஜயராகவன் நாற்காலியில் உட்கார்ந்து கொண் டான்.

"என்னவாச்சு மாமா?" ஹேமந்த்கூட துருவிக் கேட்டான். அவ்விருவரும் அவன் நாற்காலிக்கு இரண்டு பக்கங்களிலுமாய் நின்று கொண்டிருந்தார்கள்.

என்ன நடந்ததென்று அவனிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும் என்ற துடித்துடிப்போடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் விஜயராகவனால் பதில் சொல்ல முடியவில்லை. அவர்களுக்கு பதில் சொல்ல முடியாதவனாய் கேசங்களில் விரல்களை அலைய விட்டுக் கொண்டே தலை குனிந்து கொண்டான்.

"ஓ காட்! வாட் எ ஹெல்?" என்று முணுமுணுத்துக் கொண்டான்.

"நீங்களிருவரும் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள்! நான் இங்கே இருக்கேன்" என்றான். ஆர்த்தியும் ஹேமந்த்தும் அறையை விட்டு வெளியே வந்தார்கள். இருவர் மனமும் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது.

"என்னதான் ஆகியிருக்கும்?" என்றான் ஹேமந்த்.

ஆர்த்தி அவனைப் பார்த்தாள். 'அந்தத் தாயையும் மகனையும் வீட்டை விட்டுப் போகச் சொல்லி விடுங்கள்' என்ற தாயின் வார்த்தைகளைச் சொல்லப் போனாள்! ஆனால் ஏனோ சொல்லாமல் நிறுத்திக் கொண்டாள்! ஆர்த்தியின் கண்களில் கண்ணீர் குளமாயிற்று.

"ஆர்த்தி!" ஹேமந்த் அவள் தோளில் கை வைத்தான்.

"எனக்கு பயமாய் இருக்கு ஹேமந்த்" என்றாள்.

"அதைரியமடையாதே! ஆன்ட்டிக்குக் குணமாகி விடும்" என்றான் அவன்.

## 24

"நாம்ப இப்போ வீடு மாற்றுவதற்கு என்னம்மா அவசரம்? ஆன்ட்டி உடம்பு சரியயயில்லை. இந்த நிலையில் நாம் போய் விட்டால் நன்றாயிருக்குமா?" ஹேமந்த் தாயிடம் சொன்னான்.

"அதையெல்லாம் அவர்கள் யோசித்துப் பார்க்காமலா இருந்திருப்பார்கள்? மாமா நாம்ப அந்த வீட்டிற்குப் போவதற்கு நாளைக்கு நாள் நன்றாயிருக்குன்னு ஏன் சொல்லியிருப்பார் பின்னே?" என்றாள் பரமேஸ்வரி அலுப்படைந்து.

"அட்வான்ஸ் கொடுத்தாச்சேன்னு அப்படி எண்ணியிருக்கலாம்! அவர்கள் ஏதாவது கஷ்டத்தில் இருந்தால் நாம்ப தானே கவனிச்சுக்கணும்? அவர்கள் சொல்லுவார்களா?"

"ஹேமந்த்! உன் திமிரான கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. நாளைக்கு நாம்ப வீடு மாறப் போவது நிச்சயம்! நாம்ப வீட்டை விட்டுப் போயிட்டால் அவளுக்கு நிம்மதியாய் இருக்கும்! ஏதோ நிர்பந்தத்தால் இவ்வளவு நாள் இருந்துட்டோம்! இன்னும் தொந்தரவு பண்ணி அவர்களுக்குக் கஷ்டம் தருவது நன்றாய் இல்லை! மாமா எது பண்ணினாலும் நம் நல்லதுக்குதான் யோசித்துப் பண்ணுவார்! அவரை எதிர்த்துப் பேசாதே!" என்றாள் பரமேஸ்வரி.

ஹேமந்த் யோசித்தான்.

இதற்கு முன்பாய் இருந்தால் தாயோடு தர்க்கத்தில் இறங்கியிருப்பான்! எதிர்த்துப் பேசியிருப்பான்! இன்னும் இஷ்டமில்லா விட்டால் வீட்டை விட்டே போயிருப்

பான்! ஆனால் இப்பொழுது ஹேமந்த் சுபாவம் மாறி விட்டது.

தளக்கும் ஒரு பொறுப்பு இருப்பதைத் தெரிந்து கொண்டு விட்டான். தான் விவேகமில்லாமல் அவசரப் பட்டு நடந்து கொண்டால் அது முக்கியமாய் தாயை விட சுமித்ராவையும் விஜயராகவனையும்தான் பாதிக்கும் என்று ஊகித்துக் கொண்ட அவன் விழிப்புடன் நடந்து கொள்ளத் தொடங்கினான்.

''சரிம்மா, உன்னிஷ்டம்'' என்றான்.

மகன் தர்க்கத்தில் இறங்காதது பரமேஸ்வரிக்கு மகிழ்ச்சியைத் தந்தது. பரமேஸ்வரி வேறு வீட்டை வாடகைக்குப் பார்த்துக் கொண்டதுமே, எப்பொழுது இந்த வீட்டை விட்டுப் போவோமோ என்று நிமிஷத் தைக் கணக்கிடத் தொடங்கினாள். ஆனாலும் இந்த வீட்டை விட்டு எவ்வளவு தொலைவிற்குப் போய்விடப் போகிறாள்.

விஜயராகவன் தினமும் கோர்ட்டுக்குப் போய் வரும் வழிதான் அது! பிற்பகல் லஞ்ச் வேளையில் அவனுக்கு வேலை தொந்தரவு இல்லா விட்டால் ஒரு அரைமணி நேரம் வந்து போகலாம்!

ஆனால் ஹேமந்த் யோசித்த விதம் இதற்கு முற்றிலும் வேறு விதமாய் இருந்தது.

இந்த வேறு வீடு பார்க்கும் யோசனை யார் மூலமாய் ஏற்பட்டது என்று அவனுக்குத் தெரியாது! ஆனால் அதை விஜயராகவன் உடனே ஆமோதித்து விட்டதால், வீடு பார்த்து எல்லா ஏற்பாடும் ஆகிவிட்டது!

ஒரு மாத வாடகையை அட்வான்சாகக் கொடுத்து விட்டு, போக வேண்டிய தேதியைக்கூட தீர்மானித்துக் கொண்டு விட்ட பிறகு, அவனுக்கு பரமேஸ்வரி இந்த விஷயத்தைச் சொன்னாள்!



அதைக் கேட்டதும் அவன் கலங்கிப் போய்விட்டான். தடை சொல்லப் போனான்! ஆனால் பரமேஸ்வரி இது விஜயராகவன் செய்த முடிவு என்று சொன்னதுமே மறுபேச்சுப் பேச முடியவில்லை அவனால்.

இப்பொழுதுதான் அவனுக்கும் ஆர்த்திக்கு மிடையே விவரித்துச் சொல்ல முடியாத அளவிற்கு அன்பும் நேச மும் ஏற்படத் தொடங்கியிருந்தன

தம்பதிகளாகப் போகிறோம் என்ற உணர்ச்சி, இரு வர்க்கும் ஒருவரையொருவர் பார்க்கும் போதும் பேசும் போதும் முகம் சிவக்கச் செய்து கொண்டிருந்தது!

ஆர்த்தி இப்பொழுது ஹேமந்த்தின் அறையை ஒழித்துவைப்பதில் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டி ருந்தாள்.

காலையில் அவன் எழுந்திருப்பதற்குள் பேஸ்ட்டும் பிரஷ்சும் ரெடியாய் இருக்கும்! முகத்தைக் கழுவிக் கொண்டதுமே சுடச்சுடக் காப்பி தம்ளர் மேஜைமேல் தயாராய் இருக்கும். சுமித்ராவுக்கு உடம்பு சரியில்லா விட்டாலும் அவன் சாப்பாட்டை மிக சிரத்தையாய் கவ னித்து வந்தாள்!

மாலையில் அவன் ஆபீசிலிருந்து வரும்போது படுக் கையில் வெண்ணிற துப்பட்டி பரப்பியிருக்கும். அறை யில் டேப் ரிகார்டரைப் போட்டு, மெல்லிய ஓசையில், சங்கீதம் வெளி வரும்படி ஏற்பாடு செய்திருப்பாள். படிப்பதற்கு அன்றைய பேப்பரையோ புத்தகத்தையோ தலையணைக்குப் பக்கத்தில் தயாராய் எடுத்து வைத்திருப் பாள். இந்தக் காரியங்களையெல்லாம் ஆர்த்திதான் பண்ணி வருகிறாள் என்று அறிவான் அவன்.

ஆனால் ஒரு தடவை கூட அவள் அக்காரியங்களைப் பண்ணிக் கொண்டிருக்கும்போது பார்த்ததில்லை அவன்.

ஆர்த்தி ஹேமந்த்தோடு பேசி யாருமே பார்த்த தில்லை.

ஆனால் அவனுக்குத் தன்னோடு அவள் பேசினாற் போலவே இருக்கும்.

இன்றைக்கு அவன் சட்டையை எடுத்து மாட்டிக் கொள்ளப் போனபொழுது ஒரு சிறிய துண்டுக் காகிதம் குண்டூசியால் சட்டையில் குத்தியிருந்தது அவன் அதை எடுத்துப் படித்தான் — ''மாலையில் சீக்கிரமாய் வர வேண்டும். ஷாப்பிங் போகவேண்டும்.'' — என்றிருந்தது.

அவன் மாலையில் அவசரம் அவசரமாய் பஸ் கிடைக்காமல் போகவே, டாக்ஸியில் வந்து விட்டான். வரும் போது பூ வாங்கி வந்தான். ஆனால் ஆர்த்தியிடம் கொடுப்பதற்கு பயம்! அதனால் குளிக்கப் போனபொழுது அவனுக்காகக் காப்பி தம்ளரை வைக்கும் இடத்தில் அதை வைத்து விட்டுப் போய் விட்டான்.

அவன் குளித்து முடித்து விட்டுத் திரும்பி வரும்போது அங்கே பூப்பொட்டலம் இல்லை. ''தாங்க்யூ.'' என்று சிறிய எழுத்துக்களில் எழுதியிருந்த காகிதம் காப்பித் தம்ளருக்கடியில் வைக்கப்பட்டிருந்தது. அந்த எழுத்துக்கள் அவனுக்கு மிக மகிழ்ச்சியைத் தந்தன. தான் வாங்கி வந்த பூ ஆர்த்தியின் தலையில் ஒய்யாரமாய் அமர்ந்திருந்ததைப் பார்த்த அவனுக்கு மிகச் சந்தோஷமாய் இருந்தது.

அவனையறியாமலேயே அவன் கண்கள் ஆர்த்தியைத் தேடத் தொடங்கின. அவன் மனம் ஆர்த்தியைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தது. இது அவனுக்கு மிக இனிமையாய் இருந்தது. காலையில் எழுந்திருக்கும் முன்பும், மாலையில் ஆபீசிலிருந்து திரும்பி வரும்போதும் ஆர்த்தி பண்ணும் இந்தக் காரியங்களுக்காக மனம் எதிர் பார்த்துக் கொண்டிருக்கும். ஆனந்தம் அடையும்!



இப்படிப்பட்ட சமயத்தில் பரமேஸ்வரி இந்த வீட்டை விட்டு நாம் நாளைக்கு வேறு வீட்டிற்குப் போய் விடலாம் என்று சொன்னது நாராசமாய் இருந்தது! சுமித்ராவுக்கு உடம்பு சரியாயில்லாததால் இந்தச் சமயத்தில் நாம் போகக்கூடாது என்று அவன் சொன்ன யோசனையை 'இது விஜயராகவனின் தீர்மானம், நாம் மறுக்கக் கூடாது' என்று தாய் தடை விதித்து விட்டாள். அவனுக்கு என்ன பண்ணுவதென்றே புரியவில்லை.

அவன் பரமேஸ்வரியின் அறையை விட்டு வெளியே வந்தபோது ஆர்த்தி அங்கே டிரான்ஸிஸ்டரை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவன் சாதாரண சமயமாயிருந்தால் தானாகவே வலிய ஆர்த்தியுடன் போய்ப் பேச மாட்டான்! இன்று அந்தப் பழக்கத்தைக் கூட விட்டு விட்டு நேராய் ஆர்த்தியிடம் வந்தான். அவனைப் பார்த்ததுமே ஆர்த்தி டிரான்ஸிஸ்டரை அணைத்து விட்டாள். நிமிர்ந்து பார்த்தாள் அவனை! அவனும் ஆர்த்தியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''உட்காருங்கள் ஹேமந்த்'' என்றாள்.

''நாளைக்கு நாங்கள் வேறு வீட்டுக்குப் போகிறோம். உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டான்.

ஆர்த்தி தெரியும் என்று தலையாட்டினாள்.

அவன் அவளுக்கருகில் உட்கார்ந்து கொண்டான்.

''இது யார் தீர்மானம்?''

''எனக்கு தெரியாது'' என்றாள் ஆர்த்தி.

''இந்தத் தீர்மானத்திற்கு வருவதற்கு முன்னால் ஒரு சின்ன வார்த்தை என்னைக் கேட்கணும்னு கூட தோணலை அவர்களுக்கு.''

''நானும் அதைத்தான் நினைத்துக் கொண்டிருக்கேன்! எனக்கு அப்பா மத்யானம் சொன்ன பிறகுதான் தெரியும்.''

''ஆன்ட்டிக்குத் தெரியுமா?''

''தெரியும். அப்பா என்னிடமும் அம்மாவிடமும் ஒரே சமயத்தில் தான் சொன்னார்.''

''அம்மா என்ன சொன்னாள்?''

''நல்லது, என்றாள்.''

''வேறென்ன சொல்ல முடியும்? ஒருக்கால் ஆன்ட்டிக்குக் கூட நம்மைப் போலவே தெரிந்திருக்காது. இது எங்கம்மாவின் முடிவாய்தான் இருக்கும்.'' என்றான் அவன் பெருமூச்சு விட்டபடி.

''விடுங்கள் ஹேமந்த்! இதற்கு முன்னால் நமக்கு இந்த வீடு ஒன்றுதான்! இப்பொழுது இரண்டு வீடுகள் என்று நினைத்துப்போம்.'' ஆர்த்தி அவனை உற்சாகப் படுத்த முனைந்தாள்.

''ஆமாமாம்! இனி நான் தினமும் ஆபீசிலிருந்து வரத்துக்கு முன்னால் உனக்குப் போன் பண்ணிக் கொண்டிருக்கணும்.''

''ஏன்?''

''நீ இந்த ரெண்டு வீடுகளில் எங்கே இருக்காயோ அங்கே வருவதற்கு.'

ஆர்த்தி பக்கென்று சிரித்து விட்டாள்.

ஹேமந்த்துக்கும் சிரிப்பு வந்தது.

' ஆர்த்தி!'' அடுத்த அறையிலிருந்து சுமித்ராவின் அழைப்பு கேட்டது. அக்குரல் சோர்வுடன்—எரிச்சலுடன் இருந்தது.

''வரேன் மம்மீ ''

ஆர்த்தி சட்டென்று எழுந்து தாயின் அறைக்குப் போனாள்.

ஹேமந்த்தும் ஆர்த்திக்குப் பின்னாடியே வந்தான்.



''அதைன்ன சிரிப்பு? தலைவலி மண்டையைப் பிளக்கும் போது...''

அறைக்குள் வந்து கொண்டிருந்த ஹேமந்த்தைப் பார்த்து சுமித்ரா நிறுத்திக் கொண்டாள்.

''சாரீ மம்மீ! ஹேமந்த் ஏதோ சொன்னதைக் கேட்டுச் சிரிப்பு வந்தது! உனக்கு ஆரஞ்சுப்பழம் பிழிந்து தரட்டுமா?''

''தா.''

ஆர்த்தி அங்கிருந்த ஆரஞ்சுப்பழங்களையும், கத்தியையும் கையில் எடுத்துக் கொண்டாள்.

''இன்றைக்கு உங்க உடம்பு எப்படி இருக்கு ஆன்ட்டீ?'' கிட்டே வந்து கேட்டான் ஹேமந்த்.

''நன்றாய் தான் இருக்கு? அந்தப் பழங்களை அறுக்கும் போது ஜாக்கிரதை, கையை அறுத்துக் கொண்டு விடாதே.'' ஹேமந்த்தைத் திரும்பிப் பாராமலேயே, மகளிடம் சொன்னாள்.

''நான் உரித்துத்தரேன், இப்படிக் கொண்டா.'' ஹேமந்த் ஆர்த்தியிடமிருந்து கத்தியையும் ஆரஞ்சுப் பழங்களையும் வாங்கிக் கொண்டான்.

ஆர்த்தி க்ளுகோஸ் கொண்டு வந்தாள். ஹேமந்த் சாறைப் பிழிந்து தம்ளரில் விட்டு சுமித்ராவிடம் தந்தான்.

''எடுத்துக்குங்க ஆன்ட்டி.''

சுவர்ப் பக்கமாய்த் திரும்பிப் படுத்துக் கொண்டிருந்த சுமித்ரா, உடனே எழுந்திருக்கவில்லை. மலர்ந்த முகத்தோடு அவனோடு பேசவில்லை. பாராமுகமாய் ''அங்கே வை'' என்றாள்.

ஹேமந்த் வைத்தான். அவன் அங்கே வெகுநேரம் உட்கார்ந்திருந்தான். ஆனால் சுமித்ரா இந்தப் பக்கமாய்

திரும்பவே இல்லை! அந்தப் பழரசத்தையும் அருந்தவில்லை!

அரை மணிக்குப் பிறகு ஆர்த்தியும் ஹேமந்த்தும் வெளியே காலார நடந்து கொண்டிருந்தார்கள். ஹேமந்த் சொன்னான்—.'' நீ என்ன வேணுமானாலும் சொல்லிக்கொள் ஆர்த்தி! ஆன்ட்டி பழைய மாதிரி இல்லை! அது உடல்நலக் கோளாறால் வந்த அசதியோ வருத்தமோ மட்டும் இல்லவே இல்லை! என் மேல் ஏனோ கோபம் வந்து விட்டது. எதற்காக இருக்கும்? நான் என்ன பண்ணினேன்?'' அவன் நெற்றிப்பொட்டை நீவி விட்டுக் கொண்டான். எவ்வளவு ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்றாலும் ஞாபகமே வரவில்லை!

''நீ கவனித்தாயோ இல்லையோ, மாமா கூட ரொம்ப சீரியஸாய் இருக்கிறார்.''

''அம்மா உடம்பு சரியாயில்லாததால் அப்பா அப்படி இருந்திருப்பார். அதானே தவிர வேறொன்றும் இல்லை' என்றாள் ஆர்த்தி.

நடந்து கொண்டிருந்த அவன் நின்றுவிட்டான். அவன் முகம் ஏனோ சிவந்து விட்டிருந்தது. தடுமாற்றத்துடன் கேட்டான். ''நான் போயிடப்போறேன்னதும் உனக்கு ஏதோ மாதிரி ஆகலையா?''

ஆர்த்தியின் கண்கள் படபடத்தன!

''இல்லாமல் எப்படி இருக்கும்?'' என்றாள்.

''எப்படி இருக்கு?''

''உங்களைப்பற்றி மொதல்ல சொல்லுங்கள்.''

அவன் சொல்லவில்லை. ஆர்த்தியின் கைகளைத் தன் கைகளால் பிடித்துக் கொண்டான். உஷ்ணமான அந்த ஸ்பரிசத்தால் அவன் எவ்வளவோ வார்த்தைகளைச் சொன்னாற்போலவே இருந்தது ஆர்த்திக்கு.

## 25

ஹேமந்த் ஆபீசிலிருந்து சீக்கிரமாய் வீட்டிற்கு வந்து விட்டான். அவன் மளமளவென்று அறைக்குள் ஓடினாற் போலவே நுழைந்தான். அங்கே அவன் எதிர்பார்த்தாற் போல டேப் ரிகார்டரில் பாட்டு கேட்கவில்லை. ஆர்த்தி நாற்காலியில் உட்கார்ந்திருக்கவில்லை தொலைவில் தாயின் அறையிலிருந்து பேச்சுக்குரல் கேட்டது. அவன் சட்டென்று அங்கே வந்தான்.

பரமேஸ்வரிக்கு முன்னால் வீட்டுக்கார அம்மாள் உட்கார்ந்து காப்பி குடித்துக் கொண்டே பேசிக் கொண்டிருந்தாள். அங்கே ஆர்த்தி இல்லை. பரமேஸ்வரி மகனைக் கண்டதுமே ''வந்துட்டயா ஹேமந்த்! வா, இவன்தான் எங்க பிள்ளை மாமி'' என்று காட்டினாள்.

''அம்மா ஆர்த்தி வரலையா?''

''வரலை. நீ உடை மாற்றிக்கொள், டிபன் சாப்பிடலாம்'' என்றாள்.

ஹேமந்த் திரும்பித் தன் அறைக்கு வந்தான்! அவன் உற்சாகமெல்லாம் வடிந்து விட்டது. அவ்வறையில் சாமான்கள் எல்லாம் தாறுமாறாய் இருந்தன. ஆர்த்தி வருவாள் என்றும், ஒழுங்காய் ஒழித்து வைப்பாள் என்றும் அவன் எதிர்பார்த்தான்.

நேற்று மாலையில் இந்தப் புது வீட்டிற்கு வந்து விட்டார்கள். விஜயராகவன் எங்கேயோ பார்ட்டி இருப்பதாய்ச் சொல்லிவிட்டுப் போய் விட்டான். ஹேமந்த் ஆபிசிலிருந்து நேராய் புது வீட்டிற்கே வந்தான். அப்பொழுதும் ஆர்த்தி தாயோடு வரவில்லை. தாய்க்கு மருந்து கொடுக்க வேண்டுமென்று வீட்டிலேயே இருக்க நேர்ந்ததாய் பரமேஸ்வரி சொன்னாள்.

ஹேமந்த் மறுநாள் ஆபீசிற்குப் போவதற்கு முன்னால் விஜயராகவனின் வீட்டிற்குப் போனான். சுமித்ராவை விசாரித்து முடிந்த பிறகு, ஆர்த்தியைக் கேட்டான்.

''மாலையில் எந்த வீட்டிற்கு வரணும் நான்?''

''உங்க வீட்டுக்குத்தான்'' என்றாள் ஆர்த்தி.

''தேவியார் அங்கே இருப்பாரா கட்டாயம்?''

''கண்டிப்பாய்! துரை வருவதற்குள் அறையை ஒழித்து, டேப்ரிகார்டரைப் போட்டுவிட்டு, நாற்காலியில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருப்பார்! '

''இப்பொழுதே அந்த துரை அவர்களின் வேண்டுகோள் ஒன்று உள்ளது. இன்றிரவு தேவி அவர்களின் சாப்பாடு அவ்விடத்தில் தான்.''

''சாப்பாடா? அம்மோவ்! நான் திரும்பி வீட்டுக்கு எப்படி வருவேன்? இருட்டிவிடாதா?''

''கொண்டு வந்து விட நான் இல்லையா?''

''எனக்கு பயமாயிருக்கு''

''என்னோடு வருவதற்கா?''

ஹேமந்த் முகத்தைப் பார்த்து பக்கென்று சிரித்துவிட்டாள் ஆர்த்தி.

அவனை வழியனுப்புவதற்காக கேட் வரைக்கும் வந்தாள்.

அவன் ஸ்கூட்டரில் ஏறி உட்கார்ந்து ஸ்டார்ட் பண்ணிக் கொண்டிருந்தபோது ஆர்த்தி ஸ்கூட்டர் ஹேண்டில்மீது கையை வைத்தாள்.

''ஹேமந்த்! ஒரு பிராமிஸ் கொடுங்க.''

''கொடுத்திட்டேன்.''



''என்னவென்று கேட்காமலேயா?'' வியப்போடு பார்த்தாள்.

''ஆர்த்தி என் மனம் ஒரு வெள்ளைத்தாள். அதில் கையெழுத்துப் போட்டு உனக்குத் தந்து விட்டேன். உனக்குப் பிடித்த வாக்குறுதிகள், நிபந்தனைகள் எல்லாவற்றையும் அதில் நீ எழுதிக்கலாம். என்னைக் கேட்க தேவையில்லை.''

''தாங்க் யூ!''

''இப்ப சொல்லு! நான் உனக்கு என்ன பிராமிஸ் கொடுத்தேன்?''

''நீங்க எனக்குக் கொடுத்த பிராமிஸ் என்னவென்றால், உங்கள் அறையை எனக்குப் பிடித்தாற்போல நான் ஒழித்து வைப்பேன். நீங்கள் தடை சொல்லக் கூடாது.''

''சொல்லமாட்டேன்! போதுமா? என் அறையை மட்டுமே இல்லை, என் வாழ்க்கையையே கூட நீ உனக்கு பிடித்தாற்போல திருத்தியமைத்துக் கொள்! அலங்கரித்துக் கொள்!''

''அப்பப்பா! என்ன இன்றைக்கு இவ்வளவு பேசுகிறீர்களே!''

''நேற்றிலிருந்து உன்னை பார்க்கவில்லையோன்னோ? வார்த்தைகள் மூட்டைகளாய்ச் சேர்ந்துடுத்து, சரி, நேரமாகிறது.'' ஸ்கூட்டரைக் கிளப்பினான்.

ஆர்த்தி அவனை அனுப்பிவிட்டு, சிரித்த முகத்தோடு உள்ளே திரும்பி வந்தாள்.

மனிதர்கள்தான் எவ்வளவு விநோதமாய் மாறிவிடுகிறார்கள்? இந்த ஹேமந்த்தைப் பார்த்தால் அந்த ஹேமந்த்தானா? என்றே சந்தேகமாயிருக்கிறதே என்றெண்ணிக் கொண்டாள்.

ஆபீசிற்குப் போன ஹேமந்த்திற்கு எப்பொழுது சாயந்திரம் ஆகுமோ என்று பாரமாயிருந்தது. ஐந்து மணிக்கு ஆபீசிலிருந்து புறப்படுவதற்கு முன்னால் விஜய ராகவன் வீட்டிற்குப் போன் பண்ணினான். சமையல் காரி எடுத்துப்பேசினாள்.

''ஆர்த்தி இல்லை'' என்றாள்.

''எங்கே போயிருக்கிறாள்?'' ஏதும் அறியாதவனைப் போலக் கேட்டான்.

''தெரியாது. மத்தியானம் மூணு மணிக்கே வீட்டி லிருந்து போனாள்'' என்றாள்.

''அப்படியா?'' அவன் போனை வைத்து விட்டான்.

மனம் முழுவதும் சந்தோஷம், உற்சாகம், பரபரப்பு என்னும் விதம் விதமான உணர்ச்சிகளில் திணறிக் கொண் டிருந்தது. மேகங்களில் மிதந்து வந்தாற்போல ஸ்கூட்ட ரில் விர்ரென்று பறந்தோடி வந்தான் வீட்டிற்கு.

ஆர்த்தி வரவில்லை என்று கேட்டதும் அவனுக்கு திகைப்பாய் இருந்தது. அவனால் நம்ப முடியவில்லை. அந்த ஏமாற்றம் தாங்க முடியாததாய் இருந்தது. தன் அறைக்குள் வந்த ஹேமந்த் ஒரு வினாடி பேன்ட் ஜேபியில் கையைப் போட்டுக் கொண்டு யோசனையில் ஆழ்ந்த படியே நின்றான்.

பரமேஸ்வரி காப்பி டிபன் கொண்டு வந்து வைத்தாள்.

''நாம்ப அதிர்ஷ்டசாலிடா ஹேமந்த்! வீட்டுக்கார அம்மாள் ரொம்ப நல்லவள். ஒரே ஒரு பேத்தியைத் தவிர வேறு யாருமே இல்லையாம்! பாவம் புருஷன் போய் ஒரு வருஷமாகிறது!''

அவள் ஏதேதோ சொல்லிக் கொண்டேயிருந்தாள்.



ஹேமந்த் செவிகளில் அவை எதுவுமே விழவில்லை.

அவன் சரேலென்று திரும்பி விடுவிடென்று வெளியே போய் விட்டான்.

வீட்டை விட்டு வெளியே வந்த ஹேமந்த் தெருவைத் தாண்டி, எதிரே தென்பட்ட பேக்கரி ஷாப்பிற்கு வந்து ஆர்த்திக்கு போன் பண்ணினான்.

திரும்பவும் சமையல்காரிதான் எடுத்தாள்!

''ஆர்த்தி எங்கே போனாள் என்று தெரியுமா?''

''எனக்கொண்ணும் தெரியாதுப்பா! என்னிடம் எதுவும் சொல்லவில்லை.''

''ஆன்ட்டியைக் கேட்டுச் சொல்லு.''

''சரி.''

சமையல்காரி போய்க் கேட்டு விட்டு வந்தாள்.

''ஜெயந்தி என்ற சினேகிதி வீட்டிற்குப் போயிருக் காளாம்ப்பா''

''சரி.''ஹேமந்த் போனை வைத்து விட்டான்.

ஜெயந்தியிடம் போயிருக்கிறாளா? அவனுக்கு இவ் வளவு ஆசைக் காட்டி விட்டு அந்த விஷயத்தையே மறந்து போய் விட்டாளா? ... அவனுக்கு மிகவும் அவமானமாய் இருந்தது. ஏமாற்றம், தோல்வி, ரோஷம் எல்லாம் சேர்ந்து ஆவேசமாய் மாறிற்று.

அவன் வீட்டிற்குத் திரும்பி வந்தான். போட்டது போட்டாற் போல இருந்த வீட்டைப் பார்த்ததும் அவனுக்கு இன்னும் எரிச்சல் ஏற்பட்டது.

காலையில் பரமேஸ்வரி ஒழித்து வைக்கப் போன போது ''இருக்கட்டும்மா, சாயந்திரம் நான் ஒழித்து வைத்துக்கறேன்'' என்று தடை போட்டு விட்டான்.

ஆர்த்தி அவனைப் பற்றியே மறந்து போய் ஜெயந்தியின் வீட்டிற்குப் போய் விட்டது அவனுக்கு ஆச்சரியமாய் இருந்தது. அவன் டையை அவிழ்த்தான். பூட்சைக் கழற்றி, சாக்ஸுகளை உறுவினான்.

அவன் கண்ணிற்கு ஆர்த்தி அங்கே நாற்காலியில் உட்கார்ந்து சிரித்துக் கொண்டிருந்தாற் போலவே இருந்தது! டேப்ரிகார்டரைப் போட்டு விட்டு அந்த சங்கீதத்திற்கு ஏற்றபடி அவ்வறையில் கலகலவென்று சிரித்துக் கொண்டே சுழன்று ஆடிக்கொண்டிருந்தாற் போலவே இருந்தது! எவ்வளவு முயன்ற போதிலும் கண்ணுக்கு முன்னாலிருந்து ஆர்த்தியின் உருவம் மறைய வில்லை. அவன் காப்பி, டிபன் விஷயத்தையே மறந்து போய் அப்படியே உட்கார்ந்திருந்தான்.

# 26

டெலிபோன் கணகணவென்று ஒலித்தது.

புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த ஆர்த்தி போனை எடுத்தாள்.

''ஹலோ'' என்றாள் மெதுவாய்.

''ஹலோ ஆர்த்தி! நான்தான் ஹேமந்த் பேசுகிறேன்! போனை வைத்து விடாதே, ப்ளீஸ்! ஒரு நிமிஷம் உன்னோடு பேசணும்!'' மறு முனையிலிருந்து தீனமாய்க் கேட்டது.

''என்ன ஹேமந்த்?''

''என்னை ஏன் இப்படி சோதிக்கிறாய்? நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்?'' அவன் குரலில் பழிப்பும், ஆதரவின்மையும் நன்றாய் தெரிந்தன.



ஆர்த்தி பதில் பேசவில்லை.

''ஆர்த்தி! உன்னைத்தான்! ஏன் பேசமாட்டேங்கிறாய்? என்னால் என்ன தீங்கு நேர்ந்து விட்டது? உங்க வீட்டிற்கு வந்தால் உன்னைப் பார்க்க முடியலையே, ஏன்? வீட்டில் இருந்து கொண்டே இல்லைன்னு சொல்றத்துக்கு நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்?''

ஆர்த்தி அவனிடம் ஏதோ சொல்ல முயன்று சாத்தியப் படாமல் நிறுத்திக் கொண்டாள்.

''நான் உன்னைப் பார்த்து பத்து நாளாகிறது! எனக்கு இப்பத்தான் புரிகிறது, நீங்கள் என்னை வேறு வீடு என்ற சாக்கில் வீட்டை விட்டு தொலைவிற்கு விரட்டிவிட்டீர்கள். அவ்வளவு மோசமான காரியம் நான் என்ன பண்ணிட்டேன் ஆர்த்தி? எனக்கு நிஜமாய்ப் புரியவில்லை.''

''ஹேமந்த்! ப்ளீஸ்! நீங்க அந்த மாதிரி எதுவும் நினைக்க வேண்டாம்.'' அவள் குரல் கிணற்றுக்குள்ளிருந்து வந்தாற் போல் கேட்டது.

''நான் என்னதான் நினைச்சுக்கணும்னு நீயே சொல்லு! உங்க வீட்டிலிருந்து நான் வந்து விட்ட பிறகு உங்களிடம் திடீரென்று ஏன் இந்த மாறுதல் வந்துடுத்து? ஆன்ட்டியோ என்னோடு சரியாய்ப் பேசுவதில்லை! மாமாவோ கேட்கவே வேண்டாம். நான் வந்துட்டால் போதும்; ரொம்ப பிஸியாய் இருப்பதுபோல நடந்து கொள்கிறார். நீயோ கண்ணிலேயே படுவதில்லை... ஷட் அப்.'' ஹேமந்த் திடீரென்று கத்தினான் பெரிதாய்.

''ஹேமந்த்.'' ஆர்த்தி விறைப்பானாள்.

''சாரி ஆர்த்தி! உன்னை இல்லை! இங்கே யாரோ

போனை வைக்கச் சொல்லி இம்சித்ததால் கத்தினேன்; சொல்லு ஆர்த்தி, என்னதான் ஆச்சு?''

' ஒன்றுமே ஆகலை.''

''நான் உன்னோடு ஒரு தடவை பேசணும். எங்கே வரச்சொல்கிறாயோ சொல்லு, வரேன்.''

ஆர்த்தி பதில் பேசவில்லை.

''சொல்லு ஆர்த்தி! என் வருத்தம் உனக்குப் புரியவில்லையா?''

''புரிகிறது. ஆனால் என் வருத்தத்தை மட்டும் யாரிடம் சொல்லிப்பேன்?''

''அப்படீன்னால்—அப்படீன்னால் உனக்கு நான் செத்துட்டாற்போல் தானே?''

' ஹேமந்த்!''

''உன் வருத்தத்தைச் சொல்லிக்க நான் உயிரோடில்லைன்னு தானே அர்த்தம்?''

''உங்கிளிடம் சொல்ல முடியாதது!''

''அவ்வளவு வேற்று மனுஷனாயிட்டேனா! ஆல் ரைட்! சரி, அப்படியே இருக்கட்டும்! ஆனால் நான் உன்னை ஒரு தடவை பார்க்கணும்! எங்கே வரச்சொல்கிறாயோ சொல்லு!''

''ஹேமந்த்!''

''சீக்கிரமாய்ச் சொல்லு,இங்கே போனை வைத்துடச் சொல்லி கடைக்காரன் தொந்தரவு படுத்துகிறான்.''

''ஹேமந்த் ப்ளீஸ்?''

''உடனே சொல்லு! பார்க்குக்கு வரட்டுமா? சரி போகட்டும். ஏதாவது சினிமா தியேட்டருக்கு.''



''வேண்டாம்.''

''ஜெயந்தி வீட்டில் சந்திப்போமா?''

''வேண்டாம் ''

''பின்னே எங்கே முடியும்னு சொல்லு!''

''எங்கேயுமே முடியாது.''

''முடியாதா, ஏன் ஆர்த்தி?''

''ஹேமந்த்! நான்...நான் உங்களைச் சந்திக்க மாட்டேன் என்றும் உங்களோடு பேச மாட்டேன் என்றும் அம்மாவுக்கு வாக்களித்திருக்கின்றேன்.''

''ஆர்த்தி!'' அந்த அழைப்பு ஆவேசமாய் இருந்தது.

''என்னை மறந்து விடுங்கள்! எனக்குப் போன் பண்ணாதீர்கள்! என்னைச் சந்திக்க முயற்சி பண்ணாதீர்கள். ப்ளீஸ்! நீங்கள் உங்கள் மனம் என்ற காகிதத்தின் மீது கையெழுத்திட்டு எனக்குத் தந்து விட்டதாய் சொன்னீங்க இல்லையா, அதில் நான் கேட்கிற வாக்குறுதி இது!'' ஆர்த்தி தானே போனை வைத்து விட்டாள்.

ஹேமந்த் சிலையாய் அப்படியே நின்று விட்டான்.

கடைக்காரன் முறைத்துப் பார்த்தபடி போனைப் பிடுங்கிக் கொண்டான்.

''இங்கே அவசரத்துக்கு ஏதோ ஒன்றிரண்டு வார்த்தைகளைப் பேசணுமே தவிர ராமாயணம் வம்பு எல்லாம் கூடாது. இனி ஒரு போதும் எங்கள் கடைக்குப் போன் பண்ண வரவேண்டாம் தெரிந்ததா?''

ஹேமந்த் பதில் சொல்லவில்லை. தூக்கத்தில் நடப்பவனைப் போல கடையை விட்டு வெளியே வந்தான். அவன் மனமெல்லாம் மரத்து விட்டாற் போலிருந்தது.

சுமித்ரா ஆர்த்தியிடம் அவ்வளவு பெரிய வாக்குறுதியை வாங்கிக் கொள்ள வேண்டிய அவசியம் என்ன? அவனுக்கு யோசிக்கும் சக்தியே நசிந்து விட்டது.

டியர் ஆர்த்தி!

நீ எங்கள் வீட்டிற்கு வருவாய் என்றும், வராவிட்டால் குறைந்த பட்சம் கடிதமாவது எழுதுவாய் என்றும் கடந்த பதினைந்து நாட்களாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன் திடீரென்று நீ ஏன் இப்படி மாறிப்போய் விட்டாய் என்று எனக்குப் புரியவில்லை. நான் பண்ணிய தப்பு என்ன? நான் உனக்கு என்ன கஷ்டத்தை ஏற்படுத்தி விட்டேன்? நீ ஏன் இதுபோல மௌனமாகி விட்டாய்? நீ எங்கள் வீட்டிற்கு வரமாட்டாய். நான் வந்தால் கூட வீட்டிலேயே இருந்து கொண்டே சமையல்காரி மூலமாய் இல்லை என்று சொல்லி அனுப்பி விடுகிறாய். நான் பண்ணிய தீங்கு என்னவென்று எனக்கு புரியலே இல்லை. ஒருக்கால் என்னையறியாமலேயே ஏதாவது தவறிழைத்திருந்தால் என்னை மன்னிக்கும்படி மனப்பூர்வமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

நேருக்கு நேராய் வந்து நின்று என் தப்பைச் சுட்டிக் காட்டு. என்னைக் கண்டபடி திட்டு. உன்னிஷ்டப்படி என்ன வேண்டுமானாலும் பண்ணு. என்னை விட்டு இதுபோல மௌனமாய், தொலைவிற்கு மட்டும் போய் விடாதே! தினமும் நீ வருவாய், அல்லது உன் அழைப்போ உன் கடிதமோ வரும் என்று நம்பிக் கொண்டிருக்கும் என் ஆசைதான் என்னை இந்த துன்பத்தை தாங்க வைத்துக் கொண்டிருக்கிறது. ஒரு முறை என் முன்னால் வந்து, நடந்ததைச் சொல்லி விட்டு, என்னை இந்த நரக வேதனையிலிருந்து மீட்கச் செய்! ப்ளீஸ்! நேற்று நான் ஜெயந்தியின் வீட்டிற்குப் போனேன். அங்கே நீ எதிர்ப்படுவாயோ என்ற ஆசையோடு நீ காலையிலேயே வந்துவிட்டுப் போய்விட்டதாய்ச் சொன்னாள் ஜெயந்தி.



நீ முன்போல் இல்லை என்றும், எதற்காகவோ வருத்தத்தோடு குமுறிக் கொண்டிருக்கிறாய் என்றும், காரணத்தைக் கேட்டால் எதுவும் சொல்லுவதில்லை என்றும் ஜெயந்தி சொன்னாள். ஆர்த்தி! நீ எந்த வருத்தத்திற்காவது ஆளாகியிருந்தால் அதற்கெல்லாம் காரணம் நான்தான் என்று தோன்றுகிறது.

உன் வீட்டிற்கு நேராய் வந்து, உன் கையைப் பிடித்து இழுத்து, உண்மையைச் சொல்லும்வரை உன்னைவிடக் கூடாது என்று ஆவேசமாய் இருக்கிறது. ஆனால் எனக்குத் தெரியும், நான் அப்படி முரட்டுத்தனமாய் நடந்து கொண்டால் இன்னும் கோபம் வரும் என்று! அதனால்தான் தயங்குகிறேன். என் பொறுமையை எல்லாம் திரட்டிக் கொண்டு நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்

ஆர்த்தி, கடைசி முறையாய் கேட்கிறேன். என்னால் நேர்ந்த தவறு என்ன? உன்னால் கடிதம் எழுத முடியாவிட்டால் நாளைக்கு சாயந்திரம் ஆறு மணிக்கு பார்க்கிற்கு வா. அங்கே நாம் வழக்கமாய் உட்கார்ந்து பேசும் மரத்தடியில் சந்திப்போம். என்னை ஏமாற்றத்திற்குள்ளாக்காதே! இது கடைசிக் கடிதம். இதோடு என் பொறுமையெல்லாம் தளர்ந்து விட்டது. இனி நான் கௌரவத்தைப் பொருட்படுத்த மாட்டேன்! நேராய் உங்கள் வீட்டிற்கே வந்து விடுவேன்!

உன்னைப் பார்க்க விடாமல் உன் தாயாலோ தகப்பனாராலோ என்னைத் தடுத்துவிட முடியாது! நான் மிகப் பிடிவாதக்காரன்! நீ நாளை மாலை கண்டிப்பாய் பார்க்குக்கு வா! வந்து 'குட்பை' என்று ஒரு சின்ன வார்த்தையாவது சொல்லிவிட்டுப் போ. என்னை இந்த நரகத்திலிருந்து விடுவித்த புண்ணியத்தைக் கட்டிக்கொள். உனக்கு என்னை எந்தக் காரணத்தால் பிடிக்காவிட்டாலும் சரி சங்கோஜமில்லாமல் சொல்லிவிடு.

"தேவையில்லை."

"போகட்டும், பொண்ணைக் கூட அழைத்துக் கொண்டு போங்கள்."

"தேவையில்லைன்னு சொல்லவில்லை? நான் என்ன சின்னக் குழந்தையா பத்து தடவை சொல்லித் தருவதற்கு? எனக்குத் தெரியாதா?'

ஏற்கனவே பலவீனமாய் இருந்த சுமித்ராவுக்கு இப்பொழுதெல்லாம் வெறுமே கோபம் வரத் தொடங்கிற்று. வீட்டு எஜமானி சள்ளென்று விழுந்ததால் சமையல்காரி மறு பேச்சுப் பேசாமல் போய்விட்டாள்.

விஜயராகவன் வீட்டில் இல்லை.

காருக்காகக் காத்திருந்தால் எங்கே போகிறாய் என்று கேட்பான் என்றெண்ணிய சுமித்ரா வீதியில் வந்து டாக்ஸி பிடித்துக் கொண்டு புறப்பட்டாள்.

ஒரு மாதத்திற்குள் அவளிடந்தான் எவ்வளவு மாறுதல்! அவள் வயது, அனுபவம், ஆர்வம் அத்தனையும் வடிந்து போய்விட்டதோ! மனதில் தனிமை! ஆர்த்தி கூட அவளுக்கு இல்லாமல் போய் விடுவாளோ? முடியாது. அவள் உடலில் உயிருள்ள வரை அவ்வாறு நடக்காது. ஆர்த்திக்கு வரப்போகும் கணவன் தனக்கு மகன் இல்லாத குறையைத் தீர்க்கக் கூடிய ஆளாய் இருக்க வேண்டும் என்றும், மருமகனே மகன் என்றும் அவள் என்றோ தீர்மானித்துக் கொண்டு விட்டிருந்தாள். ஆர்த்தியின் குடும்பத்தில் அவள் குழந்தைகளோடு தானும் ஒரு குழந்தையாய் கவலையில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கலாம் என்று கனவு கண்டு வந்தாள்! அது சிதைந்துப் போய் விடக்கூடாது. தீய கனவாகி விடக்கூடாது. நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று என்ற துரதிர்ஷ்டம் அவளுக்கு ஏற்பட்டு விடக்கூடாது.



சுமித்ராவின் டாக்ஸி பார்க்கிற்கு முன்னால் வந்து நின்றது.

அவள்தான் முதலில் வந்திருந்தாள். ஹேமந்த்தை அந்த சுற்று வட்டாரத்தில் எங்கேயுமே காணவில்லை.

எதிரே சிறுவர் சிறுமிகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

சுமித்ரா அவர்களைப் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். ஹேமந்த்திற்கு என்னவென்று சொல்லலாம்? அந்த மனதில் ஆர்த்தியின் மேல் ஏற்பட்டுப் போயிருந்த அன்பு என்ற மொக்கைக் கிள்ளி எறிவது எப்படி? இதனால் அவனுக்கு நஷ்டம் ஏற்படக் கூடாது. எதிர்காலம் பாழடைந்து விடக்கூடாது.

சுமித்ரா எழுந்து பார்க்கில் அங்குமிங்கும் நடக்கத் தொடங்கினாள். குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் வரை ஒரு கட்டம் என்றால் திருமணம் பண்ணிவைப்பது இன்னொரு கட்டம்! அவர்கள் மனம் குன்றிவிடாமலும், தாய்தந்தையர் மீது கௌரவம் போகாமலும் இருக்க வேண்டுமானால் மிக சவனமாய், திறமையோடு அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் ஆர்த்தி ஹேமந்தோடு பேசமாட்டேன் என்று அவளுக்கு வாக்குறுதி கொடுத்து விட்டு அதற்குக் கட்டுப்பட்டு இருக்கிறாள். ஆனால் அவ்வாறு கட்டுப்படுவதற்கு அவள் எவ்வளவு மனம் வருந்திக் கொண்டிருக்கிறாள் என்பதை அறியாதவள் அல்லதான்! அவர்களின் சுயேச்சையான மனதைச் சிறைப்படுத்துவது சாமானியமானது அல்ல. அந்தக் கட்டுப்பாட்டைத் தாங்க முடியாமல் அவர்கள் எளிதில் மனத்தளவில் சிதறிப் போய் விடுவார்கள்

ஹேமந்த்திற்கு எந்த விதத்தில் எடுத்துச் சொல்லலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தாள் சுமித்ரா.

மசமசவென்று இருள் கவ்விக் கொண்டு வந்தது.

தொலைவில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களின் தோற்றம் மங்கலாய் மறைந்து அவர்கள் உடை மட்டும் வெள்ளையாய் தெரிந்து கொண்டிருந்தது. சுமித்ரா மரத்தில் சாய்ந்தபடி நின்றாள்.

தொலைவிலிருந்து ஒரு ஆள் அரக்கப் பரக்க இந்தப் பக்கமாகவே வந்து கொண்டிருந்தான்.

அவன் நடை திடீரென்று ஓட்டமாய் மாறிற்று.

அவன் ஹேமந்த் என்று சுமித்ரா தெரிந்து கொண்டாள்.

தொலைவிலிருந்து மரத்தடியில் பெண் உருவம் தென்படவே, ஹேமந்த்திற்குத் தலைகால் புரியாத சந்தோஷம் வந்து சேர்ந்தது.

அவன் கடிதம் எழுதிவிட்டானே தவிர ஆர்த்தி வருவாள் என்ற நம்பிக்கை கொஞ்சமும் இல்லை.

அதனால் தான் அவன் வியந்து போனான்.

அவனுள் ஆனந்தம், ஆச்சரியம், ஆவேசம், உத்வேகம் அத்தனையும் வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தன.

அவன் நடை ஓட்டமாய் மாறிற்று!

கிட்டே வந்த அவன் திடீரென்று வாய் வார்த்தை புரளாமல் அப்படியே நின்று விட்டான்.

மரத்தில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தது ஆர்த்தி இல்லை, சுமித்ரா! விக்கித்துப் போய் நின்றுவிட்ட அவனுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. திணறத் தொடங்கினான்.

''ஹேமந்த்.'' சுமித்ரா தானே கூப்பிட்டாள்.

''நமஸ்காரம் ஆன்ட்டீ.'' அளவுக்கு மீறிக் கலவரமடைந்து விட்டான். தன் கடிதத்தை ஆர்த்தி படிக்கவில்லையா? ஆன்ட்டியின் கையில் சிக்கிவிட்டதா? இதென்னது? அந்தப் பாழாய்ப் போனவன் நேராய் ஆர்த்தியின் கையில் தான் கொடுத்து விட்டு வந்தேன் என்று சொன்னானே!



''உட்காரு ஹேமந்த்.'' சுமித்ரா பசும்புல்லில் உட்கார்ந்து கொண்டாள். ஹேமந்த் உட்கார்ந்து கொண்டான்.

''ஆபீசு வேலையெல்லாம் எப்படி இருக்கு?'' கேட்டாள்.

''எப்பொழுதும் போல்தான் இருக்கு, எந்த மாறுதலும் இல்லை.''

அவன் பார்வை எங்கோ இருந்தது.

அவன் முகத்தைப் பார்த்தால் சுமித்ராவுக்கு இரக்கமாய் இருந்தது.

அவன் வருத்தத்திற்கெல்லாம் காரணம் தான்தான் என்ற விஷயம் நினைவிற்கு வந்து இன்னும் கலங்கத் தொடங்கினாள்.

''நீ ஆர்த்திக்கு எழுதிய கடிதம் கிடைத்தது ஹேமந்த்!'' சாதாரண குரலில் தான் சொன்னாள்.

அவன் சரேலென்று நிமிர்ந்து பார்த்தான்.

சுமித்ராவின் பார்வை எங்கோ இருந்தது.

''ஆர்த்தி கடிதத்தைக் கொண்டு வந்து என்னிடம் தந்தாள். 'என்ன பண்றது மம்மீ' என்றாள். நான் போய் ஹேமந்த்தோடு பேசுகிறேன் என்று சொன்னேன்!''

அவன் கேட்டுக் கொண்டிருந்தான்.

அவன் விரல்கள் பசும் புற்களைப் பிடுங்கிக் கொண்டிருந்தன.

அந்த வயதில் காதல் விஷயத்தில் எவ்வளவு வேகம் இருக்குமோ அத்தனைக்கத்தனை பெரியோர்கள் அதைத் தெரிந்து கொண்டு விசாரிக்கும் போது வெட்கமாகவும் இருக்கும்.

ஆர்த்தி தென்பட்டால் என்னென்னவோ பேச வேண்டும் என்ற துடிப்பில் இருந்தான். ஆனால் சுமித்ராவோடு பேச அவன் சித்தமாயில்லை.

''ஹேமந்த்! நான் உன்னிடம் ஒரு விஷயத்தைத் தெளிவாய்ச் சொல்லி விட வேண்டும் என்றுதான் வந்தேன்.''

''சொல்லுங்கள் ஆன்ட்டீ.''

''உனக்கும் ஆர்த்திக்கும் கல்யாணம் நடக்கும் என்று நான் ரொம்பவும் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தேன். உங்கள் இருவருக்குமிடையே நெருக்கம் உண்டாக வேண்டும் என்று கூட ஊக்கம் காட்டினேன். ஆனால் அவ்வாறு பண்ணியது தவறு என்று தெரிந்து விட்டது. அதனால் நானே சுயமாய் உன்னிடம் மன்னிப்புக் கேட்கதான் வந்திருக்கிறேன்!''

''எதனால் எங்க கல்யாணம் நடக்காது என்கிறீர்கள் ஆன்ட்டீ? காரணம் என்ன? என் மூலம் ஏதாவது தவறு நேர்ந்து விட்டதா?''

''இல்லை.''

''பின்னே?''

சுமித்ரா பதில் சொல்லவில்லை.

''நீங்க காரணம் சொல்லுங்க ஆன்ட்டீ! நான் திரும்பவும் உங்க கண்ணிலேயே படாமல் போயிடறேன்.''

''காரணமா?'' சுமித்ரா பதிலை தேடிக் கொண்டிருந்தாள்.



ஹேமந்த் ஆவேசத்தோடு சொன்னான்— ''என் நடவடிக்கையைப் பற்றியோன்னு நினைக்கிறேன்! ஆனால் நான் ஐதராபாத்திலிருந்து வந்தபோது இருந்ததை விட இப்போது நல்லவனாய் தான் இருக்கிறேன். அந்த நல்ல மாறுதலுக்கு நீங்கள் தான் காரணம். அந்தஸ்தைப் பற்றி என்றால் அப்பொழுதை விட இப்பொழுது நான் நன்றாய்தான் இருக்கிறேன். இந்த வழக்கில் ஜெயித்ததால் சொத்துகள் கூட வந்துடுத்து. பின்னே நான் அருகதையை இழந்தது எதிலோ?''

சுமித்ரா பதில் பேசவில்லை.

''ஒருக்கால்...ஒருக்கால் நீங்கள் என்னை விட நல்ல சம்பந்தத்தை உங்க பெண்ணுக்குப் பண்ண நினைத்தால் அதைக் கூட நான் மறுக்கவில்லை! ஆனால் ஆர்த்தி சுயமாய் என்னிடம் அந்த விஷயத்தைச் சொல்லணும். ஆர்த்தி தான் இஷ்டப்பட்டுதான் மணந்துக் கொள்கிறேன் என்று தானாகவே வந்து சொல்லும்வரை நான் நம்பமாட்டேன். இதெல்லாம் உங்களுக்குக் காரணமில்லா விட்டால்—வேறு ஏதாவது தடையாயிருந்தால் உங்களுக்குக் கையெடுத்துக் கும்பிடுகிறேன். அந்தத் தடையை நீங்கள் பொருட்படுத்தாதீர்கள். எங்களைப் பிரித்து விடாதீர்கள்! ப்ளீஸ்!''

சுமித்ரா ஆடாமல் அசையாமல் நின்று விட்டாள். தான் சொல்ல வேண்டியதைச் சொல்லுவதற்குள்ளாகவே அவன் அவள் மனதிலிருந்ததைச் சொல்லி விட்டான். இவன் எங்கள் திருமணதிற்குத் தடையாயிருப்பது என்ன என்று உலுக்கி எடுக்கிறானே! கடவுளே! இந்தக் குழந்தைக்கு என்னவென்று சொல்லுவாள்? சுமித்ரா பேசாமடந்தையாய் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஹேமந்த் எழுந்திருந்தான். ''வரேன் ஆன்ட்டீ! நான் மாமாவோடு பேசறேன். உங்களைப் பார்த்தால்

ஏதோ வெளியில் சொல்ல முடியாத வருத்தத்தில் ஆழ்ந்திருப்பதைப் போலிருக்கு.'' என்றான்.

## 27

''ஹேமந்த்! நில்! போகாதே! இந்த விஷயத்தில் உங்க மாமாவால் உனக்கு எந்த பதிலும் சொல்ல முடியாது.'' சுமித்ராவும் எழுந்திருந்தாள்.

''சொல்ல முடியாதா? மாமா எதையும் சொல்லத் தயங்கவே மாட்டார். எந்த விஷயத்தையுமே பாரபட்சம் இல்லாமல் கச்சிதமாய்ச் சொல்லிவிடுவார்!''

''சொல்ல மாட்டார் ஹேமந்த்! அவரால் சொல்ல முடியாது. கடவுளால் கூட அவரை இந்த விஷயத்தில் ஒரு வார்த்தை கூடச் சொல்ல வைத்து விடமுடியாது.''

''ஏன் ஆன்ட்டீ? என்னதான் ஆச்சு?''

''ஹேமந்த்...''

ஹேமந்த் ஆசையாய், பரபரப்போடு அவள் சொல்லப் போகும் வார்த்தைகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

''ஹேமந்த்...'' சுமித்ரா கீழே உட்கார்ந்து கொண்டாள்,

ஹேமந்த் கூட உட்கார்ந்தான்.

''உனக்கு...உனக்கு இதைச் சொல்லக் கூடாதுன்னே நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஆர்த்திக்கு நீ எழுதிய கடிதத்தைப் பார்த்த பிறகு என் மனதை இரண்டு பக்கங்களிலுமாய்ப் போட்டு ரம்பத்தால் அறுக்கிறாப் போல இருக்கு.''



''உங்க மனதில் உள்ள துன்பத்தை என்னிடம் சொல்லி விடுங்கள் ஆன்ட்டீ. நாமிருவருமாய்ச் சேர்ந்து இதற்கு என்ன பரிகாரம் பண்ணலாம்னு பார்ப்போம்.''

''இதற்குப் பரிகாரம் என்பதே கிடையாது''

''நான் நம்பலை ஆன்ட்டீ. எப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையாயிருந்தாலும் அதற்குப் பரிகாரம் இருந்து தீரும்.'' அவன் சுமித்ராவையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சுமித்ரா குரல் நடுங்கச் சொன்னாள்—''நீ...நீ ஆர்த்தியைக் கல்யாணம் பண்ணிக்கிறேங்கிறது உன் தங்கையைக் கல்யாணம் பண்ணிக்கிறாப் போல்தான் ஆகும் ஹேமந்த்!''

'சீ.' அவன் சீற்றமடைந்தான்.

சுமித்ராவின் தொண்டையே வெடித்துக் கொண்டு வெளிவந்தாற் போலிருந்தது குரல்— ''இது உனக்கு எவ்வளவு வருத்தமாயிருக்கும்னு எனக்குத் தெரியும். நீ படும் துன்பத்திற்கு ஆயிரம் மடங்கு அதிகமாய் அழுது விட்டேன் நான்.'

''சீ! இதென்ன ஆன்ட்டி இப்படிப் பேசறீங்க? ஆர்த்தி எனக்கு எப்படி தங்கை ஆவாள்?''

''ஆர்த்தியின் தந்தைக்கு இன்னொரு பெண்ணோடு சம்பந்தம் இருந்தால், அந்தப் பெண்ணின் மகன் ஆர்த்தியைக் கல்யாணம் பண்ணிக்கறேன் என்றால், அந்தப் பையனுக்கு ஆர்த்தி என்னவாவாளோ, அந்த உறவுக்கு என்ன பெயர் வைப்பாயோ சொல்லு?''

அவன் முகம் வெல வெலத்து விட்டது.

''ஆன்ட்டீ! சீ, சீ! யார் சொன்னது இந்த வார்த்தைகளை? யாராவது வேண்டாதவர்கள் இதைச் சொல்லி

யிருந்தால் நாலு அறை கொடுத்து வாயை மூடச் செய் திருக்க வேண்டிய நீங்கள்...''

''ஹேமந்த்! ஒரு நிமிஷம் உட்காரு! ப்ளீஸ்! நான் சொல்லுவதைப் பொறுமையாய்க் கேளு! இது கிட்டாத வர்கள் ஏற்படுத்திய அபவாதம் மட்டும் இல்லை! நான் கண்ணாரக் கண்டேன். காதாரக் கேட்டேன். அதைக் கேட்டதிலிருந்து என் இதயமே வெடித்து விட்டது ஹேமந்த்! எனக்கு சாவு ஏன் வரலைன்னுதான் தெரி யலை! ஒருக்கால் நான் ...நான் ஆர்த்திக்காகவே தான் பிழைதேனோ என்னவோ! அவள் கல்யாணம் வேறு யாரோடாவது ஆகி முடியும் வரை என் பிராணன் போகாது'' சுமித்ரா முழங்காலில் தலையைப் புதைத்துக் கொண்டு அழத் தொடங்கினாள். அந்த அழுகை மெது வாய் தொடங்கினாலும், திடீரென்று கட்டுமீறிக் கொண் டாற்போல பெருத்த ஓசையாகி விட்டது.

ஹேமந்த் குழப்பமடைந்தவனாய், பார்க்கத் தொடங் கினான்!

அவனுக்கு மூளையே கலங்கி விட்டாற்போலிருந்தது.

சுமித்ரா சொன்னதை அவனால் நம்ப முடியவில்லை

தன் தாயும், மாமாவும்—உண்மையா? சீ, சீ! பொ பொய்! என்று மனம் ஆக்ரோஷித்துக் கொண்டிருந்தது உண்மையாய் இல்லாவிட்டால் ஆன்ட்டி ஏன் இவ்வள வருந்த வேண்டும்? அவளுக்கு திடீரென்று உடம்பு கெட ஆள் உருமாறி தளர்ந்து போனதற்குக் காரணம் இ தானா?

அவன் மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது. சுமித்ராவி அழுகையைப் பார்த்தபோது அவனுக்கும் அழுகை வ தொடங்கிற்று.

''ஆன்ட்டீ! ப்ளிஸ்! அழாதீங்க.'' அவன் செ னான்.



''ஆன்ட்டீ.'' அவளைப் பிடித்துக் கொண்டான்.

''ஹேமந்த்—'' சுமித்ரா அந்த நேரத்தில் சிறு பெண் ணைப்போல அவனைப் பிடித்துக் கொண்டு கதறித் தீர்த்து விட்டாள்.

''ப்ளீஸ்.'' பரிவோடு தேற்றினான்.

''நான் என்னென்னவோ யோசனை பண்ணி வந் தேன். என்னென்னவோ கனவுகள் கண்டு வந்தேன். உங்கள் கல்யாணத்துக்கு நான்தான் ஊக்கமளித்தேன். பிடிவாதமாய் இருந்தேன்...ஆனால்...ஆனால்... எனக்கு தெரியாது. இந்தக் கல்யாணம் அவர்கள் இருவருடைய திட்டம்! நான் முட்டாள்! என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. நாம்ப மதுரைக்குப் போனபோதுகூட எனக்கு ஒன்றுமே தெரியாது. எவ்வளவு கள்ளமில்லாமல் வீட்டை விட்டுட்டு வந்தேன் நிச்சிந்தையாய்! அங்கே உங்களோடு கழித்துக் கொண்டிருந்தேன். வீட்டில் சமையல்காரி இல்லை. ஆனாலும் நான் எதுவும் தப்பாய் நினைத்துக்கவில்லை. ஆனால்...ஆனால்...''

எதைச் சொல்லி அவளைத் தேற்றுவான் அவன்? எந்தப் பெண்ணால் தான் இதைத் தாங்கமுடியும்?

''இந்த விஷயம் ஆர்த்திக்குத் தெரியுமா?'' கேட்க முடியாமல் கேட்டான்.

சுமித்ரா தெரியாது என்று தலையாட்டினாள்.

''சொல்ல முடியலை. அது என்னால் ஆகாது! என்னை அவள் எத்தனையோ முறை உலுக்கி எடுத்து விட்டாள். வேறு கல்யாண சம்பந்தம் பார்த்தபோது பண்ணிக்க மாட்டேன்னு மறுத்துவிட்டாள்.

ஹேமந்த் பெருமூச்செறிந்தான்.

''ஆன்ட்டீ! நீங்க வருந்தாதீங்க. இதை சரி பண் ணக்கூடிய வழி இருக்கான்னு பாருங்க.''

''இல்லை ஹேமந்த்! என்னால் முடியாது. நீ என்னைக் கோபித்துக்காதே. என்னைப் புரிந்துகொள்! இந்தக் கல்யாணம் அவ்விருவரும் நெருக்கமாவதற்காகப் போடப்பட்ட உபாயம்! உலகத்தார் கண்ணில் மண்ணை வாரிப் போடுவதற்காகப் பண்ணப்பட்ட திட்டம்! நான் ஒரு கோழை என்று எண்ணிவிட்டார்கள். என்னைத் தடுத்து விடலாம் என்றெண்ணிக் கொண்டார்கள். என் உடம்பில் உயிருள்ள வரை அது மட்டும் நடக்காது. ஆர்த்திக்கு தாய் நான்! என் உயிர் அவள்தான்! உங்கள் இருவரின் கல்யாணத்துக்காக நான் எவ்வளவோ முயற்சி பண்ணினேன். ஆனால்...ஆனால்... அதைப் பார்க்க முடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டு விட்டன எனக்கு.''

ஹேமந்த் ஆழ்ந்து பெருமூச்சு விட்டான்.

அவன் கலக்கம் கொஞ்சம் தணிந்து போனது உண்மையே இந்த திருமணத்திற்குத் தடை அவன் மேலுள்ள எந்தக் குறையாலும் ஏற்படவில்லை. அது அவனுக்கு மன துணிச்சலைத் தந்தது. ஆனாலும் அவனுக்கு மகிழ்ச்சியாய் இல்லை. அதையும் மீறிய வருத்தம் இன்னொன்று தொடங்கி விட்டது. அது இதயத்தை சம்மட்டியால் அடித்தாற்போல இருந்தது.

தன் தாயும், மாமாவும்! அவனால் இன்னும் நம்ப முடியவில்லை. இது சாத்தியமா? ஆன்ட்டி அவசரப்பட்டு முடிவெடுத்து விடவில்லையே! அவன் மனம் இன்னும் துடிதுடித்துக் கொண்டேயிருந்தது.

சுமித்ரா கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

தோளில் நழுவிய சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டாள். கீழே விழுந்து கிடந்த கைப்பையை எடுத்துக் கொண்டாள்.

''நேரமாயிடுத்து, நான் வரேன் ஹேமந்த்.'' எழுந்தாள்.



''வாங்க, போகலாம்.'' அவனும் எழுந்தான்.

இருவரும் நடந்தவாறு கேட்டைத் தாண்டி வெளியே வந்தார்கள்.

ஹேமந்த் டாக்ஸியைக் கூப்பிட்டான்.

அது கிட்டே வந்து நின்றது.

சுமித்ரா அதில் ஏறி உட்கார்ந்தாள்.

ஹேமந்த் டாக்ஸியின் கதவைச் சாத்தப் போனபொழுது சுமித்ரா தடுத்தாள்.

''ஹேமந்த்! நான் உன்னை ரொம்பவும் வருத்தப் படுத்திட்டேன்னு தெரியும். ஆனால் எனக்கு வேறு வழி தெரியவில்லை. நீ சின்னவன். மன்னிக்கும்படி கேட்க முடியாது என்னால்?''

சுமித்ராவின் கண்களில் கண்ணீர் சுழன்றது.

''ஆன்ட்டீ! நீங்க அப்படி எண்ணாதீங்க ... உங்கள் வருத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டதற்கு எனக்கு சந்தோஷமாய் இருக்கு'' டாக்ஸிக் கதவை சாத்தப்போன அவன் நின்றான்.

''ஆன்ட்டி! இதை ஆர்த்திக்கு மட்டும் சொல்லாதீர்கள், தேவையானால் நானே சொல்கிறேன்.''

சுமித்ரா சரி என்று தலையாட்டினாள்.

அவன் டாக்ஸிக் கதவைச் சாத்தி விட்டான்.

டாக்ஸி போய் விட்டது.

சுமித்ரா சீட்டில் பின்னுக்குச் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள். கண்களிலிருந்து பொங்கிய கண்ணீர் இமைகளைத் தாண்டி, கீழே உருண்டு விழுந்தது.

கண் முன்னால் தீனமாய் வேதனையாய் இருந்த ஹேமந்த்தின் முகம் நிழலாடிற்று

சுமித்ராவின் இதயம் இரக்கத்தால் உருகிவிட்டது.

ஆனால் ஒன்றும் பண்ணமுடியாத நிலைமை!

'ஹேமந்த்திற்கு நல்ல பெண்ணாய்ப் பார்த்து வேறு கல்யாணம் பண்ணி வைக்கிறேன்.' என்றெண்ணிக் கொண்டாள்.

ஹேமந்த்திடம் சொல்லி விட்டதால் சுமித்ராவின் மனம் லேசாகி விட்டாற் போலிருந்தது.

சுமித்ரா ஏறிப் போன டாக்ஸி மறைந்ததும் ஹேமந்த் மனதில் பெரிய பாரம் அழுத்தத் தொடங்கிற்று. அவன் தெருவில் நடக்க தொடங்கினான். அவன் நரம்புகளில் மெல்ல மெல்ல கோபம் புஸ்புஸ்ஸென்று தலைக்கேறிக் கொண்டிருந்தது. அது பாம்பின் சீற்றத்தைப் போல் படமெடுத்துக் கொண்டிருந்தது. அவன் கண் முன்னால் பல காட்சிகள் சுழலத் தொடங்கின.

ஐதராபாத்தில் தந்தை போனது, விஜயராகவன் வந்தது, தாய் அழுதது!

பிறகு - பிறகு அவன் வந்து போவது அதிகமானது, அவன் அவ்வப்பொழுது பணம் அனுப்பிக் கொண்டிருந்தது, இங்கே வந்துவிட ச் சொல்லி பலவந்தப்படுத்தியது, எத்தனையோ காட்சிகள்! புதிய புதிய காட்சிகளாய் கண் முன்னாடி சுழன்று கொண்டிருந்தன!

இதுவா அவர்களின் நாடகம்!

சீ, சீ! ஆனாலும் இதென்ன புத்தி!

அம்மாவுக்கு என்னவாகி விட்டது! அம்மா—மாமா—

அவன் மனம் வெட்கத்தாலும் அவமானத்தாலும் துன்புற்றுக் கொண்டிருந்தது.

ஹேமந்த் கடற்கரைக்கு முன்னால் நின்றான். அவன் மனமெல்லாம் இருட்டு! காரிருள்!

# 28

ஹேமந்த் சுற்றிச் சுற்றி அலைந்து விட்டு வெகு தாமதமாய் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

''எங்கே போயிட்டாய் அப்பா, எவ்வளவு நேரமாய் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கேன்.'' என்றாள் பரமேஸ்வரி

ஹேமந்த் பதில் பேசவில்லை. அவனுக்கு யாருடனும் பேசப் பிடிக்கவில்லை.

''பறிமாறுகிறேன், சீக்கிரமாய் சாப்பிட வா.'' என்றாள் சமையலறையை நோக்கிப் போய்க்கொண்டே. ஹேமந்த் அறைக்குள் வந்தான்.

உடைமாற்றிக் கொள்ளப் போன அவன் சட்டென்று அப்படியே நின்று விட்டான்.

அந்த அறையில் மேஜை மேலிருந்த ஆஷ்ட்ரேயில் சிகரெட் சாம்பல்கள் நிரம்பி வழிந்து கொண்டிருந்ததைப் பார்த்தான். கூடை நிறைய ஆப்பிள்கள் இருந்தன. விஜயராகவன் வரும்போதெல்லாம் ஏதாவது வாங்கிக் கொண்டு வரத்தவற மாட்டான். சமையலறையிலிருந்து பரமேஸ்வரியின் குரல் இரைந்து கேட்டுக் கொண்டிருந்தது.

''அம்மா ஒருத்தி இருக்காளே அவளுக்காக சீக்கிரமாய் வீட்டுக்குத் திரும்பி வருவோங்கிற எண்ணமே கிடையாது உனக்கு! ஆபீஸிலேருந்து நேராய் வீட்டுக்கு வரக் கூடாதோ?''

ஹேமந்த் அந்த ஆஷ்ட்ரேயையும் ஆப்பிளையுமே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''காலையில் போனவன் தான்! வீட்டில் எவ்வளவோ வேலைகள் இருக்கும். பொம்பிள்ளை நான், என்னால் எதைப் பார்த்துக்க முடியும்! அந்த எதிர்த்த வீட்டுப் பையனைப்பாரு, தாய் தகப்பனை எவ்வளவு கண்ணுங் கருத்துமாய்ப் பார்த்துக்கிறான்னு!'' பரமேஸ்வரி நொந்துக் கொண்டாள்.

ஹேமந்த் லுங்கியையும், ஹேங்கரில் மாட்டியிருந்த சட்டையையும் எடுத்துக் கொண்டான்.

உடை மாற்றிக் கொண்டு வந்து நாற்காலியில் அமர்ந்தான்!

அவனுக்குத் தலையே வெடித்து விடும்போல வேதனையாய் இருந்தது. அங்கே பார்க்கில் அவனும் ஆன்ட்டியும் பேசிக் கொண்டிருந்தபோது, இங்கே இவர்களிருவரும் சரஸமாடிக் கொண்டிருந்தார்கள் போலிருக்கிறது...! அவன் கண் முன்னால் அழுது கொண்டிருந்த சுமித்ராவின் முகம் தென்பட்டது! தாயையும் சுமித்ராவையும் பக்கத்துப் பக்கத்தில் நிறுத்தி வைத்துப் பார்த்துக் கொண்டான். தாய் ஒல்லியாய் இருந்தாள். புடைவை கட்டல், தலையலங்காரம் போன்றவற்றில் சிரத்தை எடுத்துக் கொண்டிருந்தாள்.

அழகு என்று குறிப்பிட வேண்டுமானால் ஆன்ட்டி தான் ஒரு படி மேல். பின்னே மாமாவுக்கு புத்தி ஏன் இப்படிப் போகவேண்டும்! ஹேமந்த்திற்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது! சீ, சீ, இவர்களும் மனிதர்களா!

பரமேஸ்வரி கைகளைத் துடைத்துக் கொண்டே அவ்வறைக்குள் வந்தாள்.

''தட்டில் சாதத்தைப் பறிமாறி விட்டேன். இன்னும் ஏன் இப்படியே உட்கார்ந்திருக்கே?''

''எனக்குப் பசி இல்லை.''



''பசி இல்லையா? ஏன்? ஏதாவது ஓட்டலுக்குப் போயிருப்பாய். கண்டதையெல்லாம் சாப்பிட்டு விட்டு சாப்பாட்டை ஒதுக்கினால் உடம்பு கெட்டுப்போகாதோ?''

ஹேமந்த் பதில் பேசவில்லை.

''கொஞ்சமாவது சாப்பிடு.''

''பசிக்கலைன்னு சொல்லிட்டேன்.''

அவன் குரலில் தென்பட்ட எரிச்சலைப் பார்த்து பரமேஸ்வரி தணிந்தாள்.

ஹேமந்த்தின் முகத்தைப் பார்த்துவிட்டு, அதற்கு மேல் சாதித்துக் கொண்டிருக்காமல், உள்ளே போய் தம்ளரில் பாலையும் ஒரு தட்டில் ஆப்பிள் துண்டுகளையும் எடுத்து வந்து அவனுக்கு முன்னால் வைத்தாள்.

ஹேமந்த் தட்டிலிருந்த ஆப்பிள் துண்டுகளைப் பார்த்தான்.

''ஆப்பிள் ஏது?''

''மாமா அனுப்பினார்.''

''அவர் வரலையா?''

''ஊஹூம், டிரைவரிடம் கொடுத்தனுப்பினார்.''

ஹேமந்த்திற்கு ஆத்திரம் மண்டிற்று. ஏன் இந்தப் பொய்! யாரை ஏமாற்றுவதற்காக!

''ஏன் அப்படி இருக்கிறாய்? ஆபீசில் ஏதாவது ரகளையா?''

பரமேஸ்வரி மகன் முகத்தைப் பார்த்துச் சந்தேகத்துடன் கேட்டாள்.

''ஒரு ரகளையுமில்லை.''

''பால் ஆறிப் போவதற்கு முன்னால் குடி.'' பரமேஸ்வரி மகனின் படுக்கையைத் தட்டி சரி செய்தாள்.

ஹேமந்த் ஆப்பிள் துண்டுகள் இருந்த தட்டை ஆத்திரத்துடன் தள்ளி விட்டான்.

பரமேஸ்வரி திடுக்கிட்டுப் பார்த்தாள் அவனை.

ஹேமந்த் கோபத்தில் மூச்சிரைக்கச் சொன்னான்—

''இனிமேல் மாமா ஏதாவது அனுப்பினால் வாங்கிக் கொள்ளாதே. நம்மால் வாங்கிக்க முடியும்னு சொல்லு!''

பரமேஸ்வரி விநோதமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நாம்ப அவர்கள் வீட்டுக்குப் போக வேண்டாம். அவர்களும் நம்ப வீட்டுக்கு வரத்தேவையில்லை. அவர்... அவர் மட்டும் இங்கே வந்தாரானால் என்னால் சும்மாயிருக்க முடியாது.'' ஹேமந்த் ஆஷ்ட்ரேயில் இருந்த சிகரெட் சாம்பலை ஜன்னல் வழியாய் வெளியே தட்டி விட்டான். அவனுக்கு மிக ஆத்திரமாய் இருந்தது. அவமானமாகவும் இருந்தது! பரமேஸ்வரி விக்கித்துப்போய், பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நான்...நான் அந்த உத்யோகத்தை விட்டுடப் போறேன். நாம்ப ஐதராபாத்துக்குப் போயிடலாம்.''

''உனக்கு, புத்தி கித்தி கலங்கிடுத்தா?''

''ஆமாம். பைத்தியம் பிடித்துடுத்து. என்னோடு எதுவும் பேசாதே! பேசினால் பைத்தியக்காரன் பிதற்றினாற் போலத்தான் இருக்கும் என் பதில்.'' அவன் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான்.

பரமேஸ்வரி வெகு நேரம் வாயைத் திறக்கவேயில்லை. பிறகு சன்னமான குரலில் கேட்டாள்.

''ஹேமந்த்! என்னதான் ஆச்சு, சொல்லு!''

''ஒன்றுமாகலை.''

''ஏன் இப்படி இருக்கிறாய்?''



''எனக்கு உடம்பு சரியாயில்லை.''

''டாக்டரிடம் போவோமா?''

''தேவையில்லை.''

கொஞ்ச நேரம் மௌனம் சாதித்து விட்டுத் திரும்பிக் கேட்டான்—

''கொஞ்சம் பாலாவது குடி.''

''தேவையில்லை.''

பரமேஸ்வரி அதற்குமேல் எதுவும் பேசவில்லை. அங்கிருந்து போய் விட்டாள்.

மறுநாள் ஹேமந்த் சொன்னபடியே நடந்து கொண்டு விட்டான் பேசாமல் உட்கார்ந்திருந்தான். ஆபீசுக்குப் போகவில்லை.

''ஆபீசுக்குப் போகலையா?' கேட்டாள் பரமேஸ்வரி.

''போகப் போறதில்லைன்னு ராத்திரியே சொல்லிட்டேனே அதான்.''

''இதென்ன உன் பிடிவாதமோ, எனக்குப் புரியவேயில்லை,'' என்று நொந்து கொண்டாள்.

ஹேமந்த் மௌனமாய் இருந்தான்.

''மாமாவுக்குப் போன் பண்ணட்டுமா?'' என்றாள்.

''அவர் பேச்சை என்னிடம் எடுத்தால் சும்மாயிருக்க மாட்டேன்'' சள்ளென்று விழுந்தான்.

சாப்பாடான பிறகு பரமேஸ்வரி கடைத்தெருவுக்குப் போனாள். ஹேமந்த் வீட்டில் தனியாய் இருந்தான்.

ஜெயந்தி வந்தாள்!

ஹேமந்த்தைப் பார்த்து வியப்படைந்தாள்.

''அட! நீங்க வீட்டில்தான் இருக்கீங்களா?'' என்றாள்.

ஹேமந்த் ஜெயந்தியின் வியப்பைக் கவனிக்கும் நிலையில் இல்லை உட்கார்ந்திருந்த அவன் சரேலென்று எழுந்து ஜெயந்திக் கெதிரே வந்தான்.

ஜெயந்தியின் கையிலிருந்த ஜூலியைத் தூக்கிக் கொண்டே—

''ஆர்த்தி கூட வந்திருக்காளா?'' என்றான்.

''வரவில்லை.'' என்றாள் ஜெயந்தி.

''உங்க வீட்டில் இருக்கிறாளா?'' பரபரப்போடு கேட்டான்.

''இல்லை! காலையில் எங்க வீட்டிற்கு வந்தாள்! 'ஒரு உதவி பண்ணித் தரணும் ஜெயந்தி' என்றாள். என்னவென்று கேட்டேன். 'இந்த ஜூலியை ஹேமந்த் வீட்டில் விட்டுவிட்டு வரணும்' என்றாள். 'சரி'யென்றேன் 'மத்யான வேளையில் போ, ஹேமந்த் வீட்டில் இருக்கமாட்டார்' என்று சொன்னாள்.''

ஹேமந்த் முகம் அதைக் கேட்டதுமே வெலவெலத்துப் போயிற்று. சட்டென்று தேறிக் கொள்ள முயன்றபடி ஜூலியின் தலையைத் தடவிக் கொடுக்கத் தொடங்கினான்.

அவன் கைக்கு அதன் சடைகளுக்கிடையே ஏதோ தட்டுப்பட்டது. ஜூலியின் கழுத்தைத் தூக்கிப் பார்த்தான்!

ஜூலியின் கழுத்திலிருந்த சடையோடு மெல்லிய கயிற்றில் சின்னக் காகிதத்துண்டு கட்டப்பட்டிருந்தது.

ஹேமந்த் அதை இழுத்துப் படித்தான்.

''ஹேமந்த்! என்னை மறந்து விடுங்கள்! குட்பை!'' என்று ஆர்த்தியின் கையெழுத்தில் இருந்தது. அந்த வாக்கியங்களைப் பார்த்ததுமே அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தாற்போல வேதனை ஏற்பட்டது.



''உட்காரு ஜெயந்தி.'' என்றான் சிரிப்பை வரவழைத்துக் கொண்டே.

''உங்கம்மா வீட்டில் இல்லையா?''

''இல்லை, கடை வீதிக்குப் போயிருக்காள். வந்துவிடுவாள். உட்காரு, உனக்கு பிரியாணி என்றால் இஷ்டந்தானே, எங்கம்மா பண்ணியிருக்கிறாள். இரு, கொண்டு வரேன்.'' ஜூலியைத் தூக்கிக் கொண்டே சமையலறைக்குப் போய் பிளேட்டில் கொஞ்சமாய்ப் போட்டு எடுத்து வந்து தந்தான்.

''ஜூலி! உனக்குப் பால் தரேன் வா.'' என்று அதைத் தூக்கிக் கொண்டு போனான்.

ஜூலியை டைனிங் டேபிள் மேல் உட்காரவைத்து பிளேட்டில் பாலை ஊற்றி, அதற்கு முன்னால் வைத்தான்.

அது பாலைக் குடித்துக் கொண்டிருக்கும்போது மளமளவென்று சின்ன சீட்டில்—

''ஆர்த்தி! நீ என்னை மறந்து போனாலும் என்னால் உன்னை மறக்க முடியாது! திருமணத்திற்கானால் பெரியவர்களின் சம்மதம் வேண்டும். சிநேகத்திற்கு அது தேவையில்லையே! நாமிருவரும் எப்பொழுதும் சிநேகிதர்கள் தாம்! சிநேகம் என்றால் ஒருத்தர் துன்பத்தை இன்னொருத்தர் புரிந்து கொள்வது!''

''ஹேமந்த்! குடிக்கத் தண்ணீர் வேணும்!'' ஜெயந்தி கத்தினாள்.

''வரேன்.'' சரேலென்று எழுந்திருந்தான். எழுதிய சின்னத் துண்டு காகிதத்தைத் திரும்பவும் ஜூலியின் கழுத்தில் கட்டினான். அதன் சடைகளை நீவி அதை மறைத்தான்!

ஜெயந்தி அவ்விடத்திற்கு வந்தாள். ஜூலி நாக்கை நக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்து விட்டு—

''ஆஹா! அதிர்ஷ்டம் என்றால் உன் அதிர்ஷ்டத்தை தான் சொல்லணும் ஜூலி!'' என்றாள்.

''ஜெயந்தி! ஒரு சின்ன உதவி பண்ணித்தரணும்.''

''என்ன?''

''இந்த ஜூலியை எடுத்துக் கொண்டு போய் ஆர்த்தியிடமே தந்து விடு.''

''ரொம்ப அழகாய்த்தான் இருக்கு. ஆர்த்தி உங்களுக்கு அனுப்பினால் நீங்கள் அவளுக்கே திருப்பி அனுப்புகிறீர்களா?''

''ஆர்த்திக்கு என் மேல் கோபம் வந்துடுத்து. ஆனாலும் ஜூலி என்னிடம் இருக்காது.''

''இதையே அவளிடம் கூட சொன்னேன் நான்''

''நானும் சொன்னதாய்ச் சொல்லு! கோபம் வந்தால் அதை என் மேல் வேறெந்த விதமாய் வேண்டுமானாலும் காட்டிக் கொள், ஆனால் ஜூலியை மட்டும் இம்சிக்காதேன்னு சொல்லு. பாவம், வாயில்லா ஜீவன், அதென்ன பண்ணிடுத்து?''

''இதுக்கு வாயில்லாமலா? இப்பத்தானே அத்தனை பாலையும் குடித்தது?'' என்று சிரித்துக் கொண்டே அதன் வாலைப் பிடித்து ஆட்டினாள் ஜெயந்தி. அது 'பௌ.' என்று கத்திற்று.

ஹேமந்த் சிட்டிகை பண்ணி சமாதானப்படுத்தினான்.

''வாயில்லையாம்.'' ஜெயந்தி சிரித்தாள்.

''என்னவோப்பா! உங்கள் ஊமை சம்பாஷனையே எனக்குப் புரிபடவில்லை! உண்மையில் உங்கள் மேல்

கோபம் வந்தால் சந்திக்காமல் சும்மாயிருக்க வேண்டியது. அதை விட்டுட்டு உங்களைப் பற்றி எதுக்காகத் துப்புத் துலக்கணும் ஆர்த்தி?'' என்றாள் ஜெயந்தி.

''என்ன சொன்னாள்?''

''நான் உங்களைப் பார்த்ததைப் பற்றிச் சொன்னேன் அன்றைக்கு. உடனே அவள் அதிலிருந்து ஹேமந்த் எப்படி இருக்கார்? கலகலப்பாய் இருக்காரா? இளைத்து விட்டாரா? என்னைப்பற்றி என்னென்ன கேட்டார்? என்று ஆயிரம் கேள்விகள் கேட்டு என் உயிரை வாங்குகிறாள்!''

ஹேமந்த் உதடுகளில் ஜீவனற்ற புன்னகையொன்று தவழ்ந்தது.

''இதப்பாருங்கள்! திரும்பவும் இந்த நாயைத் தூக்கிக் கொண்டு போகச்சொல்லி ஆர்த்தி அடம் பிடித்தால் நான் உங்கள் வீட்டு வாசலில் இதைக் கட்டிப் போட்டுட்டுப் போயிடுவேன்'' என்று எச்சரித்து விட்டுப் போனாள் ஜெயந்தி. ஹேமந்த் தலையாட்டினான்.

அவன் ஜெயந்தியை அனுப்பிவிட்டு திரும்பி உள்ளே வந்தான். ஆர்த்தி எழுதிய எழுத்துக்களை இன்னொரு தடவை படிக்க தொடங்கினான்.

அவனுக்கு திடீரென்று தோன்றத் தொடங்கிற்று. இந்தப் பெரியவர்கள் யாருமே இல்லாத தூரப் பிரதேசத்திற்கு தாம் இருவரும் மட்டுமே ஓடிப்போய் விட்டால்? அவன் துணிந்து விடுவான்! ஆனால் ஆர்த்தி ஒப்புக் கொள்வாளா?

'சுமித்ரா! என்னம்மா இது? ஆர்த்திக்கும் ஹேமந்த்துக்கும் தான் கல்யாணம் நிச்சயம் பண்ணினீர்கள். இப்பொழுது திரும்பவும் வேறொரு சம்பந்தம் பார்க்கச் சொல்கிறாயே, ஏன்? என்னதான் ஆச்சு?'' என்று கேட்டார் கோபாலசுவாமி.

''ஒன்றும் ஆகலை பெரியப்பா! அந்த சம்பந்தம் நடக்காது, அவ்வளவுதான்! நாம்ப என்னென்னவோ நினைக்கிறோம்! கல்யாணம் போன்ற விஷயங்களில் உங்களுக்குத் தெரியாதது வேறென்ன இருக்கு? தாலி கட்டுகிற வரைக்கும் வந்துட்டு நின்று போயிருக்கிற கல்யாணங்கள் கூட உண்டு.'

''அது நிஜந்தான்னு வை! ஆனாலும் ஏதாவது அழுத்தமான காரணம் இருந்து தீரணும் இல்லையா?''

''காரணம் எதாய் இருந்தால் என்ன? நீங்கள் அந்த கோயம்புத்தூர் டாக்டர் பையனைப் பற்றி விசாரித்துப் பாருங்கள்.''

''அதைப் பற்றி விசாரிக்க எனக்கொண்ணும் தடை இல்லைம்மா! ஆனால் ஹேமந்த்தோடு நிச்சயமான கல்யாணம் ஏன் நடக்கவில்லைன்னு கேட்டால் நான் என்ன பதில் சொல்றதுன்னு தான்.''

''எதையாவது சொல்லுங்கள். நீங்கள் பெரியவர். அனுபவசாலி. உங்களுக்கு யோசனையை நான் சொல்லி தரணுமா?''

''என்னத்தைச் சொல்றதுன்னு நான் யோசிக்கிறேன். நான் சொல்ற பதில் பொருத்தமாய் இருக்க வேண்டாமா? பொய் சொல்றதாய் தெரிந்துடக்கூடாது இல்லையா.''

சுமித்ரா ஒரு வினாடி யோசித்து விட்டுச் சொன்னாள். 'ஆர்த்தியின் விருப்பத்தைத் தெரிந்து கொள்ளாமல் நாங்கள் இந்தக் கல்யாணத்தை நிச்சயம் பண்ணினோம் என்றும் ஆர்த்தி மறுத்து விட்டாள் என்றும் சொல்லுங்கள்.''

''சரி, பார்க்கிறேன். இந்த விஷயத்தில் ராகவன் அபிப்பிராயம் என்ன?'' என்றார் அவர் சந்தேகத்தோடு.

''என் அபிப்பிராயந்தான் அவர் அபிப்பிராயமும்?'' என்றாள் சுமித்ரா.

''சரி, வரேன்'' என்று எழுந்திருந்தார் அவர்.

''நாளைக்கே அந்தக் கோயம்புத்தூர்க்காரரிடம் போங்கள் பெரியப்பா.'' சுமித்ரா அவரை வழியனுப்ப வாசல்வரை வந்தவள் சொன்னாள்.

''சரி, சரி! பையன் பார்க்க நன்றாய்தான் இருப்பான். நான் பேசுவதற்கு முன்னாடி ஒரு தரம் ராகவன் அந்தப் பையனைப் பார்த்துட்டால்...''

''அவருக்கு ஒழிவு எங்கே பெரியப்பா? ஆயிரம் விவகாரங்கள்! உங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தால் நான் பார்க்கிறேன். இதில் எந்தத் தப்பும் இல்லையே! இந்தக் காலத்தில் ஆண்களுக்கு ஓய்வு ஒழிச்சல் ஏது? பெண்கள் தான் இந்தப் பொறுப்பை யெல்லாம் பார்த்துக்கணும். அவரிடம் சொன்னால் இதோ, அதோன்னு ஒரு மாதம் இழுத்தடித்து விடுவார். அந்தப் பையனைப் பற்றி நீங்கள் விசாரியுங்கள். நமக்குச் சொத்து சுதந்திரம் வேண்டாம். பையன் புத்திசாலியாய் இருந்தால் போதும்''

''ஒரு தடவை ராகவனோடு கூடப் பேசிட்டால்...'' அவர் மென்று விழுங்கினார்.

"நான்தான் சொல்லிட்டேனே, அவர் ஒப்புக்குத் தான் எல்லாமே!"

"சரி, நீ இவ்வளவு தூரம் சொல்றதால் விசாரிக்கிறேன்." என்று சொல்லி விட்டுப் போய் விட்டார் அவர்.

அதற்குள் சுமித்ராவின் நெற்றியில் வியர்த்துக் கொட்டத் தொடங்கி விட்டது. புடைவைத் தலைப்பால் ஒற்றிக் கொண்டே அவரை அனுப்பி விட்டுத் திரும்பி வந்தாள் உள்ளே.

சுமித்ரா உள்ளே திரும்பி வந்தபோது படுக்கையறை வாசலில் விஜயராகவன் நின்று கொண்டிருந்தான்

அவன் சுமித்ராவை வினோதமாய், கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

சுமித்ராவும் அவனைப் பார்த்தாள். ஆனால் சிறிதளவு கூட பரபரப்படைய வில்லை. கண்களில் கோபத் தீ சுடர் விட்டுக் கொண்டிருந்தது. அவனைக் கவனிக்காதது போல உள்ளே போகத் திரும்பினாள். விஜயராகவன் மனைவி உள்ளே போக முடியாதபடி கைகளைக் கதவிற்குக் குறுக்காய் நீட்டிக் கொண்டான். மனைவியை மேலும் கூர்ந்து பார்த்தான்.

"இவ்வளவு பொய் பேச எப்பொழுது கற்றுக்கொண்டாய்?" என்றான்.

கோபத்தை அடக்கிவைத்துக் கொண்டிருந்தது அவன் குரலிலிருந்து நன்றாய் தெரிந்தது.

சுமித்ரா நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அக்கண்களில் கோபமும் ரோஷமும் போட்டியிட்டுக் கொண்டிருந்தன.

''உலகத்தில் பொய் பேசாத பெரிய மனுஷர்களே கிடையாது. எல்லோருக்குமே அந்தக் கலை வரும்.'' அந்தப் பதில் அவன் பொறுமையைத் தகர்த்தெறியக் கூடிய கூரிய கத்தியாய் இருந்தது.

''மூடு வாயை! வேறெந்த விஷயத்தில் வேண்டுமானாலும் உன்னிஷ்டப்படி பண்ணிக்கொள், வேண்டாங் கலை! ஆனால்...ஆனால் ஆர்த்தி கல்யாண விஷயத்தில் மட்டும்...''

''உங்கள் அதிகாரத்தை என்னால் தாங்கிக்க முடியாது. ஆர்த்தியின் கல்யாணம் என்னிஷ்டப்படிதான் நடக்கும்! இந்த விஷயத்தை அன்றே கச்சிதமாய் சொல்லிவிட்டேன் நான்.''

''புத்தியில்லாமல் பேசாதே. இப்ப திடீரென்று வேறு சம்பந்தம் பார்த்தால் எல்லோரும் என்ன நினைத்துப்பார்கள்?''

'யாரோ ஏதாவது நினைத்துப்பார்கள் என்றெண்ணிக்கொண்டு என் கழுத்தில் நான் சுருக்கை மாட்டிக்க மாட்டேன்.''

''உனக்கு புத்திதான் கலங்கிப் போயிருக்கு!''

''நிஜந்தான்! அதையே உண்மை என்று நினைத்துக் கொள்ளுங்கள் ஆர்த்தி கல்யாணம் ஆன பிறகு, என்னை ஏதாவது ஆஸ்பத்திரியில் சேர்த்து விடுங்கள். உங்களுக்கு நிச்சிந்தையாய் இருக்கும்.'' சுமித்ராவின் கண்களில் கிர்ரென்று நீர் ததும்பிற்று. சட்டென்று முகத்தை திருப்பிக் கொண்டாள்.

''உனக்கு நிஜமாகவே ஏதோ பைத்தியந்தான் பிடித்திருக்கு! இல்லாவிட்டால் இதெல்லாம் என்ன? நான் வீட்டில் இருக்கும்போதே கோபாலசுவாமியிடம் நான் இல்லைன்னு சொல்லி விட்டாய். என்னிடம் சொல்லா

மலேயே ஆர்த்திக்கு வேறு சம்பந்தம் பார்க்கச் சொல்கிறாய்! உனக்கு என்மேல் ஏதாவது கோபம் இருந்தால் அதை என் மேலேயே காட்டு. ஆர்த்தியை ஏன் கஷ்டப் படுத்துகிறாய்? அவள் நீ பார்த்துட்டால் மாததிரம் வேறு சம்பந்தத்தை ஒப்புக் கொண்டு விடுவாள் என்று நினைத்துட்டாயா? பார்! ஒரு தடவை அவள் முகத்தைப் பார்! எப்படி இருக்குன்னு பார்!''

விஜயராகவன் சுமித்ராவின் கையைப் பிடித்து தரதர வென்று படுக்கையறைக்கு இழுத்துச் சென்றான். அங்கே மேஜைக்கு முன்னால் தலையில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த ஆர்த்தி காலடியோசை கேட்டு நிமிர்ந்து பார்த்தாள் அக்கண்கள் வெகு நேரமாய் அழுது கொண்டிருந்தாற்போல உப்பியிருநதன.

விஜயராகவன் ஆவேசத்தால் திணறியபடி சொன்னான்— ''பார்! இந்த ஆர்த்தி நம்ப ஆர்த்திதானா? எப்படி சிரித்து துள்ளிக் கொண்டிருப்பாள்! இப்ப எப்படி ஆயிட்டாள் பார். நீ ஒரு தாய்தானா? உனக்குக் கண் இருக்கா?''

சுமித்ரா பதில் பேசவில்லை. மகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்! தீனமாய் இருந்த ஆர்த்தியின் முகத்தைப் பார்த்ததுமே சுமித்ராவின் கண்களில் துக்க வெள்ளம் குபுக்கென்று பொங்கி வந்தது.

''ஆர்த்தி! உனக்கு...உனக்கு என் மேல் கோபமாய் இருக்கா?'' என்றாள்.

ஆர்த்தி இல்லை என்று தலையாட்டினாள்.

''உண்மையைச் சொல்லு ஆர்த்தி! நான் உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதே உனக்காகத்தான்! நீ கூட என்னை ஒரு தடங்கலாய் எண்ணினால்...உன்னை நான் கஷ்டப்படுத்தறேன்னு நினைத்துட்டால்...'



''மம்மீ! ப்ளீஸ்! அப்படிப் பேசாதே! நீ எது பண்ணினாலும் என் நன்மைக்காகத்தான் பண்ணுகிறாய்னு நினைப்பேன்'' ஹீனஸ்வரத்துடன் பதிலளித்தாள் ஆர்த்தி.

''நான் உன்னை ரொம்பக் கஷ்டப்படுத்தறேன்னு தெரியும் எனக்கு. இது எனக்கு மட்டும் சந்தோஷமாய் இருக்குன்னு நினைத்து விட்டாயா? இத்தனைக்கும் காரணம் உங்கப்பாதான்! ஆர்த்தி! இவ்வளவு வருஷங்களாய் இவரோடு குடித்தனம் நடத்தியிருக்கேனேயொழிய இவர் மனதை மட்டும் என்னால் புரிஞ்சுக்க முடியாமல் போயிடுத்து! நடுத்தர வயது வந்துட்டால் மனைவி கணவனுக்கு உபயோகமற்ற பெயருளாய் ஆகி விடுவாள் என்று எனக்குத் தெரியாமல் போயிடுத்து. தெரிந்திருந்தால் நான் உயிரை வைத்துக் கொண்டிருந்திருக்க மாட்டேன்.'' சுமித்ரா ஆவேசத்துடன் மூச்சிரைக்கக் கத்தினாள்.

''ஆர்த்தி! உங்கம்மாவுக்கு என்னவாயிடுத்தோ தெரியலை எனக்கு! அவள் வார்த்தைகளைக் கேட்டால் பொறதல்ல எனக்குப் பைத்தியம் பிடித்துடும் போலிருக்கு! நீ எதிரேயிருந்தால் மேன்மேலும் பேசிக்கொண்டேயிருக்கிறாள். நீ அப்பால் போ!'' என்று மகள் கையைப் பிடித்து இழுத்து அறைக்கு அப்பால் தள்ளினான். ஆர்த்தி மறுப்பேச்சுப் பேசாமல் போய்விட்டாள்.

சுமித்ரா மடை திறந்தாற்போல வந்த அழுகையை அடக்கிக்கொள்ள விஸ்வப்பிரயத்தனம் பண்ணிக் கொண்டிருந்தாள்!

விஜயராகவன் மகளை அடுத்த அறைக்கு அனுப்பி வைத்து விட்டு மனைவியிடம் வந்தான்.

''சுமி! என்னவாச்சு உனக்கு? ஏன் இப்படி மாறிட்டாய்? உன் மனதிற்குள் எந்தப் பிசாசு புகுந்து கொண்டு இப்படி உன்னை ஆட்டி வைக்கிறதோ தெரியவில்லை.

இந்த முக்காட்டிற்குள் புகுந்து கொண்டு ஏன் இப்படி வாட்டி எடுக்கிறாய்? உன் மனதில் என்ன இருக்குன்னு நேருக்கு நேராய், கேட்டு விடக்கூடாதா என்னை?'' என்றான்.

சுமித்ரா பதில் பேசவில்லை.

விஜயராகவன் திரும்பவும் சொன்னான்.

''உன் மனதில் என்ன இருந்தாலும் சரி, அது என்னை எவ்வளவு தூரம் கஷ்டப்படுத்தினாலும் சரி, இந்தக் கல்யாணம் மட்டும் நடந்தே தீரும். நீ அனாவசியமாய் இந்த விஷயத்தில் என்னோடு போராட்டத்தில் இறங்காதே!''

''என் உடம்பில் உயிர் இருக்கும் வரை இந்தக் கல்யாணம் நடக்காது. உங்களை நடத்த விடமாட்டேன்.''

''அவர்கள் இருவரும் ரெஜிஸ்தர் மேரேஜ் பண்ணிக் கொண்டு விட்டால் உன்னால் என்ன பண்ணி விட முடியும்?''

''நீங்கள் அந்தக் காரியத்தைப் பண்ணி வைத்துவிட வல்லவர் என்றும் தெரியும் எனக்கு. ஆனால் ஆர்த்தி அந்த மாதிரி காரியத்தைப் பண்ணமாட்டாள்.''

''என்ன நம்பிக்கை உனக்கு?''

''அவள் எனக்கு வாக்கு தந்திருக்கிறாள்!''

''ஹேமந்த்தை நீ ஏன் வேண்டாம் என்கிறாய்?''

''என் மகளின் வாழ்க்கை என் இஷ்டம்! ஹேமந்த்தை எதற்காகப் பண்ணிக்கணும்?''

''அழகாயிருக்கு! நாம்ப அப்படி நினைத்துக் கொண்டு விட்டோம் அல்லவா?''



''நாம்ப என்று என்னையும் சேர்த்துக்காதீர்கள். நீங்கள் நினைத்தீர்கள். அப்படி நினைப்பதில் உங்கள் மகளின் எதிர்காலத்தைக் காட்டிலும் உங்கள் சுகத்தை தான் அதிகமாய்ப் பார்த்துக் கொண்டீர்கள்! மனதில் விஷத்தை வைத்துக் கொண்டு அவர்களை என் வீட்டிற்கு அழைத்து வந்தீர்கள்! உங்கள் லாயர் மூளையால் என்னை ஏமாற்றிவிட்டீர்கள்.''

''மூடு வாயை!'' சுமித்ராவின் கன்னம் அதிர்ந்தது.

அடுத்த அறையிலிருந்து தாய் தந்தையரின் போராட்டத்தைக் களையிழந்த முகத்தோடு செவிமடுத்துக் கொண்டிருந்த ஆர்த்தி, அந்த அறை தனக்கே ஏற்பட்டாற்போல அசந்து விட்டாள்! அடுத்த நிமிஷமே செருப்பை மாட்டிக் கொண்டு விடுவிடென்று அந்த வீட்டை விட்டு ஓடத் தொடங்கினாள்,

## 30

வீட்டை விட்டு வெளியேறிய ஆர்த்திக்கு எங்கே போவது என்று புரியவில்லை. அம்மாவுக்கும் அப்பாவுக்கும் என்னவாகி விட்டது? ஏன் இப்படி சண்டை போட்டுக் கொள்கிறார்கள்? இவ்வளவு நாளாய் வீட்டில் எவ்வளவு சந்தோஷமாய் இருந்தது? சாப்பாட்டு வேளையில் தந்தை எவ்வளவு நன்றாய் ஜோக்கடித்துக் கொண்டிருப்பார்! அம்மா எவ்வளவு சந்தோஷமாய் வாய் விட்டுச் சிரித்துக் கொண்டிருப்பாள்! இப்பொழுது எல்லாம் தாறுமாறாகி விட்டது! அம்மாவும் அப்பாவும் பேசிக் கொள்வதையே விட்டு விட்டார்கள்! அம்மா முன்னைப்போல அப்பா கோர்ட்டிலிருந்து வந்ததுமே ''இந்தா காப்பி'' என்று எடுத்துக் கொண்டு போய் தருவதில்லை. அப்பாவும் அதேபோல்தான்!

பல நாட்கள் இரவு நேரத்தில் வீட்டில் சாப்பிடுவதே இல்லை. சாப்பிட்டாலும் சமையல்காரிதான் பறிமாறினாள். அம்மா சாப்பாட்டு விஷயத்தையே மறந்து போய் விட்டாற்போல இருக்கிறாள்! எப்பொழுது கூப்பிட்டாலும் பசி இல்லை என்கிறாள்! அவள் ஒருத்தி மட்டும் டைனிங் டேபிளுக்கு முன்னால் சாப்பிட உட்கார்ந்து கொண்டாலோ மனமெல்லாம் ஓவென்று கதறத் தொடங்கி விடுகிறது!

அவ்விருவரையும் அப்படிச் சண்டை போட்டுக் கொள்ள வேண்டாம் என்று யாரால் எடுத்துச் சொல்ல முடியும்? ஹேமந்த் என்றாலே அம்மாவுக்கு ஏன் வெறுப்பு ஏற்பட்டு விட்டது என்று கடவுளுக்கு மட்டுந்தான் தெரியும்? ஹேமந்துடன் பேசக்கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டு விட்டாள்.

திருமணத்தைப் பற்றிக்கூட அப்புறமாய்ப் பார்த்துக் கொள்ளலாம்! முதலில் அம்மாவும் அப்பாவும் பழையபடி ஆகிவிட்டாலே போதும் என்றிருந்தது!

கைப்பையை எடுத்துக் கொண்டு நடந்து போய்க் கொண்டேயிருந்த ஆர்த்தி எதிரே தென்பட்ட சிறு குன்றின் மேலிருந்த முருகன் கோவிலின் படிகளில் ஏறினாள்.

எல்லோருடனும் சேர்ந்து தானும் போய் முருகனை தரிசித்து வணங்கி விட்டு வந்தாள்! குன்றின் மேலிருந்து பார்த்தபோது அப்பொழுது தான் எரியத் தொடங்கிய விளக்குகளின் வெளிச்சத்தில் நகரம் ஒளிமயமாய் தென்பட்டுக் கொண்டிருந்தது. எறும்புகள் வேகமாய் ஊர்ந்துச் சென்றாற்போல கார்கள் சென்று கொண்டிருந்தன. சில நாட்களுக்கு முன் இதே இடத்திற்கு அவள் தாய், தந்தை, ஹேமந்த் மூவருடனும் வந்த காட்சி கண் முன் நிழலாடிற்று!



அம்மா இப்பொழுது வீட்டில் என்ன பண்ணிக் கொண்டிருப்பாள் என்று தெரியும் அவளுக்கு. கட்டிலில் படுத்து அழுது கொண்டிருப்பாள்! அப்பா கிளப்பிற்குப் போய் விட்டிருப்பார்! அம்மா என்றுமே அழ மாட்டாள். அழுதால் எப்படித் தேற்றவேண்டும் என்று ஆர்த்திக்குக் கூட தெரியாது. வீட்டில் மயான அமைதி பரவியிருக்கும்! முன்பெல்லாம் சாப்பிட்ட பிறகு ரிகார்டுகளைப் போட்டுக் கேட்பார்கள்.

தந்தைக்கு ஃபாரின் மியூஸிகல் ரிகார்டுகள் என்றால் இஷ்டம். அம்மாவுக்குத் தியாகராஜ கீர்த்தனைகள் பிடிக்கும். தந்தை அம்மாவை அழவைப்பதற்காக அவளோடு சேர்ந்து கொண்டு ஃபாரின் மியூசிக்கிற்குத் தகுந்தாற்போல ஸ்டெப்புகள் போடுவார்! சில முறை நாற்காலியில் உட்கார்ந்திருக்கும் அம்மாவை பலவந்தமாய் கையைப் பிடித்து இழுத்து வந்து தன்னோடு சுற்றச் செய்வார். தந்தையின் குறும்புத்தனத்தையும் அம்மாவின் வெட்கத்தையும் பார்த்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அவள் கலகலவென்று கை கொட்டிச் சிரிப்பாள்!

மெல்ல மெல்ல பரமேஸ்வரி ஆன்ட்டி வந்த பிறகு இந்த விதமான வேடிக்கை விளையாட்டுகள் எல்லாம் குறைந்து போய் விட்டன. வீட்டில் வேற்று மனுஷி இருக்கிறாள் என்ற தயக்கம் அந்த வேடிக்கை விளையாட்டுக்களையும் சிரிப்புக்களையும் குறைத்து விட்டது. அவ்விருவரையும் சண்டை போடாமல் இருக்கும்படி எப்படிச் சொல்வது என்றுதான் அவளுக்குத் தெரியவில்லை.

ஆர்த்தியின் மனமெல்லாம் திகில் சூழ்ந்து வேதனையாய் இருந்தது. அதற்குள் "ஆர்த்தி!" என்ற அழைப்பு கேட்டது. வேறு சிந்தனையுடன் நகரத்தையே உற்றுப் பார்த்தபடி நின்று கொண்டிருந்த ஆர்த்தி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்!

ஜனக் கூட்டத்திற்கிடையே யிருந்து ஹேமந்த் கையை ஆட்டிக் கொண்டே இந்தப் பக்கமாய் விடுவிடென்று வந்து கொண்டிருந்தான்.

ஆர்த்தியின் முகம் ஒரு வினாடி அவனைப் பார்த்ததுமே சந்தோஷத்தால் மலர்ந்தது.

அவளும் கையைத் தூக்கி ஆட்டினாள்!

ஆனால் சட்டென்று தாய்க்குக் கொடுத்த வாக்குறுதி நினைவிற்கு வந்து விட்டது!

சரேலென்று திரும்பி வேகமாய் அடியெடுத்து வைத்து குன்றிலிருந்து இறங்கி ஜனப்பிரவாகத்தில் கலந்து விட்டாள்!

ஓட்டமும் நடையுமாய் படியிறங்கிக் கொண்டே திரும்பிப் பார்த்தாள்!

ஹேமந்த் கூட அதே வேகத்தில் ஓடிவந்து கொண்டிருந்தான்.

ஆர்த்தியின் நடை வேகம் அதிகரித்தது.

அவன் அவளைக் கூப்பிட்டுக் கொண்டே ஓடி வந்து கொண்டிருந்தான். அது காதில் விழாதது போலவே மளமளவென்று இறங்கிக் கீழே வந்தாள்.

அங்கே நின்று கொண்டிருந்த ஆட்டோவில் ஏறி உட்கார்ந்து கொண்டு ஆயாசத்துடன் "விடு டிரைவர்" என்றாள்.

டிரைவர் விநோதமாய்ப் பார்த்தாலும் சட்டென்று ஸ்டார்ட் பண்ணினான். ஆட்டோ வெகு தொலைவிற்கு வந்து சேர்ந்து விட்டதும் நிறுத்தச் சொன்னாள். ஆட்டோவிலிருந்து இறங்கி, பணம் கொடுத்தாள். ஆட்டோ போய் விட்டது.



அதைத் தொடர்ந்து இன்னொரு ஆட்டோ வந்து நின்றது.

அதிலிருந்து ஹேமந்த் இறங்கினான்.

ஆர்த்தி கலவரத்துடன் பார்த்தாள்!

மளமளவென்று நாலடிகள் எடுத்து வைத்து அப்பொழுதுதான் அந்த ஸ்டாப்பில் வந்து நின்று விட்டு நகரத் தயாராயிருந்த மாடிபஸ்ஸில் சட்டென்று ஏறி விட்டாள்

அது புறப்பட்டுக் கொண்டிருந்த போதே ஹேமந்த் வேகமாய் வந்து கம்பியைப் பிடித்து விட்டான். மயிரிழைத் தப்பியிருந்தால் கீழே விழுந்திருப்பான் அவன்!

அவ்விடத்திலேயே நின்று கொண்டிருந்த ஒரு பெரியவர் அவனுக்குக் கை சொடுத்தார் அவன் அதைப் பிடித்துக் கொண்டு உள்ளே ஏறி "தாங்க்யூ." என்றான்.

ஆர்த்தி அதற்குள் போய் சீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்திலிருந்த சீட் காலியாய் இருந்தது! ஹேமந்த் வந்து அங்கே உட்கார்ந்துக் கொண்டான்.

ஆர்த்தி அவனைக் கவனிக்காததுபோலவே வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஹேமந்த் கூட ஒன்றுமே பேசவில்லை.

கொஞ்ச நேரம் கழிந்தது.

ஹேமந்த்தின் கை மெதுவாய் நகர்ந்து ஆர்த்தியின் கைமேல் பட்டது! அந்தக் கையையும் அந்த ஸ்பரிசத்தையும் விரும்பினாற்போலவே—அதற்குக் கட்டுண்டாற்போலவே ஒரு நிமிஷம் அவன் கையோடு பிணைந்திருந்தாள்! அடுத்த நிமிஷமே ஏதோ நினைவிற்கு வந்து

விட்டவளாய் சரேலென்று விடுவித்துக் கொள்ளப் போனாள்! ஆனால் ஹேமந்த்தின் கை அதை விடவில்லை! உள்ளங்கைக்குள் சிறைப்படுத்தி அழுத்திப் பிடித்துக் கொண்டது. டிக்கெட் கலெக்டர் வந்தார்.

ஹேமந்த் இடது கையை பேன்ட் ஜேபிக்குள் விட்டுப் பணத்தை எடுத்து தந்து — ''கடற்கரை, இரண்டு டிக்கெட்டுகள், ப்ளீஸ்!'' என்றான்.

''நான் தரேன்.'' ஆர்த்தி கைப்பையை திறப்பதற்காகக் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள்.

ஆனால் ஹேமந்த்தின் கை ஆர்த்தியின் கையை விடவில்லை.

## 31

ஹேமந்த் ஆர்த்தியின் கையை அழுத்தமாய் பிடித்துக் கொண்டு கடற்கரையில் காலியாய் இருந்த இடத்திற்கு இழுத்து வந்து உட்கார வைத்தான். ஆர்த்தி ஹேமந்த் கையை விட்டதுதான் தாமதம் சரேலென்று எழுந்திருக்க போனாள்.

ஹேமந்த் இரண்டு கைகளாலும் ஆர்த்தியின் தோளை அழுத்தி எழுந்திருக்க முடியாமல் செய்தான்!

''ஆர்த்தி! நான் உன்னோடு சில விஷயம் பேசுவதற்காகத் தவிதவித்துக் கொண்டிருக்கிறேன். தயவு செய்து கேளு'' என்றான்.

ஆர்த்தி பதில் பேசவில்லை. அவன் கெஞ்சுவது போல—



''ஏதாவது துன்பம் ஏற்பட்டால் சிநேகிதர்களிடம் மனம் விட்டுச் சொல்லிக் கொண்டால் அந்த பாரம் குறையும்!''

''எனக்கு சிநேகிதர்கள் யாருமே கிடையாது.'' முகத்தைத் திருப்பிக் கொண்டாள் அவள்.

அவன் பெருமூச்செறிந்தான்.

''ஆல் ரைட் ஆர்த்தி! உனக்கு சிநேகிதர்கள் யாருமில்லாமல் போகலாம். ஆனால் நான் உன்னை என் சிநேகிதியாய் பாவிக்கிறேன். எனக்குத் துன்பம் ஏற்பட்டிருக்கிறது, அதை உன்னிடம் சொல்லிக் கொள்ளலாம் இல்லையா?''

''என்னிடம் சொல்லிக் கொள்வதால் எந்தப் பிரயோஜனமும் இல்லை.''

''பிரயோஜனம் இருக்கா இல்லையான்னு தெரியாது எனக்கு. ஆனால் என் மனதில் உள்ளதை உன்னிடம் சொல்லிக்க விரும்புகிறேன்''

''அதென்ன விஷயம்?'' பொறுமையின்றி, சீக்கிரமாய் போகத் தவித்தபடி கேட்டாள்.

''ஆர்த்தி, நம்மிருவருக்கும் நடக்கவிருந்த திருமணம் நின்று போய் விட்டதென்று உனக்குத் தெரியும்.''

ஆர்த்தி அதைக் கேட்டதும் சரேலென்று எழுந்திருக்கப் போனாள்.

அவன் பலவந்தமாய் திரும்பவும் உட்கார வைத்தான்.

''அதுக்கு நான் உன்னை சால்ஜாப்பு கேட்கவில்லை ஆர்த்தி? நம் பெரியவர்களுக்கிடையே நமக்குத் தெரியாத அபிப்பிராய பேதம் ஏதோ வந்துவிட்டது! நான் உன்

னைக் கேட்க விரும்புவது என்னவென்றால் அந்த அபிப் பிராய பேதம் என்னவென்று நாம்ப தெரிந்து கொண்டு, சரி பண்ணலாமா வேண்டாமா?''

''எனக்கென்ன தெரியும்?''

''நான் தெரிஞ்சுக்கறேன். அதற்கு உன் ஒத்துழைப்பு வேண்டும்.''

ஆர்த்தி பதில் பேசவில்லை. ஹேமந்த் ஆவேசமாய்ச் சொன்னான்.

''நமக்கிடையே இந்தப் பெரியவர்களின் அபிப்பிராயம் தடையாய் இருக்க வேண்டாம்! நம்மால் முடிந்த வரையிலும் அதைத் திருத்த முயற்சிப்போம்!'

''திருத்த முடியாவிட்டால்?''

அவன் ஒரு வினாடி பேசவில்லை.

''உங்களைத்தான்! திருத்தமுடியா விட்டால்?'' அவள் திருப்பிக் கேட்டாள் அழுத்தி.

''நாம்ப இவர்களை விட்டு தொலை தூரத்திற்குப் போய் விடுவோம்.''

அவன் நினைத்துக் கொண்டிருந்தாற் போல ஆர்த்தி எழுந்து நிற்கவில்லை. சட்டென்று ஓடிப் போய்விட முயற்சிக்கவில்லை.

யோசனையில் ஆழ்ந்தவளைப் போல உட்கார்ந்திருந் தாள்.

''இப்போதே, இங்கேயே எனக்கு பதில் சொல்ல வேண்டும் என்றில்லை, நன்றாய் யோசித்துச் சொல்.''

''என்னால் இனி யோசிக்க முடியாது ஹேமந்த்! யோசித்து யோசித்து என் தலை சிதறிவிடும் போலிருக்கு.



மம்மிக்கு என்னதான் ஆயிடுத்துன்னே புரியவில்லை எனக்கு! உங்கள் மேல் எந்த வெறுப்பும் இல்லை, ஆனாலும் இந்தத் கல்யாணம் வேண்டாம் என்று மறுக்கிறாள். அதான் எனக்குப் புரியவில்லை.''

ஹேமந்த் தலை குனிந்தான். அந்தச் சமயத்தில் அவனுக்கு இதயத்தில் பற்றியெரிந்து கொண்டிருந்த அந்த ரகசியத்தை ஆர்த்தியிடம் சொல்லி விட வேண்டும் போலிருந்தது. ஆனால் தைரியம் போதவில்லை. அது தெரிந்தால் ஆர்த்தியின் மனம் இன்னும் புண்படுமோ என்று தயங்கினான்.

''ஆன்ட்டி மேல் எனக்குக் கோபமே இல்லை. காரணம் இல்லாமல் இப்படிப் பண்ண மாட்டார்'' என்றான் மெல்லிய குரலில்.

''நம்மை இப்படி எதுக்குக் கொல்லணும்? நேருக்கு நேராய் அதென்ன காரணமோ சொல்லி விடலாம் இல்லையா? இந்தப் பெரியவர்கள் தோரணையே எனக்குப் புரியமாட்டேங்கிறது எல்லா விஷயத்திலும் நமக்குச் சுதந்திரம் தந்தாற்போலவே தந்து விட்டு, திரும்பவும் ஏதோ ஒரு இடத்தில் நம்ப வாழ்க்கையின் அதிகாரமெல்லாம் அவர்கள் கையில் தான் இருப்பதுபோல தீர்மானம் பண்ணுவார்கள். எங்க அம்மாவையே எடுத்துக் கொள்ளுங்கள்; எனக்கு விவரம் தெரிந்ததிலிருந்து ஒரு முறை கூட நான் கேட்ட எதையுமே மறுத்ததில்லை. எல்லா விஷயத்திலும் எனக்கு சகல சுதந்திரமும் தந்து வளர்த்தாள். ஆனால் என் வாழ்க்கையிலேயே மிக முக்கியமாய் எண்ணிக் கொண்டிருக்கும் இந்தக் கல்யாண விஷயத்தில் இப்படிப் பண்ணி விட்டாள்.''

''ஆன்ட்டி கூட ரொம்பவும் வருத்தப்படுகிறார் ஆர்த்தி!''

''எதுக்கு வருத்தப்படணுங்கறேன்? அது என்ன விஷயம்னு வெளியே சொல்லிட்டால் எவ்வளவு நிச்சிந்தையாய் இருக்கும்! ஹேமந்த்! இன்றைக்கு நான் எவ்வளவு தப்புப் பண்ணிட்டேன் தெரியுமா? உங்களோடு பேசமாட்டேன்னு அம்மாவுக்கு சத்தியம் தந்தேன். ஆனால் பேசிட்டேன். இந்த விஷயத்தை வீட்டுக்குப் போய் சொல்றேன்னு வைத்துக் கொள்ளுங்கள்; தன் மீது எனக்குப் பாசமே இல்லை என்று நினைத்துக் கொள்வாள் சொல்லாவிட்டாலோ அம்மாவை ஏமாற்றி விட்டதாய் ஆகிவிடும். நான் என்ன பண்றது?'' ஆர்த்திக்கு அழுகை வந்து விட்டது.

ஹேமந்த் ஆர்த்தியின் கையை தன் கையில் எடுத்துக் கொண்டான்.

ஆர்த்தியிடம் நிகழ்ந்து கொண்டிருந்த துவந்த யுத்தம் அவனுக்கு நன்றாகவே புரிந்தது.

''ஆர்த்தி! ப்ளீஸ்! அழாதே! அம்மாவுக்குத் தந்த வாக்கை நீ எங்கே தவறினாய்? நீயாகவே என்னோடு பேசவில்லை. இது என் பலவந்தம் இல்லையா? தப்பு என்னுடையதுதான்!''

''இல்லை. எனக்கு இஷ்டம் இல்லாமலிருந்திருந்தால் நீங்கள் எவ்வளவு பலவந்தப்படுத்தினாலும் பேசியிருக்க மாட்டேன்.''

அவன் பதில் பேச முடியாவனாய்ப் பார்த்தான்.

ஆர்த்தி தீனமாய்ப் பார்த்தபடி—''ஹேமந்த்! என்ன வாச்சுன்னு எனக்குத் தெரியவில்லை. ஆனால் நடக்கக் கூடாததுதான் நடந்திருக்குன்னு தோணுகிறது. அம்மாவும் அப்பாவும் இதற்கு முன்னால் மிக அந்நியோன்யமாய் இருந்து வந்தார்கள். இப்பொழுது அப்படியில்லை ஒருத்தரை யொருத்தர் எள்ளுங் கொள்ளும் வெடித்தாற் போல பார்த்துக் கொள்கிறார்கள்.



இருவரும் இரு வேறு துருவமாகி விட்டார்கள். எங்கம்மா உங்களோடு என் கல்யாணத்தை நடத்தக் கூடாது என்கிறாள். அப்பா இந்தக் கல்யாணத்தை நடத்தியே தீருவேன் என்கிறார். இந்த விஷயத்தில் நான் அம்மா பேச்சைக் கேட்பதா, அப்பா பேச்சைக் கேட்பதா நீங்களே சொல்லுங்கள்.''

ஹேமந்த் தர்மசங்கடத்தில் ஆழ்ந்தான்.

''ஆன்ட்டி அவ்வளவு தூரம் மறுக்கும்போது நீ உங்கள் அப்பாவின் பேச்சைக் கேட்கக்கூடாது'' என்றான்.

''அப்படீன்னால் அம்மா கோபாலசுவாமி மூலமாய் பார்த்துக் கொண்டிருக்கிற அந்த டாக்டர் பையனையே பண்ணிக்கச் சொல்கிறீர்களா என்னை?''

அவன் கண்கள் படபடத்தன.

''நான் அப்படிச் சொல்லவில்லை. ஏதாவது சாக்கில் அந்தக் கல்யாணத்தை ஒத்திப்போடு! அதற்குள் நாம்ப ஏதாவது ஒரு வழியைப் பார்த்துக் கொண்டு விடலாம்.''

''ஒத்திப் போடுவது என் கையிலா இருக்கு? எல்லாம் அம்மாவின் இஷ்டந்தானே! இதில் எங்கப்பாவைக் கூடப் பொருட்படுத்தவில்லை அம்மா. ஹேமந்த், உங்களுக்கு ஒரு ரகசியத்தைச் சொல்லட்டுமா?''

''சொல்லு!''

''அம்மா என்ன சொல்லுகிறாள் தெரியுமா? என் கல்யாணத்துக்காகவே அவள் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறாளாம். அந்தக் கல்யாணம் நடந்து முடிந்து விட்டால் அவளுக்கு உயிர் வாழவே பிடிக்காதாம்!''

ஹேமந்த் திடுக்கிட்டான்.

''ஆர்த்தி! அப்படீன்னால் அந்தக் கல்யாணமே ஆகக் கூடாது.'' கலக்கத்தோடு சொன்னான் அவன்.

''நான் கூட அப்படித்தான் நினைத்தேன். சரி, போகலாமா?''

ஆர்த்தி எழுந்தாள்.

''ஒரு நிமிஷம் உட்காரு ஆர்த்தி.'' அவன் கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

''வீட்டில் அம்மா தனியாய் இருக்கிறாள்.''

ஹேமந்த் கூட எழுந்தான்.

இருவரும் மெதுவாய் நடக்கத் தொடங்கினார்கள்.

''ஆர்த்தி.'' அவன் கூப்பிட்டான்.

''உம்!'' ஏதோ யோசனையில் ஆழ்ந்தபடியே பதில் கொடுத்தாள் அவள்.

''நாமே ஒரு தீர்மானம் பண்ணிக் கொண்டால் என்ன?''

''என்ன தீர்மானம்?''

''ஆன்ட்டிக்கு என் மேல் எந்த வெறுப்பும் இல்லை. ஆன்ட்டியை நான் சந்தித்துப்பேசி சம்மதிக்க வைக்கிறேன்.''

''அது சாத்தியப்படாது.''

''சாத்தியப்படும்படி நான் பார்த்துக்கறேன். அது வரை நாம்ப சிநேகிதர்களாய் அடிக்கடி இங்கே சந்திப்போம். என்ன சொல்கிறாய்?''

ஆர்த்தி தலையாட்டினாள். ஹேமந்த்தோடு பேசிய பிறகு மனம் கொஞ்சம் இலேசாயிற்று.

''திரும்பவும் எப்பொழுது சந்திக்கலாம்?'' கேட்டான் அவன்.



''நீங்களே சொல்லுங்கள்.''

'நீயே சொல்லு! நீ எங்கே வரச்சொன்னாலும் நான் வரேன்.''

ஆர்த்தி யோசித்தாள்.

''ஜெயந்தி வீட்டிற்கு சாயந்திரம் நான் ஜூலியைக் காலாற வெளியே கூட்டிக்கொண்டு போவேன்!''

''ஓ. கே. தாங்க்யூ.'' என்றான்.

அதற்குள் பஸ் வந்து விட்டது. ஆர்த்தி ஏறிக் கொண்டாள்.

அவளை மெதுவாய் ஏற்றிவிட்டு விட்டு ''ஜாக்கிரதை'' என்றான்.

ஆர்த்தி பஸ்ஸிற்குள் ஏறிக் கொண்டு கையாட்டினாள்.

அவனும் கையை ஆட்டினான். அவன் முகம் தீனமாய் இருந்தது. ஆர்த்திக்கு அந்த நேரத்தில் அவனைப் பார்த்தால் மிகப் பரிதாபமாய் இருந்தது. பாவம் அவனும் எவ்வளவு வருத்தப்படுகிறானோ!

ஆர்த்தி யோசனையில் ஆழ்ந்தாள். ஹேமந்த் சொன்னதுதான் உண்மை! தாய் இத்திருமணத்தை ஏன் வேண்டாம் என்று தடுக்கிறாள் என்று தெரிந்து கொள்ள வேண்டும்!

ஆர்த்தி திட சங்கல்பம் செய்து கொண்டாள்.

## 32

சுமித்ரா கட்டிலில் படுத்திருந்தாள். ஆர்த்தி மெதுவாய் அந்த அறைக்குள் வந்தாள். இரண்டு நாட்களாய்

தாயிடம் இந்த விஷயத்தைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று முயற்சி பண்ணிக் கொண்டிருக்கிறாள். ஆனால் சோகமயமாய் இருந்த தாயைப் பார்த்ததும் வாய் புரள மறுத்தது. மகளின் காலடியோசையைக் கேட்டதுமே— "என்ன ஆர்த்தி?" என்றாள்.

"ஒன்றுமில்லை மம்மீ." என்றாள்.

"கொஞ்சநேரம் இப்படி உட்காரு.' சுமித்ரா கூப்பிட்டாள்.

ஆர்த்தி தாய்க்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டாள்.

"உங்கப்பா எங்கே?"

"வீட்டில் இல்லை மம்மீ."

சுமித்ரா பெருமூச்சு விட்டாள்.

"கொஞ்சம் ஹார்லிக்ஸ் கரைத்துக் கொண்டு வரட்டுமா?"

"எனக்கொண்ணும் வேண்டாம்மா." சுமித்ரா மல்லாந்து படுத்துக் கொண்டாள். "உன் கல்யாணத்தைப் பண்ணி முடித்து விட்டால் என் மனதிலிருந்து பெரிய பாரம் நீங்கினாற் போலிருக்கும்."

"உனக்கு அவ்வளவு பாரமாய் இருக்கேனா மம்மீ?"

"பாரம் இல்லை. உன் கல்யாணத்தை சீக்கிரமாய் பண்ணிடணும். அது கூட நான் நினைத்துக் கொண்டிருக்கிற வரனோடு! இல்லாவிட்டால் உங்கப்பா என்னை மோசம் பண்ணிவிடுவார்." சுமித்ராவின் குரலில் உத்வேகம் தொனித்தது.

"டாடியை ஏம்மா அப்படி சந்தேகப்படுகிறாய்?"

"உனக்குத் தெரியாது! நீ பெரியவளான பிறகு தான் புரியும் உனக்கு."



"நீ சொன்னால் எனக்குத் தெரியாதா?"

"இது...இது என்னால் சொல்ல முடியாது. நானே இல்லை, எந்தத் தாயாலுமே சொல்ல முடியாது."

"டாடி கூட ரொம்ப வருத்தப்படுகிறார் மம்மீ!"

"எல்லாம் வேஷம்! நம் மனதைத் தன் பக்கமாய் திருப்பிக் கொள்வதற்குப் போடும் நாடகம்!"

"ஆமாம், என்னுடையது வெறும் நடிப்புத்தான்! நீ பண்ணுகிற காரியமெல்லாம் மட்டும் நிஜம்! இன்னும் அவளுக்கு என்னென்ன புகட்டுவாயோ புகட்டிக் கொள்."

திடீரென்று குரல் கேட்கவே ஆர்த்தி திரும்பிப் பார்த்தாள். வாசலில் விஜயராகவன் நின்று கொண்டிருந்தான்.

"உன் முட்டாள்தனத்தால் என்னை நாலு பேருக்கு முன்னால் சந்திசிரிக்க வைக்கிறாய்! உனக்கு யார் மேலும் கொஞ்சங்கூட இரக்கமே இல்லையா?"

கணவர் வார்த்தைகள் காதில் விழுந்ததுமே சுமித்ரா மெதுவாய் எழுந்து உட்கார்ந்தாள்.

தாயின் முகம் ரத்தத்தை உமிழ்ந்தாற்போல செக்கச் சிவந்திருந்தது. தந்தை கூட ஏறக்குறைய அதே நிலையில் தான் இருந்தார். ஆர்த்தி பயந்தவாறு இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நிஜந்தான். எனக்கு யார் மீதும் கோபமேயில்லை. யார் மீதோ இரக்கப்பட்டு என் குடும்பத்தை இவ்வளவு தூரத்திற்குக் கொண்டு வந்து விட்டேன். நன்றாய்ப் பாடம் கற்றுக் கொண்டு விட்டேன். அது போதும்."

"இப்ப உன் குடும்பத்துக்கு என்னவாயிடுத்து?"

"என்னவாயிடுத்தா? எந்த முகத்தை வைத்துக்

கொண்டு கேட்கிறீர்கள்? எனக்கு எதிராய் இன்னும் பேசிக் கொண்டிருக்கிறீர்களே ஏன்?''

''மம்மீ.'' கலக்கத்தோடு எச்சரிப்பது போல வந்தது ஆர்த்தியின் குரல்.

விஜயராகவன் உள்ளே வந்தான்.

''உன் திமிரை இதுவரைக்கும் பொறுத்துக் கொண்டிருந்தேன். இனி என்னால் முடியாது. நீ கோபாலசுவாமியைப் பார்க்கச் சொன்னாயே அந்த வரன் வீட்டார் என்னிடந்தான் வந்தார்கள். நான் ஆர்த்திக்கு வேறு இடத்தில் செட்டில் ஆகிவிட்டது, எங்களுக்குத் தேவையில்லைன்னு சொல்லிட்டேன்.''

''என்னது?'' சுமித்ரா ஆவேசத்தால் நடுங்கத் தொடங்கினாள்.

''ஆர்த்தி என் மகள்! தந்தையான என் விருப்பத்திற்குமாறாய் அவள் கல்யாணத்தை உன்னால் பண்ண முடியாது. அதை முதலில் தெரிந்து கொள் நீ!''

''தெரிந்து கொண்டு விட்டேன். ரொம்ப நன்றாய் தெரிந்து கொண்டு விட்டேன். உங்கள் உபாயம், உங்கள் பிடிவாதம் எல்லாம் எனக்குப் புரிந்துபோய் விட்டது. ஏன்? ஆர்த்தி உங்கள் ஒருவருக்குத் தான் மகளா? எனக்கு மகள் இல்லையா? அந்த ஹேமந்த்திற்கு தான் பண்ணி வைக்கணும்னு அவ்வளவு பிடிவாதம் எதுக்கு உங்களுக்கு? என் உடம்பில் உயிர் உள்ளவரை அது நடக்காது. தாயான நான் இருக்கும்போது, எனக்குப் பிடிக்காத போது உங்களால் கூட அவள் கல்யாணத்தை நடத்தி விட முடியாது.''

''மம்மீ! நான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லை. எனக்குக் கல்யாணமே வேண்டாம்.'' ஆர்த்தியின் குரல் நடுங்கிற்று.



''நடுவில் அவள் மனதை வேறு துன்புறுத்துகிறாய். உன்னால் நான் அனுபவிக்கிற நரகம் போதாதா?'' என்றான் அவன்.

''நமக்கு மகளாய்ப் பிறந்தது அவள் தலையெழுத்து!''

''ஆர்த்தி! நீ அடுத்த அறைக்குப் போ.'' என்றான் அவன்.

ஆர்த்தி உள்ளே போக முயன்றாள்.

''வேண்டாம் ஆர்த்தி, போகாதே! போனாயானால் என்னைக் கொன்றதுக்கு சமம்.''

போகத் திரும்பிய ஆர்த்தி நின்றாள்.

போவதா வேண்டாமா என்ற குழப்பத்துடன் தந்தையை நோக்கி திரும்பினாள்.

விஜயராகவன் தானே போய் விட்டான்.

சுமித்ரா கட்டிலில் விழுந்து அழத் தொடங்கினாள்.

''மம்மீ, அழாதே, சும்மாயிரு மம்மீ. அழாதே,'' ஆர்த்தி தேற்ற தொடங்கினாள்.

''எனக்கு தெரியும் அவர் என்னை உயிரோடு விடப் போவதில்லை. இந்த திகிலோடு நான் குன்றிக் குறுகிப் போய், செத்துடுவேன்னு அவருக்கே தெரியும். நான் செத்துட்டால், தான் சந்தோஷமாய் இருக்கலாம். அது தான் அவர் உத்தேசம்.''

''இவ்விருவரும் ஏன் இப்படி எலியும் பூனையுமாய் சண்டைப் போட்டுக் கொள்கிறார்கள்! 'கடவுளே' இதற்கு முடிவே இல்லையா?'' என்றெண்ணிக் கொண்டாள் ஆர்த்தி தனக்குள்.

# 33

சுமித்ரா அண்ணன் வீட்டிற்கு வந்து விட்டாள். கணவர், பிடிவாதத்தால் தான் ஆர்த்தியின் திருமணத் திற்கு ஒப்புக்கொள்ள மறுக்கிறார் என்பது புரிந்து விட்டது!

அவள் துன்பத்தைக் காட்டிலும் ஆர்த்தியின் சுகத்தை காட்டிலும் அந்த தாயும் மகனுந்தான் அதிகமாகி விட் டார்கள் போலும்! சுமித்ராவின் இதயத்தில் இந்த நினைவு மேலும் காயத்தை உண்டாக்கிற்று.

எல்லோரும் முதல் நான்கு நாட்கள் ஏதோ ஓய்வுக் காக அண்ணன் வீட்டிற்கு வந்திருக்கிறாள் என்று தான் எண்ணினார்கள். சுமித்ரா, அண்ணனான காமேஸ்வர னின் படியில் தலையை வைத்துக் கொண்டு அழுது தீர்த்து விட்டாள்.

''அண்ணா, அவர் முற்றிலும் மாறிப் போயிட்டார். என்மேல் கொஞ்சங்கூட அன்பே இல்லாமல் போயிடுத்து. அவருக்கு இனி நான் தேவையில்லை. என் எஞ்சிய வாழ்க்கை இனி உன்னிடத்திலேயே கழிந்து விடட்டும்.''

காமேஸ்வரனுக்கு தங்கை மேல் அதிக பாசம் உண்டு.

''என்ன சுமி! என்னதான் ஆச்சு? நான் அவரைப் பார்த்து விசாரிக்கிறேன், இரு. அங்கே போக உனக்குப் பிடிக்காவிட்டால் நீ இங்கேயே இருக்கலாம்'' என்றான்.

விஜயராகவன் சுமித்ராவை அழைத்துக் கொண்டு போவதற்காக வந்தான்.

''அங்கே வீட்டில் பண்ற ரகளை போதாதா? நம்ப தகறாரையெல்லாம் நடு வீதிக்குக் கொண்டு வரணுமா?'' என்றான் கோபமாய்.



''நாம்ப மறைத்து வைத்து விட்டால் எல்லாம் மறைஞ்சுப் போயிடுமா? உலகத்துக்குக் கண் இல்லையா?''

''இல்லாமலென்ன? ஒன்றல்ல, லட்சம் கண்கள் உள்ளன. அதனால்தான் குன்றுமணி அளவு மலையள வாய் தெரிகிறது. வீட்டுக்குப் போவோம், வா!''

''நான் வரலை.''

''உன் உத்தேசம் என்ன?''

''உங்களால் என்னை ஏமாற்ற முடியாது.''

''உனக்கு அகம்பாவம் அதிகம் சுமி. அந்த அகம் பாவத்தால்தான் இவ்வளவு அடம் பிடிக்கிறாய்.''

''நீங்க என்ன வேணும்னாலும் சொல்லிக் கொள் ளுங்கள். கணவருக்கு வேறு பெண்ணுடன் சம்பந்தம் இருப்பது தெரிந்தும் பார்த்துக் கொண்டே 'போகட்டும், நமக்கெதற்கு?' என்று சும்மாயிருந்துவிடக் கூடிய மன தத்துவம் இல்லை என்னோடது—''

''சீ, சீ! உனக்கு ஆயிரந்தடவை சொல்லிட்டேன். பரமேஸ்வரிக்கும் எனக்குமிடையே நீ நினைப்பதுபோல எதுவும் இல்லைன்னு!''

''எதுக்குப் பொய் சொல்றீங்க? யாரை ஏமாற்ற இந்த நாடகம்? அவள் மேல் உங்களுக்கு அன்பு இல்லாமல் தான் ஐதராபாத்துக்கு அவ்வளவு தடவை போனீர்களா? அவர்களை இங்கே அழைத்துக் கொண்டு வந்தீர்களா? அவன் சொத்துக்காக அவ்வளவு பணம் செலவழித்து வழக்குப் போட்டீர்களா?''

அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

சுமித்ரா விசும்பிக் கொண்டே—''ஒன்றுமில்லையாம்! ஒன்றுமில்லாமல் தான் நான் ஊருக்குப் போயிருந்த போது சமையல்காரியை ஊருக்கு அனுப்பி வைத்தீர்களா?

என் புடைவைகளை தந்து அவளைக் கட்டிக்கச் சொன் னீர்களா?'' என்றாள்,

அழுகை கோபமாய் மாறிற்று. ''ஒன்றுமே இல்லா விட்டால் அந்த ஹேமந்த்துக்கு தான் கொடுத்துக் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு இவ்வளவு பிடிவாதம் எதுக்கு? ஏன் பதில் பேசமாட்டீங்கிறீர்கள்?''

''என்னத்தைப் பேசுவேன்? நான் பண்ணின நல்ல காரியத்தையெல்லாம் நீ இவ்வளவு கோணல் புத்தியோடு பெரிது பண்ணிப் பேசும்போது என்னத்தைப் பேச முடியும்?''

''உங்க மனதில் எந்தக் கெட்ட எண்ணமும் இல்லா விட்டால் இப்பொழுதாவது அவர்கள் சங்கதியை விட்டு தொலையுங்கள்.''

''உன்னை வீட்டிற்கு வான்னு அழைத்ததற்கு இவ்வ ளவு பேச்சுப் பேசுகிறாய்.''

''நீங்கள் நான் கேட்கும் வாக்கை தந்தால் நான் வீட் டிற்கு வரேன்.''

''இல்லாவிட்டால்?''

''இங்கேயே இருக்கிறேன்.''

''எவ்வளவு நாள் இருப்பாய்? மானம், மரியாதை எனக்கு மட்டுத்தானா? உனக்குக் கிடையாதா?''

''ஏன் இல்லை? ஆனால்—நீங்களே என்னை மோசம் பண்ணிட்ட பிறகு இன்னும் இந்த கண்ணாமூச்சி ஆட்டமெல்லாம் எதுக்கு?''

''சரி உன்னிஷ்டம்'' என்று எழுந்திருந்தான் அவன்.

''ஆர்த்தி! ஆர்த்தி!'' கூப்பிட்டான்.

உள்ளேயிருந்த ஆர்த்தி மெதுவாய் வந்தாள். ஆர்த்தி அழுது கொண்டிருந்தாற்போல கண்கள் உப்பியிருந்தன.



மகள் முகத்தைப் பார்த்ததுமே பகீரென்றது அவ னுக்கு.

''நம் வீட்டுக்குப் போவோம் வா'' என்றான்.

ஆர்த்தி தாயின் முகத்தைப் பார்த்தாள்.

''ஆர்த்தி வரமாட்டாள்! அவள் நான் உயிரோடிருக் கும் வரை என்னோடுதான் இருப்பாள்'' என்றாள் சுமித்ரா.

ஆர்த்தி செய்வதறியாது பார்த்தாள் தந்தையை. தந்தையிடம் அடக்கி வைத்துக் கொண்டிருந்த கோபமும், வருத்தமும் தெளிவாய் தெரிந்தன.

அவன் பலவந்தமாய் அதை அடக்கிக் கொண்டு— ''சரி! நான் இல்லாமல் உன்னால் வாழ முடிந்தபோது என்னால் மட்டும் வாழமுடியாதா? நீயாகவே திரும்பி என்னிடம் வந்தாலே தவிர இனி நான் உன் மூஞ்சியைக் கூடப் பார்க்கப் போவதில்லை.'' அவன் அகல அகலமாய், காலடி எடுத்து வைத்துக் கொண்டே அங்கிருந்து போய் விட்டான்.

## 34

விஜயராகவன் தொழிலளவில் ஓய்வு ஒழிச்சல் இல் லாத ஆள்! அவனுக்குக் குடும்பத்தில் ஏதாவது வருத் தமோ, அமைதியின்மையோ ஏற்பட்டால் அதைத் தனக் குள்ளேயே மென்று விழுங்கி விட வேண்டும். தன்னிடம் வரும் க்ளையிண்ட்டுகளுடன் பேசும் பொழுது அவன் முகத்தில் புன்னகை மாறாமல் இருக்க வேண்டும். க்ளை யிண்டுகள் தொண தொணத்தபடி பேசுவதையெல்லாம் பொறுமையாய்க் கேட்க வேண்டும். தொழில் ரீதியாய்

உள்ள இந்த வேலைத் தொந்தரவுகளைத் தவிர அவனுக்குப் பல ஸ்தாபனங்களுடன் தொடர்பும் இருந்து வந்தது. யார் எங்கே எந்த நிகழ்ச்சியைத் தொடங்க வேண்டுமென்றாலும் அவனிடந்தான் ஆலோசனைக்கு வருவார்கள்.

அவன் தன்னை விடப் பெரியவர்களின் முன்னால் சாமர்த்தியசாலி! சிறியவர்களின் முன்னால் அனுபவசாலி! வழி காட்டக்கூடிய கைடு! அந்தவிதமாய் ஒரு பக்கத்தில் பெரியவர்களோடும், இன்னொரு பக்கத்தில் சிறியவர்களோடும் கூட அவனுக்குப் பழக்கம் இருந்து வந்தது.

எந்த ஃபங்ஷனுக்குப் போனாலும் இதுவரை சுமித்ராவும் கூடவே வந்து கொண்டிருந்தாள். வீட்டு விஷயத்தில் அவனுக்கு அபரிமிதமான நிம்மதி கிடைத்து வந்ததால், தொழில் ரீதியாய் ஏற்படும் நெளிவு சுளிவுகளை எதிர்த்து நிற்பதற்கு மனோ தைரியம் இருந்து வந்தது. இப்பொழுது சுமித்ரா ஏற்படுத்திய இந்த தொல்லை மூலமாய் அவனுக்குத் தனக்கு இருந்து வந்த ஆதாரம் விட்டுப் போய் விட்டது போலிருந்தது. சமூகத்தில் எல்லோர் முன்பும் தன் வாழ்க்கையிலும் மனதிலும் எந்த மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை என்று நடிக்க விஸ்வப் பிரயத்தனம் பண்ணிக் கொண்டிருந்தான்.

இவ்வூருக்கு வந்த புதிதில் பரமேஸ்வரியிடம் கூடு கட்டிக்கொண்டிருந்த துக்கமும், தனிமையும் போவதற்காக, அவன் தானே சுயமாய் பரமேஸ்வரியை பல ஸ்தாபனங்களுடன் பரிச்சயம் பண்ணி வைத்தான். சிலவற்றில் மெம்பராய்ச் சேர்த்தான் அவளை.

பரமேஸ்வரியிடம் நாளடைவில் தனிமையும், பீதியும் விடுபட்டு உற்சாகமும் சந்தோஷமும் ஏற்படத் தொடங்கின. வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் ஏற்படத் தொடங்கிற்று. விஜயராகவனின் அரவணைப்பு இருந்ததால், அதுவே மனத்துணிவையும் உற்சாகத்தையும் தந்தது.



விஜயராகவனின் வாழ்க்கையில் ஏற்பட்ட பூசல்களைப்பற்றி பரமேஸ்வரிக்குத் தெரியாது. சுமித்ரா தன் மீது அசூயைப் படுகிறாள் என்றும், தான் அந்த வீட்டிலிருந்து வந்துவிட்டால் அந்தப் பிரச்னை தீர்ந்துவிடும் என்றும் நினைத்தாள். பரமேஸ்வரிக்கு, இது போல் தனியாய் இருப்பதே நன்றாயிருந்தது. தன் குடும்பம், தன் வீடு! அவளுக்கு சிநேகிதிகள் பெருகி விட்டார்கள்.

இப்பொழுது ஏதாவது விஷயம் என்றால் ஆலோசனை கேட்பதற்கும், தெளிவு பண்ணிக் கொள்வதற்கும் விஜயராகவனுக்குப் போன் பண்ணலாம். அந்தச் சாக்கில் அவனோடு திருப்தியாய்ப் பேசிக் கொள்ளலாம்.

இதற்கு முன்னால் எந்த ஃபங்ஷனுக்குப் போனாலும் விஜயராகவனுடன் கூடவே சுமித்ராவும் இருப்பாள். இப்பொழுது அடிக்கடி அவனோடு பரமேஸ்வரி தென்பட்டாள். முதல் முதலில் இது யார் பார்வையிலும் முக்கியமாய்ப் படவில்லை. அவன் குணத்தைப் பற்றி யாருமே குறை கூற முற்படவில்லை அதோடு கூட பரமேஸ்வரியின் மகனோடு விஜயராகவனின் மகளுக்கு திருமணம் வேறு நடைபெற விருந்தது ஏறக்குறைய ஒரே குடும்பத்தைப் போல் ஒன்றாய்ச் சேர்ந்து வசிப்பவர்கள் அவர்கள். கணவன் இல்லாத பரமேஸ்வரிக்கு வீட்டில் குழந்தை குட்டிகள் போன்ற எந்த பிக்கல் பிடுங்கல்களும் இல்லாததால் வெளி நிகழ்ச்சிகளில் அதிகமாய்ப் பங்கெடுத்துக் கொள்வது சகஜமாய் பட்டது!

ஆனால், போகப்போக எல்லோர் பார்வையும் கேள்விக் குறியாய் மாற தொடங்கிற்று! சுமித்ராவுக்கும் விஜயராகவனுக்கும் பரமேஸ்வரியின் மூலமாய் கருத்து வேற்றுமை ஏற்பட்டு விட்டதாய் வெளியே பரவி விட்டது.

அவ்விருவரின் குடும்ப சிநேகத்திற்கும் பின்னால் இன்னும் வேறு ஏதோ தனிப்பட்ட சம்பந்தம் கூட இருப்ப

தாய் கிசுக்கிசுக்கள் தொடங்கிவிட்டன. சுமித்ரா தன் மகளை பரமேஸ்வரியின் மகனுக்கு திருமணம் பண்ணி தர விரும்பவில்லை என்றும், அந்த திருமணம் நடக்க வில்லை என்றும், சுமித்ரா கணவனோடு கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டிற்குப் போய் விட்டாள் என்றும் கூட வெளியே பரவி விட்டது. அதன் மூலமாய் கிசுக் கிசுக்கள் வலுக்கத் தொடங்கின.

விஜயராகவன் வெளியே வந்தால் சுமித்ரா ஏன் வர வில்லை என்று கேட்க தொடங்கினார்கள்.

பரமேஸ்வரியைப் பார்த்து "உன் மகனின் திருமணம் ஆர்த்தியோடு எப்பொழுது நடக்கப் போகிறது?" என்று துப்பு துலக்க தொடங்கினார்கள்.

பரமேஸ்வரிக்கு இந்த சம்பாஷணையைக் கேட்டால் எரிச்சலாயிருக்கும். ஒரு முறை விஜயராகவனிடமே இதைப் பற்றிச் சொல்லி விட்டாள்.

"நான் என்ன தப்புப் பண்ணிட்டேன்னு இவர்கள் எல்லோரும் என்னை இப்படி உலுக்கி எடுக்கிறார்கள்? என் குடும்ப விஷயம் இவர்களுக்கு எதற்கு?" என்றாள்.

"அது உலக சகஜம் பரமேஸ்வரி. சமூகம் ஒரு மரத் தைப் போன்றது. அதில் ஒவ்வொருத்தரும் ஒரு கிளை ஒரு கொம்பின் விஷயம் இன்னொரு கொம்பிற்கு தேவையில்லை என்று சொன்னாலும் கேட்டுக் கொள்ள மாட்டார்கள்."

"இந்தக் கல்யாண விஷயந்தான் என்னவாச்சு? இது தாமதமாக ஆக அபவாதங்களும், சந்தேகங்களும அதிக மாகிக கொண்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் பண் ணிட்டால் நல்லதில்லையா?"

"சுமித்ராவுக்கு உடம்பு சரியில்லை. அண்ணா வீட் டில் இருக்கிறாள். அது நலமாக வேண்டாமா?"



"என்ன உடம்பு?"

"டாக்டர்களுக்கே புரிபடலை" என்றான் அவன்.

பரமேஸ்வரி அதற்குமேல் வாதாடவில்லை. பரமேஸ் வரிக்கு 'அப்பாடா' தன் வாழ்க்கை ஒரு வழிக்கு வந்து விட்டது' என்று நிம்மதி அடைய முடியாமல் இந்த திருமண விஷயத்தால் சிக்கல் வந்து சேர்ந்தது.

ஹேமந்த்திற்கும் ஆர்த்திக்கும் திருமணம் நடந்தால் விஜயராகவனின் துணை தனக்கு வாழ்நாள் எல்லாம் இருந்துவரும். அப்பொழுது இருவரையும் சேர்ந்து பார்த்தாலும் யாரும் தவறாய் ஒன்றும் சொல்ல மாட் டார்கள்.

சுமித்ரா அசூயைப்பட்டாலும், தன்னை அவமரியா தையாய்ப் பேசினாலும் தான் அதைப் பொருட்படுத்தப் போவதில்லை.

பண்பானவனும், அன்பானவனுமான கணவன் என் னும் கோட்டைச் சுவரின் பாதுகாப்பிற்குள் ராணி யைப்போல சுகவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கும் சுமித்ராவுக்கு எந்த நிழலுமில்லாத தன்னைப் போன்ற தனியளான ஒருத்தியின் வருத்தங்கள் எப்படிப் புரியும்?

விஜயராகவன் அவளை எந்தக் குறையுமில்லாமல் பார்த்துக் கொண்டு வரும்போது இன்னும் அவளுக்கு என்ன அதிருப்தி என்றுதான் பரமேஸ்வரிக்குக் கொஞ்ச மும் புரியவில்லை.

க்ளையிண்டுகள் எத்தனை பேருக்கு என்னென் னவோ விதமாய் உதவிகள் பண்ணிவருகிறான் அவன்! தனக்குப் பண்ணுகிற உதவியைக் கூட அதேபோல் நினைத்துக் கொள்ள முடியாதா? அவனை ஏன் தொல் லைக்கு உள்ளாக்க வேண்டும்? தம் இருவர் பெயர்களும் நாலு பேர்களுக்கு முன்னால் அடிபடும்படி ஏன் பண்ண வேண்டும்? என்றெண்ணிக் கொண்டாள் சுமித்ரா.

கோபாலசுவாமி சுமித்ராவைப் பார்ப்பதற்காக வந்தார். இளைத்துக் கன்னங்கள் குழி விழுந்து, ஜீவனில்லாத கண்களோடு சுமித்ராவைப் பார்த்தவர் அதிர்ந்து போய் விட்டார். அவர் ஒரு மாத காலமாய் ஊரில் இல்லை. தங்கை மகன் இறந்துவிட்டதால் அந்தக் குடும்ப விவகாரங்களைச் சீர்திருத்துவதற்காகத் தஞ்சாவூருக்குப் போயிருந்தார். விஜயராகவனின் வீட்டிற்குப் போனபோது அவன் கோர்ட்டுக்குப் புறப்படும் அவசரத்தில் இருந்தான். ''சுமித்ராவுக்கு உடம்பு சரியாயில்லை பெரியப்பா. ஓய்வாய் இருக்கும்னு அண்ணா வீட்டிற்குப் போயிருக்கிறாள்'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டான்.

அவர் அன்று மாலையில் சுமித்ராவைப் பார்ப்பதற்கு வந்தார். கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த சுமித்ராவைப் பார்த்து அவர் தன் கண்களையே தான் நம்பமாட்டாதவரானார்.

''இதென்னம்மா சுமித்ரா? என்ன உடம்பு இது? ஏன் இப்படியாயிடுத்து?'' என்றார்.

சுமித்ரா அழத் தொடங்கி விட்டாள்.

''அடடா! என்ன இது? டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள்?'' என்றார் அவர் கதிகலங்கிப் போய்.

''நான் எவ்வளவு சீக்கிரமாய் போய்ச் சேருகிறேனோ அவ்வளவு நல்லதுன்னார்கள்.'' என்றாள்.

அதற்குள் ஆர்த்தி ஆரஞ்சுப் பழரசத்தைக் கொண்டு வந்தாள்.

ஆர்த்தியைப் பார்த்துக் கூட அவர் அதிர்ந்து விட்டார்.

ஆர்த்தியும் மிக இளைத்து விட்டிருந்தாள்.

''பழரசம் குடிம்மா.'' என்றாள்.



''எனக்கொண்ணும் வேண்டாம், உனக்குக் கோடி கும்பிடு. என்னைக் குடிக்கச் சொல்லி பலவந்தப்படுத்தாதே.''

ஆர்த்தி பேசாமலிருந்தாள்.

''டாக்டரிடமாவது போனாயா முதலில்?'' கேட்டார் அவர்.

சுமித்ரா 'போனேன்' என்று தலையாட்டினாள்.

''என்ன சொன்னார்?''

''அம்மா சாப்பிடுவதையே விட்டு விட்டாள் தாத்தா? சாப்பாடு நன்றாய்ச் சாப்பிட்டு பலத்தை வரவழைத்துக் கொண்டாலேயொழிய இந்த நோய் குணமாகாதுன்னு சொல்லிட்டார்'' என்றாள் ஆர்த்தி.

''என்னம்மா சுமித்ரா? சின்னக் குழந்தை மாதிரி இதென்ன? பழரசத்தைக் குடி.'' அவர் கண்டித்து விட்டு அந்தத் தம்ளரை வாங்கி தானே சுமித்ராவின் கையில் வைத்தார்.

சுமித்ரா இரண்டு விழுங்குகள் குடித்து விட்டுக் கீழே வைத்து விட்டாள்.

'ராகவன் எப்படிப் பேசாமல் இருக்கான், அதான் புரியலை.''

''அவரா? அவருக்கு நான் எப்படிப் போனால் என்ன?''

''இதென்னம்மா இப்படிப் பேசுகிறாய்?''

''ஆர்த்தியைக் கேட்டுப் பாருங்கள், அவர் என்னைப் பார்த்து இருபது நாளாகிறது.''

"சீ, நிஜமாகவா? ராகவன் இப்படிப் பண்றான்னால் என்னால் நம்பவே முடியலை."

"என் வார்த்தைகள் பொய் என்று நினைத்தால் நீங்களே கேளுங்கள்."

"ஏன் அப்படிப் பண்ணுகிறானாம்?"

"உங்களுக்குத் தெரியாது. அவருக்கு விவகாரங்கள் ஜாஸ்தியாகி விட்டது."

"ஜாஸ்தியானால் மட்டும்? முன்னைவிட இப்போது சம்பாதனை பெருகி விட்டதா? எவ்வளவு சம்பாதித்தால் தான் என்ன, மனைவி விஷயம் தேவையில்லையா?"

"அவர் முன்போல் இல்லை, ரொம்பவும் மாறிவிட்டார்."

"சீ! நான் போய் விசாரிக்கிறேன், இரு. நீ திகிலடைந்து போகாதே! உன் மனதில் ஏதாவது இருந்தால் சொல்லு, நான் அவனை விசாரிக்கிறேன்."

சுமித்ரா திரும்பவும் அழத் தொடங்கி விட்டாள்.

"என்னதான் ஆச்சு சுமித்ரா?" அவர் சந்தேகத்தோடு கேட்டார்.

"நீங்கள்...நீங்கள் அவரிடம் நான் அவருக்குத் தேவையா தேவையில்லையான்னு கேளுங்கள்."

"இதென்ன பேச்சு?"

"இவ்வளவு நாளாய் யாருக்காவது தெரிந்தால் நன்றாயிருக்காதுன்னு மனசுக்குள்ளேயே புதைத்து வைத்துக் கொண்டிருந்தேன். இனி லாபமில்லை. அவருக்கு நான் வேணுமா அந்தப் பரமேஸ்வரி வேணுமான்னு தீர்மானித்துக் கொள்ளச் சொல்லுங்கள். அவர்களிருவரும் சுகமாய் இருக்க எண்ணினால் நான் தடையாய் இருக்க மாட்டேன். என் வழியை நான் பார்த்துக்கறேன்."



இவ்வார்த்தைகளைக் கேட்ட ஆர்த்தி வருத்தமடைந்தாள்.

முகம் வெலவெலத்து விட்டது!

"அவர்களிருவரும் அந்த மாதிரி திருட்டுத்தனமாய், சுற்றவேண்டிய தேவையில்லாமல் ராஜபாட்டையை வகுத்துத் தந்துட்டேன்னு சொல்லுங்கள்."

ஆர்த்தியின் மனம் விஷத்தை உண்டு விட்டாற் போல கசந்து போயிற்று. ஆர்த்திக்கு திடீரென்று தாயின் வருத்தங்களுக்கெல்லாம் காரணம் புரியத்தொடங்கிற்று. தந்தை மேல் வெறுப்பு ஏற்படத் தொடங்கிற்று.

## 35

"எங்கம்மா ஏன் இப்படி ஆயிட்டாள்னு உங்களுக்குத் தெரியுமா?" ஆர்த்தி கேட்டாள். அவள் முகம் ஆவேசத்தால் சிவந்து விட்டிருந்தது.

ரத்தத்தை உமிழ்ந்தாற்போல செக்கச் செவேர் என்றிருந்தன கண்கள்.

ஹேமந்த் செய்வதறியாது பார்த்துக் கொண்டிருந்தான் அவளையே.

அரைமணிக்கு முன்னால் இருவரும் பார்க்கில் சந்தித்துக் கொண்டார்கள். அன்று மத்தியானம் ஆர்த்தி அவனை ஐந்து மணிக்குப் பார்க்குக்கு வரும்படி சொல்லியிருந்தாள்.

'அர்ஜென்ட்டாய் உங்களோடு ஏதோ பேச வேண்டுமாம்' என்று ஜெயந்தி போன் பண்ணவே, அவன் அந்த அர்ஜென்ட் விஷயம் என்னவாயிருக்கும் என்று அநேக விதமாய் யோசித்துக் குழம்பிக் கொண்டே வந்தான்.

ஆர்த்தி அவனைப் போலவே தன் எதிர்காலத்தைப் பற்றி ஒரு முடிவிற்கு வந்து, அதைச் சொல்வதற்குத்தான் கூப்பிட்டிருப்பாள் என்ற ஆசை முளைவிடத் தொடங்கிற்று. அது மட்டும் உண்மையாயிருந்தால் எவ்வளவு கஷ்டமாயிருந்தாலும் சரி, ஆர்த்தியின் கையைப் பிடித்துக் கொண்டு உறுதியாய் நிற்பதற்குத் தீர்மானித்துக் கொண்டான்.

அவன் பார்க்குக்கு ஐந்தடிப்பதற்கு முன்பாகவே வந்து சேர்ந்து விட்டான். ஆர்த்தி ஐந்து மணிக்கு வந்தாள்.

அவன் மிகச் சந்தோஷத்தோடு அவளை வரவேற்கப் போனான். ஆனால் ஆர்த்தி சிரிக்கவும் இல்லை.

ஆர்த்தியைப் பார்த்த அவன் திடுக்கிட்டான். அந்த நாலே நாட்களில் அவள் துரும்பாய் இளைத்து விட்டிருந்தாள்

இருவரும் போய் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டார்கள்.

"ஆன்ட்டிக்கு எப்படி இருக்கு?" வழக்கப்படியே கேட்டான்.

"அப்படியே தான் இருக்கு."

அவன் ஆர்த்தியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆர்த்தி எங்கோ பார்த்துக் கொண்டே சொன்னாள்- "இன்னும் கொஞ்ச நாள் இப்படியே கழிந்தால் எங்கம்மா பிழைக்க மாட்டாள்." ஆர்த்தியின் கண்களில் கண்ணீர் ததும்பிற்று.

"ஆர்த்தி!' அவன் ஆர்த்தியின் கை மேல் தன் கையை வைக்கப் போனான்.

ஆர்த்தி கடிக்க வந்த பாம்பை விட்டு தொலைவிற்கு ஓடிப்போனாற் போல சரேலென்று எழுந்து போய் அங்கிருந்த மரத்தின் மேல் சாய்ந்து கொண்டு அந்தப் பக்கமாய், திரும்பி நின்று கொண்டாள்.



ஹேமந்த் கூட எழுந்து பின்னாடியே வந்தான்.

ஆர்த்தி அங்கிருந்த பூங்கொடியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஹேமந்த் பரிவோடு தேற்றத் தொடங்கினான்—

"அதைரியப்படாதே ஆர்த்தி! அம்மாவுக்குக் கண்டிப்பாய் குணமாயிடும்."

"குணமாகாது. ஆகவே ஆகாது! எனக்குத் தெரியும்! அம்மா திகிலோடு படுத்த படுக்கையாகி விட்டாள். பரோபகாரம் பண்ணப்போய் தன் உயிருக்கே உலையாகி விட்டது. நீங்கள் இந்த ஊருக்கு வராமலிருந்திருந்தால் நாங்கள் கவலையில்லாமல் இருந்திருப்போம்!"

"ஆர்த்தி."

"அது சரி, எங்கம்மா ஏன் இப்படி ஆனாள் என்று உங்களுக்குத் தெரியுமா?"

அவன் மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆர்த்தி முகம் சிவக்க,கடுமையாய்ப் பதிலளித்தாள்.

"உங்கம்மாவால் தான்! எனக்கு இவ்வளவு நாளாய்த் தெரியாது. எங்கம்மாவின் உடல்நலக் கோளாறுக்குக் காரணம் உங்கம்மா! எங்கப்பாவை வலையில் போட்டுக் கொண்டு விட்டாள்! எங்கப்பாவை பைத்தியமடித்து விட்டாள். எங்கம்மா எவ்வளவு கஷ்டப்பட்டாலும் எங்கப்பா பொருட்படுத்துவதே இல்லை. நீங்கள் இவ்வளவு மோசமானவர்கள் என்று எண்ணியிருக்கவில்லை, ஹேமந்த்! நீங்களே சொல்லுங்கள்! எங்கம்மா உங்களை எவ்வளவு நன்றாய் நடத்தினாள்! அதற்கு நீங்கள் காட்டுகிற நன்றி இதுதான் போலிருக்கு."

அவன் கண்கள் படபடத்தன.

''என்னை என்ன பண்ணச் சொல்கிறாய்?''

''உங்கம்மாவுக்கு புத்தி சொல்லுங்கள்.''

''எப்படி? என்னவென்று?''

ஆர்த்தி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

''ஆர்த்தி!நீ ஆவேசப்படாதே! என்னைத் தவறாய் புரிந்துக்காதே! எனக்குக்கூட வருத்தமாய்த்தான் இருக்கு!'' ஹேமந்த் ஆர்த்தியின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டான்.

''என் நிலையில் நீ இருந்தால் என்ன பண்ணுவாய் சொல்லு?''

''என்ன பண்ணுவேனா? அம்மா என்று கூடப் பார்க்காமல் மென்னியைத் திருகிக் கொன்று போட்டிருப்பேன். ஆம். நம்பிக்கை துரோகம் பண்ணுபவர்களை அப்படித்தான் செய்ய வேண்டும்.''

ஹேமந்த் பயந்து போய் ஆர்த்தியின் கைகளைச் சட்டென்று விட்டு விட்டான்.

''உங்களைப்பற்றி யோசித்துப் பார்த்திருந்தால் அவள் இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்க மாட்டாள்! தன் சுயநலத்தை மட்டுமே பார்த்துக் கொண்டாள்! ஒரு மனுஷி புத்தியில்லாமல் பண்ணிய காரியத்தால் எவ்வளவு பேர் கஷ்டப்படுகிறோம்னு பாருங்கள்.''

ஹேமந்த் முகம் சிவந்தது.

''ஆர்த்தி! இதே வார்த்தைகளை உங்கப்பாவுக்குக் கூட நான் சொல்லலாம் இல்லையா? இதில் எங்கம்மா தப்பு மட்டுந்தான் இருக்கா, உங்கப்பா தப்பு எதுவும் இல்லையா?''



''எங்கப்பா நல்லவர், உங்கம்மா நல்லவள் இல்லை.''

''எங்கம்மா கூட உங்கப்பாவை பார்க்கிற வரைக்கும் நல்லவளாய்தான் இருந்தாள்.''

''உங்களால் எங்கப்பாவை தப்புச் சொல்ல முடியாது.''

''எங்கம்மாவைச் சொல்றதுக்கு உனக்கும் அதிகாரமில்லை.''

''ஏன் இல்லை? எங்கப்பா மூலமாய் உங்கள் குடும்பத்தில் யாருமே துன்பப்படவில்லை! உங்கம்மா மூலமாய் எங்கள் குடும்பம் நிர்மூலம் ஆகிறது! எங்கப்பா எங்களை விட்டுப் போய் விட்டார். எங்கம்மா சாகத தயாராகி விட்டாள். உங்கம்மா ராட்சசி, பிசாசு! எங்கம்மாவைக் கொன்று...''

ஆர்த்தியின் கன்னம் அதிர்ந்தது.

ஆர்த்தி வாயடைத்துப் போய் அப்படியே விழித்துக் கொண்டிருந்தாள்.

ஹேமந்த் ரோஷத்தோடு திணறிக் கொண்டிருந்தான்.

அந்தக் கோபம் அவனுக்கு ஆர்த்தி மீதும், தாய் மீதும், தன் மீதும் எல்லோரின் மீதும் பொத்துக் கொண்டு வந்தது.

''நீங்கள்...நீங்கள் அந்த தாய்க்கு தகுந்த மகன்தான்! ஐ ஹேட் யூ!'' ஆர்த்தி சரேலென்று திரும்பி, ஒரே பாய்ச்சலாய் சிமெண்ட் பெஞ்சியின் மேலிருந்த கைப்பையை எடுத்துக்கொண்டு கேட்டை நோக்கி ஓடினாள்.

அவன் கூட சிலையாய் அப்படியே நின்றுவிட்டான்.

அந்த நேரத்தில் அவனுக்கு ஆர்த்தியைப் பின்

தொடர்ந்து போகவோ, தடுத்து நிறுத்தவோ கூட வெட்கமாய் இருந்தது.

இவ்வளவு நாளாய் ஆர்த்திக்கு இந்த விஷயம் தெரியக் கூடாது என்றெண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் கடைசியில் தெரிந்தே போய் விட்டது! ஆர்த்தி அவனை அருவருப்பாய் நோக்குகிறாள்...

'அந்த தாய்க்கு ஏற்ற மகன்தான். ஐ ஹேட் யூ'—என்ற ஆர்த்தியின் வார்த்தைகள் அவன் மனதில் வெறியை தோற்றுவித்தன. நிரபராதி ஒருவனுக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு விட்டதாய் செய்தி எட்டினால் எப்படி இருக்குமோ அதுபோல இருந்தது.

இத்தனைக்கும் காரணம் யார்? விஜயராகவன்!

முதலில் அவருக்குப் பாடம் கற்பிக்க வேண்டும். அவன் கால்கள் ஆவேசத்தால் நடுங்கின. 'நீங்கள் அத் தாய்க்கு ஏற்ற மகன்தான். ஐ ஹேட் யூ!'—

அவன் ஆட்டோவைக் கூப்பிட்டு ஏறிக் கொண்டான்.

''எங்கே?'' ஆட்டோக்காரன் கேட்டான்.

## 36

விஜயராகவன் அப்பொழுதுதான் வீட்டிற்கு திரும்பி வந்திருந்தான் சமையல்காரி வீட்டுச் சாவிக்கொத்தைத் தந்து விட்டுப் போய் விட்டாள். அவன் போய் குளித்து விட்டு வந்தான். சாப்பாட்டு மேஜையில் சாப்பாடு தயாராயிருந்தது! அவனுக்கு அந்த வீடு மயானமாய் இருந்தது! சுமித்ரா அண்ணன் வீட்டிற்குப் போய் ஒரு மாத காலம் ஆகிறது. வெளியே நாலு பேர்களுக் கிடையே வளைய வரும் பண்பான ஒரு ஆணுக்கு



மதிப்பும் கௌரவமும் நிலைத்திருக்க வேண்டுமானால், குண நலன்களும், குடும்ப சரித்திரமும் மிக முக்கியம் அவனுக்கு.

விஜயராகவனுக்கு இதற்கு முன்னால் என்றுமே அனுபவித்திராத பரிசோதனை ஏற்பட்டு விட்டது. வெளியே சிநேகிதர்களுக்கிடையே போகவே பயமாயிருந்தது. எதைப் பற்றிப் பேசினாலும் சுமித்ராவைப் பற்றிய பேச்சை இழுப்பார்கள். விமரிசிக்கத் தொடங்கி விடுவார்கள். இரு பொருள்படப் பேசுவார்கள். அவனுக்கு அதைப் பொறுத்துக் கொள்வது சிரமமாயிருந்தது. சுமித்ராவின் சுபாவம் அவன் நன்கு அறிந்ததே. எந்த விஷயத்திற்குமே அடம் பிடிக்கமாட்டாள். எதற்காவது அடம் பிடித்தாள் என்றால் நினைத்ததை சாதிக்கும்வரை விடமாட்டாள்.

அவன் பண்ணாத தவறுக்கு அவனைத் தண்டித்துக் கொண்டிருந்த மனைவி மேல் அவனுக்குத் தாங்க முடியாத கோபம் வந்தது. எல்லோருக்கும் உதவி பண்ணினாற்போல்தான் பரமேஸ்வரிக்கும் உதவி பண்ணினான். அதற்கு இத்தனை ஆர்ப்பாட்டம் ஏனோ?

ஹேமந்த்திற்கு ஆர்த்தியைத் திருமணம் பண்ணி வைத்து, வாழ்நாளெல்லாம் பரமேஸ்வரிக்குத் தான் உறுதுணையாய் இருக்க வேண்டும் என்றெண்ணியது உண்மையே! ஆனால் அந்த எண்ணத்தில் அத்தனை விபரீதமான விஷயம் என்ன இருந்தது என்றுதான் அவனுக்குப் புரியவில்லை. இவ்வளவு நாட்கள் குடும்ப வாழ்க்கை நடத்திய பிறகு இப்பொழுது சுமித்ரா தன்னை சந்தேகிப்பது அவனுக்கு அவமானமாயிருந்தது.

தான் கொஞ்சம் சீரியஸாய் இருந்தால் சுமித்ரா மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடுவாள் என்று எதிர் பார்த்தால் அது இன்னொரு தூக்குக் கயிறாகி விட்டது. அவனுக்கு! இடையே ஆர்த்தி நலிந்து போய்க்

கொண்டிருக்கிறாள். அவனுக்கு ஆர்த்தியின் வாடிய முகத்தைப் பார்த்தபோது சுமித்ராவை இழுத்துக் கன்னத்தில் மாறிமாறி அறை கொடுக்க வேண்டும் போல கோபம் வந்து கொண்டிருந்தது.

தான் இப்பொழுது சமாதானதுக்கு வந்தால் சுமித்ரா சாட்டிய குற்றத்தையெல்லாம் ஒப்புக் கொண்டு விட்டாற் போலவே ஆகும்! செய்யாத தவறுக்கு தலை வணங்குவது அவன் சுபாவத்திலேயே கிடையாது.

இதை இப்படியே நீடிக்க விட்டால் எந்த விஷமச் சூழ்நிலைக்கு வழிவகுக்குமோ?

விஜயராகவன் மேஜைக்கு மேல் முழங்கைகளை ஊன்றிக் கொண்டு, கேசங்களில் விரல்களை அளைந்து கொண்டு தீர்க்காலோசனையில் மூழ்கியபடி உட்கார்ந்திருந்தான்.

அதற்குள் உள்ளே யாரோ வந்தாற்போல சந்தடி கேட்டது. அவன் நிமிர்ந்து பார்த்தான். எதிரே ஹேமந்த் நின்று கொண்டிருந்தான்.

"நீயா. ஹேமந்த்! என்ன இப்படி வந்திருக்கிறாய்? வா, உட்காரு'' என்றான்.

ஹேமந்த் உட்காரவில்லை. அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். அப் பார்வை குரூரமாய், கொலை பண்ணத் தயாராகி விட்டவனைப் போல இருந்தது. உள்ளங்கைகள் முறுக்கேறிக் கொண்டிருந்தன.

"என்ன விஷயம் ஹேமந்த்?'' அவன் நிலைமையைப் புரிந்துக் கொண்டான் விஜயராகவன்.

"ஒரு விஷயம் சொல்லுங்கள்.''

"என்ன?''

"எங்களை நீங்கள் ஏன் இப்படி மோசம் பண்ணினீங்க?''



"இதென்ன கேள்வி?'' திடுக்கிட்டான் அவன்.

"இந்தக் கேள்வியில் தான் இன்றைக்கு எங்கள் எதிர்காலமே அடங்கி இருக்கிறது! சொல்லுங்கள், எங்களை உதவி என்ற பெயருடன் ஏன் இவ்வளவு மோசம் பண்ணினீர்கள்? நீங்கள் விரும்பினால் இந்த உலகத்தில் எங்கம்மாவை தவிர வேறெந்தப் பெண்மணியுமே கிடைக்கவில்லையா?''

"ஹேமந்த்! இதென்ன உளறல்?'' விஜயராகவன் நாற்காலியை விட்டு எழுந்திருந்தான்.

"எங்கம்மா மேல் உள்ள ஆசையால் இப்படியெல்லாம் வலை பின்னுகிறீர்கள். ஆனால் இந்த வலையில் என்னை எதுக்காக இழுத்தீர்கள்? எனக்கும் ஆர்த்திக்கும் திருமணம் என்றீர்கள். எங்களுக்கிடையே ஆசையை வளர்த்தீர்கள். ஆன்ட்டியைக் கண்ணிருந்தும் குருடியாக்க நினைத்தீர்கள். ஆனால் ஆன்ட்டி புத்திசாலியாய் இருந்ததால் உங்கள் கொட்டம் பலிக்கவில்லை. உங்கள் சுயநலத்திற்கு என்னையும் ஆர்த்தியையும் பலியாக்கினீர்கள்.''

"ஹேமந்த்! நீ என்ன பேசுகிறாய் என்று உனக்கே தெரியலை.''

"எனக்கு எல்லாம் தெரியும்! நீங்கள் எங்கள்மேல் இரக்கப்பட்டு எங்களை இங்கே அழைத்து வரவில்லை. எங்கம்மா உங்கள் கைக்கு எட்டும் தூரத்தில் இருப்பாள் என்று—''

"வாயை மூடு, இங்கிருந்து போ.''

"போகமாட்டேன். போவதற்கு வரவில்லை நான் இங்கே. இன்றைக்கு உங்கள் கண்ணை திறக்கச் செய்வதற்காகவும், பாடம் கற்பிப்பதற்காகவுந்தான் வந்திருக்கிறேன்.'' ஹேமந்த் விஜயராகவன் மேல் பாய்ந்தான்.

விஜயராகவன் வாயடைத்துப் போய் விட்டான். தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்வதற்காக ஹேமந்த்தை எதிர்த்து அடிக்க வேண்டியிருந்தது. ஹேமந்த்தின் பலத்தைப் பார்த்து அசந்து போய் விட்டான் அவன். கடைசியில் விஜயராகவனின் கைதான் ஓங்கி நின்றது...அவனை பலவந்தமாய் தோளைப் பற்றி சோபாவில் தள்ளினான். ஹேமந்த்தால் இனி நகர முடியாமல் போய்விடவே அப்படியே உட்கார்ந்திருந்தான்.

விஜயராகவன் எழுந்து உடை மாற்றிக் கொண்டு வந்தான். கார் சாவியைக் கையிலெடுத்துக் கொண்டான்.

ஹேமந்த்தின் தோளைப் பிடித்துக் கொண்டு காருக்குள் இழுத்து வந்து உட்கார வைத்தான்.

அவனைக் கொண்டு வந்து வீட்டிற்கு முன்னால் இறக்கி விட்டான்.

விஜயராகவனின் காரைப் பார்த்து விட்டு சந்தோஷமாய் ஓடிவந்த பரமேஸ்வரி, அதிலிருந்து இறங்கிய மகனைக் கண்டு அப்படியே நின்று விட்டாள். "என்னவாச்சு?" என்று கேட்டாள் கலங்கிப்போய்.

"உன் மகன் இப்பல்லாம் உபயோகமுள்ள ஆளாய் மாறிட்டான். எல்லோருக்கும் அதைக் காட்டிக்கறான். உள்ளே அழைதது்க் கொண்டு போய் உடம்பிற்குக் கொஞ்சம் ஒத்தடம் கொடு." என்று சொல்லி விட்டு சரேலென்று காரைத் திருப்பிக் கொண்டு போய்விட் டான் விஜயராகவன்.

கட்டிலில் படுக்கவைத்து, கியாஸைப் பற்ற வைத்து ஒத்தடம் கொடுப்பதற்காக வெந்நீர் போட உள்ளே போனாள் பரமேஸ்வரி.



ஹேமந்த் கட்டிலில் குப்புறப் படுத்திருந்தான். எதிரே சுவரில் ஆர்த்தியின் போட்டோ தென்பட்டது. போட்டோவிலிருந்து ஆர்த்தி—'அந்தத் தாய்க்கு ஏற்ற மகன்தான்! ஐ ஹேட் யூ!' என்று ஆவேசமாய்ச் சொன்னாற் போலிருந்தது. அவன் கண்கொட்டாமல் அந்தப் போட்டோவை பார்த்துக் கொண்டிருந்தான்.

## 37

பரமேஸ்வரி வெந்நீரை எடுத்துக் கொண்டு மகன் அறைக்குள் வந்தாள்!

ஹேமந்த் கட்டிலில் குப்புறப்படுத்துக் கொண்டு சலனம் இல்லாதவனைப் போல இருந்தான்!

"ஹேமந்த்" தோளில் கைவைத்தாள் அவள்.

ஹேமந்த்தின் கை அவள் சற்றும் எதிர்பாராத வகையில் தோளின் மேல் வைத்த பரமேஸ்வரியின் கையை வேகமாய் தள்ளிவிட்டது! அவ்வாறு தள்ளி விட்டது புழுவை அருவருப்புடன் தட்டிவிட்டாற் போம் தீவிரமாய் இருந்தது.

"என்னடா? என்னவாச்சு?"

பதிலுக்கு ஹேமந்த் எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

எதிரே வெந்நீரை எடுத்து வைத்திருந்த ஸ்டூலை ஒரு தள்ளு தள்ளினான்! படுக்கை மேலிருந்த தலையணையை எடுத்து வேகமாய் தரையில் வீசியெறிந்தான்.

பரமேஸ்வரி அவன் கோபத்திற்கு விக்கித்துப் போனவள்—

''என்னதான் ஆச்சு?'' என்றாள்.

''என்னவாச்சா? உன்னை எனக்குப் பிடிக்கவில்லை! போ! அப்பால் போ!'' தொண்டை கிழியும்படியாய், கத்தினான்.

பரமேஸ்வரி அவன் தோரணையைப் பார்த்து பயந்து விட்டாள்.

ஹேமந்த்தின் கண்கள் கொலை பண்ணத் துணிந்து விட்ட மனிதனின் கண்களைப்போல சிவந்து, குரூரமாய் இருந்தன. உள்ளங்கைகளை முறுக்கிக் கொண்டே கட்டிலை விட்டு எழுந்து தாயை நோக்கி வந்து கொண்டே சொன்னான்—

''எப்படிப்பட்டச் சூழ்நிலையில் நாம்ப இந்த ஊருக்கு வந்தோம்? நீ மறந்து போயிட்டாயா? எனக்கு உத்யோகம் இல்லை. தங்க நிழல் இல்லை. உண்ண உணவில்லை. அந்தச் சூழ்நிலையில் ஆன்ட்டி நமக்கு தங்க நிழல் கொடுத்தாள். நீ என்ன பண்ணினாய்? அந்த வீட்டையே எரித்து விட்டாய்! மாமாவை நீ வலையில் போட்டுக் கொண்டு, ஆன்ட்டி சாகும்படியாய் திகிலை ஏற்படுத்தினாய்! உனக்கு வெட்கம் இருக்கா? இப்படிப் பட்ட நீச்சமான காரியத்தைப் பண்ற நீ எனக்கும் ஆர்த்திக்கும் கல்யாணம் என்று ஏன் உற்சாகப்படுத்தினாய்? அவருக்கு தான் வெட்கமில்லையென்றால் உனக்குமா இல்லாமல் போயிடுத்து? ஆன்ட்டி உனக்குப் பாலூட்டினால் நீ விஷத்தைக் கக்கினாய்! ஆர்த்திக்கு முன்னால் நான் நிமிர்ந்து நிற்க முடியாமல் செய்து விட்டாய்! சீ! ஏண்டாப்பா இந்த ஊருக்கு வந்தோம்னு இருக்கு எனக்கு இப்போது!'' தாயை அடிக்க முடியாத ஹேமந்த் கதவை இழுத்து வேகமாய் அறைந்தான்!

பரமேஸ்வரியின் முகம் வெலவெலத்துப் போயிற்று.

ஹேமந்த் வெறுப்பை உமிழ்ந்தபடி சொன்னான் —



''நீ மனுஷிதானா? சாப்பாடு போட்டால் நாய் கூட நன்றியைக் காட்டுகிறதே! உனக்கு அதுகூட இல்லாமல் போயிடுத்தே! உனக்கு அவர்தானே வேண்டும்? அவரோடேயே நன்றாய் குலுங்கி திரிந்துக் கொண்டிரு, என்னால் இந்த வீட்டில் ஒரு வினாடி கூட இருக்க முடியாது! நீ எனக்கு தாயே இல்லை! சீ! உன்னைப் போன்ற நீச்சமானவளுக்கு மகனாய் பிறந்தது என் துரதிர்ஷ்டம்! நான் போகிறேன். ஜென்மத்திற்கும் இனி உன் கண்ணில் விழிக்கமாட்டேன்!'' ஹேமந்த் கதவை ஓங்கி தள்ளி விட்டுப் போய் விட்டான்.

பரமேஸ்வரி சிலையாய் நின்று விட்டாள்.

போய்க் கொண்டிருந்த ஹேமந்த்தைத் தடுத்த நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் கூட இல்லாமல் அப்படியே நின்று விட்டாள்!

ஹேமந்த் சொன்ன வார்த்தைகள் பரமேஸ்வரியை, சூலமாய் தாக்கிக் கொண்டிருந்தன. இந்த உலகத்தில் எந்தத் தாயுமே எந்த மகன் வாயிலிருந்தும் கேட்டிராத வசவுகளைக் கேட்க நேர்ந்தாற் போலிருந்தது. ஹேமந்த்தா இவ்வாறு பேசினான்? யாரைப் பார்த்து வாழ்க்கையில் கொஞ்சமாவது ஆசையை ஒட்டவைத்துக் கொண்டு வாழ்ந்து வந்து கொண்டிருக்கிறாளோ, அவனே இளப்பமாய் எடுத்தெறிந்து பேசி விட்டான்! யார் நிழலில் வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்று முயன்று கொண்டிருந்தாளோ, அவனே சம்பந்தத்தை முறித்துக் கொண்டு, உன் முகத்தில் இனி விழிக்க மாட்டேன் என்று போய் விட்டான்! பரமேஸ்வரியின் கண் முன்னால் உலகமே சுழன்றாற் போலிருந்தது. காலடியில் பூமி நழுவினாற் போலிருந்தது.

தலை சுற்றினாற் போலிருந்தது!

சுமார் அரை மணிக்குப் பிறகு—

பரமேஸ்வரி விஜயராகவனுக்குப் போன் பண்ணினாள்!

"இல்லீங்கம்மா? அம்மாவுக்கு உடம்பு ரொம்ப மோசமாய் இருக்குன்னு போன் வந்ததால், இப்பத்தான் அர்ஜென்டாய்ப் போனார்." என்று சொன்னான் வேலைக்காரன்.

பரமேஸ்வரி பாரமாய் போனை வைத்துவிட்டு, தளர்ந்த நடையோடு திரும்பி வந்தாள்.

அவள் ஆதியிலிருந்தே விஜயராகவனிடம் சொல்லிக் கொண்டே இருக்கிறாள்—இதை உலகம் ஆமோதிக்காது என்று! ஆயிரம் கோணல் அர்த்தங்களைக் கற்பித்து, வீட்டிலுள்ளவர்களின் மனதைக் கூட விகாரமாக்கி விடும் என்று! ஆனால் அவன் கேட்கவில்லை.

சுமித்ரா எல்லோரையும் போன்ற மனைவி இல்லை என்றான். அந்த துணிச்சல் மட்டும் தன்னிடம் இல்லாமலிருந்திருந்தால் இந்த உபகாரத்தைப் பண்ணியே இருக்க மாட்டேன் என்று சொன்னான். இப்பொழுது நடந்தது என்ன? ஹேமந்த்திற்கும் ஆர்த்திக்கும் திருமணம் பண்ணும் உத்தேசத்தைக்கூட அவன் முதலில் வெளிப்படுத்திய போது அவள் வேண்டாம் என்றுதான் சொன்னாள். ஆனால் அவனோ கேட்கவில்லை. இருவருக்கும் பிடித்துப் போய் விட்டது என்றும், அதோடு கூட தனக்கு ஆண் பிள்ளை இல்லாத குறை ஹேமந்த் மூலமாய் தீரவேண்டும் என்றும் சொன்னான். இப்பொழுது நடந்ததென்ன? முதலுக்கே மோசம் வந்து விட்டது! ஹேமந்த் இவ்வளவு தூரம் பேசிய பிறகு அவளால் இனி அவனோடு சுமுகமாயும், சௌஜன்னியமாயும் பழகுவது கூட அசம்பவம் தான்!

பரமேஸ்வரியின் பெண் மனம் ராஜியாகி விட முயன்றாலும், தாய் மனம் காயமடைந்து விட்டது.



அவனுக்கென்ன தெரியும் அவள் துன்பமெல்லாம்? அவள் பட்ட தனிமையைப் பற்றித் தெரியுமா? மனம் ஒன்றுபடாத கணவனோடு குடித்தனம் பண்ணிய வேதனைதான் தெரியுமா?

ஆர்த்திக்கும் சுமித்ராவுக்கும் வருத்தம் ஏற்பட்டு விட்டதாய் வெல வெலத்துப் போய் விட்டானே!

ஆனால் தாய் எவ்வளவு துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்று யோசித்துப் பார்க்கவில்லையே?

ஒரு ஆணாய் யோசித்துப் பார்த்திருக்கிறான்! அந்தச் சுயநலம் இந்த ஆண்களின் ரத்தத்திலேயே ஊறியிருக்குமா?

ஹேமந்த் கூட உலகத்தாரோடு சேர்ந்து தன்னை விரல் சுட்டிக் காட்டி தூஷிப்பது போலத் தோன்றிற்று.

பரமேஸ்வரிக்குத் தன் வாழ்நாளிலேயே என்றும் அனுபவித்து உணர்ந்திராத தனிமையானது விஸ்வரூபமெடுத்து பயமுறுத்தினாற் போலிருந்தது.

## 38

சுமித்ரா ஆசுபத்திரியில் படுத்திருந்தாள்!

டாக்டர்கள் பரபரப்போடு அங்குமிங்கும் சுற்றிக் கொண்டிருந்தார்கள். ரத்தம் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். ஏதேதோ இஞ்ஜக்ஷன்கள் குத்திக் கொண்டிருந்தார்கள்!

ஆசுபத்திரியில் சேர்த்த ஒரு மணி நேரத்திற்குப் பிறகு சுமித்ராவுக்கு நினைவு திரும்பிற்று. கண்களைத் திறந்

துப் பார்த்தபொழுது எதிரே ஆர்த்தியின் முகம் தென் பட்டது.

"ஆர்த்தி!" இருட்டில் தடவும் ஆளைப் போல கை களைத் தூக்கி பலவீனமாய் அழைத்தாள்.

"மம்மீ!"

"என் கிட்டே தான் இருக்கிறாயாம்மா?"

"வேறெங்கே இருப்பேன் மம்மீ?"

குழி விழுந்த சுமித்ராவின் கண்களில் நீர் ததும்பிற்று.

"உங்கப்பாவைப் போல, நீ கூட என்னை விட்டுட் டுப் போயிட்டாயோன்னு நினைத்தேன்."

"அம்மா!" ஆர்த்தி தாயின் கழுத்தில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

ஆர்த்திக்கு அழுகையை அடக்கிக் கொள்ள முயன்றா லும் முடியாமல் போய்விட்டது.

"ப்ளீஸ்." நர்ஸ் ஆர்த்தியை எச்சரித்தாள்—ரத்தம் ஏற்றிக் கொண்டிருந்த சுமித்ராவின் கையை அசையாமல் பிடித்துக் கொண்டே.

ஆர்த்தி எழுந்து உட்கார்ந்து புடைவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"ஆர்த்தி." சுமித்ரா கைகளை நீட்டினாள்.

ஆர்த்தி தன் கையைத் தாயின் கை மேல் வைத்து அழுத்தமாய்ப் பற்றிக் கொண்டாள்.

"நான் செத்துவிட்ட பிறகு நீ ஹேமந்த்தைக் கல்யா ணம் பண்ணிக்கோ!"

"என் கல்யாணத்தைப் பற்றி இப்ப என்ன வந்தது? நீ ஓய்வு எடுத்துக் கொள்!"



"உனக்குப் பிடித்த பையனைப் பார்த்து கல்யா ணம் பண்ணிவைத்து, நீ சந்தோஷமாய் இருப்பதைப் பார்த்து ஆனந்தமடையணும்னு எண்ணியிருந்தேன். அதற்கு ஆயிரம் மடங்கு அதிகமாய் உன்னைக் கஷ்டப் படுத்திட்டேன்?"

"எனக்கொண்ணும் கஷ்டமில்லை, ப்ளீஸ். நீ ஓய் வெடுத்துக்கோ! எங்கம்மா நல்ல அம்மாவோனோ!..."

"இன்னொரு தடவை நினைவு தப்பி விட்டால் பிறகு நினைவே திரும்பாதோன்னு பயமாயிருக்கு!"

"உனக்குக் குறைஞ்சுடும் மம்மீ!"

"நான் யாருக்காக வாழணும்?"

ஆர்த்தி தாயின் கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைக்கத் தொடங்கினாள்.

"எனக்காக மம்மீ! எனக்கு நீ, உனக்கு நான்! டாடி நம்மை விட்டுப் போய் விட்டாலும் பரவாயில்லை."

சுமித்ரா தன் கண்களைப் பரிவோடு துடைத்துக் கொண்டிருந்த மகள் கையைப் பற்றிக் கொண்டாள். இளைத்து உருமாறியிருந்த அக்கண்களில் குறுநகை படர்ந்தது.

"எனக்கு ஆண் குழந்தை இல்லையேங்கிற குறை இல் லாமல் பண்ணிட்டாய் நீ! உன் வார்த்தைகள் என் மன திற்கு இதமாய் இருக்கு!"

"நீ பேசக்கூடாது. ரெஸ்ட் எடுத்துக்கணும்!" சுமித் ராவின் அண்ணன் கண்டித்தான்.

"நானும் அதைத்தான் சொல்றேன்."

நர்ஸ் வெளியே போனாள்.

"அண்ணா! உயில் எழுதச்சொல்லிட்டேன்! ஆர்த்தி

மனதிற்குப் பிடித்தாற்போல பண்ணு! அவளுக்கு உன்னை விட்டால் வேறு யாருமில்லை!''

அதற்குள் அறைக்குள் யாரோ வந்தார்கள். ஆர்த்தி திரும்பிப் பார்த்தாள். சுமித்ராவின் கண்கள் கூட அந்தப் பக்கமாய்ச் சென்றன!

கதவிற்கருகில் விஜயராகவன் நின்றுக் கொண்டிருந்தான்! அவன் முகம் களைத்துப் போயிருந்தது! நீட்டாய் இருக்கும் கிராப் கலைந்திருந்தது. கண்களில் கலக்கமும் வேதனையும் தெளிவாய் தென்பட்டன!

கணவனைப் பார்த்ததுமே சுமித்ராவின் கண்கள் ஆவேசமாய் மாறிவிட்டன. தந்தையைப் பார்த்த ஆர்த்தி பாராமுகமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

சுமித்ராவின் அண்ணன் கூட அவனை வரவேற்காமல் ஏதோ வேலை இருப்பது போல அங்கிருந்து டோய் விட்டான்!

விஜயராகவன் ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்தபடி நடந்து உள்ளே வந்தான்!

சுமித்ரா மகளின் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''ஆர்த்தி! நான் செத்துட்டேன்னு பார்க்க வந்திருக்கார் போலிருக்கு! நான் பிழைத்தே இருக்கேன் போன்னு சொல்லு!'' என்றாள்.

ஆர்த்தி தந்தையைக் கோபமாய்ப் பார்த்தாள்.

''ஆர்த்தி, நீ இந்த அறையை விட்டுக் கொஞ்சநேரம் வெளியே போய் இரு, உங்கம்மாவுடன் நான் பேசணும்.'' என்றான் அவன்.

சுமித்ரா மகளின் கையை இன்னும் அழுத்தமாய்ப் பற்றிக் கொண்டாள்.



''நீ போகாதே'' என்றாள்.

'ஆர்த்தி, போ ப்ளீஸ்!'' விஜயராகவன் கெஞ்சினான்.

ஆர்த்தி தாய் தந்தையர் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''டாக்டர் மம்மிக்கு ரெஸ்ட் வேணும்னு சொன்னார்' என்றாள்.

''எனக்குத் தெரியும், நான் டாக்டரோடு பேசிட்டுதான் வந்தேன். நீ ஒரு நிமிஷம் போ.''

''ஆனால்.'' ஆர்த்தி சந்தேகத்தோடு தாயைப் பார்த்தாள்.

விஜயராகவன் சட்டென்று மகள் கையைப் பற்றி தூக்கி நிறுத்தி, தரதரவென்று இழுத்துக் கொண்டு போய் வெளியே தள்ளிக் கதவைச் சாத்திவிட்டு சுமித்ராவின் கட்டிலுக் கருகில் திரும்பி வந்தான்.

சுமித்ரா ஆயாசமடைந்தவளாய் பாரமாய் மூச்சு விட்டுக் கொண்டிருந்தாள்.

''சுமீ! நான் கேட்கும் ஒரே ஒரு கேள்விக்கு பதில் சொல்லு, நான் பண்ணிய பாவம் என்ன?''

சுமித்ரா முகத்தைத் திருப்பிக் கொண்டு எங்கோ பார்த்தபடி இருந்தாள்.

விஜயராகவன் அதுவரை ஆர்த்தி உட்கார்ந்து கொண்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்.

''பரமேஸ்வரிக்கு உதவி பண்ணியதுதானே! அந்த விஷயம் உன்னை இவ்வளவு வருத்தப்படுதும்னு நினைத்திருக்கவில்லை. நான் ஒருத்திக்கு நல்ல எண்ணத்தோடு உதவி பண்ணினால் நீ அசூயைப்படுவாய்னு நினைக்கவேயில்லை. நீ நான் அறிந்த சுமித்ரா அல்ல.''

சுமித்ரா கோபமாய்ப் பார்த்தாள்.

''ஆமாம்! வேற்றுப் பெண்மணியிடம் கணவன், 'உனக்கு நான் இருக்கேன், நீ ஒன்றும் திகிலடையாதே!' என்று கண்ணீரைத் துடைத்து விட்டுச் சொன்னால் பார்த்துப் பொறாமைப் படாத மனைவியும் ஒரு மனைவி தானா?''

' சுமீ!''

''அன்றைக்கு நான் அண்ணா வீட்டிலிருந்து திரும்பி வரும்போது நீங்கள் அவளைத் தேற்றிக் கொண்டிருக்க வில்லையா? அவள் ராகம் போட்டு அழுது கொண்டி ருந்தபோது நீங்கள்—''ஆர்த்திக்கும் ஹேமந்த்துக்கும் கல்யாணம் பண்ணிட்டால் உலகம் கூட நம்மைப் பற்றி ஒன்றும் நினைத்துக் கொள்ளாது''— என்று சொல்ல வில்லையா? நீங்கள் என்றாவது ஒரு வார்த்தையாவது என்னிடம் சொல்லியிருக்கீங்களா, அவளை நீங்கள் ஒரு காலத்தில் கல்யாணம் பண்ணிக்க உத்தேசித்திருந்ததைப் பற்றி? நண்பனின் மனைவி என்று என்னை ஏமாற்றி விட்டு, வீட்டில் கொண்டு வந்து வைத்துக் கொண்டீர் கள்! நான் இல்லாதபோது சமையல்காரியை அனுப்பி வைத்து விட்டு அவள் கையால் சமைத்ததை சாப்பிட்டுக் கொண்டிருந்தீர்கள். என் புடைவைகளை அவளுக்குத் தந்து கட்டிக் கொள்ளச் செய்தீர்கள். இதெல்லாம் என் மனதை கடப்பாறையால் பிளப்பது இல்லையா?''

விஜயராகவன் சுமித்ராவை இமைக்காமல் பார்த் தான்.

பிறகு வேதனை நிரம்பிய குரலில் சொன்னான்.

''சுமீ! இவ்வளவு நாள் என்னோடு வாழ்ந்து கூட உனக்கு என் மேல் நம்பிக்கை ஏற்படவில்லையென்றால் எனக்கு ரொம்ப வெட்கமாய் இருக்கு! நீ இதுபோல என்னை சந்தேகப்படுவதே எனக்குத் தீராத அவமான



மாய் இருக்கு! உன் தவறை நீயே புரிஞ்சு கொண்டு என்னிடம் வருவாய்னு எண்ணியிருந்தேன் ஆனால் அப்படி நினைத்தது தப்புன்னு எனக்கு இப்பத்தான் புரி கிறது! நீ ஒரு வார்த்தை சொல்லு! நம் திருமணம் ஆனதி லிருந்தே நீ என்னை கவனித்துக் கொண்டேதான் வரு கிறாய். என்றாவது நான் பிற பெண்களை காமத் தோடு பார்த்தோ பேசியோ நீ கண்டிருக்கிறாயா? பர மேஸ்வரிக்கு உதவுவதில் நான் கொஞ்சம் எல்லை மீறி விட்டேன் என்று ஒப்புக் கொள்கிறேன்.

பரமேஸ்வரி மேல் நான் இரக்கம் காட்டியதில் எந்தத் தப்பும் இல்லையே! பரமேஸ்வரியும் நானும் திருமணம் பண்ணிக்க எண்ணியிருந்தது உண்மையே! ஆனால் திருமணம் என்றால் என்ன என்று கூட தெரியாத இளம் வயது அது! அந்த வயதில் நான் மட்டுமேயில்லை, எந்த ஆணாயிருந்தாலும் சரி கண்ணுக்குக் கொஞ்சம் நன்றாய் தென்படும் எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் கல்யா ணம் பண்ணிக்கொள்ள வேண்டும் என்று துடிப்பது சகஜந்தான்! எங்கள் இருவரின் வழிகளும் ஒன்று சேரா தது போலவே வாழ்க்கையும் எங்களை ஒன்று சேர்க்க வில்லை!

பிறகு நான் உன்னை மணந்து கொண்டேன். நீ என் மனைவியாய் என் வாழ்க்கையில் அடியெடுத்து வைத்த பிறகு, எனக்கு வேறெந்த பெண் மேலும் மோகம் ஏற்பட்டதில்லை. பரமேஸ்வரியைப் பற்றி நான் ஏறக் குறைய முற்றிலும் மறந்து போய்விட்டேன். திரும்ப வும் பல ஆண்டுகளுக்குப் பிறகு நாங்கள் எதிர்பாராமல் சந்தித்துக் கொண்டோம். அப்பொழுது எங்கள் இருவரின் நிலைமையிலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன!

நான் மிக சந்தோஷமாய் திருப்தியாய் மற்றவர் களுக்கு முன்னால் மதிப்பாய் இருந்து வந்தேன்! பரமேஸ் வரி எனக்கு முற்றிலும் மாறுபாடாய் இருந்தாள்! கணவ

னின் உடல்நலக் கோளாறு, தீராத கடன்கள், சொன்ன பேச்சைக் கேட்காத மகன், இவற்றால் அவள் வாழ்க்கையில் திகிலும் துன்பமுந்தான் இருந்தனவே தவிர வேறெதுவுமே இல்லை.

எனக்குப் பரமேஸ்வரியைப் பார்த்து மிகவும் இரக்கம் ஏற்பட்டது. அவளுக்கு உதவ வேண்டும் போலிருந்தது! அந்த நிலைமையில் பரமேஸ்ஸ்ரி மட்டுமேயில்லை வேறெந்த ஆண் இருந்திருந்தால் கூட கைக் கொடுத்து உதவியிருப்பேன்! பரமேஸ்வரி பெண்ணாதலால் நீங்கள் எல்லோரும் என் நல்ல குணத்தை விகாரமாய் எடுத்துக் கொண்டீர்கள்! என் குணத்தை தாழ்வாய் எடை போட்டீர்கள்.

பரமேஸ்வரிக்கு நான் உதவும் விஷயத்தில் இன்னொருத்தருக்கு சால்ஜாப்பு சொல்லிக் கொள்ள வேண்டிய தேவை எனக்கெதற்கு என்ற ரோஷத்தை வரவழைத்தீர்கள் எனக்கு எல்லோருடனும் நீயும் ஒன்று சேர்ந்து கொண்டதுதான் எனக்கு மிக வருத்தமாயிருந்தது! நான் உன்னை எவ்வளவு நேசித்து வந்தேன் என்று உனக்குத் தெரியாதா என்ன? உன்னிடம் எனக்கு இருந்து வந்த ஈடுபாட்டால் உன்னைவிட சிறந்த குணமுடைய பெண் மணியாய் எனக்கு யாரும் தோன்றவில்லை. கல்யாணம் பண்ணி வைக்க வேண்டிய வயதில் எனக்கும் ஒரு மகள் இருக்கிறாள். எனக்கு அவ்வளவு பொறுப்பு கூட இல்லையா? நீ என்னை அவமானப்படுத்துவது எனக்குத் தாங்க முடியாத அவமானமாயிருக்கிறது.''

சுமித்ரா அவனையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நீ ஊரிலிருந்த போது பரமேஸ்வரி கிழிந்த புடவைகளைக் கட்டிக் கொண்டிருந்ததைப் பார்க்க சகிக்காமல் நான்தான் பீரோவை திறந்து உன் புடைவைகளை எடுத்துக் கொள்ளச் சொன்னேன். ஆதியிலிருந்தே என் மனதில் எல்லோர் பாலும் கருணை இருந்து வந்தும், இதற்கு மட்டும் நீங்கள் எல்லோரும் புது அர்த்தத்தை ஏன் தேடிக் கொள்ள வேண்டும்? பரமேஸ்வரியை ஒரு காலத்தில் நான் மணக்க எண்ணியிருந்த விஷயத்தை உன்னிடம் சொல்ல வேண்டும் என்று கூட எனக்குத் தோன்றவில்லை!



''என் மனதிலேயே அதற்கு முக்கியத்துவம் இல்லாத போது உன்னிடம் மட்டும் ஏன் சொல்ல வேண்டும்? சொன்னால் கலங்கத் தொடங்கி விடுவாய் என்றெண்ணினேன். ஆனால் சொல்லாததால் தான் இவ்வளவு ரசாபாஸமாகி விட்டதோ என்று இப்பொழுது தோன்றுகிறது. நமக்கு ஆர்த்தி ஒரே மகள்! ஆர்த்திக்கு வரப் போகும் கணவன் நமக்கு மகன் இல்லாத குறையை தீர்க்க வேண்டும்! பரமேஸ்வரிக்கு உதவி பண்ணினாற்போலவும் இருக்கும், நாம் நினைத்த எண்ணமும் நிறைவேறும் என்று நினைத்தேன். மகனுக்குக் கல்யாணமாகி விட்டால் தான் தனியாளாகி விடுவாளோ என்று பரமேஸ்வரி பயந்து கலங்கிப் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்து எனக்கு யார் இருக்கிறார்கள் என்று திகிலடைந்து போனதைப் பார்த்து நான் தைரியமளித்தது நிஜந்தான்!''

சுமித்ரா இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

விஜயராகவன் எழுந்தான். ''சுமீ! அநேக காரணங்களால் என் மனம் இன்று என்னவோ கலங்கிப் போயிருக்கிறது. வீட்டிற்கு வந்ததுமே உன்னை ஆஸ்பத்திரியில் சேர்த்திருப்பதாய் போன் வந்தது என்று சொன்னான் வேலைக்காரன். உடனே இங்கே வந்து விட்டேன்.

''சுமீ! நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதற்காக வரவில்லை. நான் செய்த தவறு என்னவென்று நீ சொன்னால் அதற்கு நான் தகுந்த காரணத்தை எடுத்து சொல்லத்தான் வந்தேன்! உன்னை நான் ஏதாவது அவ

மானப்படுத்தியிருந்தால் சொல்லு! உண்மையிலேயே மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்; வெட்கப்பட மாட்டேன். நான் உன்னைத் தாழ்வாய் மதித்து எதையும் பண்ண வில்லை! பண்ணவும் மாட்டேன்! நீயே யோசித்துப் பார்த்துக் கொள்!

''இந்த உடம்பை இப்படியே வளர்த்துக் கொண்டு, உலகத்தார் கண்ணோட்டத்தில் என்னை இன்னும் நீச்சமானவனாய் எடுத்துக் காட்டுகிறாயா, அல்லது என்னை இப்பொழுதாவது புரிந்து கொண்டு திரும்பி வருகிறாயா? நான் இந்த அறைக்குள் காலடி எடுத்து வைத்ததும் ஆர்த்தி என்னை எவ்வளவு அலட்சியமாய்ப் பார்த்தாள்! அது போதும்! என் வயிறு நிரம்பி விட்டது! கடைசியில் நான் பெற்ற குழந்தைக்கு முன்னாடியே நான் அவ்வளவு ஒதுக்கப்பட்டு விட்டேன்!

'என் விரலாலேயே என் கண்களில் குத்திக்கொள்ளும்படி செய்து விட்டாய்! பசங்களால் இளப்பமாய் ஒதுக்கப்படுவதைக் காட்டிலும் வேறு அவமானம் இல்லை என்று தோன்றுகிறது. தந்தையாய் இருந்ததற்கு என் ஜென்மம் சாபல்யமாகி விட்டது!'' கடைசி வார்த்தைகளைச் சொன்னபோது விஜயராகவனின் குரல் நெகிழ்ந்தது.

அவன் தலை குனிந்தபடி விடுவிடென்று போகத் தொடங்கினான்.

''இந்தாருங்கள்!'' சுமித்ரா ஹீனஸ்வரத்துடன் அழைத்தாள்.

அவன் திரும்பினான். சுமித்ரா பலவீனமாயிருந்த தன் கையை நீட்டினாள்.

''என்ன?'' தொலைவில் நின்றபடியே கேட்டான்.

''ஒரு முறை கிட்டே வாருங்கள்.''



அவன் கிட்டே வந்தான்.

''என்னை ... என்னை உங்களோடு கூட்டிப் போங்கள்.''

''சுமீ...''

''என்னை ... மன்னிச்சுடுங்கள். எனக்கு ... எனக்கு நிஜமாகவே உங்களைப் புரிஞ்சுக்கத் தெரியலை.'' சுமித்ரா எழுந்திருக்க முயன்றாள்.

சுமித்ராவின் கண்களில் தென்பட்ட தீனத்தைப் பார்த்தோ என்னவோ அவன் சட்டென்று கட்டிலில் உட்கார்ந்து கொண்டான்.

''எழுந்திருக்காதே ''

தோளைப் பற்றி தடுத்தான்.

சுமித்ரா தலையை திடீரென்று அவன் மார்பில் சாய்ந்துக் கொண்டாள்.

''என்னை மன்னித்து விடுங்கள்! உங்களுக்குத் தகுந்த மனைவியாய் நடந்துக்காமல் போனதற்கு எனக்கு உண்மையாகவே வெட்கமாய் இருக்கிறது! எனக்கு... எனக்கு என்னவோ பயமாயிருந்தது—என்னை விட்டு நீங்கள் தொலைவிற்குப் போய் விடுவீர்களோன்னு!'' சுமித்ராவுக்கு அழுகை வந்து விட்டது.

அவன் கண்களில் கூடக் குளம்!

''இந்த நரகம் இனி போதும் சுமி எனக்கு! இனிமேல் யாருக்கு எந்த உதவி பண்ண முற்பட்டாலும் அதை உனக்கு முன்கூட்டியே தெளிவாய் தெரியப்படுத்தி விட்டு பண்றேன்! இந்த முறை நான் பண்ணிய இந்த தப்பிற்கு நீயும் என்னை மன்னித்து விடு.''

நர்ஸ் சரேலென்று கதவை திறந்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

"வாட் சார்! அந்த ஊசியைப் பாருங்க எப்படி நகர்ந்து போயிடுத்துன்னு! நீங்களே இப்படிப் பண்ணினால் எப்படி? அவங்களுக்கு ரெஸ்ட் வேணும்."

விஜயராகவன் சுமித்ராவிடமிருந்து மெதுவாய் விலகிக் கொண்டான்.

சுமித்ரா பின்னுக்குச் சாய்ந்து படுத்துக் கொண்டாள். நர்ஸ் ஊசியை சரியாய் அமர்த்தினாள்.

ஆர்த்தி பயந்தவாறு பார்த்துக் கொண்டே அறைக்குள் நுழைந்தாள்.

அறைக்குள் தென்பட்ட காட்சியைப் பார்த்ததுமே ஆர்த்தியின் கண்கள் வியப்பால் அகன்றன.

விஜயராகவன் நாற்காலியில் உட்கார்ந்திருந்தான்.

சுமித்ரா அவன் கையைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

தாயின் முகத்தில் துக்கம் துடைத்தெறியப்பட்டு விட்டதற்கு அடையாளமாய் சந்தோஷம் ததும்பிக் கொண்டிருந்தது.

"ஆர்த்தி, வா!" சுமித்ரா கூப்பிட்டாள்.

ஆர்த்தி மெதுவாய்க் கிட்டே வந்தாள்.

"உங்கப்பாவும் நானும் ராஜியாகி விட்டோம்" என்றாள் சுமித்ரா சிரித்துக் கொண்டே.

ஆர்த்தி நிஜமாகவா என்பது போல தந்தையைத் திரும்பி பார்த்தாள்!

விஜயராகவன் 'ஆம்' என்று கண்களாலேயே தெரியப் படுத்தினான்.

"நான் உங்கம்மாவிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விட்டேன் ஆர்த்தி" என்றான்.



"இல்லை, இல்லை, தப்பு என்னோடது தான்! நான் தான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன்" என்றாள் சுமித்ரா.

"நான்தான் கேட்டேன், தப்பு என்னோடதுதான்" என்றான் அவன் சிறு பையனைப்போல

ஆர்த்தி மகிழ்ச்சியைத் தாங்க மாட்டாதவளாய் தாயின் கன்னத்தில் முத்தமிட்டாள்?

"தாங்க் காட்! தாங்க்யூ டாடி!" என்றாள் ஆனந்தமாய்.

விஜயராகவனுக்கு சிரித்த முகத்துடன் தென்பட்ட மகளைப் பார்த்த பிறகுதான் உயிர் வந்தது! கையைப் பிடித்து, கிட்டே இழுத்து, தோளைச் சுற்றி கையைப் போட்டுக் கொண்டே — "என் கண் முன்னால் இருளைக் கப்பி விட்டாயம்மா இத்தனை நாளாய்! இத்தனைக்கும் காரணம் உங்க மம்மீதான்! என்னை நரகத்தில் தள்ளி விட்டாள்! அனாவசியமாய் என்னை தண்டித்தாள். இதற்கு மறுதண்டனையாய் என்ன தண்டனை கொடுக்கலாம் ஆர்த்தி?" என்றான்.

ஆர்த்தி வினாடி நேரம் ஆழ்ந்து யோசித்தாள்.

"மம்மிக்கு நகைகள் என்றாலே பிடிக்காது இல்லையா? பிடிப்பிடியாய் நகை பண்ணித்தந்து, தினமும் அத்தனையையும் அவிழ்க்காமல் போட்டுக் கொண்டேயிருக்க வேண்டும் என்று சொல்லலாம்? இதை விட வேறு தண்டனை அம்மாவுக்கு இல்லை டாடீ!"

"கரெக்ட்." மகளின் தோளில் தட்டினான்.

சுமித்ரா கசப்பைத் தின்றாற்போல முகத்தை வைத்துக் கொண்டாள்! அந்த முகத்தைப் பார்த்துத் தந்தையும் மகளும் பக்கென்று சிரித்து விட்டார்கள்.

சுமித்ராவும் சிரிக்கத் தொடங்கினாள்.

அந்தச் சிரிப்பில், அவர்கள் மனங்களில் குடிகொண்டிருந்த வருத்தத்தின் சுவடுகள் இருந்த இடம் தெரியாமல் போயிற்று.

## 39

மறுநாள்—

காலை எட்டுமணி வேளை. விஜயராகவன் பாலில் பிரெட் துண்டுகளைத் தோய்த்து ஸ்பூனால் சுமித்ராவின் வாயில் தந்து கொண்டிருந்தான்.

சுமித்ரா மிகப் பலவீனமாய் இருந்தபோதிலும் அக் கண்களில் களை வந்து விட்டது!

அவ்விடத்தில் கொஞ்ச தூரத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த ஆர்த்தி தாய் தந்தையரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவ்வாறு வழக்கம்போல் சிரித்து மகிழ்ந்துக்கொண்டு அந்நியோன்னியமாய் இருந்த தாய் தத்தையரைப் பார்த்த போது மிகச் சந்தோஷமாயிருந்தது!

''இனி போதும்! என்னால் சாப்பிட முடியவில்லை'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள் சுமித்ரா.

''இன்னும் ரெண்டு வாய் சாப்பிட்டு விடு. நேற்றிரவு டாக்டர் சொன்னதைக் கேட்டாயோனோ? நீ எவ்வளவு சீக்கிரத்தில் குணமாகிறாயோ அவ்வளவு சீக்கிரத்தில் டிஸ்சார்ஜ் பண்ணுவோம் என்றார்.''

''அப்படீன்னால் இப்பொழுதே எவ்வளவு சாப்பிடணும்னு சொல்லிவிடுங்கள், சாப்பிட்டு விடுகிறேன்'' சுமித்ரா வாயைப் பெரிதாய்த் திறந்தாள்.



''ஆங்! இரு இரு, இவ்வளவு அவசரப்பட்டால் எப்படி?'' என்றான் அவன்.

ஆர்த்தி சிரித்தாள்.

அதற்குள் கோபாலசுவாமி ''ராகவா! ராகவா!'' என்று உள்ளே வந்தார்.

அவர் முகத்தைப் பார்த்து எல்லோரும் கலக்கமடைந்தார்கள்.

'என்ன பெரியப்பா, என்னவாச்சு?'' என்றாள் சுமித்ரா.

அவர் வேகமாய் வந்ததால் ஆயாசத்தால் மூச்சிரைத்தது.

''ராகவா? இந்தக் கண்றாவியைக் கேட்டாயா? பரமேஸ்வரி நேற்றிரவு மூட்டைப்பூச்சி மருந்தைக் கரைத்து குடித்து விட்டாளாம். வீட்டுக்காரப் பையன் எடுத்து வந்து இந்த ஆசுபத்திரியில் தான் சேர்த்திருக்கானாம்! விடியற்காலையிலேயே பிராணன் போய் விட்டதாம்!''

விஜயராகவன் கையிலிருந்த ஸ்பூன் நழுவி விழுந்தது! அவன் கிண்ணத்தை சுமித்ராவின் கையில் தந்து விட்டு சரேலென்று எழுந்து நின்றான்.

சுமித்ராவும் தூக்கிவாரிப் போட பார்த்துக் கொண்டிருந்தாள்.

''உன்னைத் தேடிக் கொண்டு உங்க வீட்டுக்கு வந்தானாம்? நீ இல்லைன்னு சொல்லிட்டதால் என்ன பண்றதுன்னு தெரியாமல் என்னிடம் வந்து சொன்னான். நான் வந்து பார்ப்பதற்குள் எல்லாம் ஆயிடுத்துன்னு சொல்லிட்டார்கள். பிணத்துக்காக யாரும் வரலையேன்னு காத்துக் கொண்டிருக்கிறார்கள்.''

''இந்த ஆசுபத்திரியிலேயேவா?'' விஜயராகவன் நம்ப முடியாதவனாய்க் கேட்டான்.

''ஆமாம்.''

''ஹேமந்த் எங்கே?''

''இல்லை. வீட்டில் கூட இல்லையாம். இவ்வளவு பேர் தெரிந்தவர்கள் இருந்தும் கூட திக்கில்லாமல் செத்திருக்கிறாளே! ராத்திரியில் வலியால் துடித்துடித்தபடி அழுது கொண்டிருந்தபோது, வீட்டுக்காரரின் மருமகள் வந்து கணவனை எழுப்பினாளாம். அவன் கதவைப் பிளந்து கொண்டு உள்ளே வந்தபோது உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தாளாம்.''

''மொதல்ல அங்கே போவோம் வாங்க''. விஜயராகவன் மளமளவென்று வெளியே நடந்தான்.

கோபாலசுவாமி அவனைப் பின்தொடர்ந்தார்.

விஜயராகவன் டாக்டரோடு பேசினான். நைட் டியூட்டியில் இருந்த டாக்டர் நோயாளி வந்த நிலையைச் சொன்னார்.

''ஒரு அரை மணி நேரத்துக்கு முன்னால் கொண்டு வந்திருந்தால் கூட நாங்கள் பிழைக்க வைத்திருப்போம் சார்! கடைசித் தருணத்தில் கொண்டு வந்தார். அப்பொழுதும் எங்களால் முடித்ததையெல்லாம் பண்ணினோம்.'' என்றார்.

விஜயராகவன் பரமேஸ்வரியின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

''இந்த நாட்டில் பெண் ஒருத்தியால் தனியாய் வாழ முடியாது விஜயராகவன்! உங்களைப் போன்ற நல்லிதயம் படைத்தவர்கள் கைகொடுத்தாலும், அதை சமூகம் விகாரமான கண்ணோட்டத்துடன் தான் வருணித்துச் சொல்லும்! ஏற்கனவே விதியால் வஞ்சிக்கப்பட்டவர்களான எங்களால் இந்த 'விஷபாணத்'தையும் தாங்கிக் கொள்ள முடியாது!''—என்று சொன்னாற் போலிருந்தது.



அவன் இன்னும் சிலையாய் வாயடைத்துப்போய் அப்படியே நின்று கொண்டிருந்தான். நேற்றிரவு கூட பரமேஸ்வரி நன்றாகவே இருந்தாள். இந்தக் கொஞ்ச நேரத்திற்குள் என்னவாகியிருக்கும்? தன்னிடம் வாய் வார்த்தை கூடச் சொல்லாமல் இவ்வளவு கொடுமையாய் சாகத் துணிந்ததற்குக் காரணம் என்ன? அவன் நெற்றிப் பொட்டு வெடித்து விடும் போலிருந்தது.

ஹேமந்த்தை எல்லோருமாய்ச்சேர்ந்து தேடினார்கள்.

அவன் முகவரியையே காணோம்!

கடைசியாய் விஜயராகவனே பரமேஸ்வரியின் சவத்தைப் பெற்றுக் கொண்டு, அவனே தகனக்காரியங்களைப் பண்ணினான்.

சிதைக்குத் தீ மூட்டிக் கொண்டிருந்தபோது அவனுக்குத் திரும்பத் திரும்ப 'இது எந்த ஜென்மத்து பந்தமோ?' என்று தோன்றிக் கொண்டேயிருந்தது.

சுமித்ரா ஆசுபத்திரியில் இருந்தாள்.

ஆர்த்தி பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள்.

சுமித்ரா அமைதியில்லாமல் அப்படியும் இப்படியுமாய்ப் புரண்டு கொண்டிருந்தாள்.

''அப்பா வந்துட்டாரா ஆர்த்தி?''

''இல்லை மம்மீ.''

சுமித்ரா பெருமூச்சு விட்டாள் ''உனக்குத் தூக்கம் வரலையா ஆர்த்தி?''

ஃ ஃ ஃ

ஒரு வாரம் கழிந்தது.

சுமித்ரா ஆசுபத்திரியிலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்து விட்டாள்! இன்னும் முற்றிலுமாய் உடம்பு தேற வில்லை. இப்பொழுதுதான் கொஞ்சங் கொஞ்சமாய் எழுந்து யார் உதவியும் இல்லாமல் நடக்கத் தொடங்கி யிருந்தாள்.

ஹேமந்த் எங்கிருக்கிறான் என்றே தெரியவில்லை.

சுமித்ரா அவனை வீட்டிற்குத் திரும்பி வரும்படி வேண்டிக் கொண்டு பேப்பர்களில் கூட அறிக்கை தந்தி ருந்தாள்! அதற்கும் பதில் இல்லை! நாளுக்கு நாள் சுமித் ராவுக்கு ஹேமந்த்தைப்பற்றிய கவலை அதிகரித்துக் கொண்டேயிருந்தது. வாய் விட்டு வெளியே சொல்ல முடியாமல் உள்ளூரக் குமுறிக் கொண்டேயிருந்தாள். தன்னால்தான் அந்த தாயும் மகனும் பிரியுப்படி நேர்ந் ததோ என்ற மனக்குமுறல் அவளைப் பீடித்துக் கொண டிருந்தது!

அன்று விஜயராகவன் ஃபைல்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான்.

அதற்குள் போன் மணியடித்தது! அவன் எழுதுவதை நிறுத்திவிட்டு, ரிசீவரைக் கையிலெடுத்து ''ஹலோ.'' என்றான்.

''ஹலோ.'' மறுமுனையிலிருந்து கேட்டது. அக் குரலைக் கேட்டதுமே விஜயராகவன் விறைப்பானான்.

''ஹலோ, ஹலோ ஹேமந்த்.'' ஏறக்குறைய கத் தியே விட்டான்.

''ஆமாம், நான்தான் பேசுகிறேன். எங்கம்மா சாகும் முன்னால் எனக்கு எழுதிய கடிதம் உங்களிடந் தான் இருக்காமே, உண்மையா?''

''ஹேமந்த்! அப்படீன்னால் உனக்கு எல்லாமே தெரி யுமா?''



''ரெண்டு நாளைக்கு முன்னால்தான் தெரிஞ்சுது. அந்த லெட்டரை எனக்கு அனுப்புங்க.''

''எங்கே இருக்கிறாய் நீ?''

''கோபாலசுவாமி வீட்டில்.''

''ஹேமந்த்! வீட்டுக்கு வா.''

''நோ சார்! சாரி! நான் எங்கேயுமே வர விரும்ப வில்லை.''

ஹேமந்த் என்ற பெயர் விஜயராகவன் வாயிலிருந்து வந்ததைக் கேட்டதுமே, படுத்துக் கொண்டிருந்த சுமித்ரா சட்டென்று எழுந்து வந்தாள்.

''இதோ, உங்க ஆன்ட்டி பேசுகிறாள்'' என்றான் விஜயராகவன்.

சுமித்ரா வந்து ரிசீவரை வாங்கிக் கொண்டாள்.

''ஹலோ, ஹேமந்த்!''

''நமஸ்காரம் ஆன்ட்டி!''

''ஹேமந்த்! நான் உன்னோடு நிறையப் பேசணும். வீட்டுக்கு வா!''

''சாரி ஆன்ட்டி? நான் எங்கேயும் வர விரும்பலை.''

''ஹேமந்த்! என் பேச்சைக் கேட்கமாட்டாயா?'' சுமித்ராவின் குரல் அடைத்துக் கொண்டது. அவன் உடனே பதில் சொல்லவில்லை.

''ஹேமந்த், சரிபோகட்டும், நானே உன்னிடம் வரேன்.''

''நோ, நோ! எனக்கு யாரையும் பார்க்கணும்னு இல்லை! எங்கம்மா எழுதிய கடிதத்தை உங்க டிரைவர் மூலமாய் அனுப்பி வையுங்கள், நீங்கள் வரவேண்டாம்.'' அவன் போனை வைத்து விட்டான்.

சுமித்ரா விஜயராகவனையே பார்த்தாள்.

"அவன் ரொம்ப அடங்காப்பிடாரி! வரமுடியாதுன்னால் வரவே மாட்டான், அவ்வளவுதான்!"

"அதற்காக விட்டுவிடுவார்களா?"

"விடாமல் வேறென்ன பண்ண முடியும்?"

"அந்தக் கடிதம் எங்கே? அதைக் கொடுங்கள் இப்படி."

"என்ன பண்ணுவாய் நீ?'

"ஆர்த்தியிடம் கொடுத்தனுப்புகிறேன்! நான் பட்டுக் கொண்டிருக்கிற மனவேதனையை எடுத்துச் சொல்லச் சொல்றேன்."

"வேண்டாம் சுமீ! ஹேமந்த் திரும்பவும் இப்போதைக்கு நம்மிடம் வருவான்னு எனக்கு நம்பிக்கையில்லை."

"அதையெல்லாம் நான் உங்களைக் கேட்கலை. கடிதத்தைக் கொடுங்கள்!"

விஜயராகவன் டிராயரைத் திறந்து கடிதத்தை எடுத்துத் தந்தான்.

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு சுமித்ரா ஆர்த்தியின் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னாள்—ஆர்த்தி? ஹேமந்த்தை வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு வரவேண்டுமானால் உன்னால்தான் முடியும். உன் வார்த்தையை மறுக்க மாட்டான் அவன்! போய் அழைத்துக் கொண்டு வா? உன்னோடு அவன் வருவதை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்பேன் நான்" என்றாள்.

ஆர்த்தி முதலில் விரும்பவில்லை. மறுத்தாள். பிறகு என்ன எண்ணிக் கொண்டாளோ தெரியாது, போகத் தயாரானாள்.

# 40

கோபாலசுவாமி வீட்டில் வராந்தாவில் உட்கார்ந்திருந்தான் ஹேமந்த்.

வீட்டிற்கு முன்னால் விஜயராகவனின் கார் வந்து நின்றது. அதிலிருந்து டிரைவர் இறங்கினான். ஹேமந்த் எழுந்து எதிரே வரப்போனவன் சட்டென்று நின்று விட்டான்!

பின் சீட்டிலிருந்து ஆர்த்தி இறங்கிக் கொண்டிருந்தாள்.

அவன் திரும்பிப் போய் விடவேண்டும் என்று என்னதான் முயன்றபோதிலும் அவனால் முடியாமல் போகவே, அப்படியே நின்று விட்டான்.

ஆர்த்தி அவனை நெருங்கி வந்தாள்.

"ஹலோ ஹேமந்த்!"

ஹேமந்த் பேசவில்லை. ஆர்த்தியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அவளும் அவனையே பார்த்தாள்! அவன் தான் எவ்வளவு இளைத்து விட்டான்! தாடி மீசை மண்டியிருந்தது!

கண்கள் குழிவிழுந்திருந்தன.

"கடிதம் எங்கே?"

ஆர்த்தி கைப்பையைச் சுட்டிக் காட்டினாள்.

அவன் கையை நீட்டினான்.

"இந்தக் கடிதத்தை உங்களிடம் தருவதற்கு முன்னால் நான் சில விஷயங்களை உங்களோடு பேசவேண்டும். இங்கே பேசுவது நன்றாயிராது. பார்க்குக்குப் போகலாம் வாங்க."

'எனக்கு வேலை இருக்கு, நான் உடனே போகணும்'' என்றான் அவன்.

ஆர்த்தி திரும்பினாள். ''டிரைவர்! நீ போ. நான் அப்புறமாய் வரேன்'' என்றாள்.

''சரிங்கம்மா.'' டிரைவர் காரில் ஏறிக் கொண்டான். அடுத்த நிமிஷம் கார் புறப்பட்டுப் போய் விட்டது.

''நாம்ப பார்க்குக்கு நடந்தே போகலாம், வருகிறீர்களா? கோபாலசுவாமி தாத்தா எங்கே?''

''கடை வீதிக்குப் போயிருக்கார், உடனே வந்து விடுவதாய்ச் சொல்லிட்டுப் போனார்.''

''பாட்டி உள்ளே எங்கேயாவது இருப்பார். பார்த்துட்டால் கூப்பிட்டு விடுவார். நாம்ப சீக்கிரமாய்ப் போயிடலாம் வாங்க.''

அவன் திகைப்படைந்தான். ஆர்த்தி எதுவுமே நடக்காதது போல சாதாரணமாய்ப் பேசுகிறாள்!

இருவரும் பார்க்குக்கு வந்தார்கள்.

ஹேமந்த் நின்று கொண்டேயிருந்தான். ஆர்த்தி புல்தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

''என்ன சொல்லணுமோ அதைச் சீக்கிரமாய் சொல்லிட்டு, அந்த கடிதத்தைத் தந்துட்டுப் போ!''

''ஹேமந்த், நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கத்தான் வந்திருக்கேன்! அன்றைக்கு ஆவேசத்தில் ஏதேதோ சொல்லிட்டேன். அம்மா கூட நடந்ததற்கெல்லாம் ரொம்பவும் வருத்துகிறாள்! உங்களை வீட்டிற்கு வரச் சொல்லி ரொம்பவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.''

அவன் முகத்தை திருப்பிக் கொண்டான்.



''உன் மன்னிப்பு, உங்கம்மாவின் வருத்தம் இவை எதாவுமே எங்கம்மாவின் உயிரை மீட்டுக் கொண்டு வந்துட முடியாதே! என்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு உங்கள் மனதை சாந்தப்படுத்திக் கொண்டுவிட உங்களால் முடியும்! ஆனால் நான்—நான் யாரிடம் கேட்பேன்? அன்றைக்கு நான் கூட எங்கம்மாவைக் கூசாமல் ஏதேதோ சொல்லக்கூடாத வார்த்தைகளில் திட்டிவிட்டேன்! அந்தக் கோபத்தோடு வீட்டைவிட்டுப் போயிட்டேன்!

''எனக்கு இந்த ஊரை விட்டே போயிடணும்னு இருந்தது! ரயிலேறி நேராய் ஐதராபாத்துக்குப் போயிட்டேன்! நான்கு நாட்கள் ஆழ்ந்து யோசித்துப் பார்த்தேன்! நான் பண்ணியது தப்புன்னு தோன்றிற்று. அங்கே என் நண்பனின் மூலமாய் ஒரு ப்ரைவேட் கம்பெனியில் சின்ன உத்யோகம் கிடைத்தது. இங்கே வந்து கொண்டிருந்த சம்பளத்தை விட மிகக் குறைச்சல்தான்! ஆனாலும் நானும் அம்மாவும் சிக்கனமாய் இருந்தால் போதுமானதாய் இருக்கும் அவ்வளவு சீக்கிரத்தில் வேலை கிடைத்தது என் அதிர்ஷ்டம் என்று மகிழ்ந்து போனேன்.

அம்மாவோடு சண்டை போட்டாவது சரி இந்த நிந்தனைகளுக்கும், சச்சரவுகளுக்கும் வெகு தொலைவிற்குக் கூட்டிக் கொண்டு போய்விட வேண்டும் என்று நினைத்தேன்! ஆனால்...இங்கே வந்து பார்த்தால்...''

ஹேமந்தின் கண்கள் குளமாகி விட்டன. உதட்டை அழுத்தி, முகத்தை திருப்பிக் கொண்டு, எங்கோ வெறுத்து பார்த்தபடி நின்றான்.

''ஹேமந்த்! எல்லாம் எங்க டாடியின் தப்புதான்! மம்மியிடம் எல்லாவற்றையும் விவரமாய் சொல்லியிருந்திருக்கணும்;''

''எங்கம்மா தப்பு கூட இருக்கு ஆர்த்தி. உலகம் எப்படிப் பேசினால் என்ன, என்றெண்ணியிருந்தாளே தவிர உலகத்தோடு ஒட்டாமல் வாழ முடியாதுன்னு எண்ணிப் பார்க்கலை. அம்மா மனம் நல்லதாய் இருக்கலாம்' ஆனால் அவள் பண்ணிய ஒவ்வொரு காரியமும் தப்புக் கண்டு பிடிக்கிறாப்போல் தான் இருக்கு.''

''இப்ப யார் என்ன நினைத்துக் கொண்டால் மட்டும் என்ன பிரயோஜனம்?''

''எனக்கு இப்பக்கூட எங்கம்மா மேல் ரொம்பக் கோபமாய்தான் இருக்கு ஆர்த்தி!''

அவன் ஆர்த்தியை நோக்கி திரும்பினான்—''நான் தெரிந்தோ தெரியாமலோ ஏதோ உளறினேன்னு வை, அதற்குப் போய் இவ்வளவு சீரியஸாய் எடுத்துக்கணுமா? என்னை 'போடா, போக்கத்தவனே!' என்று சொல்லி விட்டுப் போகணுமே தவிர!'' கண்களை துடைத்துக் கொண்டான் அவன்.

ஆர்த்திக்கு அந்தச் சமயத்தில் அவனைப் பார்த்தால் மிக வருத்தமாய் இருந்தது. தாயின் மரணத்திற்கு அவன் எவ்வளவு குமுறிக் கொண்டிருக்கிறான் என்று புரிந்தது.

''என்ன எழுதியிருக்கிறாள் அந்த லெட்டரில்?'' கேட்டான் அவன்.

''தெரியாது. நாங்கள் யாருமே பார்க்கவில்லை.'' ஆர்த்தி கவரை தந்தாள் அவனிடம்.

''நீ படி.''

''நானா?''

''ஆமாம். அம்மாவுக்கும் எனக்குமிடையே உனக்கு தெரியாத ரகசியம் எதுவும் இருக்கக்கூடாது. உங்கப்பா வைப் பற்றிய ரகசியம் எதாவது அதில் இருந்தால் அது உனக்கு நான் சொல்லாமலேயே தெரிந்து விடும். படி ஆர்த்தி!''



ஆர்த்தி படிக்கத் தொடங்கினாள்.

''ஹேமந்த்!

நீ இன்று என்னை மிகக் கடுமையாய் பேசிவிட்டுப் போனாய்! இனி என் முகத்தையே பார்க்க மாட்டேன் என்று சொல்லி விட்டுப் போனாய்.

என்னை நீ இவ்வளவு பேசிய பிறகு திரும்பவும் உன் முகத்தில் மட்டும் நான் விழிப்பேன் என்று எப்படி எண்ணிவிட்டாயப்பா? நீ தலை குனியும்படியான காரியம் எதையும் நான் பண்ணவில்லை. உலகத்தாரோடு நீயும் சேர்ந்து உலகம் பழித்த சொற்களையே நீயும் சொன்னாய்!

மாமாவுக்கு என் வாழ்க்கையில் எப்படிப்பட்ட ஸ்தானம் இருந்ததென்றும், அந்த ஸ்தானம் எனக்கு எவ்வளவு அரிதான ஒன்று என்றும் உனக்கென்னடா தெரியும்? உன் இரக்கம், வருத்தம் எல்லாம் உன் ஆன்ட்டியின் பக்கம் மட்டுமே உள்ளது!

உன் ஆன்ட்டிக்கு என்னைப் போன்ற பெண்களின் வருத்தத்தைப் பற்றி எப்படியடா தெரியும்? என் தனிமை எப்படிப்பட்டது என்று திருமணமாகாமல் நின்று கொண்டிருக்கும் பெண்களுக்குப் புரியும்! கணவனை இழந்த பெண்களுக்கு தெரியும்! நாதியில்லாத திக்கற்றவர்களுக்குப் புரியும்! அதிர்ஷ்டமே என்னை வஞ்சித்து விட்டது!

நோயாளியானவரைக் கணவராய் அருளிற்று! நீயும் சொன்ன பேச்சைக் கேட்காமல் என் வருத்தத்தை அதிகமாக்கினாய். அந்தச் சூழ்நிலையில் மாமா தெய்வமாய் என் வாழ்க்கையில் நுழைந்தார். மாமாவுக்கு என் மேல் அன்பு இருப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

நாங்களிருவரும் சிறு வயதில் திருமணம் பண்ணிக்க எண்ணியிருந்தோம். என் தலையெழுத்து நன்றாயிராத தால் அது நடககவில்லை.

எந்த ஜென்மத்து பந்தமோ தெரியவில்லை. வாழ்க் கையில் திரும்பவும் எதிர்பாராமல் சந்தித்துக் கொண் டோம். என் நிலைமை தான் எப்படி இருந்தது! மனித தன்மை உள்ள யாராய் இருந்தாலும் கை கொடுக்க தான் முயலுவார்கள்! உங்கள் ஆன்ட்டிக்கு என்ன வந்த தடா!

மாமா அவளுக்கு தானே சகலமுமாய் இருக்கிறார்; கொஞ்சம் என்மேல் இரக்கம் காட்டினால் என்னவாகி விட்டது? காற்றுக் கொஞ்சம் வீசிவிட்டதால் மட்டும் மரம் என்னுடையதாகி விடுமா? மாமா வந்த பிறகு என் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் ஏற்பட்டது! நான் தனியாள் அல்ல. எனக்கும் மலையத்தனை அரவணைப்பு இருக் கிறது என்ற தைரியம் வந்தது. அந்த தைரியத்தால் உற் சாகமாய் இருக்க தொடங்கினேன். அந்த உற்சாகத்தை நீங்கள் எல்லோரும் தவறாய் புரிந்து கொண்டு விட் டீர்கள். அதனால் தான் இந்த நாட்டில் ஆண்கள், சக பெண்கள் பால் எவ்வளவு இரக்கப்பட்டாலும் உதவ மாட்டார்கள். ஒரு நல்ல வார்த்தை இதமாய்ப் பேசக்கூட அஞ்சுவார்கள்! வீட்டில் மனைவி மக்களோடும், வெளி யுலகத்தாரோடும் குத்தல் மொழிகளையும் குதர்க்க வார்த் தைகளையும் நிறைய தாங்கிக் கொள்ள வேண்டும். இந்த விதமாய்க் கூட என்னை வாழ விடாமல் செய்து கொண்டிருக்கிறீர்கள் நீங்கள்?

எனக்கு இந்த நிமிஷத்தில் உண்மையாகவே சாக வேண்டும் போலிருக்கிறது உண்மைதானடா! என்னைப் போன்ற ஒருத்தியின் வயிற்றில் பிறந்தது உன் துரதிர்ஷ் டந்தான்; சகல சுகங்களோடும் வளர்க்க முடியாத பொழுது குழந்தைகளைப் பெறக்கூடாது. இந்த விஷயம்



எனக்கு தெரியவில்லை. நிலைமை வக்கரித்தால் பெற்ற பிள்ளைகளே கூட சத்ருவாகி விடுவார்கள் என்று சொல் வது உன் விஷயத்தில் ருசுவாகி விட்டது! என் மேல் உனக்குக் கொஞ்சமும் இரக்கமே இல்லை? ஆன்ட்டியின் மேல் ஏகமாய் இரக்கம்! எவ்வளவு தனியாளாகி விட் டேன் நான் பார்த்தாயாடா?

என்னை தாய் என்று சொல்லிக் கொள்ள வெட்கப் படுகிறாய் அல்லவா? அதனால்தான் 'அம்மா' என்று கையொப்பம் இடவில்லை. ஒரு திக்கற்றவளான என் துரதிர்ஷ்டம் பகைவர்களுக்கும் வேண்டாம். நான் சாகும் முன்னால் கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்வது ஒன்றுதான்—'கடவுளே'! பெண்ணாய் பிறக்கச் செய்தால் கணவன், குழந்தைகள் என்று நல்லபடியாய் அருள்புரி! ஒன்றுமில்லாத தன்னந்தனியாளாய் இந்த உலகத்தில் என்னை விட்டு விடாதே! காக்கைகளாய் இவர்கள் ஏதாவது அபவாதங்களைச் சுமத்திக் கொத்திக் கொத்திப் போட்டு விடுவார்கள். இதுதான்டா என் பிரார்த்தனை!

நான் இறந்த பிறகு என்னை நினைத்து நீ அழாதே! என் தகனத்தைக் கூட நீ பண்ணவேண்டாம். இதுதான் என் கடைசி விருப்பம்''—

ஆர்த்தி கனத்த இதயத்தோடு கடிதத்தைப் படித்து முடித்து விட்டு நிமிர்ந்து பார்த்தபோது, மரத்தில் சாய்ந்து நின்று கொண்டிருந்த ஹேமந்த் முகத்தைக் கை களால் பொத்தியபடி அழுதுக் கொண்டிருந்தான்.

''ஹேமந்த்'' ஆர்த்தி சட்டென்று எழுந்து வந்து அவன் தோளில் கை வைத்தாள்.

''அம்மாவை நான்தான் கொன்றுவிட்டேன்! நான் தான் கொலைப் பண்ணிட்டேன்! வார்த்தைகளால் வேறு இன்னும் சித்திரவதைப் பண்ணிட்டேன்! ஆனால்... ஆனால் எனக்கு தெரியாது ஆர்த்தி, எனக்கு யாருமே

சொல்லவில்லை. உலகம் எண்ணிக் கொண்டதையே என் செவிகளும் நிஜம் என்று நம்பிவிட்டன.''

''ஹேமந்த், சும்மாயிருங்கள், அழாதீர்கள்.'' அவள் பரிவோடு தேற்றினாள்.

''இது வாழ்நாள் பூராவும் என்னை வதைத்துக் கொண்டேயிருக்கும்.''

''ஹேமந்த்!'

''என் வருத்தத்தைச் சொல்லிக் கொள்வதற்குக் கூட யாரும் இல்லை!''

''வீட்டுக்குப் போகலாம் வாங்க ஹேமந்த்! மம்மி உங்களை அழைத்துக் கொண்டு வரும்படி ரொம்பவும் சொல்லியனுப்பினாள்.''

''உங்கள் வீட்டிற்கா? இனி இந்த ஜென்மத்தில் உங்கள் வீட்டுப் படியை மிதிக்க மாட்டேன்.''

''ப்ளீஸ்! எனக்காக வரமாட்டீர்களா?''

''ஆர்த்தி! என்னை மன்னித்து விடு!'' ஆர்த்தியின் கையை ஒரு வினாடி அழுத்தி விட்டு, ''நான் வரேன்''— மளமளவென்று போய் விட்டான் அவன்.

## 41

''அன்புள்ள ஆர்த்திக்கு.

நேற்று மாலை பார்க்கில் உன்னிடமிருந்து விடை பெற்றுக் கொள்ளாமலேயே வந்ததிலிருந்து என் மனமே சரியாயில்லை. நம் திருமணம் மூலமாய் இவ்விரண்டு குடும்பங்களும் ஒன்றாக வேண்டும் என்று மாமா மிகவும்



முயன்றார்! அது நடைபெறாமல் வேறொரு கொடுமை நிகழ்ந்துப் போய் நம்மிரு குடும்பங்களும் என்றுமே நேருக்கு நேராய் பார்த்துக் கொள்ள முடியாத அளவிற்கு சம்பவம் நேர்ந்து விட்டது! ஆர்த்தி! நடந்ததென்னவோ நடந்து முடிந்து விட்டது! இந்த விபத்திற்கு நாம் எல்லோருமே பொறுப்பாளிகள் தாம்! அம்மாவின் மரணத்தால் என்னால் இனி உங்கள் குடும்பத்தோடு சேர்ந்து இருக்க முடியாமல் செய்து விட்டாலும் என் மனம் மட்டும் உனக்காகவே தவித்துக் கொண்டிருக்கும். இந்த உலகத்தில் எனக்கு உள்ள ஒரே சிநேகிதி நீதான்! ஆர்த்தி, உனக்கு நான் வேண்டும் என்றிருந்தால்-உனக்கு உண்மையாகவே என் மேல் அன்பிருந்தால்—நீ உன் தாய் தந்தையரை விட்டு விட்டு தனியாய் என்னோடு வந்து விடு. இந்த நினைவுகளுக்கு அப்பால் தொலைவிற்குப் போய் நாம் ரிஜிஸ்தர் மேரேஜ் பண்ணிப்போம். புதிய வாழ்க்கையை நம்முடைய நினைவுகளை மட்டுமே வைத்துக் கொண்டு நிர்மாணித்துக் கொள்வோம்! நான் இன்றிரவு ஐதராபாத்திற்குப் போகிறேன். ரயில் இரவு ஏழு மணிக்கு. உனக்காக டிக்கெட் கூட வாங்கி விட்டேன். வருவதும் வராததும் உன்னிஷ்டம்!''

ஆர்த்தி அக்கடிதத்தைப் படித்து விட்டு, முகத்தைக் கைகளால் பொத்திக் கொண்டு அழத் தொடங்கினாள்.

அக்கடிதத்தை அன்று பிற்பகலில் கோபாலசுவாமி மூலமாய் ஹேமந்த் அனுப்பியிருந்தான். அதைப் படித்ததிலிருந்து ஆர்த்தியின் மனம் போராட்டத்தில் இறங்கி விட்டது.

ஹேமந்த் எழுதியிருந்த பிரகாரமே அவன் விரும்பினாற்போலவே, அவன் சொன்ன நிபந்தனைகளுக்குக் கட்டுபட்டுப் போய்விட வேண்டும் போலிருந்தது. ஆனால் தாய் தந்தையர்களால்—முக்கியமாய் தாயால் இதை தாங்க முடியுமா? ஹேமந்த் எழுதிய கடிதத்தை விஜய

ராகவன் படித்தான். சுமித்ரா கூடப் படித்தாள். இருவருமே எந்த வியாக்கியானமும் பண்ணவில்லை மௌனமாய் இருந்து விட்டார்கள்.

ஆர்த்தியை ஒரு பக்கம் தாய் தந்தையர் மேலிருந்த பாசமும், இன்னொரு பக்கம் ஹேமந்த் மேலிருந்த அன்பும் சமமாய் இழுத்துக் கொண்டிருந்தன! எந்த முடிவிற்கும் வரமுடியாத தன் கையாலாகாதத்தனத்திற்கு அழுகை வரத்தொடங்கிற்று. தாய் தந்தையரை எதிர்த்துக் கொண்டு போனாலும் சுகம் இருக்காது! அவர்களுக்காக ஹேமந்த்தை மறுத்து விட்டாலோ அது ஜென்மத்திற்கும் வேதனையாய் மாறிவிடும்!

குனிந்து கொண்டிருந்த ஆர்த்தியின் தலை மேல் கை படிந்தது. நிமிர்ந்து பார்த்தாள். எதிரே தாய் நின்று கொண்டிருந்தாள்.

''எழுந்திரு! ஆர்த்தி! ரயிலுக்கு நேரமாகிறது! சீக்கிரமாய்ப் புறப்படு!''

வியப்படைந்தவளாய் நனைந்த இமைகளோடு தாயை ஏறிட்டுப் பார்த்தாள்.

''தாமதிக்காதே! இப்போதே ஹேமந்த்தை நான் ரொம்பவும் கஷ்டப்படுத்தி விட்டேன்! இன்னும் கஷ்டப்படுத்தப் போவதில்லை! நானும் உங்கப்பாவும் உன்னை அவனோடு அனுப்பி விடத்தான் முடிவு பண்ணியிருக்கோம்.''

''மம்மீ.''

''ஐதராபாத் எவ்வளவு தூரம்! அங்கே நம்ப உறவுக்காரர்கள் கூட நிறையப்பேர் இருக்கிறார்கள் பல வருஷங்களாய் வரச்சொல்லி லெட்டர் போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். நான் அங்கே வந்தால் நீ வந்து அவர்கள் வீட்டில் பார்க்கலாம்.



''ஹேமந்த் நம்ப வீட்டிற்கு வராவிட்டாலும், சொந்தக்காரர்கள் வீட்டில் நான் சந்திக்க நேர்ந்தால் அவனால் மறுத்து விடத்தான் முடியுமா?''

''ஹேமந்த்துக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும் மம்மீ!''

''அந்த கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளத்தான் நானும் நினைக்கிறேன.''

ஆர்த்தி மளமளவென்று தயாரானாள். சுமித்ரா தானே பெட்டியில் எல்லாவற்றையும் எடுத்து அடுக்கி வைத்தாள்.

விஜயராகவன் காரை ஷெட்டிலிருந்து வெளியே எடுத்தான் சமையல்காரி ஆர்த்தியின் சாமான்களையெல்லாம் டிக்கியில் எடுத்து வைத்து விட்டாள். ஜூலி மட்டும் ஆர்த்தியின் இடுப்பில் ஏறி உட்கார்ந்து கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டேயிருந்தது.

மூவரும் ஏறி உட்கார்ந்தார்கள்.

விஜயராகவன் காரை ஓட்டிக் கொண்டிருந்தான். தாய் தந்தையருக்கிடையே ஆர்த்தி உட்கார்ந்திருந்தாள்.

சுமித்ரா அடிக்கடி கண்களைத் துடைத்துக் கொண்டேயிருந்தாள்.

''மம்மீ!'' ஆர்த்தி கலக்கத்தோடு அழைத்தாள்

''ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை.'' என்றாள் சுமித்ரா.

கார் ரயில்வே ஸ்டேஷனுக்கு முன்னால் வந்து நின்றது!

ஆர்த்தி காரிலிருந்து இறங்கினாள். விஜயராகவன் ரயில்வே கூலியைக் கூப்பிட்டு சாமான்களைத் தூக்கிக் கொள்ளச் சொன்னான்.

''மம்மீ.'' விடை பெற்றுக் கொள்வது போலப் பார்த்தாள்.

சுமித்ரா மகளின் கன்னத்தில் அழுத்தி முத்த மிட்டாள்.

''போயிட்டுவா! ஹேமந்த்துக்கு என் ஆசீர்வாதங்களைச் சொல்லு'' என்றாள்.

ஆர்த்தி தந்தையின் பாதங்களை நோக்கிக் குனிந்தாள்.

விஜயராகவன் தடுத்து நிறுததி விட்டு, மகள் தோளில் தட்டிக் கொடுத்தான்.

ஆர்த்தி பயணிகளிடையே கலந்து போனாள்.

விஜயராகவன் போய் இரண்டு பிளாட்ஃபாரம் டிக்கெட்டுகளை வாங்கி வந்தான்.

அவர்களுக்கு தொலைவில், கூலியைப்பின் தொடர்ந்து போய்க் கொண்டிருந்த மகள் தென்பட்டுக் கொண்டிருந்தாள்.

ரயில் புறப்பட தயாராய் கூவிற்று!

ஹேமந்த் கம்பியைப் பிடித்துக் கொண்டு கலக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

தொலைவிலிருந்து ஆர்த்தி வந்து கொண்டிருந்தது கண்ணில் பட்டது. அவன் ரயிலை விட்டு இறங்கி எதிரே ஓடினான்.

''ஆர்த்தி'' என்றவன் அவளை அப்படியே தூக்கி ஏற்றி விட்டான். ரயில் புறப்பட்டது.

இருவரும் சரேலென்று ரயிலுக்குள் ஏறிக் கொண்டார்கள். கூலி சாமான்களை மளமளவென்று வைத்தான்.



ஹேமந்த் அவன் கைகளில் இருபது ரூபாயை வைத்தான்.

ஆர்த்தியின் கையிலிருந்த ஜூலியைப் பார்த்து விட்டு-

''அட! நம்மோடு கூட இன்னொரு விருந்தாளி கூட வருகிறாரே!'' என்றான். ஜூலி இந்த சந்தோஷமான சமயத்தில் அவன் ஏதாவது சாக்லெட்டு தருவானோ என்ற நைப்பாசையுடன் நாக்கை நக்கிக் கொண்டே தன் ஆசையை வெளிப்படுத்திக் கொண்டது.

''நீ வருவாய்னு நான் எதிர்பார்க்கவேயில்லை'' என்றான் அவன்.

ஆர்த்தி சிரித்தாள். ஜன்னல் வழியாய்க் குனிந்து கைக்குட்டையை எடுத்து ஆட்டினாள்.

''யாருக்கு விடை கொடுக்கிறாய்?'' சந்தேகத்தோடு கேட்டான்.

''ஸ்டேஷனுக்கு!'' சிரித்தாள். அவனும் சிரித்தான். தானும் கைக்குட்டையை எடுத்து ஆர்த்தியின் கையைப் பிடித்துக் கொண்டே ஜோடியாய் ஆட்டினான்.

ரயிலின் கூவலும், ரயில் போய்க் கொண்டிருந்ததும் தென்பட்டுக் கொண்டே தான் இருந்தது. பிளாட்பாரத்தில் ஜனக்கூட்டம் பிசுபிசுத்து விட்டது! விஜயராகவன் பெருமூச் செறிந்தான்! சுமித்ராவின் தோளைச் சுற்றிலும் கையைப் போட்டுத் திருப்பினான்! சுமித்ரா நடக்கவும் சக்தியை இழந்தவளாய் கணவரைப் பின் தொடர்ந்தாள்!

இருவரும் வெளியே வந்து காரில் உட்கார்ந்து கொண்டார்கள்.

கார் வீட்டை நோக்கிப் புறப்பட்டது!

விஜயராகவன் ட்ராஃபிக்கை கவனமாய்ப் பார்த்துக் கொண்டே மௌனமாய் ஓட்டிக் கொண்டிருந்தான். காரை ஓட்டிக்கொண்டே இடது கையை நீட்டி மனைவியின் கையைப் பற்றிக் கொண்டான்.

''சுமி.'' தாழ்ந்த குரலில் தழுதழுக்க வெளி வந்தது அவன் வார்த்தை.

''அவள் கல்யாணத்தைப் பற்றி என்னென்ன கனவுகள் கண்டு வந்தேன்! மாமியார் வீட்டுக்கு அவளை எப்படி அனுப்பி வைக்கணும்னு இருந்தேன்! எப்படி அனுப்பி வைத்திருக்கேன்!'' என்றாள் தொண்டை அடைக்க.

''சுமி! நீ ஆர்த்திக்குப் பிடித்தமான காரியத்தைப் பண்ணினாய்! அவள் சந்தோஷந்தான் முக்கியம் என்று மத்யானம் என்னோடு வாதாடினாய்! அதை அதற்குள் மறந்து போய் விட்டாயா?''

மனைவியின் தோளைச் சுற்றி கையைப் போட்டு, கிட்டே இழுத்துக் கொண்டான்.

''நான் எடுத்த முடிவு சரியானதுதான் என்கிறீர்களா?''

''மிக நல்ல முடிவு! எந்தத் தாயாலுமே இத்தனை தைரியமாய்ப் பண்ண முடியுமோ என்னவோ?''

''ஹேமந்த் என்றாவது மறந்துப்போய் திரும்பவும் வருவானோன்னு ஆசையாய் இருக்கு எனக்கு.''

''மனிதனுக்கு ஆசை என்பது மிக முக்கியமானது சுமீ! அதுதான் நிறைய பலத்தைக் கொடுக்கிறது! அந்த ஆசையோடு தான் ஆர்த்தி கூட துணிந்து நம்மை விட்டு விட்டுப் போயிருப்பாள்னு நம்புகிறேன்.''



''நிஜமாய் அப்படித்தான் இருக்கும் என்கிறீர்களா?''

''நிஜமாய்! நீயே பார்த்துக் கொண்டிரு அப்படி நடக்கிறதா இல்லையான்னு!

''அந்த நாளுக்காக சாகும்வரை எதிர்பார்த்துக் காத்து கொண்டேயிருப்பேன்!'' என்றாள் சுமித்ரா கணவர் தோள் மீது தலையைச் சாய்த்துக் கொண்டே.

கொஞ்ச நேரத்திற்கு முன்னால் ஏற்பட்ட துன்பத்திலிருந்து மனம் தேறத் தொடங்கிற்று.

**முற்றும்**